ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

2898

பெரியவாச்சான்பிள்ளை
அருளிச்செய்த

ஸ்ரீஸூக்திமாலா மலர்—20.

பெரியதிருமடல் வ்யாக்யானம்

[திவ்யப்ரபந்தஸார வ்யாக்யானத்துடன்]

பதிப்பாசிரியர்:—

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்.

விலை ரூ. 1—8—0.

1959.

ஸ்ரீ:

2898

ஸ்ரீஸூக்திமாலா மலர்-20

ரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

பெரியதிருமடல் வ்யாக்யானம்

[திவ்யப்ரபந்தஸார வ்யாக்யானத்துடன்
ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடு]

★

பதிப்பாசிரியர்:-
S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

★

விலை ரூ 1—8—0 (ரூ 1—50 ந. பை)
தபாற்கூலி 25 ந. பை.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், திருச்சி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம

பிள்ளை திருநறையூரரையர் அருளிச்செய்த

பெரியதிருமடல் தனியன்

பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றிசெயும்
நன்னுதலீர் நம்பி நறையூரர்—மன்னுலகில்
என்னிலைமை கண்டு மிரங்காரே யாமாகில்
மன்னு மடலூர்வன் வந்து.

பதவுரை:—நல் நுதலீர்-*அழகிய நெற்றியை உடையவர்களே!* **பொன் உலகில்**-*பரமபதத்தில்,* **வானவரும்**-*நித்யஸூரிகளும்,* **பூமகளும்**—*பெரியபிராட்டியாரும்,* **போற்றி செய்யும்**—*திருப்பல்லாண்டு பாடும்,* **நம்பி நறையூரர்**-*பரிபூர்ணரான திருநறையூர் நம்பி,* **மன்னு உலகில்**—*நித்யமான பூலோகத்தில்,* **என் நிலைமை கண்டும்**—*என்னுடைய தசையைக் கண்டபின்பும்,* **இரங்காரே ஆமாகில்**—*கருணை புரியவில்லையாகில்,* **வந்து**-*அவர் இருக்குமிடம் வந்து,* **மன்னும் மடல் ஊர்வன்**-*நிலையாக மடலூரக்கடவேன்.*

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த

தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை

(பொன்னுலகில் வானவரும்) இத்தனியன் ஆழ்வாரபிப்ராயமாயிருக்கிறது. ஸர்வைஸ்ஸ்துத்யனான பரிபூர்ணன், இவ்விபூதியில் தன் க்ருஷிபலமான பரபக்த்யாதி வைபவங்

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

திவ்யப்ரபந்தஸாரம்

பெரியதிருமடல் தனியன் வ்யாக்யானம்

அவதாரிகை:—(பொன்னுலகில் வானவரும்) இத்திருமடலிலே ஆழ்வாருக்கு ஓடுகிற கருத்தையே பிள்ளை திருநறையூரரையர் இத்தனியனிலே அருளிச்செய்கிறார். அனைவராலும் துதிக்கப்படும் நிறைவாளன், இந்த லீலாவிபூதியில் பத்தியுழவனான தான் என்னிடத்தில் பயிர்செய்த பரபக்தி

களைக்கண்டு தயைபண்ணுதிருப்பனுகில், அநந்யோபாயங் குலையும்படியான அதி ப்ராவண்யத்தை ஆவிஷ்கரிப்பனென் கிறது.

வ்யா:-(என்னிலைமை இத்யாதி) நல்நுதலீர்! நறையூரர் நம்பி என் நிலைமைகண்டு இரங்காரேயாமாகில் மன்னுமட லூர்வன்வந்து. நல்நுதலீர்! நல்லநுதலையுடையவர்களே! "வாண்முகத்தீர்" என்னுமாபோலே ஸகோத்ரிகளை ஸம் போதிக்கிறது. (பொன்னுலகில் வானவரும்) பரமபத வாஸி களான நித்யஸூரிகளும். (பூமகளும்) பெரியபிராட்டியாரும். (போற்றி செயும்) மங்களாசாஸநம் பண்ணும். "பரதனும் தம்பி சத்துருக்கனனுமிலக்குமனேடு மைதிலியும் இரவு நன் பகலும் துதிசெய்யநின்ற" என்னுமாபோலே இவர்கள் போற்றிசெய்யும் நறையூர் நம்பியென்னுதல்; அன்றிக்கே- பொன்னுலகில் வானவராய் ஸ்வர்க்கவாஸிகளான தேவர் களும், "பூமகனும்" என்று பாடமானபோது, புஷ்பஜனை

பரஜ்ஞாந பரமபக்திகளாகிற பெருமைகளைக் கண்டும் கருணைபுரியவில்லை யாகில், அவனையே உபாயமாகக் கொண்டிருக்கும் நிலைகுலையும்படியான பேரன்பை வெளியிடுவேன் என்கிறது.

வ்யா:—(என் நிலைமை...) "நல்நுதலீர்! நறையூரர் நம்பி என் நிலைமை கண்டும் இரங்காரேயாமாகில் மன்னு மடலூர்வன் வந்து" என்று அந்வயம். (நல்நுதலீர்) நல்ல நெற்றியை உடையவர்களே! "வாண்முகத்தீர்" [ஒளி பொருந்திய முகத்தையுடையவர்களே!] என்பதுபோலே பக்வத்பக்தியாலே ஒளிவீசும் மற்றையாழ்வார்களைக் கூப்பிடுகிறபடி. (பொன்னுலகில் வான வரும்) "ஹிரண்மயே பரே லோகே" [முண்டக 2-2-10] [பொன்மயமான மேலான உலகில்] என்கிற பொன்னுலகில் வாழும் ஸூரிகளென்றும், ஸாத்யர்களென்றும் புகழப்படும் நித்யஸூரிகளும். (பூமகளும்) கமல வாஸினியான பெரியபிராட்டியாரும். பூவிலிருக்கும் பரிமளமனைத்தும் ஒரு வடிவெடுத்ததோ என்னும்படியிருக்கும் ஸ்ரீதேவியும். (போற்றி செயும்) பல்லாண்டு பாடும். "பரதனும் தம்பி சத்துருக்கனனும் இலக்குமனேடு மைதிலியும் இரவுநன் பகலும் துதிசெய்ய நின்ற இராவணந்தகனை" [பெரியதிரு 2-3-7] என்றாற்போலே நித்யஸூரிகளும், பிராட்டியும் பல் லாண்டுபாடும் நறையூர் நம்பி என்று பொருள். அன்றிக்கே, "பூமகனும்" என்று பாடமானபோது, "சுவர்க்கலோகத்திலுள்ள இந்திராதி தேவர்களும்

ப்ரஹ்மாவும் போற்றிசெயுமென்றுமாம். போற்றிசெய்கைக்காகவிறே *முன்னம் திசைமுகனைத் தான் படைத்தது. (நம்பிநறையூரர்) நறையூரரான நம்பி, திருநறையூர் நம்பி, இங்குவந்து எல்லாக் குணங்களும் புஷ்கலமாகவுடையவர். (மன்னுலகிலென்னிலைமை கண்டும்) தான் படைத்தபடியே என் படியைக்கண்டும்; "மண்மேல் பெருந்தவத்தள்" என்னும்படியிறே இவள்படி. நித்யமாய்ப் போருகிற பூமியிலே என் தயநீய தசையைக்கண்டும். "தாதாடு வனமாலை தாரானோ என்றென்றே தளர்ந்தாள்" என்றிறே இவள் நிலைமையிருப்பது. (இரங்காரே யாமாகில்) இத்தசையிலும் வண்டுதிவளும் தண்ணந்துழாய் கொடாதே இரக்கமெழா திருப்பராகில். (மன்னுமடலூர்வன் வந்து) தாமிருக்குமள

உந்தித்தாமரையில் பிறந்த பிரமனும் துதிக்கும்" என்று பொருளாகிறது. துதிக்கைக்காகவன்றோ *'முன்னம் திசைமுகனைத் தான் படைத்தது.' (நம்பி நறையூரர்) நறையூரிலுள்ள நம்பி. திருநறையூர் நம்பி என்னும் திருநாமத்தையுடையவர். திருநறையூர்க்கு வந்த பின்பு ஸௌலப்ய ஸௌசீல்யாதி குணங்கள் நிறையப்பெற்றவர். (என் நிலைமை கண்டும்) பத்தியுழவனுன தான் மிகமுயன்று பயிர்செய்த பரபக்தி முதலானவற்றாலே பரிபூர்ணையாயிருக்கும் என் பெருமையைக் கண்டும். "பேராளன் பேரோதும் பெண்ணை மண்மேல் பெருந்தவத்தள் என்றல்லால் பேசலாமே" [திருநெடு-20] என்னும்படியன்றோ இவள் பெருமை. "என் நிலைமை" என்றது என் பெருமை என்றபடி. அன்றிக்கே, இரங்கத்தக்க என் தசை என்று பொருளாகவுமாம். (மன்னுலகில் என் நிலைமை கண்டும்) நிலையாயிருக்கும் இவ்வுலகில் என் வருந்தத்தக்க நிலையைக் கண்டும். (மன்னுலகில்) இவ்வுலகம் விரைவில் தொலைந்துபோவதாயிருந்தாலாவது அதோடு என் துன்பத்திற்கும் ஓர் முடிவுண்டாகும். அப்படியும் இல்லையே. இது நிலையானதாயன்றோ இருக்கிறது. (என் நிலைமை கண்டும்) "தாதாடு வனமாலை தாரானோ என்றென்றே தளர்ந்தாள்" [பெரியதிரு 5-5-6] என்பதன்றோ இவள் நிலை. (இரங்காரேயாமாகில்) இந்நிலையிலும் "வண்டு திவளும் தண்ணந் துழாய் கொடீர்" [திருவாய் 2-4-5] "இரக்கமெழீர்" [திருவாய் 2-4-3] என்னும்படி இருந்தாராகில். (மன்னு மடலூர்வன் வந்து) தாம் இருக்கும் வரையில் என் மடலும் நித்யமாய்ச் செல்லாநிற்கும். (மடலூர்

---

* பெரியதிருமடல் 10

வும் மடலும் கையுமாய் வந்து தன் குணபூர்த்தியை அழிப்பன்.

இத்தால், அவன் ஆசுவாக அங்கீகரிக்கும்படி அதிப்ராவண்யத்தை ஆவிஷ்கரிப்பனென்றதாயிற்று. இத்தலையால் வருமது சைதந்ய கார்யம்; அத்தலையால் வருமது ஸாதநம்.

பெரியதிருமடல் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.

பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

வன்) மடலும் கையுமாய்வந்து தாம் கொண்டாடியிருக்கும் குணப்பெருமைகள் அனைத்தையும் அழிப்பேன்.

இப்பாசுரத்தால், அவன் விரைவில் என்னை ஏற்றுக்கொள்ளும்படியாக என்பேரன்பை மடலூருவதன் மூலம் வெளிப்படுத்துவேன் என்று சொன்னதாய் முடிந்தது. இவளுடைய இம்முயற்சி ஸாதனத்தில் அந்வயிக்குமோ? எனில்: அந்வயிக்காது. அவனையே உபாயமாகக்கொண்ட இவளுடைய இதுபோன்ற முயற்சிகளெல்லாம் அவ்விஷயவைலக்ஷண்யத்தை அறிந்ததாலுண்டாகும் ஆற்றாமையினால் ஏற்படுமவை. இவளைப்பெற அவன் செய்யும் முயற்சிகளே ஸாதனத்தில் சேரும்.

திவ்யப்ரபந்தஸாரம்

பெரியதிருமடல் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

பெரியதிருமடல் வ்யாக்யானம்

அவதாரிகை

பெரியதிருமடலாவது-கண்ணுஞ்சுழலையிட்ட ப்ரபந்தம் இன்னமொன்று; போர்சுட்டுப் பொரிகொறிக்கை. இரண்டு தலையிலுள்ளாருங் கைவிட்டால் அன்று ஒருவழியே போகலாமென்று தாத்பர்யம்.

*வாடினேன் வாடி.துடங்கி இவ்வளவும்வர பகவத் குணங்களை சீலநம்பண்ணிப் போருகையாலே அபிநிவேசம்

திவ்யப்ரபந்தஸாரம்

பெரியதிருமடல் வ்யாக்யானம்

அவதாரிகை

பெரியதிருமடலாவது—சிறியதிருமடலைப்போலே, அன்பின் மிகுதியாலே தன் ஸ்வரூபத்தையும், பரஸ்வரூபத்தையும் அறியவொட்டாமல் கண்சுழன்று கிறுகிறுக்கவைத்த மற்றொரு பிரபந்தமாகும். ஸ்வரூபத்தை அழித்துக்கொண்டு மடலெடுத்துப் பரமபுருஷனைப் பெற முயலும் இம்முயற்சி, நெல்லை அடையமுடியாத ஒருவன், நெற்கதிர்ப் போரை வழியல்லாவழியில் கொளுத்தி, அதில் வெந்த நெற்பொரிகளைக் கொறிப்பதற்கு (தின்பதற்கு) ஒப்பாகும். நாயகியினுடைய அதிப்ரவ்ருத்தியைக்கண்டு அவளைச் சேர்ந்தவர்களும், நாயகனுடைய குணஹானியை நாயகியின் வாய்மூலமாகவே கேட்டு அவளைச் சேர்ந்தவர்களும் இருவரையும் கைவிட்டால், அப்போது வேறு போக்கற்று இருவரும் கூடி ஒரு வழியே போகலாம் என்று மடலெடுக்கும் நாயகிக்குக் கருத்து.

"வாடினேன் வாடி" [பெரியதிரு 1-1-1] என்றுதொடங்கி சிறியதிருமடலீருக பகவத்குணங்களோடு பழகிப்போருகையாலே ஆற்ருமை மிகுந்து தவருன வழியிற்சென்ருவது காணவேண்டுமென்று கண்சுழன்று மயக்க

மிக்கு, வழியல்லா வழியேயாகிலும் காணவேணுமென்று கண்ணுஞ்சுழலையிட்டபடி.

இப்ரபந்தம், எம்பெருமானோடு கலந்து பிரிந்தாளொரு பிராட்டி, தன்னாற்றாமையாலே மடலூர்ந்தாகிலும் காண வேணுமென்னும் தசை தமக்குப் பிறந்து பேசுகிறார்.

மடலாகிறது-இரண்டு தலைக்கும் அவத்யத்தை விளைக்குமதன்றோவென்ன; அதுதானன்றோ தேட்டமென்கிறது. **"रामस्य दयिता भार्या नित्यं प्राणसमा हिता"** (ராமஸ்ய தயிதா பார்யா நித்யம் ப்ராணஸமா ஹிதா) என்றும், **"ममैव दुष्कृतं किञ्चिन्महदस्ति न संशयः। समर्थावपि तौ यन्मां नावेक्षेते परन्तपौ॥"** (மமைவ துஷ்க்ருதம் கிஞ்சிந் மஹதஸ்தி ந ஸம்சய: ஸமர்த்தாவபி தௌ யந் மாம் நாவேக்ஷேதே பரந்தபௌ) என்றும், **"स्वस्त्यस्तु रामाय सलक्ष्मणाय तथा पितुर्मे जनकस्य राज्ञः"** (ஸ்வஸ்த்யஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய ததா பிதுர்மே ஜநகஸ்ய ராஜ்ஞ:) என்றும், **"न मन्थराया**

முற்றபடியாகும் இப்பிரபந்தம். சிறியதிருமடலும் அவனுடைய குணங்களை நினைவுறுத்தி ஆற்றாமையை அதிகரிக்கச் செய்துவிட்டது. அவன் வந்தபாடில்லை. ஆகையால், சிறுபோரிலே தோற்றார் பெரும்படைதிரட்டிப் பெரும்போர் புரிவதுபோலே பெரியதிருமடலாகிற இந்நூலைத் தொடங்குகிறார்.

எம்பெருமானோடு கலந்து பிரிந்த ஒரு பிராட்டி அவனைப் பெறாமல் தரிக்கமாட்டாமையாலே 'மடலூர்ந்தாகிலும் காணவேணும்' என்று கூறும் தசை தமக்குப் பிறந்து அதைப் பேசுகிறார் இப்பிரபந்தத்திலே.

மடலென்பது நாயகனுக்கும் நாயகிக்கும் தோஷத்தை விளைப்பதன்றோ என்னில்: குணத்தைப் பேணியிருந்து பலனைப் பெறாதபோது, தோஷத்தை விளைத்துக்கொண்டாவது பலனைப் பெறுவதே வேண்டியது என்கிறது இப்பிரபந்தத்தில். "ராமனுக்கு இனிய மனைவி; எப்போதும் உயிரைப்போல் நன்மை பயப்பவள்" [ரா-பா 1-26] என்றும், "எதிரிகளை அழிப்பவர்களும் எதையும் செய்யவல்லவர்களுமான ராமலக்ஷ்மணர்கள் என்னைக் கணிசியாமலிருப்பதிலிருந்து, நான் செய்த பெரியதோர் குற்றம் உள்ளதென்பதில் ஐயமில்லை" [ரா-ஸு 38-47] என்றும் "இளையவரோடுகூடிய ராமபிரானுக்கும் என் தந்தையான ஜனகமஹாராஜாவுக்கும் மங்களமுண்டாகட்டும்" [ரா-ஸு 32-9] என்றும், "மந்தரை, என் தாயான கைகேயி

न च मातुरस्या दोषो न राज्ञो न च राघवस्य"(ந மந்தரயா ந ச மாதுரஸ்யா தோஷோ ந ராஜ்ஞோ ந ச ராகவஸ்ய) என்றும், "**यदि प्रीतिर्महाराज यद्यनुग्राह्यता मयि। जहि मां निर्विशङ्कस्त्वं प्रतिज्ञामनुपालय**" (யதி ப்ரீதிர் மஹாராஜ யத்யநுக்ராஹ்யதா மயி। ஜஹி மாம் நிர் விசங்கஸ்த்வம் ப்ரதிஜ்ஞாமநுபாலய) என்றும், *வள வேழுலகிற்படியாலும், "மிக்கசீர்த் தொண்டரிட்ட பூந்துள வின் வாசமே" என்றும் அத்தலைக்கு ஸம்ருத்தியைப் பாரிக்க, "உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து நாடினேன்" என்றும் பேசுகிற இவருடைய பேரளவுக்குப் போருமோவென்னில்; ஜ்ஞாநாபராதமன்று; பகவத் ஸௌந்தர்யாபராத மாகையாலே. "**बहवो नृप कल्याणगुणाः पुत्रस्य सन्ति ते**" (பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்திதே) "**धातूनामिव शैलेन्द्रो गुणानामाकरो महान्**" (தாதூநாமிவ சைலேந்த்ரோ குணாநாமாகரோ மஹாந்) என்றும் உண்டாகையாலுமிதுவே சேரும்.

அரசரான தசரதர், ராமபிரான் ஆகியவர்களுடைய பாபத்தினுல் ராகவன் வனம் போகவில்லை; அதற்கு என் பாவமே காரணம்" [ரா-?] என்றும் "பிரானே! என்னிடம் அன்புளதாகில், நான் அருளத்தக்கவளாகில், ஐய மின்றியே என்னைக் கைவிடுவீர்; ப்ரதிஜ்ஞையைக் காப்பாற்றிக் கொள்வீர்" [ரா-உத் 106-4] என்றும், "வளவேழுலகில்" [திருவாய் 1-5] என்ற திருவாய்மொழியிலும், "மிக்கசீர்த்தொண்டரிட்ட பூந்துளவின் வாசமே வண்டு கொண்டு வந்தூதுமாகிலே, கெண்டையொண்கணும் துயிலும், என் நிறம் பண்டு பண்டுபோலொக்கும்" [பெரியதிரு 11-1-9] என்றும் பிராட்டி, பரதாழ்வான், இளையபெருமாள், நம்மாழ்வார் ஆகிய பேரறிவாளர்களும், இவ்வாழ்வார்தாமும் பகவத்ஸம்ருத்தியைப் பாரிக்கும்போது, "உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து நாடினேன்" [பெரியதிரு 1-1-1] என்றும் பேசுகிற இவருடைய பேரறிவுக்குத் தகுமோ இவருடைய இச்செயல்? எனில்: இவர் அறிவின்மேல் குற்றமில்லை; பரமபுருஷனின் அழகினுல் விளைந்த குற்றமேயிது. அழகு மாத்திரமல்ல; அவன் குணங்களுக்கும் இதில் பங்குண்டு. "அரசனே! உன் பிள்ளைக்குப் பல நற்குணங்கள் உள்ளன" [ரா-அ 2-26] "மலையரசன் தாதுக்களுக்கு இருப்பிடமாவதுபோல் ராமபிரான் குணங்களுக்குப் பெரியதோர் இருப்பிடம்" [ரா-கி 15-21] என்று சொல்லப்படும் குணங்கள் ஸாமான்யரையும் ஈடுபடுத்தும்போது, பேரன்புடைய இவரையீடுபடுத்தி வழியல்லாவழியில் செலுத்துமென்பது பொருத்தமுடையதேயாம்.

"तुल्यशीलवयोवृत्तां" (துல்ய சீல வயோ வ்ருத்தாம்) என்கிறபடியை உடையராயிருப்பாரிருவர் தைவயோகத்தாலே கூடி தைவயோகத்தாலே பிரிந்து நெடுங்காலம் வரவுபார்த்திருந்து வரக்காணாமையாலும், த்ருஷ்டோபாயமும் அத்ருஷ்டோபாயமும் கைவாராமையாலும், ஆற்றவொண்ணாத அபிநிவேசம் மிக்கு, மடலூர்ந்தாகிலும் காணவேணுமென்கை யோக்யம். கூடுவதும் பிரிவதும் இரண்டும் புண்யபலமென்றது; கூடுகை-புண்யபலம்; பிரிகை–புண்ய பலமானபடி எங்ஙனேயென்னில்; **"वातातपक्लान्तमिव प्रणष्टं वर्षेण बीजं प्रतिसञ्जहर्ष" (வாதாதப க்லாந்தமிவ ப்ரணஷ்டம் வர்ஷேண பீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ)** என்னுமாபோலே ஸ்நேஹ வர்த்தகமாகையாலே. த்ருஷ்டோபாயமென்கிறது-தௌத்யாதிகளை; அத்ருஷ்டோபாயமென்கிறது- தையொருதிங்களிற்படியை.

"ஒத்த குணம் வயது ஒழுக்கம் ஆகியவற்றையும், ஒத்த குலத்தையும் அழகையும் உடையவளான சீதைக்கு ராமபிரானே தகுந்தவர்; அவருக்கும் கருங்கண்ணியான இவளே தகுந்தவள்" [ரா-கி 16-5] என்று எல்லாவிதத்திலும் பொருத்தமுடையராயிருப்பவர்களான நாயக நாயகியரிருவர் தங்கள் புண்ணிய வசத்தாலே கூடி, அத்தாலேயே பிரிந்து, ஒருவர் மற்றொருவருடைய வரவை நெடுங்காலம் எதிர்பார்த்திருந்து வரக்காணாமையாலும், த்ருஷ்டோபாயங்களும், அத்ருஷ்டோபாயங்களும் கூட்டிவைக்காமையாலும், தாங்கவொண்ணாத பேரன்பு மிகுந்து, மடலூர்ந்தாவது காணவேணுமென்று முயற்சிப்பது தகுந்ததே. நாயகநாயகியர் கூடுவதும், பிரிவதும் புண்ணியபலம் என்றது; கூடுவது புண்ணியபலம் என்றது பொருந்தும்; பிரிந்தது புண்ணியபலம் என்றது எப்படிப் பொருந்தும் எனில்: "காற்றாலும், வெயிலாலும் வாடி வதங்கிய விதை மழையினால் (முன்னிலும் அழகியதாய் முளைவிடுவது) போல் முன்னிலும் பொலிவுபெற்றாள் சீதாபிராட்டி" [ரா-ஸு 29-6] என்னுமாபோலே பிரிவு அன்பை வளர்ப்பதாகையாலே பிரிந்ததும் புண்ணியபலமேயாம். த்ருஷ்டோபாயங்கள் என்றது தூதுவிடுதல் முதலான, ப்ரத்யக்ஷஸித்தமான உபாயங்களை. அத்ருஷ்டோபாயங்களென்றது-"தையொரு திங்கள்"[நாச் திரு-1] திருமொழியிலே நாச்சியார் காமனை ஆச்ரயித்தது போன்று சாஸ்திர ஸித்தமான உபாயங்களை.

“स्त्रियो वृद्धास्तरुण्यश्च सायं प्रातस्समाहिताः। सर्वान् देवान्नमस्यन्ति रामस्यार्थे यशस्विनः॥” (ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யஶ்ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா:। ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:॥) என்கிறபடியே இராதே மடலூருகிற இது சேருமோவென்னில்; சேரும். மடலூருகை தான், உண்ணாதே குளியாதே உகந்த விஷயத்தை ஒரு படத்திலே விகித்து அத்தைக்கொண்டு திரிகையும், அற விளைந்தால் அதின் காற்கடையிலே விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கக்கிடக்கையும், அங்ஙனே முடிகையும். இத்தால் ப்ரயோஜநமென்னென்னில், அவன் கேட்குமென்கையும், இல்லையாகில் இதுதானேப்ரயோஜநமாகை.

“कामिनो वर्णयन् कामान् लोभं लुब्धस्य वर्णयन्। नरः किं फलमाप्नोति कूपेऽन्धमिव पातयन्॥” (காமிநோ வர்ணயந் காமாந் லோபம்

[(தாடகாஸுபாஹுமாரீசாதிகளை வென்று)புகழ்படைத்த ராமனுக்காக (அயோத்தியிலுள்ள) ஸ்திரீகளும், கிழவர்களும், குமரிகளும், காலையிலும், மாலையிலும் எல்லா தேவதைகளையும் குறிக்கொண்டு வணங்குகிறார்கள்] என்று அவனுக்காக வழியல்லா வழியில் பரியவேண்டியிருக்க, முறையற்ற வழியில் அவனைத்தூற்றி மடலூருவது பொருந்துமோ? என்னில்: பொருந்தும்; மடலூர்வதாவது,—உண்ணமல், குளிக்காமல் தான் காதலிக்குமவனை (அல்லது அவளை) ஒரு படத்திலே எழுதி, அதையெடுத்துக்கொண்டு திரிவதும், காதல்நோய் முற்றினால் அந்தச் சித்திரத்தின் காலிலே விழுவதும், விழுந்தால் அப்படியே கரையானரிக்கும்படி கிடப்பதும், அப்படியே உயிர் விடுவதுமாகும். இவையெல்லாம் காதலால் வருவதாகையாலும், காதலை வெளிப்படுத்தி வளர்ப்பதாகையாலும் இச்செயல்கள் காதலர் தன்மைக்குப் பொருந்தியதே. மூடனுங்கூடப் பயனற்ற செயலில் ஈடுபட்டமாட்டாமையால், இச்செயல்களின் பயன் என்ன? எனில்: இவ்வதிப்ரவ்ருத்தியை அறிந்து அவன் அரைகுலையத்தலைகுலைய ஓடிவந்து முகங்காட்டுவதே பயன்; அப்படிக்காட்டாவிடினும், அவனிடத்தில் காதலை வெளியிடுவதும், வளர்ப்பதுமாகிற இச்செயலே ஸ்வயம் ப்ரயோஜனமாகிறது. ஆகையால் பயனுள்ள செயலே இது.

“காமுகனின் காமங்களை வருணிப்பதாலும், உலோபியின் கருமித்தனத்தை விவரிப்பதாலும், கிணற்றில் குருடனைத்தள்ளுவதுபோலே,

லுப்தஸ்ய வர்ணயந்| நர:கிம்பலமாப்நோதி கூபேந்தமிவ பாதயந்) *என்று சொல்லாநிற்கச் செய்தே விடப்ரவ்ருத்தி யாய் அசாஸ்த்ரீயமாய் ஸத்துக்களும் கைவிடுவதொன்றாகை யால் இது ப்ராப்தமன்றேயென்ன; அது சப்தாதி விஷயங் களைக் காமமாகக் கொள்ளும்போதே குற்றமுள்ளது, இது வேதாந்தங்கிற் சொல்லுகிற பகவத்பக்தியைக் காமமென்கை யாலே குற்றமில்லை.* **"व्यवसायादृते ब्रह्मन् नासादयति तत्परं" (வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்மந் நாஸாதயதி தத்பரம்) "परमात्मनि यो रक्तो विरक्तोऽपरमात्मनि। सर्वैषणाविनिर्मुक्तः स भैक्षं भोक्तुमर्हति॥" (பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோऽபரமாத்மநி| ஸர்வேஷணா விநிர்முக்தஸ்ஸ பைக்ஷம் போக்துமர்ஹதி) "यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति" (யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி)** *என்கிற பகவத்யத்யவஸாயத்தைக் காமமென்கிறது. ஸந் யாஸதர்மத்தை "மடல்" என்று ஆளவந்தாரருளிச்செய்தார்.*

மனிதன் ஒரு பலனையும் அடைவதில்லை" [ ] என்று காதலை வருணிப்பது தாழ்ந்த செயலாகச் சொல்லப்பட்டிருக்கிறது; விடபுருஷர் களின் செயலென்று நல்லோர்களும் இதை இகழ்கின்றனர்; சாஸ்திர நிஷித்தமாகவுமிருக்கிறது; நல்லோர்கள் இதை விலக்கியுமிருக்கின்றனர்; இக்காரணங்களால் இது தகாத செயலாயிற்றே என்னில்: சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்னும் ப்ராக்ருதவிஷயங்களை விரும்பும்போதே அக் குற்றம் உண்டாகிறது. அப்ராக்ருதமாய், "உபாஸீத" த்யாயீத" என்று வேதாந்தங்களில் விதிக்கப்படும் பகவத் பக்தியையே இங்கு காமமாகச் சொல்லுகிறதாகையாலே அக்குற்றமில்லை. "அந்தணரே! (பக்தியாகிற) மனவுறுதியில்லாவிடில் அந்தப் பரவஸ்துவை அடையமாட்டான்'. [பார-சாந்தி 334-47] என்றும், "பரமபுருஷனிடம் எவன் காதல்பூண்டு, இதரவிஷயங்களை வெறுத்திருக்கிறானோ அவன் பொன்னாசை முதலான ஆசைகள் அனைத்தினின்றும் நீங்கி ஸந்யாஸத்தை ஏற்றுக்கொள்ளக் கடவன்" [பார்ஹஸ்பத்யஸ்மிருதி] "எந்தப் பரவஸ்துவை விரும்பு மவர்கள் ஸ்திரீஸங்கமின்மையை அனுஷ்டிக்கின்றனரோ" [கட 2-15] என்கிற பகவத் பக்தியாகிற துணிவையே இங்கு காமமென்கிறது. உற்று ருறவினர் அனைவரையும் உதறித்தள்ளித் தொழில்படும் ஒற்றுமையைக் கொண்டு ஸந்யாஸதர்மத்தை ஆளவந்தார் மடலென்று அருளிச்செய்தார். இத்திருமடலின் தொடக்கத்தில் அறம், பொருள், வீடு என்னும் மற்றைப்

ஆனுல் தர்மார்த்த மோக்ஷங்களை யிகழ்வானென்னென்னில் ஜாபாலி பகவான் பெருமாள் திருமுன்பே லோகாயதிக ஸித்தாந்தத்தின்படியே சில அதர்மத்தை விண்ணப்பஞ் செய்ய. **"जाबालिर्ब्राह्मणोत्तमः"** (ஜாபாலிர் ப்ராஹ்மணேத்தம:) என்று அவனைக்கொண்டாடுகையாலே இதிலுங் குற்றமில்லை. தர்மார்த்த மோக்ஷங்களை இகழ்கையன்று உத்தேஶ்யம்; தம்முடைய புருஷார்த்தத்திலுள்ள தாத்பர்யம்.

"கடலன்ன காமத்தராகிலும் மாதர் மடலூரார் மற்றை யார்மேல்" என்று சொல்லாநின்றதேயென்னில்; அது விதி நிஷேத வசநோக்தியன்று; ராகப்ராப்தமாகையாலே தோற்ருர் மடலூருமத்தனை; விதிநிஷேதமாகில் ராஜாஜ்ஞைக்கு நிற்கவேணும் காமம்.

இப்படி மடலூர்ந்தாராரென்னில் **"सदेवगन्धर्वमनुष्यपन्नगं जगत्सशैलं परिवर्तयाम्यहं"** (ஸதேவகந்தர்வமநுஷ்யபந்நகம்

புருஷார்த்தங்கள் மூன்றையும் இகழ்வதற்குக் காரணமென்னவெனில்: ஜாபாலிமஹர்ஷி ஸ்ரீராமபிரானுக்கு முன்னாலே, அவரை அயோத்திக்குத் திருப்பிக்கொண்டு போகவேண்டுமென்னும் ஆசையாலே லோகாயதஸித்தாந்தத்தின்படி சில நாஸ்திகவாதங்களைப்பேச, "அந்தணர் தலைவரான ஜாபாலி" [ரா-அ 108-1] என்று, ராமனிடத்தில் அவருக்குள்ள அன்பின் மிகுதியைக்கண்டு வால்மீகி பகவான் அவரைக் கொண்டாடுகையாலே, இதுவும் அதுபோலே கொண்டாடத்தக்கதேயாகும். இவருடைய குறிக்கோள் அறம்பொருள் வீடுகளை இகழ்வதன்று; தம்முடைய புருஷார்த்தமான காமத்தைப் புகழ்வதிலேயே இவருக்கு நோக்கு.

"கடலன்ன காமத்தராகிலும் மாதர் மடலூரார் மற்றையார்மேல்" என்று தமிழ்நூல்களிலே புருஷர்கள் மடலூரலாமேயொழிய மாதர் மடலூரக்கூடாது என்று ஓர் வரம்பு கட்டியிருக்கிறதேயெனில்: ராஜாஜ்ஞை போலே அதை விதிநிஷேத வசனமாகக் கொள்ளக்கூடாது. காமமென்பது அவரவர் விருப்பத்துக்கே கட்டுப்படுமாகையாலே தானுகந்த விஷயத்திலே மிகவும் ஈடுபட்டவர்கள் மடலூருவதில் தவறில்லை. விதிநிஷேத வசனமாகில் அரசனுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டே காமம் தொழிற்பட வேண்டும்; அப்படி நாம் காணவில்லையே.

இப்படி மடலூர்ந்தார் யார் யார்? என்னில்: "தேவர், கந்தருவர், மனிதர், பாம்புகள் முதலியவற்ருேடு கூடியதான உலகை மலைகளோடுகூட

ஜகத்ஸசைலம்பரிவர்த்தயாம்யஹம்)என்றும் "अशोक शोकापनुद शोकोपहतचेतसं। त्वन्नामानं कुरु क्षिप्रं प्रियासन्दर्शनेन मां॥" (அசோக சோகாபநுத சோகோபஹதசேதஸம்| த்வந்நாமாநம் குரு க்ஷிப்ரம் ப்ரியாஸந்தர்சநேந மாம்)என்றும்'न मे स्नानं बहुमतं वस्त्राण्याभरणानि च। तं विना केकयीपुत्रं भरतं धर्मचारिणम्।" (ந மே ஸ்நாநம் பஹுமதம் வஸ்த்ராண்யாபரணாநி ச| தம் விநா கைகயீபுத்ரம் பரதம் தர்மசாரிணம்)என்றும், "या न शक्या पुरा द्रष्टुं भूतैराकाशगैरपि। तामद्य सीतां पश्यन्ति राजमार्गगता जनाः॥" (யா ந சக்யா புரா த்ஷ்ரடும் பூதைராகாசகைரபி| தாமத்ய ஸீதாம்பஶ்யந்தி ராஜமார்க்ககதாஜநா:)என்றும் "மன்னனிராமன்பின் வைதேவி யென்றுரைக்கு மன்னநடை வணங்குநடந்திலளே" என்றும் இப்படிகளாலே தோற்ரூருமத்தனை. வாஸவதத்தாதிகள் பக்கலிலும் கண்டோம். இவள் ராஜபுத்ரியானபடி யெங்ஙனேயென்னில்; "स श्लाघ्यः स गुणी धन्यः स कुलीनः स बुद्धिमान्" (ஸ ஶ்லாக்யஸ்ஸ குணீ தந்யஸ்ஸ குலீநஸ்ஸ புத்திமாந்) என்றும், "தேசுந்திறலும்

நான் தலைகீழாக்குவேன்" [ரா-ஆர 64-75] "சோகத்தைப் போக்கும் அசோகமரமே! என்காதலியைக் காட்டுவதன்மூலம், துன்புற்ற மனத்தையுடைய என்னை விரைவில் உன் பெயரையுடையவனாக—அசோகனாக (சோகமற்றவனாக)-செய்வாயாக" [ரா-ஆர 60-17] "அறவழிநடக்கும் கைகேயி புத்திரனான பரதனை நீங்கி எனக்கு நீராட்டமும், உடுப்புக்களும், அணிகளும் வேண்டியிருக்கவில்லை" [ரா-யு 124-7] என்றும், "ஏந்த தேவியானவள் ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஜீவராசிகளாலும் காணமுடியாதவளாயிருந்தாளோ, அந்த சீதையை இன்று ராஜவீதியிலுள்ள எல்லா ஜனங்களும் காண்கிருர்கள்" [ரா-அ 33-7] என்றும், "மன்னனிராமன்பின் வைதேவியென்றுரைக்கும் அன்ன நடைய அணங்கு நடந்திலளே" [பெரியதிருமடல் 10] என்றும் இவ்வழிகளாலே அன்புக்குத் தோற்ருர் ஊருவதுண்டு; வாஸவதத்தை முதலானோரிடமும் கண்டோம். "ராஜகுலத்தில் பிறந்தவர்களே மடலூருவதை இவ்வுதாஹரணங்களில் காண்கிரோம்; இப்பரகாலநாயகி ராஜபுத்ரியாவளோ?' எனில்:

"ஸ ச்லாக்ய: ஸ குணீ தந்யஸ் ஸ குலீநஸ் ஸ புத்திமாந்|
ஸ சூர: ஸ ச விக்ராந்தோ யம் த்வம் தேவி நிரீக்ஷஸே||"

[வி-பு 1-9-11]

திருவுமுருவமும் மாசில் குடிப்பிறப்பும்'' என்றும், ''குலந் தருஞ் செல்வந் தந்திடும்'' என்றும் பகவத்கடாக்ஷத்தாலே ராஜபுத்ரிகளுக்குண்டான வேண்டப்பாடு இவளுக்குண்டாகையால். இப்பிராட்டி பகவத் விரஹத்தாலே, ''துளம்படு முறுவல் தோழியர்க்கருளாள்'' என்று சொல்லுகிறபடியே

[எவனை ஸ்ரீதேவியாகிற தேவரீர் கடாக்ஷிக்கிறீரோ, அவனே சிறந்தவன்; அவனே குணவான்; அவனே பாக்கியசாலி, அவனே நற்குடிப்பிறந்தவன்; அவனே அறிவாளி; அவனே சூரன்; அவனே வீரன்] என்றும்,

''தேசும் திறலும் திருவும் உருவமும்
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும்—பேசில்
வலம்புரிந்த வான்சங்கம் கொண்டான் பேரோத
நலம்புரிந்து நன்கடையும் வந்து'' [மூன்-திருவ 10] என்றும்,

''குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பருளும் அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயினசெய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன் நாராயணா வென்னும் நாமம்'' [பெரியதிரு 1-1-9]

என்றும் சொல்லுகிறபடியே. ஸ்ரீமந்நாராயணனுடைய திருக்கண்ணோக்கி னாலே ராஜபுத்ரிகளுக்குள்ள பெருமை இவளுக்கு உண்டாகையாலே இவள் மடலூரக் குறையில்லை.

''துளம்படு முறுவல் தோழியர்க்கருளாள் துணைமுலை சாந்து கொண்டணியாள்
குளம்படு குவளைக் கண்ணிணை யெழுதாள் கோலநன்மலர் குழற்கணியாள்
வளம்படு முந்நீர் வையமுன்னளந்த மாலென்னும் மாலின மொழியாள்'' [பெரியதிரு 2-7-2]

என்று சொல்லுகிறபடியே பகவானைப் பிரிந்து ஒரு வாடல்மாலை போலே யிருக்கிற இவளுக்குக் காதல் மிகுந்து மடலூரத்துணிய, அத்துணிவாலே

ஒரு வாடல் மாலைபோலேயிருக்கிற இவளுக்கு அபிநிவேசம் மிக்கு மடலூரத்துணிய, அத்துணிவாலே, காட்டுத்தீ தூவினூர் முகம்போலேயிராதே நீராடியுண்டார் முகம் போலே குளிர்ந்து எழிலும் அறமிக்கது. **"निर्गुणः परमात्माऽसौ देहं ते व्याप्य तिष्ठति" (நிர்க்குண: பரமாத்மா-஽ஸௌ தேஹம் தே வ்யாப்ய திஷ்ட்டதி)** என்று பெருமாள் கையும் வில்லும் உள்ளே நிழலிடாநின்றதி! என்று திருவடியை பீமஸேநன் சொன்னூற்போலே இவளுடம்பிலே மடல் நிழலிடுகிறபடியைக்கண்ட தோழி "ஓர்ப்பாலிவ் வொண்ணுதல் உற்ற நன்னோயிதுதேறினோம்" என்னுமா போலே இவள் மடலூரப் புகுகிறபடியையறிந்து, **"तया स राजर्षिसुतोऽभिरामया समेयिवानुत्तमराजकन्यया । अतीव रामः शुशुभेऽति कामया विभुः श्रिया विष्णुरिवामरेश्वरः ॥" (தயா ஸ ராஜர்ஷிஸுதோபி**

காட்டுத்தீதூவினூர் முகம்போலே கோபங்கொண்டு கொடியதாய்க் காட்சியளிக்காமல், குளித்து விருந்துண்டார் முகம்போலே குளிர்ந்து அழகும் மிகமிகுந்தது.

"நிர்க்குண: பரமாத்மா஽ஸௌ தேஹம் தே வ்யாப்ய திஷ்டதி।
தமஹம் ஜ்ஞாந விஜ்ஞேயம் நாவமந்யே ந லங்கயே॥"
[பாரத-ஆர 149-8]

[*நாணேறிடாத வில்லையுடைய பரமபுருஷனுன இந்த ராமபிரான் உன் திருமேனியை வியாபித்து விளங்குகிறூர்; அறிவினுல் அறியத்தக்க அவரை நான் அவமதிக்கவும்மாட்டேன்; தாண்டவும் மாட்டேன்.] என்று அனுமானிடம் பீமஸேனன் "ஸ்ரீராமபிரானுடைய **கையும் வில்லுமான** திருமேனி உன்னுடம்பிலே காட்சியளிக்கிறது" என்று சொன்னூற்போலே இவள் மேனியிலே மடலெடுக்கவேணுமென்னும் உறுதி வெளிப்படுவதைக்கண்டதோழி, "ஓர்ப்பால் இவ்வொண்ணுதல் உற்ற நல்நோயிது தேறினோம்" [திருவாய் 4-6-1] என்று இவள் மடலூரப் போகிறபடியை

---

*'அர்ச ஆதிப்யோ அச்' என்னும் வியாகரணவிதியை உபயோகித்து, "நிர்க்குணம் அஸ்யா ஸ்தீதி நிர்க்குண:" என்னும் வ்யுத்பத்தியாலே "நாணேறிடாத வில்லையுடைய பெருமாள்" என்று பொருள் கொண்டார் அரும்பதவுரைகாரர். "பெருமாள் கையும் **வில்லும்**" என்ற ஸ்ரீஸூக்திக்கு இது பொருந்துகிறது. ஹேயகுணமற்றவரான பெருமாள் என்பாருமுண்டு.

ராமயா ஸமேயிவாநுத்தமராஜகந்யயா | அதீவ ராம:சுசுபேதிகாமயா விபு ஸ்ரீயா விஷ்ணுரிவாமரேச்வர:) என்று சொல்லுகிற படியே உன்னுடைய ஆபிஜாத்யாதி மர்யாதைகளுக்கும் அவனுடைய ஆபிஜாத்யாதி மர்யாதைகளுக்கும் போராது இத்துணிவு, நாட்டாரும் பழியிடுவர்; மாதாபிதாக்களும் பந்துக்களும் கைவிடுவதும் செய்வர்கள் என்று நிஷேதிக்க ''என்செய்யு மூரவர்கவ்வை தோழியினி நம்மை'' என்றும், ''அன்னையென்செய்யிலென் ஊரென் சொல்லிலென்'' என்றும், ''யாம் மடலூர்ந்தும்'' என்றும் மடலூருவது போக்கிப் புருஷார்த்தமில்லையென்று உபபாதிக்கிறுள்.

சடக்கென மடலூராதே தோழிக்கு நின்று உத்தரஞ் சொல்லுவானென்னென்னில்; ''चापमानय सौमित्रे'' (சாபமாநய ஸௌமித்ரே) என்றும், ''இரைக்கும் கருங்கடல் வண்ணன்''

அறிந்து, '''ராஜரிஷியான தசரதனின் புத்திரனுன அவ்விராமபிரான், அழகியவளும் சிறந்த ராஜகந்யையையுமான சீதையோடு கூடி, மிக விரும்பப்படும் ஸ்ரீதேவியாலே தேவதேவனுன விஷ்ணுபகவான் விளங்குவதுபோலே மிகவும் விளக்கமுற்றுன்' [ரா-பா 77-32] என்று சொல்லுகிறபடியே, உன்னுடைய நற்குடிப்பிறப்பு, அழகு, குணம் முதலான பெருமைகளுக்கும், அவனுடைய அப்பெருமைகளுக்கும் தகாது இத்துணிவு; நாட்டிலுள்ளாரும் உன்னைப் பழிசொல்லுவர்; உன் தாய்தந்தையரும் கைவிடுவார்கள்'' என்று இவளை மடலெடுக்கக்கூடாதென்று தடுக்க, ''என்செய்யும் ஊரவர் கவ்வை தோழியினி நம்மை'' [திருவாய் 5-3-2] என்றும், ''அன்னையென் செய்யிலென் ஊரென் சொல்லிலென்'' [திருவாய் 5-3-6] என்றும், ''யாம் மடலூர்ந்தும் எம்மாழியங்கைப் பிரானுடைத்தூமலர் தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோம்'' [திருவாய் 5-3-10] என்றும் மடலூருவதைத்தவிர வேறு சிறந்த பிறவிப்பயன் இல்லை இப்போது என்று நிரூபிக்கிறுள் இங்கு.

விரைவாக மடலூரத்தொடங்காமல், தோழிக்கு பதிலுரைப்பதிலே பொழுதுபோக்குவானென்? என்னில்: ''லக்ஷ்மணு! வில்லையெடு'' [ரா-யு 21-22] என்று ராமபிரான் உரைத்தவுடன் அக்கடல் ஓடிவந்தது போலவும், ''மடலூர்துமே'' [திருவாய் 5-3-9] என்று ஆழ்வார் உரைத்தவுடன், ''இரைக்கும் கருங்கடல்வண்ணன்'' [திருவாய் 5-3-13] என்று

ஸ்ரீ:

திருமங்கை மன்னன் திருவாய் மலர்ந்தருளிய

பெரியதிருமடல்

மன்னிய பல்பொறிசே ராயிரவாய் வாளரவின்

பதவுரை:—மன்னிய—வாழ்ந்திடுக. பல் பொறி சேர் ஆயிரம் வாய் வாள் அரவின்—பல புள்ளிகளையும் ஆயிரம் வாய்களையும் ஒளியையுமுடைய ஞான திருவனந்தாழ்வானுடைய,

---

என்றும் சொல்லுகிறபடியே "மடல்" என்ன அக்கடல் பட்டது பட்டு அவன் வந்து தோன்றுமென்று பலகைப் புறத்தே பகட்டுகிறாள். தோழியுமிவள் சொல்லக்கேட்டுப் போது போக்குமளவில் அவன் வரும் என்னுமத்தாலே "சொல்லிக்காண்" என்கிறாள்.

வ்யா:—(மன்னிய) "**भद्र**" (பத்ரம்) "வாழியரோ" "**यामोषधिमिवायुष्मन्नन्वेषसि महावने**" (**யாமோஷதிமிவாயுஷ்மந்நந்வேஷஸி மஹாவநே**). தன் வாக்கிற் புகர் தானேயறிகையாலே என் வாக்கிலேயகப்படாதே என்காலிலே விழுந்து பிழைத்திடுகவென்கிறாள்.

தான் ஓடிவந்ததுபோலவும், நாம் மடலென்றவுடன் அக்கடல் கலங்கினாற் போலே கலங்கி ஓடிவருவான் என்னும் கருத்தாலே பலகைக்குப்பின்னால் (மறைவிடத்திலே) நின்று மிரட்டுவாரைப்போலே பயமுறுத்துகிறாள். தோழியும் இவள் பதில் சொல்லுவதைக்கேட்டுப் போதுபோக்கிக் கொண்டிருந்தால் அவன் வரக்கூடும் என்னும் நினைவாலே "பதில் சொல்லுவாய்" என்கிறாள்.

வ்யா:-(மன்னிய) மங்களமுண்டாகக்கடவது; பெருமாளும் பிராட்டியுமான சேர்த்தியைக்கண்டவுடன் "பத்ரம் தே" [ரா-பா 73-28] [உனக்கு மங்களமுண்டாகுக] என்ற ஜனகனைப்போலவும், "வாழியரோ" [திருவிருத்தம் 2] என்று தொடக்கத்தில் மங்களாசாஸனம் செய்த நம்மாழ்வாரைப்போலவும், "நெடுங்காலம் வாழ்வாய்! பெருங்காட்டில் அருமருந்தைப் போலே நீ எவளைத் தேடுகிறாயோ, அந்த தேவியும் என்னுயிருமாகிய இரண்டும் இராவணனாலே அபஹரிக்கப்பட்டது" [ரா-பா 67-15] என்று பிரிவிலே கண்டவுடன் பல்லாண்டுபாடிய ஜடாயு மஹாராஜரைப்போலவும், மடலெடுப்பதென்ற ப்ரஸ்தாவம் வந்தவுடன் பல்லாண்டு பாடுகிறாள்; தன் வாக்கின் வலிமை தானே அறிகையாலே, என் வாக்கிலே விழுந்து அழிந்து போகாமல் என் காலிலே விழுந்து பிழைத்துப்போகட்டும் என்கிறாள் தொடக்கத்திலே.

(பல்பொறி) வைத்த கண் வாங்கவொண்ணுதபடியிருக்கிற அழகு. (சேர்) சேர்ப்பாலும் கண்டசர்க்கரையும் போலிருக்கை. (ஆயிரவாய்) ஸுகஸ்பர்சத்தாலே ப்ரீதிமிக்கு அப்பெருவெள்ளத்துக்குப் போக்குவீடு கண்டாற்போலிருக்கை. (வாளரவின்) வாள்-ஒளி. **"पुनर्युवेव"** (புநர்யுவேவ) என்னுமாபோலே. **"युवेव वसुदेवोऽभूद्विहायाभ्यागतां जरां"** (யுவேவ வஸுதேவோபூத் விஹாயாப்யாகதாம் ஜராம்)

(பல்பொறி) பல புள்ளிகளையுடையனுயிருக்கிறபடி. பொன்னிலே ரத்தினங்களைப் பதித்தாற்போலே வைத்த கண்ணை எடுக்கமுடியாதபடியிருக்கிற அழகைச் சொல்லுகிறது. (சேர்) புள்ளிகள் திருவனந்தாழ்வானின் திருமேனியிலே சேர்ந்திருப்பது, பாகற்காயும் மாம்பழமும் சேர்ந்தாற்போலே விரஸமாயிருக்காமல், சேர்ப்பாலும் கற்கண்டும் கலந்திருப்பது போலே ஸரஸமாயிருக்கிறபடி. (ஆயிரவாய்) எம்பெருமானுடைய புஷ்பஹாஸ (மலர்புரையும்) ஸுகுமாரமான (மென்மைமிக்க) திருமேனி தீண்டப்பெற்றதாலே ஆனந்தம் பெருக்கெடுத்து அவ்வானந்தப் பெருவெள்ளத்துக்கு ஆயிரம் வடிகால்கள் வெட்டி விட்டிருப்பதுபோலேயிருக்கை. (வாளரவின்) வாள்—ஒளி. பகவத்ஸ்பரிசத்தாலே ஒளிவிஞ்சி விளங்குகிறபடி.

"அஹம் புநர் தேவகுமாரரூபம்
அலங்க்ருதம் தம் ஸுதமாவ்ரஜந்தம்।
நந்தாமி பஶ்யந்நபி தர்ஶநேந
பவாமி த்ருஷ்ட்வைவ புநர் யுவேவ॥" [ரா-அ 12-104]

[தேவகுமாரனைப்போன்ற உருவினனும், அலங்கரிக்கப்பெற்றவனும், என்னை நோக்கி வருகின்றவனுமான ராமனை (மனமெனும்) உட்கண்ணுல் கண்டவுடனே உகக்கிறேன். கட்கண்ணுல் கண்டாலோவெனில் மறுபடியும் வாலிபனுகவே ஆகிவிடுகிறேன்.] என்று தசரதனும்,

"மஹோத்ஸவமிவாஸாத்ய புத்ராநநவிலோகநாத்।
யுவேவ வஸுதேவோऽபூத் விஹாயாப்யாகதாம் ஜராம்॥"

[மைந்தன் முகம் காணப்பெறுகையாலே பெருவிழாவைப் பெற்றதுபோலே வந்தடைந்த கிழத்தனத்தை விட்டு வஸுதேவர் வாலிபராகவே ஆனுர்] என்று வஸுதேவரும் பரமபுருஷனைக் கண்டவுடன் கிழத்தனம் நீங்கி வாலிபராக ஆகியிருக்கும்போது, அவனைத் தீண்டப்பெற்ற திருவனந்தாழ்

சென்னி மணிக்குடுமித் தெய்வச் சுடர்நடுவுள் 1
மன்னிய நாகத் தணைமேலோர் மாமலைபோல்
மின்னு மணிமகர குண்டலங்கள் வில்வீசத் 2
துன்னிய தாரகையின் பேரொளிசே ராகாசம்
என்னும் விதானத்தின் கீழால்—இருசுடரை 3

சென்னி மணி குடுமி—படங்களில் விளங்குகின்ற மாணிக்கங்களினின்று கொழுந்துவிட்டோங்குகின்ற, தெய்வம் சுடர்நடுவுள்—அப்ராக்ருதமான ஒளிக் கதிர்களினிடையே, மன்னி—பொருந்தி, அ நாகத்து அணை மேல்—அந்தத் திருவனந்தாழ்வானாகிற சயநத்தின் மேலே, ஓர் மா மலைபோல் கிடந்து—விலக்ஷணமானவொரு கருமலை சாய்ந்தாற்போலே பள்ளிகொண்டு, மின்னு மணி மகர குண்டலங்கள் வில் வீச—ரத்நங்கள் விளங்குகின்ற மகரகுண்டலங்கள் வானவில்போல் ஒளிவிட, துன்னிய தாரகையின் பேர் ஒளி சேர் ஆகாசம் என்னும்—நெருங்கிய நக்ஷத்ரங்களின் நிறைந்த வெளிச்சம் நிரம்பிய ஆகாசமாகிற, விதானத்தின் கீழால்-மேற்கட்டியின் கீழே, இரு சுடரை-திருவாழி திருச்சங்குகளாகிற இரண்டு தேஜஸ்ஸுக்களை,

---

(சென்னிமணிக்குடுமித் தெய்வச் சுடர்நடுவுள்) சென்னி-(**ஃபண**) பணம், குடுமி-கொழுந்து, தெய்வம்-திவ்யம். பணு மணியினுடைய கொழுந்துவிட்டோங்குகிற அப்ராக்ருத தேஜஸ்ஸின் நடுவே; கங்காதரங்கத்தினுள்ளே இருக்குமா போலே. (மன்னி) போக்யதையின் மிகுதியாலே பிராட்டி திருமுலைத்தடத்தினாலேவீசி வில்லிட்டெழுப்பினாலும் எழுப்ப

வான் ஒளிவிஞ்சுவதில் ஆச்சரியமென்ன? (சென்னி மணிக்குடுமித் தெய்வச் சுடர்நடுவுள்) **சென்னி**—தலை; (இங்கு) ஆதிசேஷனின் படம்; **மணி**—அதிலுள்ள ரத்தினம்; **குடுமி**—அதனுடைய ஒளிக்கொழுந்து; **தெய்வம்**-திவ்யம்; அப்ராக்ருதம். திருவனந்தாழ்வானுடைய படத்தில் மணியின் கொழுந்து விட்டு ஓங்கும் அப்ராக்ருதமான ஒளிக்கற்றையின் நடுவில். வெளுத்ததாய் பெருக்கெடுத்தோடும் கங்கை நீரலைகளினுள்ளே இருப்பதுபோலே எழுந்தருளியிருக்கை. (மன்னி) அழுந்தி; திருவநந்தாழ்வானின் திருமேனியினிமைப்பெருமையாலே, பெரியபிராட்டியார் இனிமையின் எல்லைநிலமான தம் திருமுலைத்தடத்தாலே நெருக்கி வில்லாலடித்து எழுப்பினாற்போலே

வொண்ணுதிருக்கை. (அங்நாகம்) வாளரவாகிற நாகம். வாள்-ஒளி. (அணேமேல்) திருவநந்தாழ்வானுகிற படுக்கையின்மேல். (ஓர் மாமலேபோல்) ஓரஞ்ஜநகிரி படிந்திருந்தாற்போலே யிருக்கை. (மின்னு மணிமகர குண்டலங்கள் வில்வீச) திருமேனியின் நிறத்தால் வந்த இருட்சிக்குக் கைவிளக்குப் பிடித்தாற்போலேயிருக்கிறதாயிற்று திருமகரகுண்டலங்களின் புகர். மின்னுநின்றுள்ள ரத்நங்களேயுடைத்தான மகர குண்டலம் தன்னுடைய ஒளியைப் பரப்ப. (துன்னிய தாரகை இத்யாதி) நெருங்கியிருக்கிற நக்ஷத்ர தாராகணங்களினுடைய மிக்க தேஜஸ்ஸையுடைத்தாயிருந்துள்ள ஆகாசம் போலேயிருக்கிற திருமுத்தின் பந்தற்கீழேயென்னுதல், ஆகாசமாகிற திருமுத்தின் பந்தற்கீழேயென்னுதல். ஆகாசம்போலேயென்றபோது கட்டின ஈத்தொற்றியிருக்கிறபடி. ஆகாசத்தை த்ருஷ்டாந்தமாகச் சொல்லிற்று (**அச்ச**) அச்சமாயிருக்கையாலே.

எழுப்பினுலும் எழுப்பவொண்ணுதபடி மெய்ம்மறந்து உறங்குகிறபடி. (அங்நாகம்) வாளரவாகிற அந்த ஆதிசேஷன். ஒளிபொருந்திய ஆதிசேஷன். (அணேமேல்) திருவனந்தாழ்வாநுகிற படுக்கையின்மேல். (ஓர் மாமலேபோல்) திருப்பாற்கடலிலே ஒரு மைக்கருமலே சாய்ந்தாற்போலேயிருக்கை. (மின்னு மணிமகரக் குண்டலங்கள் வில்வீச) திருமேனியின் நிறத்தால் ஏற்பட்ட காரிருளுக்குக் கைவிளக்குப் பிடித்தாற்போலேயிருக்கிறது திருமகர குண்டலங்களின் ஒளி. மின்னவிடும் மணிகளேயுடைய மகரகுண்டலங்கள் (மகர வுருவிலமைந்த காதணிகள்) தம் ஒளியைப் பரவவிட. (துன்னிய தாரகையின் பேரொளிசேராகாசம் என்னும் விதானத்தின் கீழால்) நெருங்கியிருக்கிற நக்ஷத்திரங்களாகிற தாராகணங்களினுடைய மிகுந்த ஒளியையுடைய ஆகாசம்போலேயிருக்கிற திருமுத்துப்பந்தலின் கீழே என்றும் கொள்ளலாம்; அல்லது ஆகாசமாகிற திருமுத்துப்பந்தலின் கீழே என்றும் கொள்ளலாம்; ஆகாசம்போலே என்றபோது மேலேகட்டியிருக்கும் மேற்கட்டியைச் சொல்லுகிறது. ஆகாசத்தை உபமானமாகச் சொன்னது, (கலங்கியிராமல்) தெளிவாயிருக்கும் ஒற்றுமையைக்கொண்டு. நக்ஷத்ரஸ்தானத்திலே முத்துக்கள் ஒளிவிடும் ஒற்றுமையும் விவக்ஷிதம்.

மன்னும் விளக்காக வேற்றி மறிகடலும்
பன்னு திரைக்கவரி வீச நிலமங்கை 4
தன்னை முனநா ளளவிட்ட தாமரைபோல்
மன்னிய சேவடியை வானியங்கு தாரகைமீன் 5

மன்னும் விளக்கு ஆக ஏற்றி—என்றுமணையாத விளக்காக ஏற்றிவைத்துக் கொண்டும், நிலமங்கைதன்னை முனம் நாள் அளவிட்ட-முன்னொருநாள் பூமிப் பிராட்டியை அளந்த,தாமரைபோல் மன்னிய சே அடியை-திருவடித் தாமரை யைநோக்கி, மறி கடலும் பன்னு திரை கவரி வீச—அலையெரிகிற ஸமுத்ர ராஜன் பரம்பின அலைகளாகிற சாமரங்களை வீசப்பெற்றும், வான் இயங்கு தாரகை மீன்—ஆகாசத்திலே திரியும் நக்ஷத்திரங்களாகிற,

---

(இருசுடரை மன்னும் விளக்காகவேற்றி) இவன் போன விடமெங்கும் கூடப்போமவர்களிறே ஆழ்வார்கள். ஆகையாலே திருவாழியாழ்வானையும், ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானையும் நித்யமான விளக்காகவேற்றி. அங்ஙனன்றிக்கே சந்த்ரஸூர்யர்களைச் சொல்லிற்றாகவுமாம். ஏகார்ணவத்திலே ஸ்ருஷ்டியுந்முகனாய்க் கண்வளர்ந்தருளுகிறபோதாகக் கார்யபூதரான இவர்களுளரோ எப்போதுமென்னில்; அதுக்காகவிறே முற்பட ஒருபொருள் சொல்லிற்று. அன்றியே, கவிபாடுகிற இவர் தாம் பிற்பட்ட காலத்திலுள்ளாரொருவராகையாலே

(இருசுடரை மன்னும் விளக்காகவேற்றி) சக்ரத்தாழ்வானும் ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானும் இவன் அவதரித்துப்போன இடமெல்லாம் இவனோடு கூடப்போமவர்களன்றோ. அவ்விருவரையும் நிலையான அணையாவிளக்காக ஏற்றி. இருசுடரையென்றது லோகப்ரஸித்தமான சந்திரசூரியர்களைச் சொன்னதாகவும் கொள்ளலாம்; "யோகத்துறக்கம் தலைக்கொண்டபின்னைத் தன் நாபிவலயத்துப் பேரொளிசேர் மன்னிய தாமரை மாமலர்பூத்து அம் மலர்மேல் முன்னைத் திசைமுகனைத் தான்படைக்க" என்று ஊழிகாலப் பெருநீரிலே உலகை ஆக்குவதற்காகக் கண்வளந்தருளுவதைச் சொல்லும் ப்ரகரணமாகையாலே அதற்குப்பின் தோன்றும் இவர்கள் அப்போது விளக்காக இருக்க இடமில்லையே என்னில்: இப்பொருளில் இந்த அஸ்வாரஸ்யமிருப்பதாலேயே முதற்பொருள் உரைக்கப்பட்டது. அன்றிக்கே, இருசுடர்களென்று சந்திரஸூர்யர்களைச் சொல்லும் சப்தங்கள் அவர்களையொத்த ஒளியையுடைய சங்கசக்ரங்களை லக்ஷிப்பதாகவும் கொள்ளலாம். கவிபாடுகிற இவர்தாம் பிற்பட்ட காலத்திலுள்ளவராகையாலே தமக்கு

தமக்கு முற்பட்டாரைச் சொல்லத் தட்டில்லையிறே. (மறி கடலும் பன்னுதிரைக்கவரிவீச) ஸர்வேச்வரன் திருவநந் தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிற போதையழகைக் கண்ட ஹர்ஷத்தாலே கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறிகிற கடலானது, தன்னுடைய பரம்பின திரைகளாகிற கவரியை வீச. பெரும் திரையாய் வந்து முறிந்த குறும்திவலையானது திருவடிகளிலே வந்து உதைத்து அது துடைகுத்த உறங்கு வாரைப்போலேயாயிற்று கண்வளர்ந்தருளும்படி. "பன்னு திரைக் கவரிவீச" என்கிறவிடம் "மன்னிய சேவடியை" என் கிறவிடத்திலே அந்வயிக்கக்கடவது.

(நிலமங்கை தன்னை முனநாளளவிட்ட தாமரைபோல்) ஒருவரால் பரிச்சேதிக்கவொண்ணாதது பூமியிறே; அப்படி அபரிச்சேத்யையான பூமியை ஒரு செவ்வித் தாமரைப்பூவைக் கொண்டாயிற்று அளந்தது. (முனநாள்) ஜகத்தையளந்து

முற்பட்ட காலத்திலுள்ள சந்திரசூரிய வாசகசப்தங்களைச் சொல்லக் குறை யில்லையன்றே. (மறிகடலும் பன்னுதிரைக் கவரிவீச) அலையெறிகின்ற கடலும், தன் பரவிய அலைகளாகிற சாமரத்தை வீச; ஸர்வேச்வரன் திரு வநந்தாழ்வான்மேலே உறங்குகின்றபோதுள்ள அழகைக்கண்ட ஆநந்தத் தாலே கீழுள்ள மண்ணை மேலேகொண்டுவந்து எறிகிற கடலானது தன் னுடைய பரவின திரைகளாகிற சாமரத்தை வீச. பேரலையாய் வந்து முறிந்த சிற்றலைகள் திருவடிகளிலே வந்து மோதி அதுவே கால்பிடிக்க உறங்குவதுபோலேயாயிற்று திருக்கண் வளருகிறான். எதற்குச் சாமரம்வீசு கிறது கடல் எனில்: "மன்னிய சேவடியைப் பன்னுதிரைக் கவரிவீச" என்று அந்வயித்து, திருவடிக்குச் சாமரம் வீசுகிறதென்று கொள்ளவேணும்.

அத்திருவடிதான் எப்படிப்பட்டது? எனில்: (நிலமங்கை தன்னை முனநாள் அளவிட்ட தாமரைபோல்) "பூமிர் பூம்நா" [பூஸூக்தம்] [பெருமையால் பூமியென்று பெயர்பெற்றிருப்பவள்] என்கிறபடியே ஒருவ ரால் அளவிடவொண்ணாததாயிருப்பதன்றே பூமி. அப்படி அளவிட முடியாத பூமியை ஓரன்றலர்ந்த தாமரையைக் கொண்டன்றே அளந்தான். மென்மை, குளிர்த்தி, நிறம், மணம், அழகு முதலானவற்றில் ஒரு சிறிது ஒத்திருக்கையாலே தாமரையை உபமானமாகச் சொல்லுகிறது. (முனநாள்) முன்பொருநாள்; உலகை அளந்து கொண்டது பல யுகங்களுக்கு முன்று

கொண்டது பூதகாலத்திலேயாயிருக்கச்செய்தே பூர்வக்ஷணத்திலேபோல் தோன்றுநின்றதாயிற்று இவர்க்கு பாவநாப்ரகர்ஷத்தாலே. (அளவிட்ட தாமரைபோல்) பண்டு திருவுலகளந்தருளின திருவடிகளென்று மூதலிக்கலாம்படி செவ்வித்தாமரைப்பூப்போலேயிரா நின்றது. (மன்னிய சேவடியை) ஸௌகுமார்யத்துக்கொரு போலியாகச் சொன்னவித்தனையிறே தாமரையை; அநந்தரக்ஷணத்திலே செவ்விமாறிப்போகையாலே. [மாறாச் செவ்வியையுடைத்தான திருவடிகளை மறிகடலும் பன்னுதிரைக் கவரிவீச] என்றந்வயம்.

(வானியங்கித்யாதி) ஆகாசத்திலே ஸஞ்சரியாநின்றுள்ள நக்ஷத்ர தாராகணங்களாகிற கலம்பகன் மாலையாலே அலங்க்ருதமாய் அத்தையுள்ளே அடக்கும்படி ஶ்ரமஹரமாயிருந்துள்ள மேகமாகிற அளகபாரத்தையுடைத்தாயிருக்கை. நாயகனுகிற ஸர்வேஶ்வரன் இவள் ஒருகால் திருக்குழலைக்

லிருந்தபோதிலும், நினைவின் முதிர்ச்சியாலே இவருக்குச் சற்று முன்பே நடந்ததுபோல் தோற்றுகையாலே 'நாள்' என்கிறார். (அளவிட்ட தாமரைபோல்) முன்பு உலகளந்தருளியதாலேயே இத்திருவடி கன்றிச் சிவந்து செந்தாமரைபோலே காட்சியளிக்கிறது என்று நிரூபிக்கலாம்படியிருக்கிறது. (மன்னிய சேவடியை) மென்மை முதலான சில குணங்களுக்குத் தாமரையை ஒரு சிறிது ஒப்பாகச் சொன்னமாத்திரமே. சிறிதுபோது கழிந்தால் அழகு, மணம் முதலியன மாறி வாடிவிடுமே அது. இது அப்படியல்லாமல் இக்குணங்களை நித்யமாகக்கொண்டது என்கிறது. மன்னிய சேவடியை-மாறாத (நிலையான) செவ்வியை உடைய திருவடிகளை. "மன்னிய சேவடியை மறிகடலும் பன்னு திரைக்கவரி வீச" என்று கீழோடே அந்வயம்.

இனி, பூமிப்பிராட்டி திருவடி வருடும் பெற்றியைப் பேசுகிறது. (வானியங்கு தாரகைமீன் என்னும் மலர்ப்பிணையல் ஏய்ந்த மழைக் கூந்தல்) உத்தமநாயகியான இவளுக்குக் கருநெடுங்கூந்தலும், அதிலே சூடிய கதம்ப மாலையும் வேணுமே; அவை யுண்டோ? என்னில். ஆகாயத்திலே ஸஞ்சரிக்கும் நக்ஷத்திரங்களும், தாராகணங்களுமாகிற கதம்பமாலையால் அலங்கரிக்கப்பெற்றதாய், அதையும் உள்ளேயடக்கும்படி பரப்பையுடையதாய், தாபஹரமான மேகமாகிற மயிர்முடியை உடையவளிவள் என்கிறது. நாயகனுன ஸர்வேச்வரன் இவள் ஒருதரம் திருக்குழலை அவிழ்த்து நழுவ

என்னும் மலர்ப்பிணைய லேய்ந்த மழைக்கூந்தல்
தென்ன னுயர்பொருப்புந் தெய்வ வடமலையும் 6
என்னு மிவையே முலையா வடிவமைந்த

மலர் பிணையல் எய்ந்த—கதம்ப மாலையை அணிந்துள்ளவளாய், மழைகூந்தல்—மேகங்களாகிற கூந்தலையுடையளாய், தென்னன் உயர் பொருப்பும் தெய்வம் வடமலையும் என்னும் இவையே முலை ஆ—திருமாலிருஞ்சோலை மலையையும் திருவேங்கடமலையையும் முலையாகவுடையளாய், வடிவு அமைந்த—பொருத்தமான ரூபத்தையுடையளாய்,

---

குலைத்து நுழுந்த அக்காலத்திலே ஸர்வவித போக்யங்களையும் பெற்றுஙயிருக்கை.

(தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும் என்னு மிவையேமுலையா) ஆர்யர்களிகழ்ந்த ம்லேச்ச பூமியிலுள்ளார்க்கு நிர்வாஹகரான க்ஷத்ரியர்கள், "என்னது என்னது" என்று அபிமாநிக்கும்படியிருக்கிற தெற்குத் திருமலையும், ஸம்ஸாரிகளும் வந்தாச்ரயிக்கலாம்படியிருக்கிற மேன்மையிலேற்றத்தையுடைய வடக்குத் திருமலையும் இப்படி சொல்லப்படுகிற இவையிரண்டும் முலையாக. பெரியன சில மலைகளைச் சொல்லவமையுமாகில் மேருப்ரப்ருதிகளைச் சொல்லாதொழிவானென்னென்னில்; காந்தன் விரும்பி விடாதே கிடக்குமவையிறே முலையாவன. அப்படியே ஸர்வேச்வரன் விரும்பி விடாதே கிடக்கிற தேசமிறே. நங்கள் குன்றங்

விட்டால், ஸர்வேந்திரியங்களுக்கும் ஸர்வவிதபோகங்களையும் பெற்றவளு யிருக்கிறபடி. தாரகை—அச்விநீ முதலான இருபத்தேழு நக்ஷத்திரங்கள்; மீன்-(மற்றுமுள்ள) தாராகணங்கள்.

(தென்னனுயர் பொருப்பும் தெய்வ வடமலையும் என்னுமிவையே முலையா) வைதிகர்கள் ஆதிகாலத்தில் இகழ்ந்திருந்த மிலேச்சபூமியாயிருந்த தென்னாட்டிலுள்ள சேரசோழபாண்டிய அரசர்கள் "என்னுடையது என்னுடையது" என்று அபிமானிக்கும்படியிருக்கிற திருமாலிருஞ்சோலைமலையும், ஸம்ஸாரிகளும் வந்து அடியடையலாம்படியிருக்கிற ஸௌலப்யப் பெருமையில் விஞ்சியிருக்கும் திருவேங்கடமலையுமாக இப்படிச் சொல்லப்படுகிற இவையிரண்டு மலைகளாகிற துங்கபீநகடிநஸ்தநங்களை (உயர்ந்து பருத்து உறுதிபெற்ற முலைகளை) உடைய உத்தமநாயகி இப்பிராட்டி என்று உணர்த்துகிறது. உயர்த்தியிலும் பருமனிலும் உறுதியிலும் இவற்றிலும் சிறந்த மலைகளான மேரு, இமயமலை முதலிய மலைகளிருக்கும்போது, அவைகளை முலையாகச் சொல்லாமல், இதைச்சொல்லக் காரணமென்னவெனில்: காதலன் விரும்பி விடாமல் பற்றியிருப்பவையன்றோ

கைவிடானிறே. ஆகையாலிறே அவற்றை முலையாகச் சொல்லுகிறது.

"सुभगश्चित्रकूटोऽसौ गिरिराजोपमो गिरिः" (ஸுபகஶ் சித்ரகூடோ ऽஸௌ கிரிராஜோபமோ கிரி:) இந்தச் சித்ரகூடத்தினத்தனை வீறுடையாரில்லை. கண்ணுக்கழகியதாயிருக்கச் செய்தே விருப்பமில்லாதன சிலஉண்டிறே; அங்ஙனல்லவிறே இதின் படி; திருமுலைகளோடொக்கச் சேர்க்கலாம். **"काकुत्स्थः यस्मिन् वसति" (காகுத்ஸ்த: யஸ்மிந் வஸதி)** நல்லது கண்டால் விடமாட்டாமல் விருப்பத்தைப் பண்ணியிருக்கிறார், **"यदध्यास्ते महातेजाः-कुबेर इव नन्दने" (யதத்யாஸ்தே மஹாதேஜா: குபேர இவ நந்தநே)** துஷ்ட ஸத்வ ப்ரசுரமான இந்த ப்ரதேசத்திலே குபேரனானவன் தன் பூந்தோட்டத்தை விடாதே வர்த்திக்குமாபோலே விடாதே வர்த்திக்கிறார். அப்படிப் பட்ட சித்ரகூடத்தோபாதி வீறுடையாரில்லை.

முலையாகும். அப்படியே ஸர்வேச்வரன் இம்மலைகளையே விரும்பி விடாம லிருக்கிறானாகையாலே இவற்றைச் சொல்லுகிறார்.

"தென்கொள் திசைக்குத் திலதமாய் நின்ற திருமாலிருஞ்சோலை நங்கள் குன்றம் கைவிடான்" *[திருவாய் 10-7-4]*

"பரன் சென்று சேர் திருவேங்கடம்" *[திருவாய் 3-3-8]*

என்று சொல்லுகையாலே இவற்றை முலையாகச் சொல்லுகிறது. இத் திருமாலிருஞ்சோலைமலையின் பெருமையை நினைத்தன்றோ வால்மீகிபகவானும் ராமபிரான் தங்கியிருந்த சித்ரகூடமலைக்கு இதை உபமானமாகச் சொன்னார். எங்கு சொன்னாரெனில்: (ஸுபகச் சித்ரகூடோஸௌ கிரி ராஜோபமோ கிரி:) [ரா-அ 98-12] கிரிராஜன் என்று திருமாலிருஞ்சோலை மலைக்குப் பெயர்; திருமாலிருஞ்சோலைமலையையொத்த சித்திரகூடமலை மிக வழகியது; (ஸுபக:) மிகவழகியது; கண்ணுக்கழகியதாயினும் காதலன் விரும்பாமலிருப்பதுண்டே; அப்படியோ? எனில்: (கிரிராஜோபமோ கிரி:) பூமிப்பிராட்டிக்குத் திருமுலைபோன்ற திருமாலிருஞ்சோலைமலையை ஒத்திருப்பது இம்மலை. அதிற்போலே இதில் காதலன் வாழ்கிறானோ? எனில்: (யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த:) பிராட்டியின் திருமுலைத்தடமாகையாலே ராமபிரான் இதையும் விரும்பிப் பற்றிநிற்கிறான். (யதத்யாஸ்தே மஹா தேஜா:-குபேர இவ நந்தநே) துஷ்ட மிருகங்கள் நிறைந்த இந்த சித்திரகூடமலைச்சாரலிலே மஹாதேஜஸ்வியான ராமபிரான் குபேரனானவன் தனக்கு ஆநந்தத்தை விளைக்கும் சைத்ரரதத்தில் விடாது வாழ்வதுபோலே விடாது வாழ்கிறார். (அஸௌ சித்ரகூட: ஸுபக:) அப்படிப்பட்ட சித்ர கூடத்தைக் காட்டிலும் பெருமைபெற்றது வேறில்லை.

அன்ன நடைய வணங்கே அடியிணையைத் 7

அன்னம் நடைய — அன்னத்தின் நடைபோன்ற நடையையுடையளாய், அணங்கு தான்—தெய்வப் பெண்ணாகிய பூமிப்பிராட்டி,

---

(வடிவமைந்த) அம்முலைகளுக்குத் தக்கபடி அவ்வடிவுதானும்பொருந்தியிருக்கை. (அன்னநடைய) அன்னத்தோடொத்த நடையையுடையளாய் ஸம்போகார்த்தமாக நாயகன் முன்னே நாலடி நடந்தால் அவன் இதுக்கவ்வருகு பின்னையொன்றுக்காளாகாதபடியிருக்கை. (அணங்கே) அப்ராக்ருதமான ஸ்வபாவத்தை உடைத்தாயிருக்கை. **''देवताभिः समा''** (**தேவதாபிஸ்ஸமா**) என்கிறபடியே பிராட்டி பிள்ளைகள் மூவர்க்கும் தைவமாயிருந்தாள்;பெருமாளுக்கு மந:காந்தையாயிருந்தாள், ஆக நால்வர்க்கும் ஒக்குமாயிற்று ஆஶ்ரயணீயையாமிடத்து.

(வடிவமைந்த) மலைகளாகிற முலைகளுக்குத் தக்கவாறு பூமிப்பிராட்டியின் திருமேனியும் பொருந்தியிருக்கிறபடி. (அன்ன நடைய) அன்னத்தின் நடையையொத்த நடையை உடையளாய், நாயகனோடு கலவியின்பொருட்டு அவன் முன்னே நாலடி நடந்தால் அவன் இந்நடைக்கே அடிமையாகி, வேறொன்றை நெஞ்சாலும் நினைக்கமுடியாதவனாகிறபடி. (அணங்கே) ''சூருமணங்கும் தெய்வப்பெண்ணே'' என்கிறபடியே தெய்வப்பெண்ணைக் குறிக்கும் சொல்லாகையாலே, அப்ராக்ருதமான தன்மையை உடையவளாயிருப்பவள் என்று சொல்லுகிறது. முலையென்றும், கலவியென்றும் சொன்னது ப்ராக்ருதமாய் தாழ்ந்ததான சிற்றின்பத்துக்குறுப்பாயிருப்பவற்றை யன்று; அப்ராக்ருதமான பேரின்பத்துக்குறுப்பாமவற்றையே சொல்லிற்று என்று கருத்து. அங்ஙனல்லாமல், இதற்குமுன் எம்பெருமானுக்கு இனியையாயிருப்பதற்த உறுப்பான தன்மைகளைச் சொல்லிற்றாய், இனி (அணங்கே) என்று பிள்ளைகளான நமக்கு தெய்வத்தைப்போலே ஆச்ரயிக்கத்தக்கவளாயிருக்கிறபடியைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். " **தேவதாபி: ஸமா** " [ரா-பா 77-30] [தேவதைகளை ஒத்தவள் சீதை] என்று வால்மீகியும்,

''**த்ரயாணும் பரதாதீநாம் ப்ராத்ருணும் தேவதா ச யா**
ராமஸ்ய ச மந: காந்தா'' [ரா-ஸு 55-26]

[பரதன் முதலிய மூன்று தம்பிமார்க்கும் எந்தப் பிராட்டியானவள் தெய்வமாயிருந்தாளோ, ராமனுக்கும் மனத்துக்கினியவளாயிருந்தாளோ .....]

தன்னுடைய வங்கைகளால் தான் தடவத்தான்கிடந்தோர்
உன்னிய யோகத் துறயக்கந் தலைக்கொண்ட 8
பின்னைத் தன்னுபி வலயத்துப் பேரொளிசேர்

தன்னுடைய அம் கைகளால் அடியிணையை தடவ—தனது அழகிய கைகளாலே திருவடிகளைப் பிடிக்கப்பெற்றும்,(ஆகிய இத்தனை பெருமைகளுடனே) கிடந்து—சிறப்பாகப் பள்ளிகொண்டு, ஓர் உன்னிய யோகத்து உறக்கம் தலைக்கொண்ட பின்னை—ஒப்பற்றதான 'ஜகத்ரக்ஷணத்தைச் சிந்திக்கிற யோக நித்திரையை மேற்கொண்ட பின்பு, தன்நாபி வலயத்து—தனது நாபீமண்டலத்தில், பேர் ஒளி சேர்-சிறந்த ஒளி பொருந்தியதும்

(அடியிணையை) இப்படி அப்ராக்ருத ஸ்வபாவையாயிருக்கிற இவளுங்கூடக் கூசும்படி அதிஸௌகுமாரமான திருவடிகள். (தன்னுடைய அம்கைகளால்) அவன்றனக்குங்கூட ப்ரார்த்தித்துப் பெறவேண்டும்படியிருக்கிற தன்னுடைய அழகிய திருக்கைகளாலே. (தான் தடவ) திருவடிகளை வருடப் பெறில் உளளாய் இல்லையாகில் இல்லையாம்படியான ஆற்றாமையுடையளாய்க் கொண்டு தடவ. ஆக கடலானது கவரி வீச, ஸ்ரீபூமிப்பிராட்டி திருவடிகளை வருடவாயிற்று கண் வளர்ந்தருளுவது.

என்று, "சீதாபிராட்டி தம்பிகள் மூவர்க்கும் தெய்வமாயிருந்தாள்; ராமபிரானுக்கு மனத்துக்கினியவளாயிருந்தாள்; ஆக, நாலுபேருக்கும் ஆச்ரயிக்கத்தக்கவளாயிருந்தாள்" என்று அனுமனும் சொன்னதுபோலே அருளிச்செய்கிறார்.

(அடியிணையை) இப்படி அப்ராக்ருதத் தன்மையளாயிருக்கிற இவளும் தொட அஞ்சவேண்டும்படி மிகவும் மென்மைமிக்க திருவடிகளை. (தன்னுடைய அங்கைகளால்) ஸர்வேச்வரனுள அவனுக்கும் வேண்டிப் பெற வேண்டும்படியான பெருமையையுடைய தன்னுடைய அழகிய திருக்கைகளாலே. (தான் தடவ) தாரகவஸ்துவைப் பிறரைக்கொண்டு பருகிவாழ முடியுமோ? ஒருவனைக்கொண்டு மூச்சுவிட்டு மற்றொருவன் உயிர்வாழ முடியுமோ? ஆகையால் தனக்கு தாரகமான பாதஸேவையைத் தானே செய்கிறாள் பிராட்டி. திருவடிகளை வருடினால் உயிர்வாழ்பவளாய், இல்லையேல் உயிரில்லையாம்படியான ஆற்றாமையை உடையவளாய் தானே தடவுகிறாள் என்கை. ஆக, கடலானது சாமரம் வீச, ஸ்ரீ பூமிப்பிராட்டி திருவடிகளை வருடவாயிற்று உறங்குகிறான் ஸர்வேச்வரன்.

(தான்கிடந்து) ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனுய் ஒன்றுலொரு காலுஷ்யமுமின்றிக்கே இருக்கக்கடவ அவன் இவளுடைய ஸ்பர்சத்தால் வந்த ஸுகத்தாலே இரண்டுமறியாதே கிடந்து உறங்காநிற்கும்.

(ஓருன்னிய யோகத்துறக்கம் தலைக்கொண்டபின்னை) அல்லாதார்க்கு முன்பே தானே நெஞ்சு இருண்டிருக்குமிறே; அதுக்குமேலே கண்ணைச் செம்பளித்தவாறே புறம்பு ப்ரகாசிக்கிற இதுவும்போய் இருளுமிறே. இவனுக்கு அங்ஙனமொன்றின்றியே திருக்கண்களைச் செம்புளித்தால் அகவாயில் ப்ரகாசிக்குமதுக்கு வர்த்தகமாயிருக்கும். உன்னுகை-அநுஸந்திக்கை. (யோகத்துறக்கம்) ரஜஸ்தமஸ்ஸுக்களாலே அபிபூதனுயுறங்குகிறுனன்று; *உறங்குவான்போல் யோகநித்ரையிறே. "அவை நல்வழியாகக் கரைசேரும் வகையேதோ?" என்று ஜகத்ரக்ஷணசிந்தை பண்ணிக்கொண்டாயிற்று கண்வளர்ந்தருளுவது.

(தான் கிடந்து) இயற்கையிலேயே எல்லாமறிபவனுய், எக்காரணத்தாலும், எந்த விதமான கலக்கமில்லாமலிருக்கும் அவன், இவள் தீண்டப்பெற்றதால் உண்டான ஆனந்தததாலே, கடல் கவரிவீசுவதையும், இவள் திருவடி வருடுவதையுமறியாமல் கிடந்து உறங்குகின்றுன்.

(ஓர் உன்னிய யோகத்துறக்கம் தலைக்கொண்ட பின்னை) ஒப்பற்ற நினைவுருபமான யோகநித்திரை செய்த பிறகு. மற்றுள்ளாரான நம்போல்வார்க்கு ஏற்கனவே நெஞ்சு இருட்டடைந்து கிடக்கும்; கண்விழித்திருக்கும்போது வெளிப் பொருள்கள் மாத்திரம் சிறிது ஒளிவிடும்; கண்ணையும் மூடிவிட்டால் வெளிப் பொருள்களும் மறைந்து ஒரே இருட்டுமயமாகிவிடும். இவனுக்கு அப்படியெல்லாமல்லவே; "பச்யத்யசக்ஷு:" என்கிறபடியே கண்ணுல் காண்பவனல்லனேயிவன். ஆகையால் இவன் கண்ணை மூடுவது உள்ளே ஓடும் நினைவுகளை வளரச் செய்வதாயிருக்கும். உன்னுவது-அநுஸந்திப்பது; யோகத்துறக்கம்-விழிதுயில். (யோகத்துறக்கம்) நம்மைப்போலவே ரஜஸ்தமோகுணங்கள் விஞ்சுவதாலே உறங்குகிறுனல்லன். "உறங்குவான்போல் யோகு செய்த பெருமான்" [திருவாய் 5-4-11] என்று சொல்லப்படும் துயிலன்றோ இது. "இச்சேதனர்கள் ஒரு நல்வழிபெற்று ஸம்ஸாரகரத்தினின்றும் கரைசேரும் வழியென்ன" என்று லோகரக்ஷண சிந்தையோடன்றோ கண்வளர்ந்தருளுகிறுன்.

மன்னிய தாமரை மாமலர்பூத் தம்மலர்மேல் 9
முன்னந் திசைமுகனைத் தான்படைக்க மற்றவனும்
முன்னம் படைத்தனன் நான்மறைகள் அம்மறைதான் 10

மன்னிய தாமரை மாமலர் பூத்து—என்றுமழியாததுமான தாமரைப்பூவைப் புஷ்பிக்கச் செய்து, அ மலர் மேல்—அந்தத் தாமரைப் பூவிலே, முன்னம் திசைமுகனை தான் படைக்க-ஸ்ருஷ்டிகாலத்திலே நான்முகனை ஸ்ருஷ்டிக்க, மற்றவனும்—அந்தப் பிரமனும், முன்னம் நால் மறைகள் படைத்தனன்—முதலில் நான்கு வேதஙகளைப் (பரமபுருஷனிடமிருந்து) பெற்றுன்; அம்மறை தான்—அந்த வேதங்களானவை,

---

(தலைக்கொண்டபின்னை) காலப்பூவலர்ந்தாற்போலே உணர்ந்தவநந்தரம் ஸ்ருஷ்டித்தல்லது நிற்கவொண்ணுதபடியானவற்றைச் சொல்லுகிறது. (தன்னுபிவலயத்து) "பூவலயம்' என்னுமாபோலே திருநாபிவலயமென்று-அதினுடைய பெருமையைச் சொன்னபடி. (பேரொளிசேர் மன்னிய தாமரை மாமலர்பூத்து) கார்யரூபமான ஜகத்தும் இதுக்குப் போராதென்னும்படியான விலக்ஷணமான ஒளியையுடைய. கார்யம் ப்ரவ்ருத்தமாகாநின்ருலும் காரணம் நசியாதே நித்யமாய் ஜகத்காரணமான தாமரைப்பூவையுண்டாக்கி.

(தலைக்கொண்டபின்னை......) அவ்வக்காலத்தில் மலரும் புஷ்பங்கள் மலருவதுபோலே ஸ்ருஷ்டி காலத்திலே உணர்ந்தபிறகு, ஸ்ருஷ்டித்தல்லது நிற்கவொண்ணுத பொருள்களைச் சொல்லுகிறது இனி. (தன் நாபி வலயத்து) "பூவலயம்" என்று பூமண்டலத்தின் பெருமையைச் சொல்லுவதுபோலே 'நாபிவலயம்' என்று அப்பூமண்டலத்துக்கும் காரணமான நாபியின் பெருமையைச் சொல்லுகிறது. (பேரொளிசேர் மன்னிய தாமரை மாமலர் பூத்து) இதன் கார்யமான உலகம் முழுவதும் சேர்ந்தாலும் இவ்வொளிக்கும் ஈடாகாது என்று சொல்லும்படியான மிகச்சிறந்த ஒளியையுடைய தாமரை. (மன்னிய தாமரை மாமலர் பூத்து) உலகில் மண்ணிலிருந்து குடங்களைக் குயவன் உண்டாக்கும்போது, கார்யங்களான குடங்கள் வளர வளரக் காரணமான மண் குறைந்துகொண்டே வந்து கடைசியில் அடியோடு இல்லாமற்போவதைக் காண்கிறோம். ஜகத் காரணமான இத்தாமரையோவெனில், தன் கார்யமான உலகங்கள் எவ்வளவு வளர்ந்தாலும் தான் சிறிதும் குறையாமல், அழியாமல், நித்யமாயிருக்கும் பெற்றியை உடையதென்கிறது. 'மன்னிய தாமரை' என்று

அன்றியே, மிக்கவொளி சேர்ந்திருக்கிறதாய் அது தான் நித்யமாயிருந்துள்ள தாமரையென்றுமாம்.

(அம்மலர்மேல் முன்னம் திசைமுகனைத் தான் படைக்க) அச்செவ்விப்பூவிலே நாலுபூத்தோன்றினாற்போலே ஸ்ருஷ்டி காலத்திலே சதுர்முகனைத் தானுண்டாக்க. (மற்றவனும்) இவன் ஸ்ருஷ்டித்தவநந்தரம் "இவனோ ஈஶ்வரன்" என்று மசக்குப் பரலிடலாம்படி பெருத்த அந்தச் சதுர்முகனும். (முன்னம் படைத்தனன் நான்மறைகள்) அந்தச் சதுர்முகனும் முண்புண்டாக்கின நான்மறைகளென்றாற்போலேயிருக்கிறது. ஸர்வேச்வரன் இவ்வேதாக்ஷர ராசியை ஸுப்தப்ர

தாமரைக்கு விசேஷணமாகும்போது இப்படிப் பொருள் படுகிறது. அப்படியல்லாமல், "மன்னிய பேரொளிசேர் தாமரை மாமலர் பூத்து" என்று கூட்டி, இத்தாமரையின் பேரொளியானது நித்யமாயிருக்கிறது என்றும் பொருள் கொள்ளலாம்.

(அம்மலர்மேல் முன்னம் திசைமுகனைத் தான்படைக்க) அந்த ஒரு செந்தாமரைப் பூவிலே நாலு தாமரைமலர் தோன்றினாற்போலே ஸ்ருஷ்டி காலத்திலே நான்கு முகங்களையுடைய பிரமனைத்தான் ஸ்ருஷ்டிக்க. (மற்றவனும்) ஸர்வேச்வரன் நான்முகனை ஸ்ருஷ்டித்தவுடன், "இவன் தானோ ஸர்வேச்வரன்?" என்று அவனுக்குப் போலியாகச் சொல்லலாம்படி வளர்ந்த அந்த நான்முகனும்.

"தஸ்மாத் விராடஜாயத விராஜோ அதி பூருஷ:।
ஸ ஜாதோ அத்யரிச்யத பஶ்சாத் பூமிமதோபுர:॥"

[பு-ஸூ 1-5]

[அந்த விஷ்ணுவிடமிருந்து ப்ரஹ்மாண்டம் உண்டாயிற்று; அதில் பிரமன் உண்டானான்; அந்த நான்முகன் பிறந்தமாத்திரத்தில் பூமியைப் பக்கங்களிலும், கீழும், மேலும் ஆக்ரமித்தான்] என்று சொல்லப்பட்டதன்றோ. (முன்னம் படைத்தனன் நான்மறைகள்) இவ்வருளிச் செயலைப் பார்த்தால், "அந்தச் சதுர்முகனும் நாலு வேதங்களையும் முன்பு உண்டாக்கினான்" என்பதுபோலேயிருக்கிறது. "வேதமானது ஸர்வேச்வரனாலும் படைக்கப் பட்டதல்ல; அவனும், தூங்கியவன் உணர்ந்து, தூங்குமுன் நடந்தவற்றை நினைப்பதுபோலே, ஸ்ருஷ்டிகாலத்தில் பூர்வஸ்ருஷ்டியிலிருந்த வேதாக்ஷர ராசிக்ரமத்தை நினைத்து நான்முகனுக்கு உபதேசிக்கிறானித்தனை" என்று

மன்னு மறம்பொரு ளின்பம்வீ டென்றுலகில்
நன்னெறி மேம்பட்டன நான்கன்றே நான்கினிலும் 11
பின்னையது பின்னைப் பெயர்தரு மென்பதோர்

மன்னும் அறம் பொருள் இன்பம் வீடு என்று—நிலை நின்ற தருமம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்று, உலகில் நல்நெறி மேம்பட்டன நான்கு அன்றே—இவ்வுலகில் நல்வழியாலே சிறப்பித்துக் கூறப்படுகின்ற நான்கு புருஷார்த் தங்கள் நிறைந்திருக்கப் பெற்றவையாம்; நான்கினிலும்—அந்த நால்வகைப் புருஷார்த்தங்களிலும், பின்னையது—கடைசியில் சொல்லப்பட்ட மோக்ஷ மானது, பின்னை பெயர்தரும் என்பது—இந்த சரீரம் தொலைந்தபிறகு மற்றொரு சரீரத்தைத்தருமென்று (சாஸ்திரங்களில்) சொல்லப்படுகிறது;

புத்தந்யாயத்தாலே முன்புத்தை ஆநுபூர்வியை ஸ்மரித்துச் சொல்லுமென்று வேதத்தினுடைய அபௌருஷேயத்வம் சொல்லாநிற்க, ''இவன் ஸ்ருஷ்டித்தான்'' என்னில் ப்ரமாண விருத்தமாமிறே; இனித்தானே **''यो ब्रह्माणं विदधाति पूर्वं यो वै वेदांश्च प्रहिणोति तस्मै''** (**யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வைவேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை**) என்று சொல்லுகிறவற்றோடும் விரோதிக்குமிறே; ஆனால் பின்னை என் சொல்லிற்றாகிறதென்னில் ''இன்னான் தன் பிதாவின்பக் கல் படைத்த த்ரவ்யம் இன்னதனை'' என்னுமாபோலே

வைதிகர்கள் வேதம் புருஷபுத்திப்ரணீதமன்று (அபௌருஷேயம்) என்று சொல்லாநிற்க ''பிரமன் படைத்தான்'' என்பது வைதிகவசனங்களாகிற ப்ரமாணத்துக்கு விருத்தமன்றோ-அதோடு

''யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்
யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை''

[தை-நா; ச்வே]

[எவனொருவன் பிரமனை முன்னம் படைத்தானோ, எவன் அவனுக்கு வேதங்களை உபதேசித்தானோ] என்று சொல்லுகிற வேதவசனத்தோடும் விரோதிக்கும். ஆகையால், வேதவைதிகவசன விரோதமில்லாதபடி இதற்கு என்ன பொருள் கொள்வது? எனில்: ''இன்னான் தன் தந்தை யினிடமிருந்து **படைத்த** பொருள் இவ்வளவு'' என்று உலகில் வழங்கு வதைக் காண்கிறோம். பிதாவிடமிருந்து பெற்ற செல்வத்தை ''பிறந்து **படைத்த** செல்வம்'' என்றும் வழங்குகிறோம். இவ்விடங்களில் '**படைத்த**' என்னும் சொல் ''**பெற்ற**'' என்று பொருள்படுவதுபோலே இங்கும்

அந்த ப்ரஹ்மாவும் ஸர்வேச்வரன்பக்கல் அதிகரித்த நாலு வேதங்களுமென்றபடி. பிறந்து படைத்தானென்னக் கடவதிறே பெற்றத்தை.

(அம்மறைதான்) அந்த வேதங்கள்தான். (மன்னுமறம் பொருளின்பம் வீடென்றுலகில் நன்னெறிமேம்பட்டன நான்கன்றே) தர்மார்த்த காமமோக்ஷங்களென்று லோகத்திலே நன்றான வழியாலே மேற்பட்ட நாலுபுருஷார்த்தத்தோடே அடங்கப்பெற்றேமிறே. முந்துற முன்னம் அறமென்கிறது-தர்மத்தை; மன்னுமறமென்கிறது ஸாத்யரூபத்தாலும் ஸாதநரூபத்தாலுமாகக்கொண்டுநிற்பதொருநிலையுண்டிறே. பொருளென்கிறது-அர்த்த புருஷார்த்தத்தை, இன்பமென்கிறது-தாமாதரித்திருக்கிற காமபுருஷார்த்தத்தை. வீடென்கிறது-நாலாவதாகச் சொல்லுகிற மோக்ஷபுருஷார்த்தத்தை.

(நான்கினிலும்) இவை நாலிலும். (பின்னையதுபின்னை) பின்னையதுண்டு - பிற்படச் சொல்லுகிற மோக்ஷம். (அது

(முன்னம் படைத்தனன் நான்மறைகள்) என்றதற்கு 'அந்த நான்முகனும் ஸ்ருஷ்டிகாலத்தில் ஸர்வேச்வரனிடமிருந்து நாலு வேதங்களையும் பெற்றான்' என்றே பொருளாகிறது.

(அம்மறைதான்) அந்த வேதங்கள்தான். (மன்னுமறம் பொருளின்பம் வீடென்றுலகில் நன்னெறி மேம்பட்டன நான்க்ன்றே) தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்று உலகிலே நன்றான வழியாலே மேற்பட்ட நாலு பிறவிப்பயன்களோடு அடங்கியது; அந்நாலு புருஷார்த்தங்களையே அறிவிப்பது என்றபடி. முதலில் 'மன்னுமறம்' என்று தர்மத்தைச் சொல்லுகிறது; அறம் என்றாலே தர்மம் என்று பொருளாகிறது; 'மன்னுமறம்' என்பதென்? என்னில்; தான் அர்த்தத்தால் ஸாத்யமாகவும், காமத்துக்கும், மோக்ஷத்துக்கும் ஸாதனமாகவும் ஆக இரண்டு ரூபத்தோடு நிலைபெற்றிருக்கையைச் சொல்லுகிறது. 'பொருள்' என்கிறது அர்த்தமென்னும் புருஷார்த்தத்தை. 'இன்பம்' என்கிறது. தாம் ஆதரித்திருக்கும் காமபுருஷார்த்தத்தை. '' வீடு' என்கிறது நாலாவதாகப்பிறர் சொல்லுகிற மோக்ஷபுருஷார்த்தத்தை.

(நான்கினிலும்) இவை நாலிலும்.. (பின்னையது பின்னை) பின்னையது-கடைசியில் சொல்லுகிற மோக்ஷ புருஷார்த்தம். (பின்னையது பின்னை) அது பிறகு பிறகு என்றே போகக்கூடியது. இந்த சரீரத்தோட பெற்

தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியு மூழிலையும்

ஓர் தொல் நெறியை — விலக்ஷணமாயும் அநாதியாயுமுள்ள அந்தப் பரம பதத்தை (அல்லது, அர்ச்சிராதி மார்க்கத்தை) வேண்டுவார் தாம் — அடைய விரும்புமவர்கள், வீழ் கனியும் ஊழ் இலையும் — தானே பழுத்து விழுந்த பழங்களையும் சருகான இலைகளையுமே,

---

பின்னையதுபின்னை) அது பின்னை பின்னை என்றே போமித்தனை. இச்சரீரத்துடனே பெற்றறிவாரில்லை. அத்தைக் காற் காற்கடைக் கொள்ளுகையாலும் சொல்லுகிற வார்த்தையிறே. ஆசைப்பட்ட இச்சரீரத்தைவிட்டு வேறொரு சரீரத்தைப் பரிக்ரஹித்து ஒரு தேசவிஶேஷத்திலேபோய்க் காலாந்தரே அநுபவிக்குமது ஒரு அநுபவமாயற்றதோ? அதொன்றவ்லவிறே. அதுதான் அவ்வசநங்கள் சொல்லக்கேட்குமித்தனை, கண்டுவந்தாரொருவருமில்லை. (பெயர்தருமென்பது) பெற்றியைத்தரும்; இஶ்ஶரீரத்தைவிட்டு வேறொரு சரீரத்தைப்பெற்று அநுபவிக்கவேண்டியதாயிருக்கும். இஶ்ஶரீரத்தைவிட்டு வேறொரு சரீரத்தைப்பெற்று அநுபவிக்கையாவது-ஒருவன் தபஸ்ஸு பண்ணி, அந்த தப:பலம் வேறொருவன் புஜிக்கும்மாத்ரமன்றோ? அன்றியே, பின்னைப் பெயர் தருமென்றாய்-அதுக்கும் பொருளதுவே.

றறிவார் ஒருவருமில்லை. சாஸ்திரஸித்தமான பரமபுருஷார்த்தமான இதை இகழலாமோ? எனில்; இவ்வுடம்போடே இங்கே பெறவேணும் என்னும் ஆசையாலே அதைத் தாழ்த்திச் சொல்லுகிறாராகையாலே நஹிநிந்தா ந்யாயத்தை நினைக்கவேணும். ஆசைப்பட்ட இந்த சரீரத்தை விட்டு வேறொரு சரீரத்தை எடுத்து, நெடுந்தூரமுள்ள ஒரு தேசத்திலே போய் எப்போதோ ஒரு காலத்தில் அநுபவிக்கும் அது ஓரநுபவமாகுமோ? ஆகாது. அவ்வநுபவமும் சில வேத வைதிக வசனங்கள் சொல்லக்கேட்குமித்தனையே; கண்டு வந்து சொன்னவர் ஒருவருமில்லை. (பெயர்தரும் என்பது) சரீராந்தரத்தைத் தரும் எனப்படுவது. இந்த சரீரத்தை விட்டு வேறொரு சரீரத்தைப்பெற்று அநுபவிக்கவேண்டியதாயிருக்கும். இந்த சரீரத்தை விட்டு வேறொரு உடம்பைப்பெற்று அநுபவிப்பதாவது-ஒருவன் தவம்புரிந்து, அத்தவத்தின் பலனை மற்றொருவன் அநுபவிப்பதுபோன்றது. அல்லது, 'பின்னைப் பெயர்தரும்' என்று கூட்டி பின்னர், பின்னர் என்னும் பெருமையையே தரும் என்று முதலிற்சொன்ன பொருளேயாகவுமாம்.

(ஓர் தொல்நெறியை வேண்டுவார்) ஸம்ஸாரத்தை யொழித்து நிரதிசயஸுகமான †(மோக்ஷத்தை வேண்டுவார். இப்படி சொல்லப்படாநின்றுள்ள பழையதான) மோக்ஷத்தைப் பெறவேண்டியிருப்பார். அத்தேசம் ப்ராப்யமானுல் அங்குத்தைக்குப்போம் வழியும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே. (வேண்டுவார்) அத்தையுமொன்ருக நினைத்து அபேக்ஷிப்பாரென்று தமக்கதிலுண்டான அநாதரத்தைச் சொல்லுகிருர்.

இனி இப்புருஷார்த்தத்தை அநுஷ்ட்டிக்கும் ஸாதநத்தினுடைய பொல்லாங்கை உபபாதிக்கிருர் மேல். (வீழ் கனியும்) தானே விழுந்து பசையற்றகனியும். (ஊழிலையும்) முளேயிலேவிழுந்த இலேயும், முற்றிப்பழுத்துச் சருகான

(ஓர் தொன்னெறியை வேண்டுவார்) ஸம்ஸாரத்தை ஒழித்து ஒப்பற்ற இன்பமாயிருக்கும் மோக்ஷத்தை விரும்புவார். ஓர்—ஒப்பற்ற. (ஓர் தொல் நெறியை வேண்டுவார்) இப்படி ஒப்பற்றதாகச் சொல்லப்படுவதாய், பழையதான மோக்ஷத்தைப் பெறவிரும்பியிருப்பார்; நெறியென்று வழியைச் சொல்லும் சப்தம் அந்நெறியால் அடையப்படும் இடத்தையும் குறிக்கிறது. அல்லது வழியையே குறிப்பதாகக் கொண்டாலும் குற்றமில்லே. அவ்விடம் விரும்பப்படுவதாகில், அங்குபோகும் அவ்வழியும் விரும்பப்படுவதேயன்ருே. (வேண்டுவார்) அதையும் ஒரு பொருளாக நினைத்து விரும்புவார் உண்டாவதே! கையில் கனியிருக்க, துரட்டிப் பழத்துக்கு அண்ணுந்து பார்ப்பதே! என்று தமக்கு அப்புருஷார்த்தத்தில் உண்டான ஆதரமின்மையைச் சொல்லுகிருர்.

இனி, இந்த மோக்ஷபுருஷார்த்தத்தைப் பெறவிரும்புவார் அநுஷ்டிக்கும் ஸாதனத்தினுடைய தீமையை விவரிக்கிருர் மேலே.—(வீழ் கனியும்) தானே வீழ்ந்த கனியும்; தானே வீழ்கையாலே பசையற்றதாயிருக்கை. (ஊழிலேயும்) ஊழ் என்று உதிர்தலுக்கும், பழமைக்கும் பெயர். முளேயிலே உதிர்ந்து சருகான இலேயையும், முற்றிப்பழுத்து விழுந்து சருகான பழமையான இலேயையும் சொல்லுகிறது. இதிலும் பசையில்லேயென்று

---

† குண்டலிதம் சில ப்ரதிகளிலேயே உள்ளது.

என்னு மிவையே நுகர்ந்துடலம் தாம்வருந்தித்
துன்னு மிலைக்குரம்பைத் துஞ்சியும் வெஞ்சுடரோன் 13
மன்னு மழல்நுகர்ந்தும் வண்தடத்தி னுட்கிடந்தும்

என்னும் இவையே நுகர்ந்து—இவ்விரண்டையே தின்று, உடலம் வருந்தி-உடம்பு நொந்து, துன்னும் இலைக்குரம்பை துஞ்சியும்-நெருக்கமான பர்ணசாலைகளிற் கிடந்தும், வெம்சுடரோன்-கொடிய கிரணங்களையுடைய சூரியனுடைய, மன்னும் அழல் நுகர்ந்தும்-நிலைநின்ற வெய்யிலைப் புசித்தும், வண் தடத்தினுட்கிடந்தும்—வண்மைமிக்க தடாகங்களிலே மூழ்கிக் கிடந்தும்,

---

இலையும். (என்னுமிவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தி) அதாவது-சருகிலைதின்றும் காயுங்கிழங்கும் தின்றுமிறே தபஸ்ஸு அநுஷ்ட்டிப்பது. அவதாரணத்தாலே ஒருவ்ரத ஸமாப்திபிறந்து பின்னையொரு வ்ரதாரம்பத்தின் முன்னேயாகிலும் ஏகவாரம் அந்நம் புஜித்ததுமில்லையென்று தோற்றுகிறது. இத்தால், அநவரதகாயக்லேசம் சொல்லுகிறது. (நுகர்ந்து) அந்த ஸாதநத்தில் பண்ணின ஆதரம் தோற்ற போக்யதையுண்டானதுபோலேயிருக்க புஜிக்கை. (உடலம் தாம் வருந்தி) அபிமத விஷயத்தைக்கண்டு இங்கே அநுபவிக்கலாயிருக்கிற சரீரத்தை க்லேசிப்பித்து. (தாம் வருந்தி) இவனுடைய கர்மங் கொண்டுபோய் க்லேசிப்பித்தல்,

---

கருத்து. (என்னுமிவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தி) சருகிலை தின்றும் பசையற்ற காய்கனிகிழங்குகளைத் தின்றுமன்றோ தவத்தை அனுஷ்டிப்பது. 'இவையே' என்றவிடத்தில் ஏகாரத்தாலே, ஒரு விரதம் முடிந்து மற்றொரு விரதம் ஆரம்பிக்குமுன்பாவது ஒரு தடவை உணவு உட்கொண்டதுமில்லை என்று கருத்து. இதனால், இடைவிடாமல் உடம்பை வருத்தவேண்டும் என்பதைச் சொல்லுகிறது. (நுகர்ந்து) ரஸித்து புஜித்து. ஸாத்யத்தில் உண்டான ஆசையாலே, ஸாதனத்திலும் பேரன்புபூண்டு, அதற்கு அங்கமாக சருகிலை தின்னும்போதும் மிகவினிய உணவை உண்பது போலே சுவைத்து உண்கிறபடி. (உடலம் தாம் வருந்தி) இனிய பொருளைக் (அர்ச்சைத் திருமேனியைக்) கண்டு இங்கே அநுபவிக்கக்கூடிய உடம்பைத் துன்புறுத்தி. (தாம் வருந்தி) உலகிலே கர்மத்தால் தாழ்ந்த விடங்களுக்குச்சென்று வருந்துவதும் யமன் முதலான தெய்வங்கள்

தைவம் கொண்டுபோய் க்லேசிப்பித்தல் செய்யுமதொழியத் தாமே க்லேசிப்பித்து. (துன்னுமிலைக் குரம்பைத் துஞ்சியும்) இலையாலே நெருங்கச்செய்த பர்ணசாலைகளிலே கிடந்தும், அதில் நின்றும் உதிர்ந்த புழுதியானது கண்ணிலேபுக்கு நோவுபடும்படியாகத் துஞ்சியும். நித்ரை மரணத்தோடு பர்யாயமாகையாலே துஞ்சியுமென்கிறது.

(வெஞ்சுடரோன் மன்னுமழல் நுகர்ந்தும்) உஷ்ண கிரணனுன ஆதித்யனுடைய வெய்யிலை பக்ஷித்தும். மன்னு மழல் நுகர்ந்தென்கிறது-உள்ளுப்புக்காலும் அழல்மாருதே யிருக்கையும், இதுவே தண்ணீருமாக நுகருகையும். காற்றை பக்ஷித்தும் வெய்யிலை பக்ஷித்துமிறே சரீரத்தை ரக்ஷிப்பது. (வண்தடத்தி னுட்கிடந்தும்) அழகியதாக ஜலக்ரீடை பண்ணிப் போதுபோக்கலான தடாகங்களிலே சீதகாலத்

இவனைத் தங்கள் உலகுக்குக் கொண்டுபோய் வருத்துவதும் உண்டு; இது அப்படிப் பிறிதொன்றால் வந்த துன்பமன்று. தானே வரவழைத்துக் கொண்ட துன்பம் என்று காட்டுகிருர். (துன்னுமிலைக் குரம்பைத் துஞ்சியும்) நெருங்கிய இலைகளால் வேயப்பெற்ற பர்ணசாலைகளிலே கிடந்து தூங்கி யும். குரம்பை–வீடு; இலைக்குரம்பை–பர்ணசாலை. இப்பர்ணசாலைகளில் கிடக்கும்போது அதிலிருந்து உதிர்ந்த புழுதிகள் கண்ணிலே புகுந்து பெருந்துன்பம் விளைக்கும்படி துஞ்சியும். 'துஞ்சுதல்' என்னும் சொல் மரணம் தூக்கம் ஆகிய இரண்டையும் காட்டுவது. இங்கு இவன் தூங் கும் தூக்கமும் மரணத்தையொத்த துன்பத்தைத் தருவதாகையாலே துஞ்சியும் என்கிருர்.

(வெஞ்சுடரோன் மன்னும் அழல் நுகர்ந்தும்) உஷ்ணகிரணனுன சூரியனுடைய வெய்யிலைப் புசித்தும். 'மன்னும் அழல்' [நிலைநின்ற உஷ்ணம்] என்றது இவன் உடம்பினுள் புகுந்து அவ்வுஷ்ணம் நிலையாய் நிற்பதைக் காட்டுகிறது. உண்ணும் சோற்றின் ஸ்தானத்திலே மாத்திர மல்லாமல் பருகுநீரின் ஸ்தானத்திலும் இவனுக்கு இதுவேயாயிருப் பதையும் காட்டுகிறது. காற்றையும் வெயிலையும் புசித்து நீரும் அருந் தாமலன்றே இவன் உடம்பைக் காப்பாற்றுவது. (வண்தடத்தினுட் கிடந்தும்) குளத்திற்குள்ள வண்மையை அனுபவிக்கக் கொடுத்துவைக் காதவனுகிவிட்டானே. வண்தடம்—வண்மைமிக்க தடாகம்; இன்பத்தை

இன்னதோர் தன்மையரா யீங்குடலம் விட்டெழுந்து 14
தொன்னெறிக்கட் சென்ரு ரெனப்படுஞ் சொல்லல்லால்
இன்னதோர் காலத் தினையா ரிதுபெற்ருர் 15
என்னவுங் கேட்டறிவ தில்லை உளதென்னில்
மன்னுங் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள் 16

இன்னது ஓர் தன்மையர் ஆய்-ஆக இப்படிப்பட்ட ஸ்வபாவங்களையுடைய ராய்க்கொண்டு, ஈங்கு உடலம் விட்டு எழுந்து—இவ்வுலகில் சரீரத்தை விட்டொழித்து மேலே கிளம்பி, தொல் நெறிக்கண் சென்ருர் எனப்படும் சொல் அல்லால்-பழையதான ஒரு ஸ்தானத்திலே போய்ச் சேர்ந்தார்கள் என்று சொல்வதைத் தவிர, இன்னது ஓர் காலத்து இனையார் இது பெற்ருர்-இன்ன தினத்தில் இன்ன மநுஷ்யன் இந்த மோக்ஷத்தில் போய்ச் சேர்ந்தான், என்னவும் கேட்டு அறிவது இல்லை—என்று சொல்லக் கேட்டதேயல்லை, உளது என்னில்—(அடியோடுஇல்லையென்று நான் சொல்லு கிற அந்தமோக்ஷம்) உண்டு என்கிற பக்ஷத்தில், மன்னும் கடும் கதிரோன் மண்டலத்தின் நல் நடுவுள்—நித்யமாயும்தீக்ஷ்ணமாயுமுள்ள கிரணங்களை யுடையனை ஸூர்யனுடைய மண்டலத்தின் நட்டநடுவே,

---

திலே புக்கு நீர்க்காக்கைபோலே முழுகிப் பாசியேறக்கிடந் தும். (இன்னதோர் தன்மையராய்) தப:பலம்பெற்று அதிலே வ்யுத்பத்திபண்ணிலும் அதுக்காளாகாதபடி து:க்கமே ஸ்வபாவமானபடி. (ஈங்குடலம் விட்டெழுந்து) நினைத்தபடி அநுபவிக்கலான இங்கே தானுகவபிமாநித்து நெடுநாள் முகம் பழகின சரீரத்தைவிட்டெழுந்துபோய்.

விரும்புமவர்களை 'வாருங்கள் வாருங்கள்' என்று அழைக்கும் குளம். கோடைகாலத்தில் அழகாகக் குடைந்தாடி இன்பமாகப் போதுபோக்கத் தக்க குளங்களிலே குளிர்காலத்திலே புகுந்து நீர்க்காக்கைபோலே முழுகியிருந்து, பாசிபடியும்படியாகக்கிடந்து தவம் செய்தும். (இன்ன தோர் தன்மையராய்) துன்பத்தோடு பழகிப்பழகி இதுவே இயற்கையாகி விடுகின்ற இவனுக்கு, தவத்தின் பலமான பேரின்பத்தைப் பெற்ருலும் அது எப்படி ரஸிக்கும்? (ஈங்குடலம் விட்டெழுந்து) நினைத்தபடி அநுப விக்கத்தக்க இவ்வுலகில், தானுகவே இவனுல் அபிமானிக்கப்பெற்றதாய், நெடுநாளாக உடனிருந்து பழகியதாகையாலே 'உடலம்' எனப்படுவதான இவ்வுடம்பை விட்டுப்போய்.

(தொல்நெறிக்கட்சென்றுரெனப்படும் சொல்லல்லால்) மோக்ஷத்தேறப் போனார்களென்கிற உக்தியல்லது. (இன்ன தோர்காலத்து) ஏதேனுமொருகாலத்திலே. (இனையாரிது பெற்றுரென்னவும் கேட்டறிவதில்லை) ஆரேனுமொருவர் இப்புருஷார்த்தத்தைப் பெற்றுரென்று கேட்டறிவதில்லை; ப்ரமாணங்கள் சொல்லக்கேட்குமத்தனை. "शुको मुक्तो वामदेवो मुक्तः" (சுகோ முக்தோ வாமதேவோ முக்த:) என்று வசநங்களைப் படிக்கு மத்தனை யல்லது கண்டு போந்தாருண்டாகச் சொல்லுவாரில்லை, இன்னார் பெற்றுரென்று சொல்லக் கேட்டறிவதில்லை. சுகவாமதேவாதிகள் முக்தரென்று சொல்லா நின்றதே, கேட்டறியத் தட்டென்னென்னில்; "நான் போனேன், இன்னபடி அநுபவித்தேன்" என்று அங்குத்தையவர்படியைக் கண்டுவந்தார் சொல்லக் கேட்டறிவதில்லை.

(உளதென்னில்) முதலிலே அங்ஙனிப்பதொரு புருஷார்த்தமில்லை. "अग्निना सिञ्चेत्" (அக்நிநா ஸிஞ்சேத்)

(தொன்னெறிக்கண் சென்றுர் எனப்படும் சொல்லல்லால்) பழையதான மோக்ஷத்துக்குச் சென்றுர்கள் என்கிற சொல்லைக் கேட்கிறோமேயொழிய. (இன்னதோர் காலத்து) ஏதாவது ஒரு காலத்திலே. (இனையார் இதுபெற்றுர் என்னவும் கேட்டறிவதில்லை) ஆரேனுமொருவர் இப்பயனைப் பெற்றதாக அவர் வாயிலிருந்து நாம் கேட்டறிந்ததில்லை. சப்த ப்ரமாணங்கள் சொல்லக்கேட்பதொழிய ப்ரத்யக்ஷப்ரமாணத்தைக் கேட்டதில்லை. "சுகர் முக்தியடைந்தார்; வாமதேவர் முக்தியடைந்தார்" என்று வசநங்களைப் படிப்பதொழிய, மோக்ஷத்தைக் கண்டு அங்கு முக்தரை அநுபவித்து வந்தேன் என்று சொல்லுவாரில்லை. சுகர் வாமதேவர் முதலானுர் முக்தியடைந்ததாக ரிஷிகள் சொல்லுகிறுர்களே; அதைக் கேட்டறியலாமே? எனில்: "நான் மோக்ஷஸ்தானத்திற்குச் சென்றேன்; அங்கு இப்படி இப்படியிருந்தது" என்று அங்குள்ளவர்களுடைய நிலையைப் பார்த்துவந்து சொன்னவர் ஒருவருமில்லையன்றே.

(உளதென்னில்) முதன்முதலில் அப்படி மோக்ஷமென்றெரு புருஷார்த்தம் இல்லை. "அக்நியாலே தெளிக்கக்கடவன்" என்பதுபோலே

அன்னதோ ரில்லியி னூடுபோய் வீடென்னும்
தொன்னெறிக்கட் சென்றாரைச் சொல்லுமின்கள் சொல்
லாதே 17

அன்னது ஓர் இல்லியின் ஊடு போய்-வாய்கொண்டு சொல்லமுடியாத அப்படிப்பட்ட ஸூக்ஷ்மமான த்வாரத்தின் வழியேசென்று, வீடு என்னும் தொல் நெறிகண் சென்றாரை சொல்லுமின்கள்—மோக்ஷமென்று நீங்கள் சொல்லுகிற ஒரு ஸ்தானத்திற்குப்போய்த் திரும்பிவந்தவர்களைக் காட்டுங்கள்; சொல்லாதே—அப்படிப்பட்டவர்களைக் காட்டமாட்டாமல்,

---

போலே அது உண்டாகவேணுமாகில் அது இருக்கிறபடி கேட்கலாகாதோ? (மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நல்நடுவுள்) நித்யமாய் அணையவொண்ணாதபடி கொடிதான கிரணங்களையுடைய ஸூர்யமண்டலத்துள்ளிட்டுப் போகவேணுமாம். அவன் நூறாயிரம் யோஜனைக்கவ்வருகே ஸஞ்சரிக்க இங்கே அவன் வெய்யில் பொறுக்கமாட்டாத இவன், அவனை அணையப்போகையுமன்றியே அவனுடைய உள்ளேபோகவேணுமாம்.

(அன்னதோரில்லியினூடுபோய்) அவன்றான் அப்படிப் போமிடத்து ஒருபெருவழி பண்ணிப் போகையுமன்றியே அப்படிப்பட்டதோர் இல்லியினுள்ளிட்டாம் போவது.

விருத்தமான பேச்சாகும் மோக்ஷமுண்டென்பது. அப்படி அது உண்டென்று பிடிவாதம் பிடித்தாலும், அந்த மோக்ஷத்தின் லக்ஷணத்தைக் கேளுங்கள் என்கிறார்,—(மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள்) நித்யமானவனாய், அணுகவொண்ணாதபடி கொடிய வெப்பத்தையுடைய சூரியனின் வட்டத்தின் நடுவில் போகவேண்டுமாம். அவன் நூறாயிரம் யோஜனைகளுக்கு அப்பாலிருக்கும்போதே இங்கே அவனுடைய வெய்யில் பொறுக்கமுடியாத இவன், அவனை ஒட்டிப்போவதோடன்றியில், அவனுடைய உள்ளே போகவேண்டுமாம்.

(அன்னதோரில்லியினூடு போய்)அந்த முக்தன் அப்படிப் போம்போது விசாலமானதொரு வழியில் செல்லாமல்,குறுகியதான அவ்வழியிலே போகவேண்டுமாம்.(அன்னதோர் இல்லி) 'அன்னது' என்று சொல்லுவதொழிய, விவரிக்கமுடியாத நுண்மையையுடைய துவாரம். (வீடென்னும் தொன்

(வீடென்னும் தொன்னெறிக்கட் சென்றுரைச் சொல்லு மின்கள்) இவன்றன் ராஜகுலம் தோற்றப்போகக்கடவனும்; அவனிவனுடைய சரீர விஶ்லேஷத்தளவும் அவஸரம்பார்த்து நின்று முகம் காட்டக்கடவனும்; "हार्दानुगृहीतः" (ஹார்த்தா நுக்ருஹீத:) என்கிறபடியே; ஆதிவாஹிகர் கையிலேகாட்டிக் கொடுக்குமாம். தான் முன்னே கைவிளக்குப் பிடித்துக் கொண்டுபோமாம். "இப்படி அந்த மோக்ஷமாகிற பழைய தாயிருக்கிற தேசத்திலே நான் போனேன், இன்னது கண்டேன், இன்னது அநுபவித்தேன்" என்று வந்தா ரொருவரைக்காட்டிச் சொல்லிக் காணுங்கோள். இப்படி அங்குப் போய்வந்தானொருவன் சொல்லுமாகில் அதுவு மொன்றாகக்கடவது. (சொல்லாதே) இப்படி தான் ப்ரமாணஶ்ரேஷ்டமான ப்ரத்யக்ஷாநுமாநாதிகளாலே இத்தை ஸாதிக்க இதுக்கொரு உபபத்தியை இட்டு ஏத்த மாட்டாதே. (அன்னதேபேசும்) பின்னையுமிதுக்கு உத்தர மாக மேன்மேலென "शुको मुक्तो वामदेवो विमुक्तः" (சுகோ முக்த:

னெறிக்கண் சென்றுரைச் சொல்லுமின்கள்)முக்தன் பகவத்ஸம்பந்தமாகிற ராஜகுலப் பெருமைதோற்ற அனைவராலும் எதிர்கொண்டு உபசரிக்கப் பட்டுப்போகிறானும். அவன் இவனுடைய உடம்பு பிரியும் வரையில் பார்த் திருந்து, பிறகு முகம் காட்டுவோனும். "இருதயத்திலிருக்கும் பரமாத் மாவால் அநுக்ரஹிக்கப்பட்டவனாய் வழியறிந்து செல்லுகிறான் முக்த ஜீவன்" [ப்ரஹ்மஸூத்ரம் *4-2-16*] என்கிறபடியே. ஆதிவாஹிகர் என்னும் அழைத்துச்செல்லும் தேவர்களிடம் இவனை ஒப்பிப்பானும் ஸர்வேச்வரன். தானே முன்னின்று இவர்களுக்கு விளக்குப் பிடித்துக்கொண்டு வழி காட்டிப்போவானும் ஸர்வஸ்மாத்பரன். 'இப்படிச் சொல்லும் மோக்ஷமாகிற பழையதான தேசத்திலே நான் போனேன்; இன்னது பார்த்தேன்: இன்னது அநுபவித்தேன்' என்று கண்டு வந்தவரொருவரைக் காட்டிச் சொல்லுங்கள், பார்க்கலாம். இப்படி அங்குப்போய் வந்தவனொருவன் சொன்னால், அதையும் ஒரு பொருளாகக் கொள்ளலாம். அதற்கும் வழி யில்லையே. (சொல்லாதே) இவ்வாறு சிறந்த ப்ரமாணங்களான ப்ரத் யக்ஷத்தாலும், அநுமானத்தாலும், இதை நிரூபிக்கத்தக்க ஹேதுக்களைக் காட்டி இதைத் துதிக்கமாட்டாமல். (அன்னதேபேசும்) பூர்வபக்ஷி எதைக்கேட்டாலும், அதற்கு பதிலாக மேலும்மேலும் "சுகர் முக்தி

அன்னதே பேசு மறிவில் சிறுமனத்துஆங்கு
அன்னவரைக் கற்பிப்போம் யாமே அதுநிற்க 18

அன்னதே பேசும்—(மோக்ஷமுண்டென்று சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிற தென்று) பழம்பாட்டையே பாடிக்கொண்டிருக்கிற, அறிவு இல் சிறு மனத்து அன்னவரை—விவேகமற்றவர்களும் குறுகிய மனமுடையவர்களு மான அவர்களுக்கு, கற்பிப்போம் யாமே—உபதேசிப்பது நாமோ? அது நிற்க—அந்த மோக்ஷவார்த்தை அப்படி கிடக்கட்டும்;

வாமதேவோமுக்த:) என்று வசநம்படிக்கிறவித்தால் என்ன லாபமுண்டு?

(அறிவில்) அவர்களாகிறுர் தந்தாமுக்கென்ன ஒரு விவேகமில்லாத அறிவுகேடர். (அறிவில் சிறு மனத்து)இப் போது அறிவில்லையேயாகிலும் மேல் அறிவு உண்டாகைக் கீடான நெஞ்சில் அகலமுமில்லை. (ஆங்கன்னவரைக்கற்பிப் போம்யாமே) அவ்வவஸ்த்தாபந்நரானவர்களைக் கற்பிக்கை நமக்கு பரமாவதே! கையிலே மடலை எடுத்துக்கொண்டு இரண்டருகுள்ளாரும்மலைக்கப் பெரிய திருநாளில்போலே உலாவித்திரியலாயிருக்க அவ்வறிவுகேடரை அறிவிக்கை நமக்கு பரமாவதே! (அதுநிற்க)இப்போது அத்தை விடுக.

யடைந்தார்; வாமதேவர் முக்தியடைந்தார்'' என்று வசனம் படிக்கிற இதனுல் என்ன லாபமுண்டு?

(அறிவில்......) அப்படிச் சொல்லுபவர்கள் தமக்கிருக்கவேண்டிய பகுத்தறிவில்லாத முட்டாள்கள். பிறர்சொல்லைப் பின்செல்லும் அறி வற்றவர்கள். (அறிவில் சிறுமனத்து) இப்போதுதான் அறிவு இல்லை யென்றுல், பிறிதொரு காலத்தில் அறிவுண்டாகும்படி விசாலமனப் பான்மையுடையவர்களாகவாவது இருக்கிறுர்களா என்று பார்த்தால் அதுவு மில்லை. குறுகிய மனமுடையவர்களாயிருக்கிறுர்கள். (ஆங்கு அன்ன வரைக் கற்பிப்போம் யாமே) அப்படிப்பட்ட வருந்தத்தகக நிலையிலிருப்ப வர்களை உபதேசித்துத் திருத்துவது நமக்குக் கடமையாகிவிட்டதே! என்ன கஷ்டகாலம்! கையிலே மடலையெடுத்துக்கொண்டு, தெருவின் இரண்டு பக்கத்திலுள்ளவர்களும் மலைக்கும்படியாகத் திருவத்யயனேத்ஸ வத்தில் (நம்பெருமாளைப்) போலே உலாவித்திரிய வேண்டியிருக்க, அவ் வறிவற்றவர்களுக்கு அறிவிப்பது நமக்குச் சுமையாவதே! (அதுநிற்க) இப்போது அச்செயலைச் செய்யாது விடுக.

முன்னநான் சொன்ன அறத்தின் வழிமுயன்ற

முன்னம் நான் சொன்ன அறத்தின் வழி முயன்ற அன்னவர்தாம்—நான் சொன்ன தருமத்தின் வழியிலே அநுஷ்டானம் செய்தவர்கள்,

---

(முன்னம் நான் சொன்ன வித்யாதி) முன்பு நான் இந்த நாலு புருஷார்த்தத்தையும் சொல்லுகிறவிடத்திலே, தர்மத்திலே வந்தவாறே, ஸாத்யரூபத்தாலும் ஸாதநரூபத்தாலும் நிற்பதோராகாரத்தைக்கொண்டு ''மன்னுமறம்'' என்றேன். இஹலோக போகத்தை வ்யாவர்த்திக்கைக்காகச் சொன்னேனத்தனை! அதில் நான் நினைத்த அம்சமறியாதேகுவாலுண்டாக நினைத்திருக்கக்கூடும் அறிவுகேடராயிருப்பாராயிற்று. **"स्वर्गेऽपि पातभीतस्य क्षयिष्णोर्नास्ति निर्वृतिः"** (ஸ்வர்க்கேபிபாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர்நாஸ்தி நிர்வ்ருதி:) அதுக்காக அவ்விடத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லாநின்றேன் கேளுங்கள்.

(முன்னம் நான் சொன்ன அறத்தின் வழிமுயன்ற அன்னவர்) முதன் முதலிலே ''மன்னு மறம் பொருள் இன்பம் வீடு'' என்று இந்த நாலு புருஷார்த்தங்களையும் சொன்னவிடத்திலே, தர்மமாகிற முதற் புருஷார்த்தத்தைச் சொல்லும்போது ஸாத்யமாகவும், பரலோகஸாதனமாகவும் இருக்கும் தன்மைகளைக்கொண்டு, ''மன்னும் அறம்'' என்று அதை நிலைநிற்கும் புருஷார்த்தமாகச் சொன்னேன். இவ்வுலகில் பெறும் பொருள் என்னும் புருஷார்த்தத்தைக் காட்டிலும் இது நிலைபெற்றிருக்கும்படியை அறிவித்தேனவ்வளவேயொழிய அதுவும் என்றும் நிலைநிற்பதில்லை. அதையறியாமல் அதுவும் நித்யபுருஷார்த்தம் என்று சில அறிவிலிகள் நினைத்திருக்கக்கூடும். அது நிலையில்லாததாயிருப்பதோடன்றியில்'எப்போது கீழே விழுவோமோ?' என்னும் பயங்கலந்திருக்கையாலே அல்பமாயிருக்கும்.

"ந கேவலம் த்விஜச்ரேஷ்ட்ட நரகே து:க்கபத்ததி:।
ஸ்வர்க்கேऽபி பாதபீதஸ்ய க்ஷயிஷ்ணோர்நாஸ்தி நிர்வ்ருதி:॥"

[வி-பு 6-5-50]

[அந்தணர் தலைவரே! நரகத்தில் மாத்திரம் துன்பவரிசைகள் உள்ளனவென நினைக்கவேண்டாம். புண்ணியம் குறைந்துகொண்டே வரும் மனிதனுக்கு ஸ்வர்க்கத்திலிருக்கும்போதும் 'எப்போது கீழே விழுவோமோ?' என்னும் பயமுள்ளதாகையாலே ஆநந்தமில்லை.] என்று சொல்லப்படுகிறதன்றே. இவ்விஷயத்தை அறிவுறுத்துவதற்காக இனித் தெளிவாகச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்கிறாள்.

அன்னவர்தாங் கண்டீர்க ளாயிரக்கண் வானவர்
கோன் 19
பொன்னகரம் புக்கமரர் போற்றிசெப்பப் பொங்கொளிசேர்
கொன்னவிலுங் கோளரிமாத் தான்சுமந்த கோலஞ்சேர்20

ஆயிரம் கண் வானவர்கோன் பொன்நகரம் புக்கு — ஆயிரங்கண்ணுடைய இந்திரனுடைய அழகியலோகத்திற்சென்று சேர்ந்து, அமரர்போற்றிசெப்ப-தேவர்களால் வாழ்த்தப்பெற்று, பொங்கு ஒளி சேர்-மேன்மேலும்வளர்கின்ற ஒளியையுடையதும், கொல்நவிலும் கோள் அரிமா தான் சுமந்த கோலம் சேர்-கொல்லுந்தொழிலைக் கோட்சொல்லுவதுபோன்ற வலியசிங்கத்தால் பரிவுடன் சுமக்கப்பட்டதும், அழகியதும்,

---

(முன்னம் நான் சொன்ன அறத்தின்வழி முயன்ற) முன்பு நான் சொன்ன அறத்தை சாஸ்த்ரோக்தமாக அநுஷ்ட்டித்தவர்கள். அறத்தின்வழியென்கையாலே - அந்த உபாயாநுஷ்ட்டாநத்தினுடைய மிறுக்குத்தோற்றுகிறது. அது அநுஷ்ட்டிக்குமிடத்தில், கரணம்தப்பினுல் மரணம். அதில் ஏதேனுமொரு ஸ்வரத்திலே அங்கத்திலே வைகல்யம் பிறக்கில் பின்னை ப்ரஹ்மரக்ஷஸ்ஸாய்ப்பிறக்குமித்தனை. (அன்னவர்தாம் கண்டீர்கள்) அத்தை அருமைப்பட்டநுஷ்ட்டித்த அப்படிப்பட்ட அவர்கள். (ஆயிரக்கண் வானவர்கோன்) இங்கு நின்றும் போகிறவனுக்கு நிர்வாஹகனுயிருக்கிறவன் ஆயிரம்கண்கொண்டாயிற்று அவ்விஷயத்தை அநுபவிப்பது.

(முன்னம் நான் சொன்ன அறத்தின் வழிமுயன்ற அன்னவர்) நான் சொன்ன தர்மத்தை சாஸ்திரத்தில் கூறிய வழியில் அனுஷ்டித்தவர்கள். 'அறத்தின் வழி' என்கையாலே அந்த ஜ்யோதிஷ்டோமாதி தர்மாநுஷ்டானத்தின் கடுமை தோற்றுகிறது. அதை அநுஷ்டிக்கும்போது கரணம் தப்பினுல் மரணமாயிருக்குமென்பயையும் மந்திரஸ்வரத்திலேயாவது, உபாயத்தின் அங்கத்திலேயாவது ஏதாவது குறைவு நேர்ந்தால் பிறகு பிரமராக்ஷஸனுய்ப் பிறக்கவேண்டியதே என்பதையும் உணர்த்துகிறது. (அன்னவர்தாம் கண்டீர்கள்) அந்த அறத்தை அவ்வளவு சிரமப்பட்டு இயற்றிய அவர்கள். (ஆயிரக்கண் வானவர்கோன்) இங்கிருந்து போகிறவனுக்குத் தலைவனுயிருக்கும் இந்திரன் ஆயிரம் கண்கொண்டு அநுபவிக்க வேண்டும்படி அளவிற் பெரிதாயிருக்கிறது அந்த தேவலோகஸுகம்.

(பொன்னகரம்புக்கு) அதில் ச்லாக்யமான தேசவாஸமே யமையுமென்னும்படி இருக்கிறவிடத்தே போய்ப்புக்கு. (அமரர்போற்றிசெப்ப) "முடியுடைவானவர் முறைமுறை எதிர்கொள்ள" என்னுமாபோலே அங்குள்ள தேவர்கள் "அர்த்தபரராய் ஸம்ஸாரத்திலேயிருந்து இக்காமபுருஷார்த்தத்தை ஆதரித்து இதுக்கீடாகத் தன்னையொறுத்து ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணிவருவானொரு மஹாத்மா உண்டாவதே!" என்று கொண்டாட.

(பொங்கொளிசேர்) காலம்செல்லச்செல்ல ஒளிமழுங்குகையன்றிக்கே புண்யபலமாகையாலே மிக்குவாராநின்றுள்ள ஒளிசேர்ந்திருப்பதாய். (கொல்நவிலுங்கோளரிமா) "கொலையைச் செய்யாநிற்பதுமாய், எழுந்திருந்து பாயுமாபோலே" என்று சொல்லலாம்படியாய்ப் பெரியமிடுக்கையுடைத்தாயிருந்துள்ள ஸிம்ஹங்களானவை. (தான்சுமந்த) ஹ்ருதயத்திலே பரிவோடே சுமந்தாற்போலே யாயிற்று தரிக்கும்படி. (கோலஞ்சேர்) நாநாவானவகுப்புக்கள் ஸஹஜமானுற்

(பொன்னகரம்புக்கு) அந்த தேவருலகில் சிறந்ததாய், 'இதில் வசிப்பதே பேரின்பம்' என்னலாம்படியிருக்கிற அமராவதியென்னும் நகரை அடைந்து. (அமரர் போற்றி செப்ப) "முடியுடை வானவர் முறைமுறை எதிர்கொள்ள" [திருவாய் 10-9-8] என்று முக்தரை எதிர்கொண்டு துதிப்பதுபோலே அங்குள்ள தேவர்கள் "பொருளிலே ஈடுபட்டவராக பூலோகத்திலிருக்கும்போதும், இக்காமபுருஷார்த்தத்தை விரும்பி, இதைப்பெறுவதற்காகத் தவம்பலபுரிந்து தன்னுடம்பை வாட்டி உபாயாநுஷ்டம் செய்து வருபவனொரு பெரியோன் உண்டாவதே!" என்று இவர்களைக் கொண்டாட.

(பொங்கொளிசேர்) இவ்வுலகில் பொருள்கள்போலே நாள் செல்லச் செல்ல ஒளிமழுங்காமல், புண்யபலமாகையாலே நாள் செல்லச்செல்ல வளரும் ஒளியை உடையதாயிருக்கை. (கொல் நவிலும் கோளரிமா) "எதிர் வருவாரைக்கொலைசெய்வதற்காக எழுந்திருந்து பாயப்போகிறது போலும்!" என்று சொல்லலாம்படியாய், பெரிய பலத்தையுடையதுமான (சிற்ப ரூபமான) ஸிம்ஹங்களானவை. (தான் சுமந்த) நெஞ்சில் பரிவோடு உயிருள்ள சிங்கம் சுமந்தாற்போலே தரித்துநிற்கிறபடி. (கோலம் சேர்) பலவிதமான அங்கணங்கள் இயற்கையிலேயே அமைந்திருப்பதுபோலே

மன்னிய சிங்கா சனத்தின்மேல் வாணெடுங்கண்
கன்னியரா லிட்ட கவரிப் பொதியவிழ்ந்தாங்கு 21
இன்னிளம்பூந் தென்ற லியங்க மருங்கிருந்த
மின்னனைய நுண்மருங்குல் மெல்லியலார் வெண்
முறுவல் 22
முன்னம் முகிழ்த்த முகிழ்நிலா வந்தரும்ப
அன்னவர்தம் மானோக்க முண்டாங் கணிமலர்சேர் 23

மன்னிய சிங்கஆசனத்தின் மேல்—நிலையானதுமான சிங்காசனத்தின்மேலே (இருந்து கொண்டு) வாள் நெடுங்கண்—வாள்போற் கூறிய நீண்டகண்களையுடைய, கன்னியரால் இட்ட—தேவகன்னிகைகளாலே வீசப்பட்ட, கவரி பொதி அவிழ்ந்து—சாமரத்திரள்கள் (அருகிலே) மலரப்பெற்று, இன் இள பூ தென்றல் இயங்க—இனிதாயும் மந்தமாயும் பரிமளமுடையதாயுமிருக்கிற தென்றல் வந்து வீசப்பெற்று, மருங்கு இருந்த — அருகேயிருக்கிற, மின் அனைய நுண்மருங்குல் மெல் இயலார்—மின்னல்போல் ஸூக்ஷ்மமான இடையையுடைய மென்மைமிக்க மாதர்கள், முன்னம் முகிழ்த்த-முதலிலேயே வெளிப்படுத்திய, வெண்முறுவல்— (தங்களுடைய) வெளுத்த பற்களாகிற, முகிழ் நிலா வந்து அரும்ப — இளநிலா வந்து பரவ, அன்னவர் தம்—அப்படிப்பட்ட மாதர்களுடைய, மான் நோக்கம் உண்டு—மானின் நோக்குப்போன்ற நோக்கை அநுபவித்து, ஆங்கு-அவ்வளவிலே, அணி மலர் சேர்—அழகிய பூக்கள் நிறைந்துள்ள,

---

போலே பொருந்தியிருக்குமாயிற்று. (மன்னிய சிங்காசனத்தின்மேல்) ஸாம்ஸாரிகமான போகங்களிற் காட்டில் நாலு நாளெழவிருந்து எழுந்திருக்கலாம்படியான ஸிம்ஹாஸநத்தின்மேலே. (வாள்நெடுங்கண் கன்னியராலித்யாதி) ஓராளுமொருநோக்கும் நேரானகண்களை உடையராய், காலதத்வமுள்ளதனையும் புஜியாநின்றாலும் அபூர்வைகளாயிருக்கும்

பொருத்தமாயிருக்கிறபடி. (மன்னிய சிங்காசனத்தின் மேல்) இவ்வுலகத்து போகங்களைக்காட்டிலும் சிறிதுகாலம் அதிகமாக உட்கார்ந்திருந்து எழுந்திருக்கலாம்படியிருக்கையாலே, அவ்வளவு நிலைநிற்கும் சிங்காசனத்தின் மேல். (வாள் நெடுங்கண்......) அங்குள்ள அப்ஸரஸ்ஸுக்களோடு அனுபவிக்கும் இன்பத்தைப் பேசுகிறது. (வாள்கண்) எதிர்ப்பட்டவர்களை வாள்வீச்சாலே வீழ்த்துவதுபோலே, ஒருகண்ணோக்காலே ஒவ்வொருவரை

ஸ்த்ரீகளாலே இடப்பட்ட கவரித்திரள் கட்டவிழ்ந்து, அவ்விடத்திலே இனியதாய் மந்தமாய் பரிமளத்தையுடைத்தான தென்றல் ஸஞ்சரிக்கக் கிண்ணகத்தை எதிரிடவொண்ணாதாற்போலே போக்யதையின் மிகுதியாலே நெருக்கவொண்ணுதே அருகேயிருக்கவேண்டியவராய், "விழேல்" என்னப் பண்ணும்மின்னைப்போலியென்னப்படும் நுண்ணியமருங்கையுடையருமாய், ம்ருது ஸ்வபாவைகளுமாய் இருக்கிறவர்களுடைய ஹ்ருதயத்திற்கிடக்கிற பூக்கொய்கையாகிற கார்யத்தைக்காட்டுகிற வெளுத்த முறுவலாகிற இளநிலா வந்தரும்ப.அப்படிப்பட்டவர்கள் மான்போல்நோக்கைபுஜித்து,

---

வீழ்த்தவல்ல கண்களையுடையவர்கள். (நெடுங்கண்) காலமுள்ளவரையிலும் அநுபவித்தாலும் புதிதாய்த் தோற்றும் கண்ணழகையுடையவர்கள். (கன்னியரால் இட்ட கவரிப்பொதி அவிழ்ந்து) அப்படிப்பட்ட ஸ்திரீகளாலே இடப்பட்ட சாமரத்திரள் அவிழ்ந்து. (ஆங்கின்னிளம் பூந்தென்றல் இயங்க) அவ்விடத்தில் இனியதாய், மந்தமானதாய், பூக்களின் மணங்களைச் சுமந்துவரும் தென்றல் வீச. (மருங்கிருந்த) மற்றும் சில தேவஸ்திரீகள் இவர்களுக்கு அருகிலிருக்கிறார்கள். நீர்ப்பெருக்கை எதிரிடமுடியாததுபோலே இனிமையின் மிகுதியையுடைய இவர்களையும் நெருங்க முடியாமல் அருகிலேயே இருத்தி அநுபவிக்கவேண்டியிருக்கிறது. (மின்னனைய நுண்மருங்குல்) 'மின்னல்' தன்னைக் காண்பாரை 'விழுந்து விடாதே' என்று சொல்லும்படி செய்யும். அதுவும் இதற்குப் போலி என்னும்படி அதிலும் நுண்ணியதாயிருக்கும் இடையை உடையவர்கள். (மெல்லியலார்) மென்மையை இயற்கையாகக் கொண்டவர்கள். (முன்னம் முகிழ்த்த வெண்முறுவல் முகிழ்நிலா வருந்தரும்ப) தங்கள் கருத்தை முதலிலேயே காட்டுகிற வெளுத்த முறுவலாகிற இளநிலா வந்து பரவ. (முன்னம் முகிழ்த்த) அடுத்தபடியாக விவரிக்கப்போகும் சோலையிலே பூக்கொய்கையாகிற காரியத்தை முன்கூட்டியே தெரிவிப்பதுபோலிருக்கிறது இவர்களுடைய இளமுறுவல் என்று கருத்து. (அன்னவர் தம் மான் நோக்கம் உண்டு) அப்படிப்பட்டவர்களுடைய மான்போன்ற நோக்கை அநுபவித்து.

அடுத்தபடியாக புண்யபலத்தாலே நினைத்தவுடன் கண்முன்பு தோன்றுகிற சோலையிலே முறுவலால் தெரிவித்த பூக்கொய்யும் காரியத்தைச்செய்து விளையாடுவதைத் தெரிவிக்கிறது. (ஆங்கு) அப்போதிலே. (அணிமலர்

பொன்னியல் கற்பகத்தின் காடுடுத்த மாடெல்லாம்
மன்னிய மந்தாரம் பூத்த மதுத்திவலை 24
இன்னிசை வண்டமருஞ் சோலைவாய் மாலைசேர்
மன்னிய மாமயில்போல் கூந்தல் மழைத்தடங்கண் 25
மின்னிடையாரோடும் விளையாடி வேண்டிடத்து
மன்னு மணித்தலத்து மாணிக்க மஞ்சரியின் 26
மின்னி னொளிசேர் பளிங்கு விளிம்படுத்த
மன்னும் பவளக்கால் செம்பொன்செய் மண்டபத்துள் 27

பொன் இயல் கற்பகத்தின் காடு உடுத்த—பொன்மயமான கற்பகக்காடுகள் சூழப்பெற்றதாய், மாடு எல்லாம் மன்னிய மந்தாரம் பூத்தமது திவலை, மருங்கு எங்கிலும் நிலைபெற்றிருக்கிற பாரிஜாத வ்ருக்ஷங்களின் பூக்களிலுள்ள தேன் துளிகளில், இன்இசைவண்டு அமரும்சோலைவாய் — இனிய இசைகளைப் பாடுகின்ற வண்டுகள் பொருந்தியிருக்கப்பெற்ற பூஞ்சோலை களிலே, மாலை சேர் மன்னிய மாமயில்போல் கூந்தல்—புஷ்பங்களை யணிந்தும், பொருந்திய மயில் தோகைபோலுமிருக்கிற கூந்தலையுடைய வர்களாயும், மழைதடங்கண்—மேகம்போலே கறுத்துக் குளிர்ந்து, விசால மான கண்களையுடையவர்களாயும், மின் இடையரோடும்—மின்போல் நுண் ணிய இடையையுடையவர்களாயுமிருக்கிற அப்ஸரஸ் ஸ்த்ரீகளோடே, வேண்டிடத்து விளையாடி—விரும்பிய இடங்களில் விளையாடி, மன்னும் மணி தலத்து—சிறந்த ரத்னங்களழுந்தின தரையையுடையதும், மாணிக்கம் மஞ்சரியின்—மாணிக்கமயமான பூங்கொத்துத் தோரணங்களையுடையதும், மின்னின் ஒளிசேர் பளிங்கு விளிம்பு அடுத்த - மின்னல்போலே பளபள வென்று விளங்குகின்ற ஸ்படிகக் கற்களாலே கொடுங்கை கட்டப்பெற்ற தும், மன்னும் பவளக்கால்—விளங்கும் பவழத்தூண்களையுடையதும், செம்பொன் செய்—செப்பொன்னால் செய்யப்பட்டதுமான, மண்டபத்துள்- மண்டபத்திலே,

---

புண்யபலத்தாலே நினைத்தபோதே முன்புதோன்றுகிற சோலையிலே, முறுவலால்தோற்றுவித்த பூக்கொய்கையைப் பேசுகிறது. (மன்னிய) நிலைநிற்கும் கற்பகங்கள். (இன்

சேர்) அவ்வுலகிற்கு அலங்காரமான மலர்கள் நிரம்பியிருக்கை. (பொன் னியல் கற்பகம்) பொன்னகருக்குத் தகுந்த பொன்னியல் கற்பகமாயிருக்கை. பொன்போலே வேண்டப்படுவதாயிருக்கை. “மன்னிய கற்பகம்” என்று வ்யாக்யான பாடம். நிலைநிற்கும் கற்பகங்கள் என்றபடி. (கற்பகத்தின் காடுடுத்த) சோலைக்கு விசேஷணம். கற்பகக்காடு சூழப்பட்ட சோலை. (மாடெல்லாம் மன்னிய மந்தாரம் பூத்த மதுத்திவலை) மருங்கெல்லாம் நிலை நிற்கும் மந்தார வ்ருக்ஷங்களின் பூக்களிலுள்ள மதுபிந்துக்களிலே. (இன்

னிசை வண்டமரும்) *குடியாவண்டு கள்ளுண்ணச்சிற கோசையிலேயறியுமித்தனை. (மாமயில்) அங்கு இவர்க ளொப்பனை இருக்கும்படி. (விளையாடி)

இனி ஓலக்கமிருக்கும்படி சொல்லுகிறது. (வேண் டிடத்து) அபேக்ஷையின்படியே. (மாணிக்க மஞ்சரி) மாணிக்கங்களைக் கோத்துப் பூங்கொத்தாகத் தூக்கி. (மன் னும் பவளக்கால்) ஆடுவார் சாய்ந்திருக்கை. (அரம்பையர்) தேவஸ்த்ரீகள். (கைவளர்த்த) நீரூட்டி வளர்த்தாற்போலே கையாலே தடவி வளர்த்த. (இன்புற்று) அந்த போக் யதையை அனுபவித்து.

னிசை வண்டமரும் சோலை) இன்னிசை முரலும் வண்டுகள் அமர்ந்திருக்கும் சோலை. மலரிலே 'குடியாவண்டு கள்ளுண்ண' சிறகின் இன்னிசையாலே அறியுமித்தனை. (சோலைவாய்) சோலையிலே. இனி, அவர்களுடைய கூந்தலை வருணிக்கிறது,-(மாலைசேர்) பூமாலைகளாலே அலங்கரிக்கப்பெற்ற கூந்தல். (மன்னிய மாமயில்போல் கூந்தல்) இயற்கையிலேயே அமைந் திருக்கும் பெரிய மயில்தோகைபோன்ற கூந்தலை உடையவர்கள். (மாலை சேர்...கூந்தல்) சோலையிலே இவர்கள் கூந்தலுக்குச் செய்துகொண்டிருக் கும் அலங்காரங்களைக் காட்டுகிறது. (மழைத் தடங்கண்) மேகம்போல் குளிர்ந்து கறுத்திருப்பதாய், பரந்திருப்பதான கண்களையுடையவர்கள். (மின்னிடையாரோடும் விளையாடி) மின்னல்போன்ற இடையையும் உடையவர்களான அவரோடும் விளையாடி.

இனி, "வேண்டிடத்து......கேட்டின்புற்று" என்னும் தொடராலே தேவஸபையிலே கொலுவீற்றிருக்கும்படியைச் சொல்லுகிறது. (வேண் டிடத்து) தாங்கள் விரும்பியவிடத்திலே. (மன்னு மணித்தலத்து) என்று தொடங்கி (செம்பொன் செய்) என்பது வரையில் மண்டபத்துக்கு விசேஷணம். (மன்னு மணித்தலத்து) நிலைநிற்கும் மணிகளால் பதிக்கப் பெற்ற தரையையுடையது. (மாணிக்க மஞ்சரியின்) மாணிக்கங்களைக் கோர்த்துப் பூந்தோரணங்கள்போலே கட்டியிருக்கை. (மின்னொளிசேர்) அத்தோரணங்களின் மின்னும் ஒளிசேர்ந்திருக்கும் மண்டபம். (பளிங்கு விளிம்பு அடுத்த) ஸ்படிகக் கற்களாலே கொடுங்கைகள் அமைக்கப்பெற் றிருக்கை. (மன்னும் பவளக்கால்) ரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசி முதலான நடனமாதர் சாய்ந்திருக்கப் பெறுகையாலே விளங்கி நிற்கும் பவளத்தூண்களையுடைய மண்டபம். (செம்பொன் செய் மண்ட பத்துள்) பதினாறுமாற்றுடைய ஆணிச் செம்பொன்னால் செய்யப்பெற்ற

அன்ன நடைய வரம்பையர்தங் கைவளர்த்த
இன்னிசையாழ் பாடல்கேட் டின்புற் றிருவிசும்பில் 28
மன்னு மழைதவழும் வாணிலா நீண்மதிதோய்
மின்னி னொளிசேர் விசும்பூரும் மாளிகைமேல் 29

அன்னம் நடைய அரம்பையர் தம் கை வளர்த்த-அன்னநடையையுடைய அப்ஸரஸ்ஸுக்களின் கையால் தடவி வளர்க்கக்கப்பெற்ற, இன் இசை யாழ் பாடல்-இனிய இசையையுடைய வீணையின் பாட்டை, கேட்டு இன்புற்று-கேட்டு ஆனந்தித்தும், இரு விசும்பில் மன்னு மழை தவழும்-பரந்த ஆகாசத்திலே பொருந்தியிருக்கிற மேகமண்டலங்கள் வந்து படியப்பெற்றதும், வாள் நிலா நீள் மதிதோய்-அழகிய நிலவையுடைய பெரிய சந்திரன்வந்து படியப்பெற்றதும், மின்னின் ஒளிசேர்-மின்னலின் ஒளிபோன்ற ஒளியையுடையதும், விசும்பு ஊரும் மாளிகை மேல்-ஆகாசத்தில் ஸஞ்சரிப்பதுமான விமாநத்திலே,

---

இனி ஸம்போகாநுபவம் பேசுகிறது. (மழைதவழும்) மேகமிளைப்பாறும்; போக்யனான சந்த்ரனுமப்படியே. (விசும்பூரும்) பள்ளப்பாறையுள்ள ஸ்த்தலம்.

மண்டபத்தினுள். (அன்னநடைய அரம்பையர் தம் கைவளர்த்த) அன்னம் போல் நடையையுடைய தேவஸ்திரீகள், செடிகளை நீரூட்டி வளர்க்குமா போலே, தம் கையாலே தடவி வளரச்செய்த இசை. (இன் இசை) இவ்வுலக இசையிலும் சிறந்த தேவகானம். (யாழ் பாடல் கேட்டின்புற்று) அப்படிப்பட்ட இசையையுடைய வீணையின் பாடலைக்கேட்டு அந்த இனிமையை அநுபவித்து.

இனி, ''இன்னமுதம் மாந்தியிருப்பர்'' என்பது வரையில் தேவஸ்திரீகளோடு இவன் சிற்றின்பம் அனுபவிப்பதைப் பேசுகிறது. (இருவிசும்பில்) விசாலமான தேவருலகில். (மன்னு மழை தவழும்) கோடையோடு மழைகாலத்தோடு வாசியில்லாமல் எப்போதும் மேகங்கள் படிந்திருக்கும் மாளிகை. உயிரளிப்பான் மாகங்களெல்லாம் திரிந்து நன்னீர்கள் சுமந்து, தம் ஆகங்கள் நோவ வருந்திய வருத்தம் தீருவதற்காகக் கட்டிய விச்ரமஸ்தானங்கள் (இளைப்பாறுமிடங்கள்) போலேயிருக்கை. (வாள் நிலா நீண்மதி தோய்) ஒளிபொருந்திய நிலவொளியை உடையதாய், இனிமையிலே நீண்டதாயிருக்கும் சந்திரனும் (மேகத்தைப்போலே) இளைப்பாறுமிடமாயிருக்கை. (மின்னின் ஒளிசேர்) மின்னலைப்போலே கண்ணைப் பறிக்கும் ஒளியுடையதாயிருக்கை. (விசும்பூரும்) சந்திரனும், மேகமும் இளைப்பாறுமிடங்கள் பள்ளமானவை யென்னும்படி மிகவோங்கி ஆகாசப் பரப்பையெல்லாம் அடைத்துக்கொண்டிருக்கும் மேடான ஸ்தலங்களையும் உடையதாயிருக்கும் மாளிகை. மேடுபள்ளமுள்ள இடம்.

மன்னு மணிவிளக்கை மாட்டி மழைக்கண்ணார்
பன்னு விசித்திரமாப் பாப்படுத்த பள்ளிமேல்
துன்னிய சாலேகஞ் சூழ்கதவந் தாள்திறப்ப

மழை கண்ணார்—குளிர்ந்த கண்களையுடையரான மாதர்கள், மன்னு மணி விளக்கை மாட்டி-அணையாத மாணிக்கங்களாகிற விளக்குகளைத் தொங்கவிட்டு, விசித்திரமா பாப்படுத்த—பலவிதமாக விஸ்தாரமாய்ப் பரப்பின, பன்னு பள்ளிமேல்—கொண்டாடத்தக்க சயனத்தின்மீது, துன்னிய சாலேகம் சூழ் கதவம் தாள் திறப்ப-நெருங்கிய சன்னல்களைச் சுற்றியுள்ள கதவுகள் திறந்து கொள்ள,

---

(மன்னுமணிவிளக்கை மாட்டி) மாணிக்கத்தினழுக்கைக் கழற்றி நிலைவிளக்காகவைத்து. (மழைக்கண்ணார்) அடுத்து ஒருகால் பார்க்க, காலதத்வமுள்ளதனையும் வவ்வலிடும்படி பண்ணும். (பன்னு) படுக்கை படுத்தபடிகண்டு வாய்புலர்த்த. (விசித்திரம்)நாநாவர்ணமாகப் பரப்பப்படுத்த படுக்கையிலே. (துன்னிய)காற்றைப்பிடித்துப்புகுரவிடவற்றாயிருக்கை(தாள் திறப்ப)வேண்டினபோதே தானே திறப்ப. அவ்வழியே புகும்

(மாளிகைமேல் மன்னு மணிவிளக்கை மாட்டி) மாளிகையின் மேலே மாணிக்கத்தை அழுக்கறக்கடைந்து, மன்னவைத்து, அதை நிலைவிளக்காக மாட்டிவைத்து. (மழை கண்ணார்) மழைபொழியும் மேகம்போல் கறுத்துக் குளிர்ந்து விளங்கும் கண்ணையுடையவர்கள். ஒருதடவை உற்றுப் பார்த்தால் காலமுள்ளவரையிலும் கண்ணின் குளிர்ச்சியானது வவ்வலிடச் செய்யுமோ என்னும்படியிருக்கை. (பன்னு) படுக்கை விரித்திருக்கும் அழகைக் கண்டால், காலமெல்லாம் அதையே கொண்டாடவேண்டும்படியிருக்கை. (பன்னு விசித்திரமாப் பாப்படுத்த பள்ளிமேல்) கொண்டாடத் தக்கதாய் பல வர்ணங்களையுடையதாகப் பரப்பப்பட்ட படுக்கையின் மேலே. (துன்னிய சாலேகம்) நெருங்கிய துளைகளையுடைய சன்னல். பெருங்காற்று வீசாமலும், காற்றே இல்லாமலுமிராமல், காற்றை அளந்து வீசச்செய்யும்படியான நெருங்கிய துளைகளையுடைய சன்னலாயிருக்கை. (சூழ்கதவம்) அந்த சன்னலைச் சூழ்ந்து மூடியிருக்கும் கதவானது (தாள் திறப்ப) காற்று வேண்டினபோது, தானுகத் திறந்துகொள்ள. சன்னல் வழியே புகுந்த தென்றலை ஒரு மஹாபுருஷனைப்போலே வருணித்துப் பேசு

அன்ன முழக்க நெரிந்துக்க வாணீலச் 31
சின்ன நறுந்தாது சூடியோர் மந்தாரம்
துன்னு நறுமலரால் தோள்கொட்டிக் கற்பகத்தின் 32
மன்னு மலர்வாய் மணிவண்டு பின்தொடர
இன்னிளம் பூந்தென்றல் புகுந்தீங் கிளமுலைமேல் 33
நன்னறுஞ் சந்தனச்சே றுள்புலர்த்தத் தாங்கருஞ்சீர்
மின்னிடைமேல் கைவைத் திருந்தேந் திளமுலைமேல் 34
பொன்னரும் பாரம் புலம்ப வகங்குழைந்தாங்கு
இன்ன வுருவி னிமையாத் தடங்கண்ணார் 35

அன்னப்பறவைகள் மிதிப்பதனாலே நெரிந்து துகளாய்ப்போன அழகிய நீலோற்பலத்தின், அன்னம் உழக்க நெரிந்து உக்க வாள் நீலம் நறு சின்ன தாது சூடி-மணம்மிக்க சிறிய தாதுகளைச் சூடிக்கொண்டும், ஓர் மந்தாரம் துன்னு நறுமலரால் தோள்கொட்டி — சிறந்த மந்தார வ்ருக்ஷத்திலே நெருங்கியுள்ளதும் மணம்மிக்கதுமான புஷ்பங்களாலே தோள்களை அலங்கரித்துக்கொண்டும், கற்பகத்தின் மன்னு மலர்வாய் மணிவண்டு பின்தொடர — கல்பவ்ருக்ஷத்திலே, பொருந்திய பூக்களிலே படிந்த அழகிய வண்டுகள் பின்தொடரப்பெற்றும், இன் இள பூ தென்றல்—பரம போக்யமான மந்தமாருதமானது, ஈங்கு புகுந்து-இவர்கள் ரமிக்குமிடங்களிலே வந்து சேர்ந்து, இள முலை மேல்—இள முலைகள்மேல் பூசப்பட்ட, நல் நறு சந்தனம் சேறு உள் புலர்த்த—நல்ல மணமுடைய சந்தனச்சேற்றை நன்கு உலர்த்த, தாங்க அரு சீர் மின் இடைமேல் கை வைத்து இருந்து—தரிக்கமுடியாத (ஸூக்ஷ்மமான) அழகிய மின்போன்ற இடுப்பின்மீது கையை வைத்துக்கொண்டிருந்து, எந்து இள முலை மேல்—உயர்ந்த இளமுலைமேலே, பொன் அரும்பு ஆரம் புலம்ப—காசுமாலைகள் ஒலிக்கும்படிநிற்க, ஆங்கு-அவ்விடத்திலே, அகம் குழைந்து-மனமுருகி, இன்ன உருவின் இமையா தடங்கண் ஆர்—இப்படிப்பட்ட சிறந்த பெரியகண் படைத்த,

---

தென்றலைப் பேசுகிறது. (அன்னம் உழக்க) அன்னங்கள் புக்கு அள்ளல் சேற்றையுழக்குமாபோலே தேனும் சுண்ணமும் தாதும் ஒன்றாக உழக்க, அத்தாலே அது துகளாய்

கிறது. (அன்னம் உழக்க நெரிந்துக்க) நீர் நிலைகளிலே உள்ள நீலோற்பல புஷ்பங்களிலே அன்னங்கள் புகுந்து, சேற்றைக் குழப்புவதுபோலே, பூவிலுள்ள தேனும், சுண்ணமும், தாதும் ஒன்றாகும்படி குழப்ப, அத்தாலே அது பொடியாகிறது. (வாள் நீலச் சின்ன நறுந்தாது சூடி) அப்படிப்

ஒளிமிக்க நீலப்பூவின் சின்னநறும் தாதை ராஜாக்கள் வளை யம் வைக்குமாபோலே வைத்து. மந்தாரப்பூவைத் தோளிலே தோள்மாலையாக ஏறிட்டு, கற்பகத்துக்கெழுதிக்கொடுத்த வண்டுகள் தன்னைக்கொண்டு எழுந்துபோகும்படியாய், மந்த மாய்ப் பரிமளத்தையுடைத்தான தென்றல் நாலடியிட்டுப் புகுந்து, "அல்லோம்" என்பாரும் விழவற்றின போக்யதையை யுடைத்தான சந்தநச் சேற்றைச் சிற்றாலவட்டம்போலே முறையிலேயுலர்த்த, தாங்கவரிதாய் சீருடைய மின் போன்ற இடைமேலே கையைவைத்துக் காந்தனுக்கு ஸர் வஸ்வதாநம் பண்ணவிருந்து. (பொன்னரும்பாரம் புலம்ப) ஸம்ச்லேஷத்தைப் பேசினபடி.

பொடியான ஒளிமிக்க கருநெய்தற்பூவின் சின்ன நறும் தாதை அரசர்கள் தலையிலே மாலை சூடுவதுபோலே சூடி. (ஓர் மந்தாரம் துன்னு நறுமல ரால் தோள் கொட்டி) ஒப்பற்ற மந்தாரபுஷ்பத்தால் நெருங்கக்கட்டிய மணம்மிக்க மாலையை அரசர்கள் தோளிலே மாலை சூடுவதுபோலே சுமந்து கொண்டு. (கற்பகத்தின் மலர் வாய் மன்னும் மணிவண்டு பின்தொடர) கற்பகத்தின் தேன்மிகுதிக்குத் தோற்றுத் தம்மை எழுதிக்கொடுத்து அதிலேயே நித்யவாஸம் செய்யும் வண்டுகள், அதையும் மறந்து இத் தென்றலின் இனிமையிலே மயங்கி, அரசர்களைத் துதிபாடகர்கள் துதித்துக் கொண்டு பின்வருமாபோலே, ரீங்காரம் செய்துகொண்டு பின்தொடரும் படியாக. (இன்னிளம் பூந்தென்றல் ஈங்குபுகுந்து) ஸ்பர்சிப்பதற்கு இனிய தாய், மந்தமாய், பூக்களின் நறுமணத்தையுடையதான தென்றல் இவர்க ளிருக்குமிடம் புகுந்து. (இள முலை மேல் நன்னறுஞ் சந்தனச் சேறு உள் புலர்த்த) கலவியை வெறுக்கும் முனிவர்களையும், இதைக்கண்டுவிட்டால் மேல் விழச் செய்யும் இனிமையையுடையதான தேவஸ்த்ரீஸ்தனத்தின் மேலே பூசப்பெற்றிருக்கும் மணம்மிக்க சந்தனக்குழம்பை சிறியதொரு விசிறிகொண்டு வீசினாற்போலே கிரமமாக உலர்த்த. (தாங்கருஞ்சீர் மின் னிடை மேல் கைவைத்து) கொங்கைப் பாரத்தை தாங்க அரிதாய், அழகியதாய், மின்னல்போல் நுண்ணியதான இடைமேலே கையைவைத்து கொண்டு காதலனான இவனுக்குத் தன்னை முற்றாட்டாக அனுபவிக்கக் கொடுத்துக் கொண்டிருந்து. (பொன்னரும்பு ஆரம் புலம்ப) பொற்காசுகளா லான மாலை ஒலிக்கும்படியாக. ஸம்போகத்தில் உடம்புகள் அணைவதால் அசையும் காசுமாலை ஒலிக்கும்படியாக. கலவியின்பத்தை மறைமுமாகப் பேசுகிறார்.

அன்னவர்தம் மானோக்க முண்டாங் கணிமுறுவல்
இன்னமுதம் மாந்தி யிருப்பர் இதுவன்றே 36
அன்ன வறத்தின் பயனாவ தொண்பொருளும்

அன்னவர் தம்—தேவமாதர்களுடைய, மான் நோக்கம் உண்டு-மானின் நோக்குப்போன்ற நோக்கை அநுபவித்து, ஆங்கு-அதனோடுகூட, அணி முறுவல்-இன் அமுதம் மாந்தி இருப்பர்—அழகிய புன்சிரிப்பாகிற இனிய அம்ருதத்தையும் பருகியிருப்பர்கள், அன்ன அறத்தின் பயன் ஆவது இது அன்றே—அப்படிப்பட்ட (முன்னே நான் சொன்ன) தர்ம புருஷார்த்தத்திற்கு பலனாகப் பெறும்பேறு இதுவேயாம்; ஒண் பொருளும்-சிறந்த அர்த்த புருஷார்த்தத்தின் பலனும்,

---

(அகம் குழைந்து) உடன்பட்டபடி. (இன்னவுரு) இட்டு மாற்றினாற்போலிருக்கை. (இமையாத் தடங்கண்ணார்) வைத்தகண் வாங்கவொண்ணாத போக்யதையையுடையவர்கள். (மானோக்கமுண்டு) நோக்குப்பொறுத்தவாறே முறுவல்பண்ண, அதுவுமுண்டறுக்க வல்லராம்படியாயிற்றிருப்பது. (இருப்பர்) போக்யதாதிசயத்தாலே போகமாட்டாமை. (இதுவன்றே) ஒரு சிறுங்கையென்கிறது; க்ருஷிக்குத் தக்கபலம் போராமை.

(ஒண்பொருளுமன்ன திறத்ததே) ஒண்பொருளுமத்தனையே.ஒண்பொருள்–ஆசார்யர்களையும்கூட விட்டுப் பற்று

(அகம் குழைந்து) அவ்வின்பத்திற்கு மனமுருகி உடன்பட்டு. (ஆங்கு) அந்த தேவருலகில். (இன்ன உருவின் இமையாத் தடங்கண்ணார்) (இன்னவுரு) உலையிலிட்டு உருக்கியெடுத்த பொன்போலே விவரிக்கவொண்ணாத அழகையுடைராயிருக்கை. (இமையாத் தடங்கண்ணார்...) கண்ணிமைத்துப் பார்க்கவொண்ணாத கண்ணழகையுடையவர்களுடைய மான் நோக்கம் உண்டு. அந்த நோக்காகிற உணவைச் சீரணித்தவுடன், அவர்கள் புன்முறுவல் பூக்க, அம்முறுவலையும், அதரபானத்தையும் பருகி தாஹசாந்தி செய்துகொள்ளுவர். (இருப்பர்) இனிமை மிகுதியாலே இவ்வின்பத்தை விட்டு அகலமாட்டாமையைக் காட்டுகிறது. (இதுவன்றே அன்னவறத்தின் பயனாவது) அப்படி சிரமப்பட்டு அனுஷ்டிக்கும் தர்மத்தின் பயன் இவ்வளவு சிறிதன்றோ. படாதபாடுபட்டுக் கையளவு உணவு பெற்றாற் போலிருப்பதன்றோ. சிரமத்துக்குத்தக்க பலனில்லை என்றபடி.

(ஒண்பொருளும் அன்ன திறத்ததே)ஒளிபொருந்திய பொருளும் இப்படி அற்பமாகவும் அஸ்திரமாகவுமிருப்பதே. பரம்பொருளையளிக்கும் ஆசாரியர்

அன்ன திறத்ததே யாதலால் காமத்தின் 37
மன்னும் வழிமுறையே நிற்றுநாம் மானோக்கின்
அன்ன நடையா ரலரேச ஆடவர்மேல் 38

அன்னதிறத்ததே-அப்படி அற்பமாகவும் அஸ்திரமாகவுமுள்ளதே; ஆதலால்-இப்படி அறம்பொருள்களாகிற இரண்டு புருஷார்த்தங்களுக்கும் காமமே பயனாகத் தருவதனால், காமத்தின்-அக்காமபுருஷார்த்தத்தினுடைய, மன்னும் வழிமுறையே-நிலைநின்ற வழியாகிய பகவத் காம மார்க்கத்திலே, நாம் நிற்றும்-நாம் ஊற்றமுடையராயிருப்போம், மான் நோக்கின் அன்னம் நடையார்-மான் போன்ற நோக்கையும் அன்னம்போன்ற நடையையுமுடைய மாதர்கள், அலர் ஏச-(உலகத்தார்) பழிதூற்றும்படி, ஆடவர் மேல்-புருஷர்களின்மேல் (ஆண்களைநோக்கி)

மவன் பக்ஷத்தாலே. (மன்னும் வழிமுறை)ஆபாஸ காமத்தையொழிய நிலைநின்ற பகவத்காமத்தின் வழியே. (நாம்) காமத்தையொழிய ஸர்வத்தையும்விட்ட நாம். (மான் நோக்கின்)நோக்குக்கும் நடைக்கும் தனித்தனியே மடலூரவேண்டும்படியிருக்கை. (அலரேச) பிறர் பழிசொல்ல. (ஆடவர்) தலைமகன்பேர்(மேல்?).(மன்னுமடல்)ப்ராணனைத்தரிப்பிக்கும்

களையும் கூட இது நிமித்தமாகக்கைவிட்டு, இதைப்பற்றுமிவன் இப்பொருளையே ஒளிபொருந்திய வஸ்துவாக நினைத்திருக்கிறானகையாலே இவன் நினைவாலே 'ஒண் பொருள்' என்கிறார். தன் நினைவாலேயன்று.

(காமத்தின் மன்னும் வழிமுறையே நிற்றும் நாம்) காமத்தில் தாழ்ந்த வழியான இதரவிஷயகாமத்தையும் அறம்பொருள்களைப்போலே விட்டு, நிலைநின்ற காமமார்க்கமான பகவத்காமமார்க்கத்திலேயே நாம் உறுதியாக நிற்போம். (நாம்) காமத்தைத் தவிர்ந்த எல்லாவற்றையும் கைவிட்டிருக்கும் நாம். (மான் நோக்கின் அன்ன நடையார் அலரேச ஆடவர் மேல் மன்னுமடல் ஊரார் என்பதோர் வாசகமும்) பெண்கள் ஆடவர்மேல் மடலெடுக்கக்கூடாது என்று தமிழர் வரம்புகட்டியிருப்பதை அநுவதிக்கிறார். (மான் நோக்கின் அன்ன நடையார்) இவர்கள் நோக்கழகையும் நடையழகையும் கண்ட ஆடவர்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே மடலெடுக்கவேண்டியிருக்க, இவர்கள் அவர்கள்மேல் மடலெடுக்கையாவதென்? என்று தமிழர் கருத்து. (அலரேச) பிறர் பழிசொல்லும்படியாக. பழிச்சொல் ஆணுக்கு ஏற்பட்டாலும் ஏற்படலாம், பெண்ணுக்கு ஏற்படலாகாது என்று தமிழர் கருத்து. (ஆடவர் மேல்) தலைமகன் மேல். நாயகனுக்கு சேஷபூதையான நாயகி அவனுக்குப் பழியை விளைக்கக்கூடாது என்று தமிழர்கருத்து. (மன்னு

மன்னு மடலூரா ரென்பதோர் வாசகமும்
தென்னுரையிற்கேட்டறிவ துண்டதனை யாந்தெளியோம் 39
மன்னும் வடநெறியே வேண்டினோம் வேண்டாதார்
தென்னன் பொதியில் செழுஞ்சந்த னக்குழம்பின் 40
அன்னதோர் தன்மை யறியாதார் ஆயன்வேய்
இன்னிசை யோசைக் கிரங்காதார் மால்விடையின் 41

மன்னும் மடல் ஊரார் என்பது ஓர் வாசகமும்—(உயிரை) நிலைப்பிக்கும் மடலூரக்கூடாது' என்று சொல்லுகிற ஒரு வாக்கியத்தை, தென் உரையில் கேட்டு அறிவது உண்டு-தமிழ்பாஷையில் கேட்டு அறிந்திருக்கிறோம்; யாம் அதனை தெளியோம்-அந்த வாக்கியத்தைத் தெளிவுடையதாக நாம் நினைக்க மாட்டோம், (அதுபொருந்தாது . மன்னும் வடநெறியே வேண்டினோம்-(இவ் விஷயத்தில்) சிறந்த ஸம்ஸ்க்ருத நூல்களிற்கூறிய வழியையே கைப்பற்றுவோம், வேண்டாதார்-(அப்படி வடமொழி நூல்களில் சொல்லப்பட்டுள்ளபடி காமம் வரம்பு மீறுவதை) விரும்பாதவர்கள் (எப்படிப்பட்டவர்களென்றால்.) தென்னன் பொதியில் செழு சந்தனம் குழம்பின்: அன்னது ஓர் தன்மை அறியாதார்-பாண்டிய ராஜனது நாட்டிலுள்ள பொதியமலையில் விளைகிற சந்தனத்தினலாகிய குழம்பின் அப்படிப்பட்ட தன்மையை அறியாதவர்கள்; ஆயன் வேய் இன் இசை ஓசைக்கு இரங்காதார்-இடையன் ஊதுகிற புல்லாங்குழலின் இனிய பாட்டொலியைக் கேட்டுத் தளராதேயிருப்பவர்கள்; மால்விடையின்-(பசுவின் மேலே) மோகித்து வருகிற காளையின்,

---

மடல்.(தென்னுரை) ம்லேச்ச ஜாதி பிதற்றும் தமிழ். உக்தி மாத்ரமே; அர்த்தயுக்தமன்று.

மடல் ஊரார்) உயிரை தரிப்பிப்பதற்காகவும் மடல் ஊரமாட்டார்கள். தலைமகளுக்குத் தன் உயிரைக்காட்டிலும், தன் ஸ்வரூபம் உயர்ந்தது என்று தமிழர் கருத்து. (என்பதோர் வாசகமும்) இக்கருத்தைச் சொல்லும் வாக்கியம் ஒன்றை. (ஓர் வாசகமும்) காதலின் பெருமையை அறியமாட்டாத இதுவுமோர் வாசகமாவதே! என்னும் இகழ்ச்சி தோற்றுகிறது. (தென்னுரை) *மிலேச்ச ஜாதியினர் பிதற்றும் பிராகிருத மொழியிலமைந்த வாசகம் காதலின் உயர்வைக் காட்டமுடியுமோ? வெறும் உரையேயொழியப் பொருள் பொதிந்ததன்று. (அதனை யாம் தெளியோம்) அவ்வார்த்தையில் பொருளிருந்தாலும், அது எம் அறிவுக்கு எட்டவில்லை.

---

*மடலெடுப்பதிலுள்ள உத்வேகத்தாலே தமிழையும், தமிழர் பண்பாட்டையும் இகழ்கிறரேயொழிய உண்மையில் தமிழின்மேல் ஆழ்வார் துவேஷமுடையவரல்லர். நஹிநிந்தாந்யாயத்தை நினைப்பது. மடலெடுப்பதாகத் தொடங்கினரேயொழிய இவரும் மடலெடுத்து முடிக்கவில்லையே. ஆகையால் கடைசியில் தமிழும், தமிழர் பண்பாடுமே வெற்றிகொண்டது

(மன்னும் வடநெறி) மடலெடுக்கையே புருஷார்த்த மென்றுபபாதிக்கிற ஸ்ரீராமாயணாதிகள். (வேண்டாதார்) காமபுருஷார்த்தத்தை வேண்டாதார். (தென்னன்) சந்தநம் இன்ன பூண்டென்றறியாமை.(செழும்)ருஷிகளையுந் துவளப் பண்ணவற்றாகை. துரும்பு எழுந்தாடவும் பண்ணவற்று. (அன்ன) சொல்ல வாய்வேந்தன்மை அறியாதார். தலைமகனைப் பிரிந்தால் சந்தநம் கொப்பளிக்குமென்றறியாதார். (ஆயன் வேய்) குழலோசை துடைகுத்த உறங்கவல்லார். ப்ராஹ் மணர்க்கு ஓத்தும், பாணர்க்குப் பாட்டும்போலே இடை யர்க்குக் குழல். அந்த ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கீடுபடாதார்.

(மன்னும் வடநெறியே வேண்டினோம்.) புருஷனைப் பிரிந்த பாவையர் மடலெடுப்பதே புருஷார்த்தமாகும் என்று அறிவிக்கும் ஸ்ரீராமாயணம் முதலான வடமொழிநூல்களிற் சொன்ன முறையையே விரும்பினோம். (வேண்டாதார்) வடநெறியை வேண்டாமல் தென்னுரையைப் பின் பற்றுமவர்கள் காமமின்னதென்பதையே அறியாதவர்கள். (தென்னன்......) தமிழ் நாட்டிலிருந்தும் நாட்டின் பெருமையை உணராதவர்கள். (தென் னன் பொதியில்) சந்தனம் நம் தமிழ்நாட்டிலே பொதியமலையில் உண் டாவதொரு தாவரம் என்பதையும் அறியாதவர்கள். (செழும் சந்தனக் குழம்பு) முற்றும் துறந்த முனிவரையும் மயக்கக்கூடிய செழுமையுடைய சந்தனம். இதைப்பூசியவுடனே, ஒரு துரும்புக்கும் எழுந்தாடலாம்படியான செழுமையை அளிக்கவல்ல சந்தனம். (குழம்பின் அன்னதோர் தன்மை அறியாதார்) தலைமகனைப் பிரிந்தார்க்கு இச்சந்தனம் உடம்பைக் கொப்ப ளிக்கச்செய்யும் தன்மையையுடையது என்பதை அறியாதார். (அன்ன தோர் தன்மை) இன்னது என்று சொன்னாலும் வாய் வெந்துபோம் படியான தன்மையை அறியாதார். (ஆயன் வேய் இன்னிசை யோசைக்கு இரங்காதார்) ஆயர்களின் குழலோசையைக்கேட்டு, 'ஐயோ! இவ்வொலியை நாம் காதலன் கூடியிருந்து அநுபவிக்கப்பெற்றிலோமே' என்று கரை யாதவர்கள் அவர்கள். அந்தக்குழலோசையைக் கேட்டபின்பும், காந்தன் நினைவேயில்லாமல், அதுவே தாலாட்டாக உறங்கவல்ல கல்நெஞ்சினர் அவர்கள். அந்தணர் அருமறையோதுவதும், பாணர் பாடுவதும், இடையர் குழலூதுவதும் கேட்பவரையெல்லாம் ஈடுபடுத்தும். ப்ரஹ்மாஸ்த்ரம்போல் தப்பாததான அக்குழலோசைக்கும் ஈடுபடாத அரசிகர்கள் அவர்கள். (இன் னிசை ஓசை) விஷந்தடவிய அம்பு. ஓசை அம்பு; இசை விஷம். இப்படி இது விஷமாகிறது ஏனெனில்: அவனுடைய இன்சொற்களை நினைவுறுத்து

மன்னு மணிபுலம்ப வாடாதார் பெண்ணைமேல்
பின்னுமவ் வன்றில் பேடைவாய்ச் சிறுகுரலுக்கு 42

மன்னு மணி புலம்ப வாடாதார்-சிறந்த (கழுத்தின்) மணியானது, பெண்ணை மேல் பின்னும்-பனை மரத்தின்மீது ஆணோடே வாயலகு கோத்துக்கொண்டிருக்கிற, அவ்வன்றில் பேடைவாய் சிறுகுரலுக்கு-அன்றிற் பறவையின் பேடையினது வாயில்நின்றுமுண்டாகிற அப்படிப்பட்ட சிறுகுரலைக்கேட்டு

(இன்னிசை) த்வநியே நஞ்சு. இது பாதமாகிறது—அவனுடைய ஸாந்த்வநங்களை நினைத்து. (மால்விடையின் மன்னு மணி புலம்ப வாடாதார்) நாகின்மேலே பிச்சேறின விடையினுடைய த்வநியோவாதே மணி புலம்ப, அக்நிஸகாசத்திலே தளிர் சுருங்குமாபோலே சுருளாதார். இதுதானிருய்க்க அது தான் மேலே விழும்படி.

(பெண்ணையித்யாதி) அன்றிலினுடைய ஆர்த்த நாதத்தைக்கேட்டும் உருகியிரங்காதவர்கள். (பின்னும்) வாயலகு கோத்திருக்கை. முன்பில் வ்யஸநத்துக்கு மேலே யென்றுமாம். (சிறுகுரல்) ப்ரணயத்தாலே இளைத்துப்பேசுகிறபடி. (உன்னி) தங்கள் ஸம்ச்லேஷத்தை ஸ்மரித்து.

வதன்மூலம் வாட்டுகையாலே. (மால்விடையின் மன்னு மணி புலம்ப வாடாதார்) மால்விடை-(பசுவிடம்) காதல்கொண்ட எருது. அதனுடைய மணியானது இடைவிடாமல் ஒலிக்க, அதைக்கேட்டு, தீப்பட்ட தளிர் வாடுவது போலே வாடாதவர்கள். அதைக்கேட்டு ஏன் வாடவேண்டுமெனில்: புணர்வதற்காக வரும் எருத்தைக்கண்டு பசுவானது இசைவின்மைதோற்றவிருக்க, எருதானது தானே மேல்விழுந்து புணருகையாலே எருத்தின் கழுத்தில் கட்டிய மணி ஒலிக்கிறது. இவ்வொலியானது தான் இசைந்திருந்தும் வாராதிருக்கும் நாயகனை நினைவுறுத்தி நாயகியை வாட்டுகிறது.

(பெண்ணைமேல் பின்னும் அவ்வன்றில் பேடை வாய்ச் சிறுகுரலுக்கு உன்னி உடலுருகி நையாதார்) பனைமரத்தின்மேலே (தன் நாயகனோடே புணருகையாலே) ஒன்றோடொன்று வாயலகைப் பின்னிக்கொண்டிருக்கும் அன்றில் பேடையினுடைய வாயிலிருந்து புறப்படும் சிறுகுரலைக்கேட்டு' தான் நாயகனோடு கலந்ததை எண்ணி உடலுருகி நையாதவர்கள். (பின்னும்) என்பதை முதலிலே வைத்து, மால்விடை மணியோசை கேட்ட துன்பத்துக்குமேலே என்றும் கொள்ளலாம். (சிறு குரல்) கலவியாலே இளைத்துச் சிறுகுரலாயிருக்கை. (உன்னி) தாங்கள் இன்புற்றதை நினைவுறுத்துவதன் மூலம் இது உடலை உருக்குகிறது.

உன்னி யுடலுருகி நையாதார் உம்பர்வாய்த்
துன்னு மதியுகுத்த தூநிலா நீணெருப்பில் 43
தம்முடலம் வேவத் தளராதார் காமவேள்

உன்னி—தமது நாயக ஸம்ச்லேஷத்தை நினைத்து, உடல் உருகி நையாதார்-சரீரம் கரைந்து குலையாதவர்கள்; உம்பர் வாய்-ஆகாசத்திலே, துன்னு மதி உகுத்த-நெருங்கிய (கிரணங்களையுடைய) சந்திரன் சொரிந்த, தூ நிலா நீள் நெருப்பில்—பரிசுத்தமான நிலாவாகிற பெருநெருப்பில், தம் உடலம் வேவ தளராதார்—தங்களுடைய சரீரம் வெந்துபோம்படி உருக்குலையாதவர்கள்; (இப்படிப்பட்ட அரஸிகர்கள் யாரென்னில்) காமவேள்—மன்மதன்,

---

(உம்பர்வாய்) தலைமகனையொழிய நிலவிலே படுக்க வல்லவர்கள். "உம்பர்வாய்" என்றது-ஆகாசத்திலே; உகுத்த-ஸ்வாநுமாநத்தாலே அவனும் பொறுக்கமாட்டாமே உகுத்தானென்றிருக்கிறாள். (தூநிலா) கொப்பளித்தபின்பு நிலவென்றறிந்தாள். (நீள்நெருப்பில்)தாஹ்யம் சமைந்தாலும் சமையாதொழிகை. அக்நிகணம் நிலவென்னும்படி சுடுகை. கேவலாக்நி தஹிப்பது சரீரத்தையிறே. இது ஆத்மாவை தஹிக்கையாலே "நீள் நெருப்பு" என்கிறாள். நீருக்கு அவி

(உம்பர்வாய்......தளராதார்) நாயகனைப் பிரிந்து நிலவாகிற நெருப்பிலே படுக்கவல்லவர்கள் அவர்கள். "உம்பர்வாய்" என்றது ஆகாயத்தைச் சொல்லுகிறது. (துன்னு மதி உகுத்த தூநிலா நீள்நெருப்பில்) நெருங்கிய கிரணங்களையுடைய சந்திரன் வெளிவிட்ட தூயநிலாவாகிற கொடிய நெருப்பில். (மதி உகுத்த தூநிலா நீள்நெருப்பு) தன்னைப்போலே சூடு பொறுக்கமாட்டாமல் சந்திரனும் தன் நீள்நெருப்புக் கிரணங்களைத் தன்னிடம் வைத்துக்கொள்ளாமல் வெளியே சிந்துகிறான் என்று நினைக்கிறாள். (தூநிலா) தாபத்தினால் கொப்பளிக்கச்செய்தபின்பு, ஆராய்துபார்த்தால் கலப்பற்ற நிலவாயிருந்தது! (நீள் நெருப்பில்) எரிபொருளைச் சாம்பலாக்கிய பின்பும் தான் அணையாதநெருப்பு. (நெருப்பு-நீள் நெருப்பு) நெருப்பானது குளிர்ந்தது என்று சொல்லலாம், இந்நிலவின் வெம்மையை நோக்கும்போது; நெருப்பு நிலவாகிறது; நிலவு நீள்நெருப்பாகிறது. அந்நெருப்பு சரீரத்தையே எரிக்கும்;இது அதாஹ்யமான ஆத்மாவையும் தஹிக்கையாலே 'நீள் நெருப்பு' என்கிறாள். அந்நெருப்பு நீருக்கு அவியும்; இது அதற்கும் அவியாது; நீர் வண்ணனே வந்து அவிக்கவேணும். அத்தாலும் இது

மன்னுஞ் சிலைவாய் மலர்வாளி கோத்தெய்யப் 44
பொன்னெடு வீதி புகாதார் தம்பூவணைமேல்
சின்ன மலர்க்குழலு மல்குலு மென்முலையும் 45

சிலை வாய் மன்னும் மலர் வாளி கோத்து எய்ய-மன்மதன் தனது வில்லிலே பொருந்திய புஷ்பபாணங்களைத் தொடுத்துப் பிரயோகிக்கும்போதும் (இனி மடலூர்வதே புருஷார்த்தமென்று அறுதியிட்டு), பொன் நெடு வீதி புகாதார்—அழகிய பெரிய வீதிகளிலே புறப்படாதவர்கள் எவரோ அவர்கள், தம் பூ அணைமேல்-தங்களுடைய புஷ்பசயனத்தின்மீது, சின்னம் மலர் குழலும்-அப்போது விரிந்த புஷ்பங்களையணிந்த கூந்தலையும், அல்குலும்-நிதம்பத்தையும், மெல் முலையும்—மெல்லிய முலையையும்,

யாதே *நீர்வண்ணனே அவிக்கவேண்டியிருக்கை. (தம்முடலம் வேவத் தளராதார்) இரவலுடம்பல்லவே. தம்முடலம் வேவத் தரிப்பாருண்டாகாதே! ||உணர்வுமுயிருமுடம்பும் மற்றுலப்பிலனவும் பழுதேயாமுணர்வைப் பெற்றிருக்கிறுரு மல்லரே.

(காமவேளித்யாதி) காமனுடைய சிலையிடத்துப் பொருந்தியிருந்துள்ள புஷ்பபாணங்களைத் தொடுத்தெய்ய. அழகியதாய் நெடிதான வீதியிலே கையும்மடலுமாய்ப் புறப்படாதே ஸ்த்ரீத்வம் நோக்கிப் படிகிடந்து புறப்படாதே

நீள் நெருப்பு. (தம்முடலம்வேவத்தளராதார்) இரவலுடம்பல்லவே தளராமலிருப்பதற்கு! தம்முடம்பாயிற்றே! அது வேகும்போதும் தளராமல் தரித்து நிற்பதே!

"உணர்வுமுயிருமுடம்பும் மற்று உலப்பிலனவும் பழுதேயாம் உணர்வைப்பெற" [திருவாய் 8-8-3]

என்ற ஆழ்வாரைப்போலே உடம்பை வெறுத்திருக்கும் அறிவைப் பெற்றிருப்பவர்களும் அல்லவே. உடம்பைப் பேணியிருப்பவர்களாயிற்றே.

(காமவேள் சிலைவாய் மன்னும் மலர்வாளி கோத்தெய்யப் பொன்னெடு வீதி புகாதார்) மந்மதன் தன் கரும்புச்சிலைக்குப் பொருத்தமானதான மலரம்புகளைத் தொடுத்து எய்தவுடன், அழகியதாய் நீண்டதான வீதியிலே கையும் மடலுமாகப் புறப்படாமல் படிதாண்டாப் பத்தினித்தன்மை பாவித்துக்கொண்டு, கதவையடைத்துக்கொண்டு உள்ளேயிருக்கவல்லவர்

* திருநெடு-18. || திருவாய் 8-8-3.

அடைத்துக்கொண்டு உள்ளேயிருக்கவல்லவர்கள். பொன்- அழகு. மடலூருவாரை எதிர்கொள்ளும் வீதி. (புகாதார்) காமபாணங்கள் வாய்மடியும்படி கல்மதிளுக்குள்ளே புகாதார்.

(தம்பூவணை) காந்த கரஸ்பர்சம்போலே தென்றல் ஸ்பர்சிக்கப் படுக்கைப் பொருந்திக் கிடக்கவல்லவர்கள். இருவர்க்குப் படுத்த படுக்கையிலே தனியேகிடக்க வல்லவர்கள். (பூவணை) "மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளி" என்னுமாபோலே நெருப்பையுருக்கி வார்த்தாற்போலேயிருக்கை. (சின்னமலர்க்குழலும்)சின்னப்பூவையுடைத்தான குழலையும். இடையையும், முலையையும், அவன் தடவுமாபோலே நஞ்சுட்

கள். **பொன் வீதி**-அழகிய வீதி. மடலூருவாரை 'வருக வருக' என்று அழகைக்காட்டி அழைக்கும் வீதி. **நெடுவீதி**-கல்பகாலமெல்லாம் மடலூரலாம்படி நீண்டிருக்கும் வீதி. (புகாதார்) கதவையடைத்துக்கொண்டு உள்ளேயிருக்கும்வரையில் காமபாணங்கள் மேன்மேலும் விழுந்து துன்புறுத்திக்கொண்டேதான் இருக்கும். அவை விழவொண்ணுதபடி பொன்னெடு வீதியாகிற கல்மதிலுக்குள்ளே போகமாட்டாத அறிவிலிகள் இவர்கள்.

(தம்பூவணைமேல்...பொன்னனையார்) வாடைதொடுவதைக் காதலனின் கைதொட்டாற்போலே நினைத்துக்கொண்டு பூப்படுக்கையிலே பொருந்திப் படுக்கவல்ல சௌபாக்கியவதிகள் அவர்கள்! (தம்பூவணைமேல்) காதலனைப் பிரிந்திருக்கும்போது தரைக்கிடைகிடக்க வேண்டியிருக்கத் தாமே பூப்படுக்கையை ஸித்தப்படுத்தி அதிலே கிடக்கிறவர்கள். (தம் பூவணை) இருவருக்கு ஏற்பட்ட படுக்கையிலே தாம் தனியே கிடப்பவர்கள். (பூவணை) "மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளி" [திருவாய் 9-9-4] என்பதுபோலே எமக்கு நெருப்பை உருக்கி வார்த்தாற்போலே இருக்கிற படுக்கையிலே பொருந்தியிருப்பதே! (சின்ன மலர்க்குழலும்) விரிந்த பூவையுடைய குழலையும். "மலரிட்டுநாம் முடியோம்" என்று அவன் சூட்டினாலொழியப் பூச்சூடமாட்டோம், என்றிருக்கவேண்டியவர்கள் பூச்சூடியிருப்பதே! சின்னம்-விரிகை. (குழலும் அல்குலும் மென்முலையும் இன்னிளவாடை தடவ) நாயகனானவன் ஒவ்வோரவயவத்தையும் தனித்தனியே தடவிக் கொடுக்கும்போது பெறும் இன்பத்தை இவ்வாடையின் ஸ்பரிசத்திலேயும்

இன்னிள வாடை தடவத்தாங் கண்டுயிலும்
பொன்னனையார் பின்னுந் திருவுறுக போர்வேந்தன் 46
தன்னுடைய தாதை பணியா லரசொழிந்து

இன் இள வாடை தடவ-இனிதாய் இளையதாயுள்ள வாடைக்காற்றானது வந்து தடவ, கண் துயிலும்-(ஆநந்தமாகத்) தூங்குகின்ற, பொன் அனையார் தாம்-பாக்கியவதிகளானவர்கள், பின்னும் திரு உறுக-மேன்மேலும் மேனியழகு மேலிட்டு விளங்கட்டும், போர் வேந்தன்—போரில் புலியான இராமன், தன்னுடைய தாதை பணியால்—தன் தகப்பனான தசரதனுடைய சொற்படி, அரசு ஒழிந்து-ராஜ்யமாள்வதைத் தவிர்ந்து, (காட்டுக்குப் புறப்பட்டபோது)

டின இளவாடைதடவ. (இளவாடை) பிறரை நலிய நலிய இளகிப் பதியாநின்றது.

(தாம் கண்துயிலும்) கண் உறங்குகிறபோதே தம்ம தன்று, இரவல் கண்ணாக வேணும். (பொன்னனையார்) நெருப்பிலேகிடந்து நிறம்பெறுவர்கள். காட்டுத்தீகதுவிலும் உறங்கவல்ல பாக்யவதிகள், (பின்னும் திருவுறுக) அவர்களுக்கு நித்யமாகிடுக.

(போர்வேந்தன்) ஆண்புலி; ரணமுகராமன். சக்ரவர்த்தியைக் கட்டிவைத்து ராஜ்யம் பண்ணவல்ல மிடுக்கு.

பெறுவதே! (இன்னிள வாடை) நஞ்சுதடவின அம்புபோன்றது. (இளவாடை) பிறரைத் துன்புறுத்தத் துன்புறுத்த, இளமைமிக்கவரும் வாடை.

(தாம் கண்துயிலும்) காதலனைப் பிரிந்த தாமோ கண்துயில்வது? ''பொருகயற்கண்ணிணை துஞ்சா'' [நாச்-திரு 5-5] என்றிருக்கவேண்டாவோ? கண்ணுறங்குகையாலே இது அவர்களுடைய கண்ணன்றுபோலும்! இரவல் கண்ணாகவேயிருக்கவேண்டும். (பொன்னனையார்) பூம்பள்ளியாகிய நெருப்பிலே கிடந்து நிறம்பெறும் இவர்கள், நெருப்பிலே கிடந்து நிறம் பெறும் பொன்னை ஒத்தவர்களே! அல்லது, 'பொன்னனையார்' என்றது 'சௌபாக்யவதிகள்' என்னும் பொருளிலேயாகவுமாம். காட்டுத்தீ கொளுத்தினாலும் உறங்கவல்ல இவர்கள் உண்மையில் சௌபாக்கியவதிகளே! என்று பரிஹஸிக்கிறார். (பின்னும் திருவுறுக) இந்த ஸௌபாக்கியம் அவர்களுக்கு நித்யமாகச் சொல்லட்டும்!

(போர்வேந்தன்)போரில் பேராண்மைமிக்க புலியாயிருப்பவன். ரணமுக ராமன் என்று அழைக்கப்படுபவன். (வேந்தன்) தசரதசக்ரவர்த்தியானவர்,

ஸ்ரீபரதாழ்வான் தோஷப்ரகரணத்திலே "न च राघवस्य" (நச ராகவஸ்ய) என்று ஸப்தஸாலங்களையும் ஓரம்பாலே உருவ வெய்தவர் இத்தைச் செய்திலர் என்று கருத்து. (தாதை பணியால்) சக்ரவர்த்தி ஹ்ருதயம் பாராதே உக்திமாத்ரத்திலே. (அரசொழிந்து) வாடல்மாலையைப் புகடுவாரைப் போலே தலைச்சுமையென்று திருவபிஷேகத்தையொழிந்து.

(பொன்னகரம்) பொன்னுலகுக்கு ஒக்குங்காணும் திருவயோத்யை. அதுக்குக் காரணம்-ராம ஸம்ஶ்லேஷைகரஸரா

அரசாண்டபோதிலும். அவரையும் சும்மாயிருக்கவைத்து, தானே அரசாள வல்ல பலத்தையுடையவனாயிருந்தவன். ஸ்ரீபரதாழ்வான்

* "ந மந்தராயா ந ச மாதுரஸ்யா
தோஷோ ந ராஜ்ஞோ ந ச ராகவஸ்ய।
மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்
வநப்ரவேஶே ரகுநந்தநஸ்ய ॥"

[(ராமன் வனம் சென்றதற்குக் காரணம்) மந்தரை, என் தாயான இந்தக் கைகேயி, அரசரான தசரதர், ராமபிரான் ஆகியவர்களுடைய குற்றமன்று. ரகுநந்தனன் வனம்புகுந்ததற்கு என் பாபமே காரணமாயிருந்தது] என்றவிடத்திலே தன் தோஷத்தைச் சொல்லிக்கொள்ளும்போது "ராமபிரான் வனம் சென்றது அவருடைய குற்றம் அன்று" என்றான். "ஏழு ஸாலமரங்களையும் ஓரம்பே உருவிச்செல்லும்படி அம்பெய்தவர், தனக்கு சக்தியில்லாமையால், அரசுதுறந்து காடுபுகுந்தார் என்று சொல்லமுடியாது" என்பது பரதனுடைய கருத்து. (தாதை பணியால்) தசரதசக்ரவர்த்தியின் நெஞ்சில் நினைவை நோக்காமல், அவருடைய வாய்மொழியை மாத்திரமேகொண்டு காடுபுகுந்தார். (அரசொழிந்து) வாடின மாலையைக் கழற்றி எறிவாரைப்போலே தலைச்சுமையென்று கிரீடத்தைக் கழற்றினார்.

(பொன்னகரம்) "பொன்னுலகு" [திருவாய் 6-9-1] என்று சொல்லப்படும் அப்ராக்ருதமான ஸ்ரீவைகுண்டத்தை ஒத்திருக்கும் திருவயோத்தி

---

*இந்த ச்லோகம் எவ்விடத்திலுள்ளதென்று தெரியவில்லை. இங்கு வ்யாக்யானத்தை நோக்கும்போது கிஷ்கிந்தாகாண்டத்திற்குப்பிறகு, பரதன் தன் தோஷத்தைச் சொல்லிக்கொள்ளும் ஓரிடத்திலே இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

பொன்னகரம் பின்னே புலம்ப வலங்கொண்டு 47
மன்னும் வளநாடு கைவிட்டு மாதிரங்கள்
மின்னுருவில் வெண்டேர் திரிந்து வெளிப்பட்டுக் 48

பொன் நகரம்-அழகிய அயோத்யாபுரியிலுள்ளாரடங்கலும், பின்னே புலம்ப, (நீ காட்டுக்குப் போகேல் என்று) பின்னால் அழுதுகொண்டே வந்தபோதிலும் வலம் கொண்டு — தான்கொண்ட உறுதியை விடாமற்கொண்டு, வளம் மன்னும் நாடு கைவிட்டு—செல்வம் மிகுந்த கோசலநாட்டை உபேக்ஷித்துவிட்டு, மாதிரங்கள் மின் உருவின் வெண் தேர் திரிந்து—திக்குகள் தோறும் மின்போன்ற கானலை பரவியிருக்கப்பெற்றதும், வெளிப்பட்டு—எல்லாம் சூந்ய ஸ்தலமாகவுமிருக்கப்பெற்றதும்,

---

யிருக்கை. **"अपि वृक्षाः परिम्लानाः सपुष्पाङ्कुरकोरकाः" (அபி வ்ருக்ஷா: பரிம்லாநாஸ் ஸ புஷ்பாங்குர கோரகா:)** என்கிறபடியே ஸ்த்தாவரங்களுட்பட ராமகுணைக தாரகமாயிறேயிருப்பது. (பின்னே புலம்ப) பிரியில் தரியாதே பின்னே துடர்ந்துகூப்பிட. "சுற்றமெல்லாம் பின்துடர" (வலங்கொண்டு) நீர்மையிட்டுப் பேணின பெருமாள் போகவல்லரான மிடுக்கு.வலம்-பலம். (மன்னும்) இவர்களுக்கு க்ரமாகதமாய், இவ்வூரிலினிதானநாடு. **"मम त्वश्वा निवृत्तस्य न प्राव ्न्त वर्त्मनि। उष्णमश्रु विमुञ्च-**

மாநகரம். அதற்குக்காரணம்,-நித்யமுக்தர்களைப்போலே ராமனோடு கலப்பதையே இன்பமாகக் கொண்டிருப்பர் அயோத்திமக்கள். **"அபி வ்ருஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குர கோரகா:"** [ரா-அ 59-9] [பூ, முளை, மொட்டு ஆகியவற்றோடுகூடிய மரங்களும் (ராமனைப் பிரிந்து) வாடின] என்கிறபடியே அயோத்தியில் தாவரங்களுங்கூட ராமகுணத்தைக்கொண்டேயன்றோ உயிர்தரித்தன. (பொன்னகரம் பின்னே புலம்ப) அயோத்திமக்கள் ராமபிரானைப்பிரிந்து தரிக்கமாட்டாமல் அவர்பின்னே தொடர்ந்து அழுதுகொண்டு கூப்பிட. "சுற்றமெலாம் பின்துடரத் தொல்கானம் அடைந்தவனே!" [பெருமாள்திரு 8-6] என்றாரன்றோ குலசேகரரும். (வலங்கொண்டு) நீர்மையை-ஸௌலப்ய மார்த்தவாதிகுணங்களை-வெளிப்படுத்தவென்றே பிறந்த பெருமான், தனக்கு இனியவர்களையெல்லாம் விட்டுப் போகவல்லவரான மனவுறுதியை வலமென்கிறது. வலம்-பலம். (மன்னும் வளநாடு கைவிட்டு) முடிதுறந்தானென்றாலும் நாட்டிலேயாவது இருந்தானோ? நாட்டையும் விட்டுக் காட்டுக்கன்றோ போனான். (மன்னும் வளநாடு) தனக்கு அரசநீதிமுறைப்படி உரியதாய், அயோத்தியிலும் இனிதான கோசலநாடு. (கைவிட்டு)

न्तो रामे संप्रस्थिते वनम्"(மம த்வச்வா நிவ்ருத்தஸ்ய ந ப்ராவர்த்தந்த வர்த்மநி। உஷ்ணமஶ்ரு விமுஞ்சந்தோ ராமே ஸம்ப்ரஸ்த்திதே வநம்)என்று இவையுமகப்பட நோவுபடப்போனபடி. "திரிந்தது வெம்சமத்துத்தேர்கடவி" இவனும் வநம்போவான், இவனும் தரைகிடப்பான். "எவ்வாறு நடந்தனை" "கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ" என்று வயிறு பிடிக்கும்படி. (மாதிரங்கள்) திக்குக்கள். (வெண்டேர்) பேய்த்தேர். (கானல்.) (வெளிப்பட்டு) கண்ணுக்கிடவொரு பூண்டில்லாமை. தரைநிரந்தரமான கல்லாயிற்றுக்காணும்; சருகுபோலே தீய்ந்துகிடக்கை. கழை-மூங்கில். கால்-சூறுவளி.

"மம த்வச்வா நிவ்ருத்தஸ்ய ந ப்ராவர்த்தந்த வர்த்மநி।
உஷ்ணமச்ரு விமுஞ்சந்தோ ராமே ஸம்ப்ரஸ்திநே வநம்॥
[ரா-அ 59-5]

[(ராமனை விட்டுத்) திரும்பி வந்த என் குதிரைகள் வழியில் செல்லமாட்டாதவையாயின. ராமன் வனம் சென்றவளவில், அவையும் துன்பக்கண்ணீர் சொரிந்தன.] என்று சுமந்திரன் கூறியபடியே பிராணிகளும் துன்புறும்படியாகப் போனபடி.

"திரிந்தது வெஞ்சமத்துத் தேர் கடவி, அன்று
பிரிந்தது சீதையை மான் பின்போய்—புரிந்ததுவும்
கண்பள்ளி கொள்ள, அழகியதே நாகத்தின்
தண்பள்ளி கொள்வான் தனக்கு" *[இர-திருவ-15]*

என்ற பாடலிலே பூதத்தாழ்வாரைப்போன்ற பரிவுடையவர்கள் 'இவனே காடுபுகுந்து சீதையைப் பிரிந்தான்!' 'சேஷசயனன இவனே தரையிலே கிடந்தான்!' என்று வயிறுபிடிக்கும் செயலன்றோ இது! "எவ்வாறு நடந்தனை எம்மிராமாவோ" [பெருமாள்திரு 9-2] கல்லணைமேல் கண்துயிலக் கற்றனையோ காகுத்தா?" [பெருமாள்திரு 9-3] என்று அன்புடையாரனைவரும் வயிறெரியும்படியான காரியத்தையன்றோ செய்தது.

இனி, 'வெங்கானம்' என்பதுவரையில் காட்டுக்கு விசேஷணம். (மாதிரங்கள்) திக்குகளில். (மின்னுருவில் வெண்டேர்) மின்னல்போன்ற கானல்நீர். 'வெண்தேர்' என்றும், 'பேய்த்தேர்' என்றும் சொல்லப்படுவது கானல்நீர். (வெளிப்பட்டு) கண்டவிடமெல்லாம் ஒரு பூண்டில்லை ஒரே

கன்னிரைந்து தீய்ந்து கழையுடைந்து கால்சுழன்று
பின்னுந் திரைவயிற்றுப் பேயே திரிந்துலவாக் 49
கொன்னவிலும் வெங்கானத் தூடு கொடுங்கதிரோன்
துன்னு வெயில்வறுத்த வெம்பரல்மேல் பஞ்சடியால் 50

கல்நிறைந்து தீய்ந்துகழை உடைந்து கால் சுழன்று-கற்கள் நிறைந்து(புற்கள்) கருகி, மூங்கில்கள் வெடித்து சுழல்காற்று அடித்துக்கொண்டிருக்கப் பெற்றதும், பின்னும்-அதற்குமேலும், திரை வயிறு பேயே திரிந்து உலவா-(ஆஹாரமில்லாமையால்) உலர்ந்த வயிற்றையுடைய பேய்களே திரிந்து கொண்டிருக்கப்பெற்றதும், கொல் நவிலும்-கொலையைப்பற்றின சப்தமே கிளம்பிக்கொண்டிருக்கப்பெற்றதுமான, வெம் கானத்தூடு-வெவ் விய காட்டினுள்ளே, கொடு கதிரோன்துன்னு வெயில் வறுத்த வெம்பரல் மேல்-உஷ்ண கிரணனான சூர்யனுடையவெய்யிலாலே வறுக்கப்பட்ட வெவ்விய பருக்கைக் கற்களின்மேலே (செல்லும்போது)

அதாவது-சுழல்காற்று. (பேயே) மற்றொருவரில்லாமை. (உலவா) ஓவாதே "இன்னான் பட்டான், இன்னான் படா நின்றான்" என்னும் பேச்சேயாய். அறக்கொடிதான காட்டின் நடுவே. (கொடுங்கதிரோன்) கைகேயி பக்ஷத்தை யாஸ்த்தாநம் பண்ணினான். வெய்யில் வறுத்த பரல்தானே எதிரிட்டு வெய்யில் வறுக்க வற்றாகை. ஆதித்தனையெற்றி வைத்தெரிக்கை.

வெளிநிலமாயிருக்கிறது. (கல் நிரைந்து) தரையெல்லாம் இடைவெளி யில்லாமல் கல்நிரைந்து கிடக்கிறது. (கழை உடைந்து) மூங்கில்கள் வெப்பத்தாலே உடைந்துகிடக்கிறது. (கால் சுழன்று) சுழல்காற்று அடிக்கிறது. (பின்னும்) முன் சொன்னதற்கு மேலே. (திரை வயிற்றுப் பேயே திரிந்து) உலர்ந்த வயிற்றையுடைய பேயே திரிந்துகொண்டிருக்கை. ஆகாரமில்லாமையாலே பேய்களின் வயிறு உலர்ந்துகிடக்கை. 'பேயே' என்றதால் வேறு எந்த ஜந்துவுமில்லையென்கை. (உலவாக் கொல் நவிலும்) ஓயாமல் 'இவ்வனத்தில் புகுந்த இன்னான் இறந்தொழிந்தான்; இன்னான் உயிர் துடித்துக்கொண்டிருக்கிறான்' என்னும் பேச்சேயாயிருக்கிறது. 'உலவா வெங்கானம்' என்றுமாம். ஓயாமல் நீளும் கொடுங்காடு "தேவதேந வநம் கத்வா" [ரா-பா 1-30] என்றதன்றோ. (வெங்கானத்தூடு) மிகக்கொடியதான காட்டின் நடுவே. (கொடுங்கதிரோன்) கைகேயியின் பக்ஷத்தைச் சார்ந்தவனானான். ராமபிரானைத் துன்புறுத்தவென்றே படைத்த கொடுங்கிரணங்களையுடையவனானான். (துன்னு வெயில்) நிறைந்த வெயில். (வெயில் வறுத்த வெம்பரல்) வெய்யில் பரல்கற்களை வறுக்கிறது. வறுக்க வறுக்க அது வெம்பரலாகி எதிரிட்டு வெய்யிலை வறுக்கவல்லதாகிறது; கடைசியில் சூரியனைக்கூட எதிரிட்டு கொளுத்தும் வெம்மையை உடையதாகிறது. (வெம்பரல்மேல்) அப்படிப்பட்ட வெம்பரல்மேலே.

மன்ன னிராமன்பின் வைதேவி யென்றுரைக்கும்
அன்ன நடைய வணங்கு நடந்திலளே 51

வைதேவி என்று உரைக்கும்-வைதேஹீ என்று சொல்லப்பட்டவளாய், அன்னம் நடைய அணங்கு-அன்னத்தின் நடைபோன்ற நடையையுடையளான ஸீதாபிராட்டியானவள், மன்னன் இராமன் பின்-அந்த ஸ்ரீராம மஹாராஜன் பின்னே, பஞ்சு அடியால்-பஞ்சுபோல் மெல்லிய திருவடிகளாலே, நடந்திலளே—தானும் நடந்து செல்லவில்லையா?

(பஞ்சடி) மெத்தென்றிருந்த அடி. **"पद्मसमप्रभा"** (**பத்ம ஸமப்ரபா**). (மன்னன்) நாட்டுக்குச்சூடின முடி தவிர்ந்து இவளுக்கே சூடின முடி. சக்ரவர்த்தி தன்னை நீர்வார்க்கப்புக, ஐயர் வந்தாரென்ன அதிலே தோற்றாற்போலே, ராஜ்யத்தைப் பொகட்ட வேண்டப்பாட்டிலே தோற்ற படி. (இராமன்) பெருமாள் பின்போவார்க்கு இக்காடு அன்றாகில் எது கொள்ளவேணும்? (வைதேவி) அவ

(பஞ்சடியால்) பஞ்சுபோலே மெத்தென்றிருக்கும் திருவடியாலே. **"பத்மஸமப்ரபா"** [ ] [தாமரைபோன்ற ஒளியையுடையவள்] என்கிறபடியே ஒளி, மென்மை முதலிய குணங்களுக்குத் தாமரை பஞ்சு முதலானவற்றையே உபமானமாகச் சொல்லவேண்டியிருக்கிறதன்றே. (மன்னன்) நாடாகிய பூதேவியை ஆளச்சூடவிருந்த முடியைவிட்டு, ஸ்ரீதேவியாகிய இவளையே ஆளக் காடுசென்றபடியாலே இவளுக்கு மன்னனானது காடுசென்றபோதே. **"தீயமாநாம் ந து ததா ப்ரதிஜக்ராஹ ராகவ: அவிஜ்ஞாய பிதுச் சந்தம்"** [*ரா-அ 118-51*] [*நீர் வார்த்துக் கொடுக்கவிருந்த என்னை, தந்தையின் கருத்தறியாமல் ஏற்றுக்கொள்ளவில்லை ராமபிரான்.*] என்று பிராட்டிதானே அருளிச்செய்தபடியே, தன்னை நீர்வார்க்கப்புகுந்தவுடன், 'எந்தையார் வந்தாரோ' என்று ராமபிரான் கேட்க, அந்தப் பித்ருபாரவச்யத்தைக் கண்டு அதற்குத்தான் தோற்றதுபோலே, ராஜ்யத்தைக் கைவிட்ட பெருமைக்குத் தோற்றபடியைச் சொல்லுகிறது 'மன்னன்' என்னும் பதம். (இராமன்) அனைவரையும் ரமிக்கச்செய்யும் இராமனென்கிற இவன் பின்னே போவதாகில், இக்காட்டுக்கு மாத்திரமல்லாமல் எவ்விடத்துக்கும் செல்லலாமே; நரகத்துக்குக் கூடச்செல்லலாமே. **"யஸ் த்வயா ஸஹ ஸ ஸ்வர்க்கோ நிரயோ யஸ் த்வயா விநா"** [*ரா-அ 30-18*] [*உன்னோடு கூடியிருக்குமிருப்பே சுவர்க்கமாகும்; உன்னைப் பிரிந்திருப்பதே நரகமாகும்.*] என்று சொன்னாளன்றே. (வைதேவி) "*எரியும் மிதிலையில்*

பின்னுங் கருநெடுங்கண் செவ்வாய்ப் பிணைநோக்கின்
மின்னனைய நுண்மருங்குல் வேகவதி யென்றுரைக்கும் 52

பின்னும்—அது தவிரவும், கரு நெடு கண் செம் வாய் பிணைநோக்கின் மின் அனைய நுண்மருங்குல்-கறுத்து நீண்ட கண்களையும் சிவந்த வாயையும் மான் போன்ற நோக்கையும் மின்போல் நுண்ணிய இடையையும் உடையவளாய், வேகவதி என்று உரைக்கும்-வேகவதியென்று சொல்லப்படுபவளான,

---

னுக்குப் பிறந்தாளென்னும் வேண்டப்பாடு. (அன்ன நடைய) நடைகண்டால் மடலூரவேண்டும்படியிருக்கை. (அணங்கு) இவனைக்குறித்து அவள் தைவமென்னவேண்டும் படியாயிருக்கை. (நடந்திலளே) அவளுங் கூடப் போனு ளில்லையோ?

(பின்னும்) பிராட்டியைப் பேசின வாயாலே பின்னையும் பேசலாவாளொருத்தி.

எனக்கொன்றுமில்லை" என்ற விதேஹராஜனுடைய பெண்ணுகையாலே, நாடு விட்டுக் காடுசெல்லவல்ல பெருமையுடையவள் இவளும். (என்றுரைக்கும்) ஸ்ரீராமாயணமெல்லாமுரைக்கும். **"ஸீதாயாச் சரிதம் மஹத்"**[பால 2-41] என்று சீதாசரிதமென்ருரன்ரே வால்மீகியும். (என்றுரைக்கும்) பெண் களுக்குத் திலகமாக உலகமெல்லாம் உரைக்கும்படி நின்றவள் என்றுமாம். (அன்ன நடைய) இவளுடைய அன்னநடையைக்கண்டால், ஸ்ரீராமபிரான் தானும் மடலூரவேண்டும்படியாயிருக்கை. (அணங்கு) "சூருமணங்கும் தெய்வப்பெண்ணே" என்று நிகண்டு. **"தஸ்ய பூயோ விசேஷேண மைதிலீ ஜநகாத்மஜா, தேவதாபிஸ் ஸமா"**[ரா-பா 77-35][ஜநகபுத்திரியான மைதிலீ ராமபிரானுக்கும் விசேஷமாக தேவதைகளோடு ஒத்திருந்தாள்.] **"த்ரயாணும் பரதாதீநாம் ப்ராத்ருணும் தேவதா ச யா"** [ரா-ஸு 55-26] [பரதன் முதலாகிய மூன்று பிராதாக்களுக்கும் எவள் தெய்வமோ] "சீதையென்பதோர் தெய்வம்" [பெரியதிரு 10-2-5] என்கிறபடியே மற்றுள்ளாரோடு, ஸ்ரீராமபிரானோடு வாசியில்லாமல் அனைவர்க்கும் தெய்வமாயிருப்பவள். (நடந்திலளே) அப்படிப்பட்ட பெருமையுடையவளுமல்லவோ நடந்து சென்ருள். ஸர்வலோக மாதாவான அவளே தன்ஸ்வரூபத்தை நோக்காமல், நிர்ப்பந்தித்துக்காடுசென்ருளெனில், நம்மைப்போல்வார் அவனைப்பெருத போது மடலெடுப்பதில் தவறென்ன?

(பின்னும்...புணர்ந்திலளே) "ஒரு கந்தர்வஸ்த்ரீயை ஒரு கந்தர்வன் விவாஹம் பண்ணிக்கொண்டுபோக, அவளுடைய ப்ராதா வந்து யுத்தம்

(கன்னி) அநுபவித்தவளல்லள். பிராட்டியைப்போலே "समा द्वादश तत्राहं राघवस्य निवेशने। भुञ्जानामानुषान् भोगान् सर्व - कामसमृद्धिनी"॥ (ஸமா த்வாதச தத்ராஹம் ராகவஸ்ய நிவே

பண்ணி மீட்கப்பார்க்க, அவனுக்கு மீளாதே அந்த கந்தர்வனோடேபோய்த் தானும் அவனுமாக அனுபவித்தாள் என்று மஹாபாரதத்திலே ஒரு கதையுண்டு; அதைச் சொல்லுகிறது" என்று அழகியமணவாளப்பெருமாள் நாயனார் தாமருளிச்செய்த பெரியதிருமடல் வ்யாக்யானத்திலே அருளிச்செய்வர். (பின்னும்) பிராட்டியைப் பேசின வாயாலே மறுபடியும் பேசத்தக்க பெருமையையுடையவளொருத்தி. (கருநெடுங்கண்) "அஸிதேக்ஷணா" [ரா-ஸு 16-5] "மையார் கருங்கண்ணி கமலமலர்மேல் செய்யாள், [திருவாய் 9-4-1] என்று கருங்கண்ணையுடையவள் என்று பிராட்டிக்கு ஏற்றம். அவளைக்காட்டிலும் இவளுக்குக் கண்ணில் பரப்பு ஏற்றமாயிருக்கும். (செவ்வாய்) ஸர்வரக்ஷகனான அவனையும் "புரேவ மே சாருத தீம்......ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாம்யஹம்" [ரா-ஆ 64-76] [அழகிய புன்சிரிப்பையுடைய சீதையை முன்போலவே என்னிடம் ஒப்புவிக்கவில்லையாகில், மலைகளோடுகூடிய உலகைப் புரட்டிவிடுவேன்.] என்று பிரிவிலே உலகைத் தலைகீழாக்கச் செய்யும் 'சுரிகுழல்கனிவாய்த்திரு' [பெரியதிரு 5-7-7] ஆன அவளுடைய புன்சிரிப்புக்குப் போலியாயிருக்கை. (பின்னை நோக்கின்) அரைக்ஷணம் பிரிந்துநின்றால், "ந ஜீவேயம் க்ஷணமபி" [ரா-ஸு 96-10] [ஒரு கணமும் பிரியேன்] என்னப்பண்ணும் 'மானமரும் மென்னோக்கி' [பெரியதிரு 11-ப்-1] ஆன அவளுடைய நோக்கை ஒத்திருக்கை. (பின்னனைய நுண்மருங்குல்) "மின்னனைய நுண்மருங்குல் மெல்லியல்" [பெரியதிரு 3-9-5] என்றும் "ஸுமத்யமா" [ரா-ஆ 11-1] என்றும் சொல்லப்படும் அவளைப்போலே நாயகனுக்கு எப்போதும் 'இற்று விழுந்துவிடுமோ?' என்னும் பயஸந்தேஹ ஸ்தானமாயிருக்கும் இடையையுடையவள் என்கை. (வேகவதியென்றுரைக்கும்) வேகவதியென்று சொல்லுகிற "ஸ்ரீராமாயணமாகப் பிராட்டி வ்ருத்தாந்தம் சொன்னாற்போலே, மஹாபாரதமாகத் தன்னைச் சொல்லும்படியிருந்தவள்" என்று நாயனார் அருளினார்.

(கன்னி) பனிரண்டாண்டு கூடியின்புற்ற பிராட்டி பின்தொடர்ந்தது ஒரு பெரிதல்ல; நாயகனோடு கூடியறியாத கன்னியான இவள் தமயனையும் எதிரிட்டு நாயகன் பின்சென்றதே அருஞ்செயல்.

"ஸமா த்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே।
புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ॥
[ரா-ஸு 33 17]

கன்னிதன் இன்னுயிராங் காதலனைக் காணாது .
தன்னுடைய முன்தோன்றல் கொண்டேகத்தான் சென்றங்கு 53
அன்னவனை நோக்கா தழித்துரப்பி வாளமருள்
கன்னவில்தோள் காளையைக் கைப்பிடித்து மீண்டும்போய்ப் 54
பொன்னவிலு மாகம் புணர்ந்திலளே பூங்கங்கை

கன்னி-ஒருபெண்பிள்ளை, தன் இன் உயிர் காதலனை காணாது-தனது இனிய உயிர்போன்ற கணவனைத்தான் காணவொட்டாமல், தன்னுடைய முன்தோன்றல்கொண்டு ஏக-தனது தமையன் (தடுத்துத்)தன்னைக்கொண்டுபோக, அங்கு-அவ்வவஸ்தையிலே, அன்னவனை—அந்தத்தமையனை, நோக்காது—லக்ஷியம் பண்ணமல், அழித்து உரப்பி-இழிவானசொற்களைச்சொல்லிஅவனை இகழ்ந்து, தான் சென்று-தான் பலாத்காரமாகப் புறப்பட்டுப்போய், வாள் அமருள்-பெரிய போர்க்களத்திலே, கல் நவில்தோள் காளையை-மலைபோல் திண்ணிய தோளையுடையனும் காளைபோல்செருக்குற்றிருப்பவனுமான தனது காதலனே, கைப்பிடித்து-பாணிக்ரஹணம்செய்துகொண்டு, மீண்டும்போய்-அங்கிருந்துஇருப்பிடம்போய்ச்சேர்ந்து, பொன் நவிலும் ஆகம்-(அக்காதலனுடைய) பொன்போன்றமார்பிலே, புணர்ந்திலளே-அணையப் பெற்றாளில்லையோ?

சநே| புஞ்ஜாநாமாநுஷாந் போகாந் ஸர்வகாம ஸம்ருத்திநீ''
என்றாற்போலே அநுபவித்தவளல்லள். (முன்தோன்றல்) தமையன் ''ஒட்டேன்'' என்றிவளைக் கொண்டுபோக. (அழித்

[பெருமாள் திருமாளிகையிலே பனிரண்டாண்டு அப்ராக்ருதபோகங்களை அநுபவித்துக்கொண்டு எல்லாக்காமங்களும் ஈடேறப்பெற்றவளாயிருந்தேன்] என்ற பிராட்டியைப்போலே கலவியின்பம் பெற்றிராத கன்னியாயிருந்தவள். (தன் இன்னுயிராம் காதலனைக் காணாது) தனக்கு உயிரினும் இனியனாய், காதலே வடிவானவனான அவனைக்காணாதபடி. (தன்னுடைய முன்தோன்றல் கொண்டேக) தன்னோடு ஒரு வயிற்றிலே பிறந்த தமயன் இவள் காதலனோடு செல்வதைப்பொறுக்காமல் காதலனிடமிருந்து இவளைப் பிரித்துச்செல்ல. (தான் சென்று) தானே அவனை விட்டுப்போய். (ஆங்கு அன்னவனை நோக்காது) 'தான் போகிறவள் என்னிடம் சொல்லாமலும் போவதே!' என்று மீட்கப்புகுந்த ஸஹோதரபாசமுடைய அவனையும் பாராமல். (அழித்து) கடுஞ்சொற்களைப்பேசி அவன் ஸ்வரூபத்தையழித்து

துரப்பி) ஸ்வயம்வரமும் நாமேயோவென்றாள். (கன்னவில் தோள்) பந்துவர்க்கத்தை அடங்க விட்டுப்பற்றலான தோள். (காளை) தோள்மிடுக்கும் வேண்டாதே பருவமே யமைந்திருக்கை. (கைப்பிடித்து) யுத்தத்திலே எல்லாரும் காணப்பிடித்து. (பொன்னவிலுமாகம் புணர்ந்திலளே) ரத்தத்தின் மேலே விழுந்து தழுவினாள், பிராட்டி கரவதத்தின்று தழுவினாற்போலே.

(உரப்பி) என் அன்பரிடமிருந்து என்னை நீ பிரிப்பதைப் பார்த்தால் நாமிருவருமே ஸ்வயம்வரம் செய்துகொள்ளலாம் என்று நீ நினைப்பதாகத் தோன்றுகிறது. உடன்பிறந்த என்னை நீயே பெண்டாள நினைத்தாயா சண்டாளா என்றாற்போலே கடுஞ்சொல்பேசி. (வாளமருள்) காதலனுக்கும் தமயனுக்கும் உண்டான பெரும்போரிலே. (கன்னவில்தோள் காளையைக் கைப்பிடித்து) தமயன்கையை உதறித்தன் காதலனைக் கைப்பிடித்தாள் கன்னி வேகவதி. (கல்நவில்தோள்) தமயன் முதலான உறவினர் அனைவரையும் விட்டுப்பற்றலாம்படியான கல்போல் உறுதியுள்ள தோள். (காளை) தோள்பலமில்லாது போனாலும், பருவமே போதுமானதாயிருக்கிறது இவன்பின்னே செல்வதற்கு. (கைப்பிடித்து) தனக்காக யுத்தத்திலே அம்பெடுத்தவன் கையை அனைவரும் காணப்பிடித்து. (மீண்டும்போய்) தமயனிடமிருந்து மீண்டு சென்று; மீண்டும் தன் இருப்பிடம் சென்று என்னவுமாம். (பொன்னவிலும் ஆகம் புணர்ந்திலளே)"பர்த்தாரம் பரிஷஸ்வஜே" [ரா-ஆ 30-39] [கணவனைத் தழுவினாள்] என்று பிராட்டி கரவதத்தின்போது அம்புகளாயிரம்பட்ட திருமார்பைத்தன் திருமுலைத்தடங்களாலே தழுவிப் புண்ணாற்றியதுபோலே, சண்டையிலே தனக்காக அம்பேற்று, செம்பொன்னெனச் சிவந்திருக்கும் நாயகனுடைய மார்பிலே ரத்தத்தின் மேலே விழுந்து தழுவிப் புண்களுக்கு ஒத்தடங்கொடுத்தாள்.

(பூங்கங்கை முன்னம்......கேட்டறிவதில்லையே) நாககன்னிகையான உலூபியென்பவள் தீர்த்தயாத்திரை செய்யும் அர்ஜுனனை கங்கையில் நீராடும்போதுகண்டு காமுற்று, அவனை நிர்ப்பந்தித்து இழுத்துச்சென்று தன் ஆசையைக் கூச்சமில்லாமல் அவனிடம் சொல்லி அவனை அனுபவித்தாள் என்று மஹாபாரதம் ஆதிபர்வம் இருநூற்று முப்பத்திமூன்றாமத்தியாயத்தில் கூறப்பட்ட இதிஹாஸத்தை அநுஸந்திக்கிறார். (பூங்கங்கை) அப்ரஸித்தனான ஒருவனுக்காகவோ இவள் மடலெடுத்தாள். ஸுப்ரஸித்த ராஜகுலத்தோன்றலான அர்ஜுனனுக்காகவன்றோ இவள் மடலெடுத்தது. (பூங்கங்கை) இரண்டுகரையிலும் சோலைகளாய் பூக்கள் உதிர்ந்துகிடக்கும்

முன்னம் புனல்பரக்கும் நன்னாடன் மின்னாடும் 55
கொன்னவிலும் நீள்வேல் குருக்கள் குலமதலை
தன்னிகரொன் றில்லாத வென்றித் தனஞ்சயனைப் 56
பன்னாக ராயன் மடப்பாவை பாவை தன்
மன்னிய நாணச்சம் மடமென் றிவையகலத் 57
தன்னுடைய கொங்கை முகநெரியத் தானவன்றன்
பொன்வரை யாகந் தழீஇக்கொண்டு போய்த்தனது 58

பூ கங்கை புனல் முன்னம் பரக்கும் நல்நாடன்-அழகிய கங்காநதியின் தீர்த்தம் முன்னே பெருகப்பெற்ற சிறந்தநாட்டுக்குத் தலைவனும், மின் ஆடும்-ஒளியையுடையதும், கொல் நவிலும் நீள் வேல்-கொலைத்தொழிலைக்கற்றதும் நீண்டதுமானவேலாயுதத்தைக் கையிலே உடையவனும், குருக்கள்குலம்மதலை-குருராஜவம்சத்தில் தோன்றினவனும், தன் நிகர் ஒன்று இல்லாத வென்றி-ஒப்பற்ற வெற்றிபொருந்தினவனுமான, தனஞ்சயனை--அர்ஜுநனை, பன்னாகராயன் மடம் பாவை-கௌரவ்யனென்னும் ஸர்ப்பராஜனுடைய மடமைபொருந்திய பெண்ணான உலூபியென்பவள், பாவை தன் மன்னிய நாண் அச்சம் மடம் என்று இவை அகல—பெண்மைக்குப் பொருந்தின நாணம், மடம், அச்சம் முதலிய குணங்கள் நீங்கப்பெற்று, தன்னுடைய கொங்கை முகம் நெரிய—தனது கொங்கையின் முகம் நெறிக்கப்பெற்று, தான்-(வெட்கத்தைவிட்டுத்) தானாகவே, அவன் தன்-அவ்வர்ஜுநனுடைய, பொன்வரை ஆகம்—அழகிய மலைபோன்றே மார்பை, தழீஇக்கொண்டு போய்-ஆலிங்கனஞ்செய்து கொண்டுசென்று, தனது-தன்னுடைய,

---

(மின் ஆடும்) ஒளியையுடைத்தாய்ப் ப்ரதிபக்ஷங்கள் கண்டபோதே வயிறு அழுகும் நீள்வேல் (தன் நிகர்) வீரத்

கங்கை. "கான்தடம் பொழில்சூழ் கங்கை" "கரைமரம் சாடிக்கருத்திழி கங்கை" [பெரியாழ்திரு 4-7] என்றாரன்றே. அன்றிக்கே, "நலந்திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும் நாரணன் பாதத்துழாயும் கலந்திழி புனலால் புகர்படு கங்கை" [4-7-2] என்கிறபடியே சங்கரன் சடைமலரையும் சதுப்புயன் தாள்மலரையும் ஏந்திவருவதைச் சொல்லுவதாகவுமாம். "கற்பகமலரும் கலந்திழி கங்கை" [4-7-7] ஆகையாலே சொல்லுறதாகவுமாம். (முன்னம் புனல் பரக்கும்) இமயமலையிலே சிறிது ஜலம் உண்டானாலும் அது முதலில் பாய்வது இவன் நாட்டிலேயாகும். தலைமடையாயிருக்கை. நீர்வளம் சொல்லுகிறது. (நன்னாடன்) நிலவளம் சொல்லுகிறது. இனி, கோன்வளம் சொல்லுகிறது: (மின் ஆடும் கொல்

துக்கு எம்பெருமானுமெதிரன்று. (தனஞ்சயனை) ஊர்வசியை "தாய்" என்னவல்லவன். (மடப்பாவை) நாகராஜாவின் பெண்பிள்ளை. (பாவை) அவன் மகள். பாவையென்கிறது-ஸ்த்ரீத்வத்துக்கவ்வருகில்லாமை. (தன்) கடல் வற்றினாற்போலே ஸஹஜமான குணங்கள் குடநீர் வழிந்துபோகை. (நல்நகரம்) உங்களைப்போலன்றியே மடலெடுப்

நவிலும் நீள்வேள்) மின்னல்போல் ஒளியையுடையதாய் மிக விரைவாக ஸஞ்சரிப்பதாய், எதிரிகள் காணும்போதே வயிறழுகிப்போகும்படியாகக் கொலையைக் கோட்சொல்லுவதாய், எதிரிகள் எங்கிருந்தாலும் அழிக்கலாம்படியான நீளத்தையுடைய வேல். (குருக்கள் குலமதலை) குருராஜகுலத்தோன்றல். உலகிற்கெல்லாம் குருக்களாயிருப்பார்கள் அவர்கள். அவர்களுக்குள் முக்கியனாயிருப்பவனிவன். (தன்னிகர் ஒன்றில்லாத) வீரத்துக்குக் கண்ணனும் எதிரன்று என்னும்படியிருக்கை. (வென்றித் தனஞ்சயனை) வெற்றியல்லதறியாத அர்ஜுனனை. (தனஞ்சயனை) அர்த்தகாமங்களை வென்றிருப்பவனை. தன்னை ஆசைப்பட்ட ஊர்வசியையும் 'தாய்' என்று கருதினானன்றோ. (பன்னகராயன் மடப்பாவை) பந்நகம்-பதா ந கச்சதீதி பந்நக:-[காலால்செல்லாதது]என்னும்பொருளுள்ளபாம்பு, 'பன்னகராயன்' என்பது 'பன்னக ராயன்' என்று நீண்டுகிடக்கிறது. பாம்புகளுக்கு அரசனுடைய பெண்மைமிக்க பெண்பிள்ளை. (மடப்பாவை) பெண்மையில், இவளிலும் சிறந்தாரில்லையென்கை. (பாவை தன் மன்னிய நாணச்சம் மடமென்றிவையகல) பிறந்தபின்பு உண்டானதன்றிக்கே, இயற்கையிலேயேயுள்ள நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு என்னும் குணங்கள் கடல்வற்றினதுபோலே அழிந்துபோக. நாணம்-பெண்மைக்குத் தகாத செயலில் மனமொடுங்கி நிற்பது. அச்சம்-அச்செயலை நினைத்தாலும் மனம் நடுங்குதல்; மடம்-எல்லாமறிந்தும் அறியாது போலிருந்தால்; பயிர்ப்பு-பிற புருஷர்களின் ஆடை முதலியன தம்மேலே பட்டாலும் அருவருப்புக்கொள்ளுதல். (தன்னுடைய கொங்கை முகம் நெரிய) தன்னுடைய முலைமுகம் நெரியும்படி தான் ஒருதலைக்காமமாக. (தான் அவன் தன் பொன்வரையாகவும் தழீஇக்கொண்டுபோய்) அவனுடைய பொன்மலைபோன்ற மார்பை அவனிசையாதபோதும், தான் தழுவிக்கொண்டுபோய் (பொன்வரையாகவும்) உலகிலுள்ளார், ஊர்வசியையடைய நோன்பு நோற்க, ஊர்வசியானவள் தான் இதைத்தழுவ ஆசைப்பட்டாளன்றோ. (தனது நன்னகரம்) மடலெடுப்பதைத்தடுத்துக்கொண்டு இவ்வூரிலிருக்கும் உங்களைப்போலன்றியே மடலெடுப்பாரைக் கொண்டாடும் தன்னுடைய

நன்னகரம் புக்கு நயந்தினிது வாழ்ந்ததுவும்
முன்னுரையிற் கேட்டறிவதில்லையே சூழ்கடலுள் 59
பொன்னகரஞ் செற்ற புரந்தரனோ டேரொக்கும்
மன்னவன் வாண னவுணர்க்கு வாள்வேந்தன் 60
தன்னுடைய பாவை யுலகத்துத் தன்னொக்குங்
கன்னியரை யில்லாத காட்சியாள் தன்னுடைய 61
இன்னுயிர்த் தோழியா லெம்பெருமா னீன்றுழாய்

நல் நகரம் போய்புக்கு—அழகான ஸ்தாநத்திலே (நாகலோகத்திலே போய் சேர்ந்து, நயந்து-கொண்டாடி, இனிது வாழ்ந்ததுவும்-ஆநந்தமாக வாழ்ந்தா ளென்பதையும், முன் உரையில் கேட்டு அறிவது இல்லையே—மஹாபாரதத் தில் நீங்கள் கேட்டறிந்ததில்லையோ? சூழ் கடலுள்—பரந்த கடலிலுள்ள, பொன் நகரம் செற்ற-ஹிரண்யாஸுரனுடைய நகரங்களை அழித்தவனான, புரந்தரனோடு ஏர் ஒக்கும்-தேவேந்திரனோடு ஒத்த பெருமையுடையனும்,மன் னவன்-ராஜாதிராஜனும், அவுணர்க்கு வாள் வேந்தன்-அசுரர்களுக்கு ஒளி பெற்ற தலைவனுமிருந்த, வாணன் தன்னுடைய பாவை-பாணாஸுரனுடைய மகளாய், உலகத்து தன் ஒக்கும் கன்னியரை இல்லாத காட்சியாள்—எவ்வுல கத்திலும் தன்னோடொத்த மாதர்கள் இல்லையென்னும்படி அழகிற் சிறந்த வளான உஷையென்பவள், தன்னுடைய இன் உயிர் தோழியால்—தனது ப்ராண ஸகியான சித்ரலேகையென்பவளைக்கொண்டு,

---

பாரைக் கொண்டாடுமூர். (நயந்து) கொண்டாடி; நித்ய ஸம்ஸ்லேஷம்பண்ணி. (முன்னுரை) புண்யத்துக்காகிலும் மஹாபாரதம் கேட்டறிவதில்லையோ?

நல்ல நகரம். (புக்கு) புகுந்து. (நயந்து) கொண்டாடி; நெடும்போது கூடியின்புற்று. (இனிது வாழ்ந்ததுவும்) உங்களைப்போலே தடைசெய் வார் ஒருவருமில்லாமல் தோழிமாரனைவரும் அவனையடைய வழிசொல்லு வாரும், புகழுவாருமாகையாலே இனிமைதவிர வேறில்லாமல் வாழப் பெற்றதையும். (முன்னுரையில் கேட்டறிவதில்லையே)காமசாஸ்திரம் கற்கா விடிலும் போகிறது; புண்ணியத்திற்காக இதிஹாஸமான மஹாபாரதங் கூடக் கேட்டதில்லையோ? அது கேட்டிருந்தாலும் மடலெடுப்பதின் பெருமையை அறிந்திருக்கலாமே.

(சூழ் கடலுள்...பேரின்பமெய்தினாள்) பாணாஸுரனுடைய மகள் உஷையென்பவள், கண்ணபிரானின் பேரன் அநிருத்தனைக் கவர்ந்து சென்று அநுபவித்தபடியைப் பேசுகிறது.

மன்னு மணிவரைத்தோள் மாயவன் பாவியேன் 62

மன்னு மணிவரை தோள் மாயவன்-இனிய திருத்துழாய் மாலையணிந்த ரத்ன பர்வதம்போன்ற திருத்தோள்களையுடைய ஆச்சரியபூதனும்,

---

(மாயவன்) ப்ரஸங்காத் நினைக்கத் தாமீடுபட்டபடியாலே ஆஸ்சர்ய பூதனென்கிறார். (பாவியேன்) தம்மையணைத்ததோளை நினைத்துக்கிடையாமை. (பாவியேன்) வழி

(சூழ்கடலுள் பொன்னகரம் செற்ற புரந்தரன்) கடலுக்குள்ளே ஹிரண்யபுரவாஸிகளான அசுரர்களை அழித்துப் புரந்தரன் என்று பெயர் பெற்ற இந்திரன். (புரந்தரனோடு ஏர் ஒக்கும் மன்னவன் வாணன்) இந்திரனை ஒத்த பெருமையை உடைய அரசர்க்கரசனான பாணாஸுரன். (அவுணர்க்கு வாள் வேந்தன்) அசுரகுலத்தலைவன். (தன்னுடைய பாவை) அவனுடைய புத்திரி. (உலகத்துத் தன்னொக்கும் கன்னியரையில்லாத காட்சியாள்) உலகத்தில் தன்னைப்போன்ற பருவமுடைய பெண்களில் தனக்கு ஒப்பாரில்லாத அழகையுடையவள். (தன்னுடைய இன்னுயிர்த்தோழியால்) தனக்கு வலது கை போன்றவளாய், உயிரில் இனியவளான சித்ரலேகையென்னும் தோழியாலே. (எம்பெருமான் ஈன் துழாய்) '''நிர்க்குணம் வஸ்து' என்றவர்களுக்கு, 'ஸகுணம்' என்று சொல்லிவிடுகையன்றிக்கே, குணங்களிலே கால் தாழ்க்கப்பார்க்கும் பாஷ்யகாரரைப்போலே போனபடி சொல்லவென்று புக்குச் சொல்லவும் விடவும் மாட்டாமையாலே அங்கே ஆழங்காற்படுகிறார்'' என்று அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்தார். (எம்பெருமான்) கையும் மடலுமாகப் புறப்படும்படி என்னை ஈடுபடுத்தி எழுதிக்கொண்டவனுடைய. (ஈன் துழாய் மன்னுமணிவரைத்தோள் மாயவன்) மிகவினிய திருத்துழாய் பொருந்தியிருக்கப் பெற்றதாய் நீலரத்தினமலைபோலிருக்கும் தோளையுடைய ஆச்சர்யபூதன். (மாயவன்) வெறுத்திருக்கும்போதும் ப்ராஸங்கிகமாக நினைக்க நேர்ந்தவுடன் ஈடுபடுத்துகையாலே, 'ஆச்சர்யபூதன்' என்கிறார். 'கையும் மடலுமாயிருக்கும்போதும் ஈடுபடுத்துவதே! என்னிதுமாயம்?' என்கிறார்.

(பாவியேன்) தம்மை அணைத்த தோளை நினைத்துக் கிடைக்கப்பெறுமையாலே, 'பாவியேன்' என்று தன்னைத்தானே நொந்துகொள்ளுகிறாள். அன்றிக்கே, ஈடுபட்டவுடன் காதலனைக்கொண்டுவந்த தோழியையுடைய உஷையன்றோ பாக்கியவதி! மடலெடுக்கும்போதும் விலக்கும் தோழியரைப் பெற நான் என்ன பாவம் செய்தேனோ என்பதாகவும் கொள்ளலாம்.

என்னை யிதுவிளைத்த ஈரிரண்டு மால்வரைத்தோள்
மன்னவன்றன் காதலனை மாயத்தாற் கொண்டுபோய்க் 63
கன்னிதன் பால்வைக்க மற்றவனோ டெத்தனையோர்
மன்னிய பேரின்ப மெய்தினாள் மற்றிவைதான் 64
என்னாலே கேட்டீரே ஏழைகா ளென்னுரைக்கேன்

பாவியேன்என்னை இது விளைத்த ஈர் இரண்டு மால் வரை தோள்-பாவியான என்னை இப்பாடுபடுத்துகின்ற பெரிய மலைபோன்ற நான்குதோள்களையுடைய, மன்னவன்-ராஜாதிராஜனுமான, எம்பெருமான் தன்–கண்ணபிரானுடைய, காதலனை–அன்புக்குரியவனான (பௌத்திரனான) அநிருத்தாழ்வானை, மாயத்தால் கொண்டுபோய் கன்னி தன்பால் வைக்க-மாயத்தினால் எடுத்துக்கொண்டு வந்து தன்னிடத்தில் சேர்க்கப்பெற்று, மற்றவனோடு-அநிருத்தனோடே, எத்தனை ஓர்-பலவிதமாய் ஒப்பற்ற, மன்னிய பேர் இன்பம் எய்தினாள்-நிலைநின்ற பெரிய ஆனந்தத்தை அநுபவித்தாள்; ஏழைகாள்—அறிவிலிகளே! மற்று இவைதான் என்னாலே கேட்டீரே–இன்னும் இப்படிப்பட்ட உதாஹரணங்களை என்னைக்கொண்டே கேட்கவிருக்கிறீர்களோ? என் உரைக்கேன் — (உங்களுக்கு) எவ்வளவு சொல்லுவேன்? (இன்னும் ஒரு உதாஹரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்:)

போவாரடித்தபடி. ஆழங்காலிலே ஈடுபட்டு "பாவியேன்" என்கிறாள். (என்னையிது விளைத்த) இப்படி மட்டெலுடுக்கப் பண்ணின. (ஈரிண்டு) இவள் இப்படி படப்பட அவனுக்குத் தோள்பணைத்தபடி. (மன்னவன்றன் காதலனை) எம்பெருமானுடைய ஸ்நேஹத்தை ஒரு வடிவாக வகுத்ததென்

மடலூரும் நெடுந்தெருவிலே போவாரெல்லாம் என்னை விலக்கியடிக்கிறார்களே! என்னபாவம் செய்தேனோ? என்றுமாம். பகவத்காமமாகிற ஆழ்ந்தமடுவிலேயகப்பட்டுக் கரையேறி மடலூரமுடியாமல் 'பாவியேன் என் செய்வேன்?' என்பதாகவும் கொள்ளலாம். (என்னை இது விளைத்த) இப்படிக் கையும் மடலுமாக என்னைப் புறப்படும்படிசெய்த. (ஈரிரண்டு மால்வரைத்தோள்) நான் படும்பாட்டைக் காணக்காண அவன்தோள்கள் பெருகிப் பணைக்கின்றன. (மன்னவன்) "நாகணை மிசை நம்பரர் செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம்" [நாச்-திரு 10-10] (மன்னவன் தன் காதலனை) புத்திரனிற்காட்டிலும், பேரனிடத்தில் அன்பு இருமடங்காயிருக்குமன்றோ. எம்பெருமானுடைய அன்பே ஒருவடிவெடுத்ததோ என்று நினைக்கும்

னும்படியிருக்கும் பேரனான அநிருத்தாழ்வான். (மாயத்தால்) "பெண்கள் களவுகாண்பர்கள்" என்று காவலோடே கண் வளர்ந்தருளுகிறவனைப்பீட்கன்றுபோலே படுக்கையோடே கொடுபோந்தபடி. (கன்னி தன்பால் வைக்க) உஷை ஸ்வப்நத்திலே கண்டவனைச் சித்ரலேகை எழுதிக்காட்டி, இவள் பக்கல் அவனை அவன்றானறியாமே கொடுவந்து வைத்தபடி. (எத்தனையித்யாதி) விலங்கிட்டு வைத்ததும் கூடவாகையாலே அளவில்லாத ஸஹஜமான பெரிய இன்பத்தை புஜித்தாள். (என் உரைக்கேன்) இவ்வுதாஹரணம் என்றால் சொல்லமுடிமோ? (என்னுரைக்கேன்) என்றால் எவ்வளவு சொல்லலாவது? ஆகிலும் தவிரவொண்ணாதென்று சொல்லக் கேளுங்கோளென்கிறாள்.

படியான அநிருத்தாழ்வானை. (மாயத்தால் கொண்டுபோய்) கனவிலே அநிருத்தனைக் கண்டாள் உஷை. தோழியிடம் சொன்னாள். உலகிலுள்ள அரசர்களையெல்லாம் சித்திரமாக எழுதிக்காட்டினாள் தோழி சித்திரலேகை. 'இவனன்று' 'இவனன்று' என்று கழித்தாள் அவள். கிருஷ்ணனை எழுதிக் காட்டினாள். 'ஒருவிதத்தில் இவனை ஒத்திருந்தான்; ஆனால் இளம்வயது' என்றாள்; அநிருத்தனை எழுதினவுடன் இவனேயென்றாள். உடனே யோக பலத்தால் துவாரகை சென்று, "பெண்கள் களவாடி விடுவார்களோ" என்று காவலோடு கண்வளருமவனைப் படுக்கையோடே அன்றீன்ற இளங் கன்றைக் கொண்டுவருவதுபோலே அநாயாசமாகக் கொண்டுவந்தாள். (கன்னி தன் பால் வைக்க) கனவில் கண்டவனையே நினைந்துருகும் கன்னியிடம் அவனுமறியாமல் அவனைக்கொண்டுவந்து வைக்க. (மற்றவனோடு) இவளுக்குக்கனவிலே அவனைக்கண்டு பிறந்த காதல், அவனுக்கு நேரிலே இவளைக்கண்டதும் பிறந்தது. (எத்தனையோர் மன்னிய பேரின்ப மெய்தினாள்) விஷயமறிந்த வாணன் அநிருத்தனை விலங்கிட்டு வைத்த போதும், உஷையோடு கூடவே வைத்தபடியாலே, அளவற்றதாய், ஒப்பற்றதாய், இயற்கையானதாய், பெரியதான இன்பத்தை அவனோடு கூடி அடைந்தாள்.

(மற்றிவைதான் என்னாலே கேட்டீரே) மடலூர முற்பட்டு, அதற்கும் சக்தியற்று நிற்கும் என்னிடமிருந்தா இவைபோன்ற ஆயிரமாயிரம் கதைகளைக் கேட்க நினைத்திருக்கிறீர்கள்? (ஏழைகாள்) அறிவிலிகளே! இவளால் இது சொல்லி முடியாதென்பதையும் அறியவில்லையே நீங்கள். (என்னுரைக்கேன்)மடலெடுத்ததற்கு உதாஹரணங்களை என்னால் சொல்லி

மன்னு மலையரையன் பொற்பாவை வாணிலா 65
மின்னு மணிமுறுவல் செவ்வா யுமையென்னும்
அன்ன நடைய வணங்கு நுடங்கிடைசேர் 66
பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகலத்

மன்னு மலை அரையன் பொன் பாவை-அசைவிக்கவொண்ணாமல் நிலைநின்ற பர்வதராஜனான ஹிமவானுடைய சிறந்த பெண்ணாய், வாள் நிலா மின்னு மணி முறுவல் செம் வாய்-ஒளிபொருந்திய நிலாப்போல் விளங்குகின்ற அழகிய புன்னகையையுடைய சிவந்த அதரத்தையுடையளாய், உமை என்னும்-'உமா' என்னும் பெயரையுடைய, அன்னம் நடைய அணங்கு—அன்னநடையை யுடையளான (பார்வதியென்கிற) தெய்வப் பெண்ணானவள், தன்னுடைய கூழை-தனது மயிர் முடியை, சடாபாரம் தான் தரித்து-தானே ஜடாமண்டல மாக்கித் தரித்துக்கொண்டு, நுடங்குஇடைசேர் பொன் உடம்பு வாட-துவண்ட இடையோடு சேர்ந்த அழகியஉடம்பு வாடவும், புலன் ஐந்தும் நொந்து அகல — இந்திரியங்கள் ஐந்தும் வருந்தி நீங்கவும்,

---

(மன்னுமலையரையன்) நாட்டுக்கு மச்சமாகப் பெண் பிள்ளை பெற்ற பாக்யவன். (வாணிலா) ஒளியையுடைய

முடியுமோ? எவ்வளவுதான் சொல்லுவேன். ஆயினும் கடைசியாக ஒருதாஹரணம் சொல்லுகிறேன் கேளுங்கள் என்கிறாள்.

(மன்னு மலையரையன்) பொன்னின் மாற்றை அறிந்து கொள்வதற்காக மச்சப்பொன் எடுத்துவைப்பதுண்டு. அதுபோலே, உலகில் பெண்களுக் கெல்லாம் உதாஹரணமாகத்திகழும் பெண்ணைப்பெற்ற பாக்கியசாலி. மடலூரும் பெண்களுக்கு எடுத்துக்காட்டாயிருக்கும் பெண்ணைப்பெற்ற பாக்கியவான். (மன்னு மலையரையன் பொற்பாவை) ஊர்பேர் தாய்தந்தை தெரியாத யதாஜாதையொருத்தியோ மடலூர்ந்தாள்? உலகெல்லா மறியும் அவன் பெண்ணன்றோ. (அரையன் பொற்பாவை) ராஜ குலத்தில் பிறந்தவள் கிடீர்! (பொற்பாவை) மிகச்சிறந்தவளாய், பெண்மை யால் நிரம்பியிருப்பவள். (வாணிலாமின்னு மணிமுறுவல்) பிறப்பாலும் குணத்தாலும் வந்த பெருமையேயாய், வடிவழகில்லாதவளோ மடலூர்ந் தாள்? ஒளிபொருந்திய நிலாவைப்போலே மின்னும் (விளங்கும்) அழகிய முறுவலையுடையவள்; வாணிலா மின்னு முறுவல் — பல்வரிசையின் வெண்மைமிக்க ஒளியைக்காட்டுகிறது. மணி முறுவல்—மணிபோல் ஆசைப்படத்தக்கது; அழகியது. நிலா—சந்திரன். நிலாவென்று சந்த்ரிகையை

நிலாப்போலே விளங்காநின்றுள்ள ஸ்ப்ருஹணீயமான முறுவல். (நொந்தகல) நாம் பட்டதோவென்று அகல. (தன்

(சந்திரனின் ஒளியை) குறிப்பதாகக்கொண்டு ஒளிபொருந்தியதொரு நிலவையே வெளிவிடும் முறுவல் என்றும் கொள்ளலாம். நிலாவைப் போலேயும், மின்னல்போலேயும், மணிபோலேயும் உள்ள பல்வரிசை என்றுமாம். (செவ்வாய்)பல்வரிசையின் வெண்மைக்குப் பரபாகச்சுவையை (வர்ணச்சேர்த்திரஸத்தை) அளிக்கும் சிவந்தவாயையுடையவள். (உமை யென்னும்) இப்பெயராலே உலகெங்கும் பிரசித்திபெற்று விளங்குமவள். (மலையரையன் பொற்பாவை உமையென்னும்) "உமாம் ஹைமவதீம்" [கேநோபநிஷத்] [இமவானின் புத்திரியான உமையை] என்று உபனிஷத்திலும் பரப்ரஹ்மஸாக்ஷாத்காரம் பெற்றவளாக ஓதப்படுமவள். (அன்னநடைய அணங்கு) முன்னிலையில் நாலடி நடந்தால், நாயகனுடைய தாபங்களெல்லாம் தீரும்படியான அன்னநடையாளன்றோ அவனுக்காக இப்பாடுபட்டாள். (அணங்கு) தேவஸ்திரீயன்றோ இதுபட்டது.

(நுடங்கிடைசேர் உடப்பு) துவண்ட இடையையுடைய உடம்பை யுடையவள். நாயகனுக்கும், 'ஒடிந்து விழுந்துவிடுமோ' என்னும் பயத்தை விளைக்கும் இடையழகையுடையவள். (பொன்னுடம்பு வாட) அவனும் உடம்பிலே பாதியாக்கிக் கொள்ளவேண்டும் பெருமையையுடைய அழகிய உடம்பு, அவனைப்பெருமையாலே மரத்தைப் பிரிந்த தளிர்போலே வாட. (புலன் ஐந்தும் நொந்தகல) இவளுடைய இந்திரியங்கள் ஐந்தும், 'கடுந் தவம்புரியும் இவளுடம்பிலே இருந்து நம்மால் இப்பாடுபடமுடியாது' என்றெண்ணி இவளுடம்பைவிட்டு அகல. உலகில் கடுந்தவம்புரிவாரும் சருகிலை முதலான சிலவற்றைத் தின்று இந்திரியங்களைத் தரிக்கச் செய்வார்கள். இவள் அதுவும் வேண்டாதே தவம்செய்து 'அபர்ணை' [இலையும் வேண்டாதவள்] என்று பெயர்பெற்றாள்.

"ஸ்வயம் விசீர்ணத்ரும பர்ண வ்ருத்திதா
பரா ஹி காஷ்டா தபஸஸ் தயா புந:|
ததப்யபாகீர்ணமத: ப்ரியம்வதாம்
வதந்த்யபர்ணேதி ச தாம் புராவித:||" [குமாரஸம்பவம்5-28]

[தானாக விழும் சருகிலைகளைத் தின்று தவம் செய்வதே கடுந்தவமாகிறது. பார்வதியோவெனில் அதையும் வேண்டாதவளானாள். ஆகையினால் முன்னோர்கள் அந்த இன்மொழியாளை 'அபர்ணா' என்று கூறுகின்றனர்] என்றானன்றோ காளிதாஸன். இப்படி தவம்செய்தால் புலனைந்தும் நொந்தகன்றதில் ஆச்சரியமென்ன? (தன்னுடைய கூழைச் சடாபாரம் தான்

தன்னுடைய கூழைச் சடாபாரந் தான்தரித்தாங்கு 67
அன்ன வருந்தவத்தி னூடுபோய் ஆயிரந்தோள்
மன்னு கரதலங்கள் மட்டித்து மாதிரங்கள் 68
மின்னி யெரிவீச மேலெடுத்த சூழ்கழற்கால்
பொன்னுலக மேழுங் கடந்தும்பர் மேற்சிலும்ப 69
மன்னு குலவரையும் மாருதமுந் தாரகையும்
தன்னி னுடனே சுழலச் சுழன்றாடும் 70
கொன்னவிலும் மூவிலைவேற் கூத்தன் பொடியாடி

அன்ன அரு தவத்தின்ஊடுபோய்-அப்படிப்பட்ட அருமையான தபஸ்ஸைச் செய்து முடித்து (என்னபயன்பெற்றாளெனில்) ஆயிரம் தோள் மன்னு கரதலங்கள் மட்டித்து—(சிவன் தனது) ஆயிரம் புஜங்கள் பொருந்திய கைகளைத் திசைகளிலே வியாபிக்கச்செய்து, மாதிரங்கள் — திக்குகள், மின்னி எரி வீச-மின்னி நெருப்புப்பொறி கிளம்பும்படியாக, மேல் எடுத்த-மேற்புறமாகத் தூக்கின, கழல் சூழ் கால்-வீரக்கழலணிந்த ஒரு பாதமானது, பொன் உலகம் ஏழும் கடந்து-அழகிய மேலுலகங்களையெல்லாம்தாண்டி, உம்பர் மேல் சிலும்ப-மேலே மேலே நீளும்படியாக (ஒற்றைக்காலை உயரத்தூக்கி) மன்னு குலம் வரையும் மாருதமும் தாரகையும் தன்னினுடனே சுழல-நிலையாக நிற்கிற குலபர்வதங்களும் காற்றும் நக்ஷத்திரங்களும் தன்னோடுகூடவே சுழன்றுவர, சுழன்று ஆடும்—தான் சுழன்று நடனமாடுபவனும், கொல் நவிலும் மூஇலை வேல்-கொலைத்தொழில் புரிகின்ற மூன்று இலைகளையுடைத்தான சூலத்தையுடையவனும், கூத்தன்-கூத்தாடியென்று பிரஸித்தனும், பொடியாடி-பஸ்மதாரியென்று பிரஸித்தனுமான

னுடைய கூழைச் சடாபாரம் தான்தரித்து) பெருமாள் திருமுடியைப் புனைந்தாற்போலே ஜடை. (அரும்தவம்) "தபஸ்ஸு" என்ன வாய்வேம். (ஊடுபோய்) அப்படித்

தரித்து) கூழை-மயிர்முடி. தன் மயிர்முடியைத் தானே சடையாகத் தரித்துக் கொண்டு. வனம் சென்றபோது ராமபிரான் சடைதரித்ததுபோலே தரித்துக்கொண்டாள். (அன்ன அருந்தவம்) அப்படிப்பட்டது என்ப தொழிய வேறு சொல்லலாவதொன்றில்லை; அப்படிச்சொல்லியும் திருப்தியில்லாமல் 'அருந்தவம்' என்கிறது. இத்தவத்தின் தன்மையைச் சொல்லப் புக்கால் வாய் வெந்துவிடும்; நினைத்தால் நெஞ்செரியும். (தவத்தினூடு போய்) தவத்தின் நடுவிலே நாயகனைப்பெற்று, அதை நிறுத்த முடிந்ததோ? தவத்தை முழுவதும் நடத்தினாள்.

பட்ட தபஸ்ஸை முடிய நடந்து. (ஆயிரம்தோள்) இத்தலை இப்பாடுபட அத்தலை வளர்ந்தபடி. "नैव दंशान्न मशकान्" (நைவ தம்சாந்ந மசகாந்) என்கிற க்லேசத்தின்படியே படுமவனல்லனென்கை. (மட்டித்து) திக்குக்களிலே செல்ல. (பொன்னுலகம்) திருவுலகளந்தருளின தேசமெல்லாம் உபஹதமானபடி. (சிலும்ப) கிடந்த விடத்தில் கிடவாதொழிகை. குலவரையுள்ளிட்ட பதார்த்தங்களெல்லாம் புன்னைப் பூப்போலே சுழன்றுவர. (கொல்நவிலும்) ஆசைப்பட்

இவள் இப்பாடுபட, அவனிருந்த நிலையைச் சொல்லுகிறது இனி: (ஆயிரம் தோள்) இவள் படப்பட அவன் பெருகிவளர்ந்தான்.

"நைவ தம்ஶாங் ந மஶகாங் ந கீடாந் ந ஸரீஸ்ருபாந் |
ராகவோऽபநயேத் காத்ராத் தத்கதேநாந்தராத்மநா ||
[ரா-ஸு 36-42]

[சீதையினிடம் நெஞ்சு செலுத்தியிருக்கையாலே ராமபிரான், ஈக்களையும், கொசுக்களையும், புழுக்களையும் பாம்புகளையுங்கூடத் தன் திருமேனியிலிருந்து அகற்றுவதில்லை.] என்று சில நாட்கள் பிரிந்தால் படாதபாடு படும் அவனைப்போன்றவனல்லன். (மன்னு கரதலங்கள் மட்டித்து) இவன் ஆடுகிறபோது கைகளாயிரமும் திக்குகளிலே சென்று மோதின. (மாதிரங்கள் மின்னி எரி வீச) அதனாலே திக்குக்களெங்கும் தீப்பொறியும் புகையுமெழுந்து நெருப்பை வெளிவிடுகின்றன. (மேலெடுத்த சூழ் கழல்கால்) ஆடும்போது மேலே தூக்கப்பட்டதும், வீரக்கழலால் சூழப்பட்டதுமான கால். நாயகியானவள் தன்னை விரும்பி நோவுபட தான் காலிலிருந்து தலைவரை ஆபரணமணிந்து ஆநந்தக் கூத்தாடுகிறபடி. (சூழ் கழற் கால்) உலகெங்கும் சுற்றிவரும் கால் என்னவுமாம். (பொன்னுலகமேழும் கடந்து) திரிவிக்கிரமன் திருவுலகளந்தருளிய தேசமனைத்தையும் கடந்து. (உம்பர் மேல் சிலும்ப) ஓரிடத்தில் நில்லாமல் தேவருலகங்களில் இங்குமங்கும் ஆடிவருகை. உம்பர்—தேவருலகம். "மேலுள்ள தேவஜாதி என்னாய் வருகிறதோ? என்று அஞ்சுகிறபடி" என்று நாயனார் வியாக்கியானம். உம்பர்—தேவர். (மன்னு குலவரையும்) பூமிக்கு ஆணியடித்தாற்போல் நிலையாயுள்ள குலபர்வதங்களும். (மாருதமும்) சுழற்காற்றும். (தாரகையும்) அளவிறந்த நக்ஷத்ரகணங்களும். (தன்னினுடனே சுழலச் சுழன்றாடும்) தானாடும்போது மேலே தரித்துள்ள புன்னைப்பூமாலை சுழன்றுவருவதுபோலே குலபர்வதங்கள், சுழற்காற்று, நக்ஷத்திரங்கள் முதலியவையும் தானாடும் வேகத்தாலே சுழன்றுவரும்படியாகக் கூத்தாடுகிறபடி. (கொல் நவிலும்) கொலையைச் சொல்லும். ஸம்ஹாரத்தையே ஸம்ஹாரகர்த்தா

அன்னவன்றன் பொன்னகலஞ் சென்றுங் கணைந்திலளே 71

அன்னவன் தன்-அப்படிப்பட்ட சிவபிரானுடைய, பொன் அகலம் சென்று அணைந்திலளே — அழகிய மார்பைக்கிட்டி ஆலிங்கனஞ் செய்துகொள்ள வில்லையா?

டாரும் வயிறு பிடிக்கும்படியிருக்கை. (மூவிலை) கண் மூன்றுனுற்போலேயிருக்கிறதன்றோ.

(பொடியாடி) போகத்துக்குச் சந்தனம் பூசினபடி. (அன்னவன்) முகத்தைச் செல்லவைத்துப் பேசுகிருர். இன்னுமிப்புடையிலுள்ளன. (பொன் அகலம்) அவள் பக்ஷத்தாலே. (சென்றுங்கு) இவ்வளவிலும் அவன் வந்திலன். இவள் தானே சென்றவத்தனை. ஓரஞ்சலி பண்ண மேல்விழுந்தது மன்றென்கை.

வான அவனுக்கும் ஸர்வகாலமும் உபதேசித்துவரும் ஆயுதம் "அருளார் திருச்சக்கரம்" [திருவிரு-33] "அறமுயலாழி" [திருவாய் 2-10-5] எனப்படும் ஆயுதமன்று. ஆசைப்பட்டவர்களும் இதைக்கண்டவுடன் பயத்தாலே வயிறுபிடிக்கவேண்டும்படியிருக்கை. (மூவிலைவேல்) விருபாக்ஷனுன அவனுக்குக் கண்மூன்றுனுற்போலே இதுவும் விருபமாயிருக்கை. (கூத்தன்) "தூயநடம் பயிலும் சுந்தர" [பெரியாழ்திரு 1-6-6] என்னும் சுந்தர நடனமோ? பேய்க்கூத்தாயன்றோ உள்ளது.

(பொடியாடி) அவனைப் பெற்றுத்தான் இவள் அடையப்போகும் போகமிருந்தபடி காணீர். சாம்பலைச் சந்தனமாகப் பூசியிருக்கிறபடி. இதையடையவன்றோ இப்பாடுபட்டாள். (அன்னவன்) இன்னம் இதுபோலவே, 'ஊமத்தை, எருக்கு, எலும்பு, புலித்தோல்'என்றுற்போலே இவனை அலங்கரிக்குமவற்றைத் தன் வாயாலே சொல்லமாட்டாமல், கண்ணுலும் காணமாட்டாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டு 'அப்படிப்பட்டவன்' என்கிருள். (தன் பொன்னகலம்) இவற்றையுடைய அவன் மார்பையே பரம போக்யமாக நினைந்திருக்கிருள் ஸதியாகையாலே. (சென்றுங்கணைந்திலளே) இவ்வளவு தவம் செய்தும் அவன் வந்தானே? ஒருதலைக்காமமாய், தானே சென்று அந்த நிலையிலும் அவனை அணையப்பெற்றுளன்றோ. * ஓரஞ்சலி செய்தவுடன் நீர்ப்பண்டமாயுருகி மேல்விழும் அகாரவாச்யனல்லனே அவன். அவனையடையவன்றோ அவள் அப்பாடுபட்டது. இவனையடைய நான் மடலெடுப்பது விந்தையோ?

---

* "அஞ்ஜலயதிதி அஞ்ஜலி:" [அகாரவாச்யனுன விஷ்ணுவை நீராயுருக்குகிறதாகையால் அஞ்ஜலியென்ப்படுகிறது] என்பது அஞ்ஜலிசப்த வ்யுத்பத்தி.

பன்னி யுரைக்குங்காற் பாரதமாம் பாவியேற்கு
என்னுறுநோய் யானுரைப்பக் கேண்மின் இரும்பொழில்
சூழ் 72

பாவியேற்கு—பாவியான நான், பன்னி உரைக்குங்கால்-(இப்படிப்பட்டஉதாஹரணங்களை இன்னும்) விரிவாகச் சொல்லுகிறபக்ஷத்தில், பாரதம் ஆம்-ஒரு மஹாபாரதமாய் முடியும். என் உறு நோய்-எனக்கு நேர்ந்த நோயை, யான் உரைப்ப கேண்மின்-நானே சொல்லக் கேளுங்கள்; (என்னவென்றால்) இரு பொழில் சூழ்-பெரிய சோலைகள் சூழப்பெற்றதும்,

---

(பன்னியுரைக்குங்கால்) இப்பரப்பு என்றால் பேசிமுடியாது. வ்யாஸபராசராதிகள் பேசுமத்தனை. (பாவியேற்கு) உங்களுக்குச் சொல்லப்பிறந்தேனோ?

(என்னுறுநோய்) நம்பியழகிலேயகப்பட்ட ஸ்ரீபரதாழ்வான் நோவுபோலே. (கேண்மின்) இத்தனையுஞ் செய்யவேணும். **"शोकक्षोभे च हृदयं प्रलापैरेव धार्यते"** (சோகக்ஷோபே ச

(பன்னியுரைக்குங்கால் பாரதமாம்) இவ்விஷயத்தை விரிவாகப் பேசி முடிக்க என்றால் முடியாது. வியாஸர் முதலானோரே பேசவேணும். அவர்கள் பேசினாலும் பாரதம்போலே விரியுமேயொழியச் சுருங்கச் சொல்ல முடியாது. (பாவியேற்கு) வியாஸர் முதலானோரைப்போலே விரிவாகச் சொல்லவும் வல்லமையில்லாத மஹாபாபியான எனக்கு. பன்னியுரைக்குங்கால் பாவியேற்கு பாரதம் என்று அந்வயம்.

(என்னுறு நோய் யானுரைப்பக்கேண்மின்) சொல்லிமுடியாதென்பது ஒருபுறமிருக்கட்டும்; அவர்கள் பட்டபாட்டை விரிவாகச் சொல்லவேண்டிய அவசியமுமில்லை எனக்கு. நான் பட்டபாட்டை நானே சொல்லிக் கேட்டால் அத்தனையும் சொன்னதாய் முடியும்; கேளுங்கள். பரோக்ஷமாகத் தெரிந்ததைச் சொல்லிக் கேட்பது கிடக்கட்டும். ப்ரத்யக்ஷமாக நான் படுவதைக் கேளுங்கள். (என் உறு நோய்) என்னை நன்கு உற்றடைந்த நோய். என்னை ஊடுருவி நிற்கும் நோய். "தெய்வநன்னோய்" [திருவிரு 53] என்றாற்போலே நறையூர் நம்பியைப் பிரிந்துபடும் எனக்கு உறுதுணையாய் உத்தேச்யமாயிருக்கும் நோய்; ஸ்ரீராமபிரானழகிலேயீடுபட்ட ஸ்ரீபரதாழ்வான்நோவுபோலே. (யானுரைப்பக்கேண்மின்) நோய்கொண்ட நான் சொல்லக் கேளுங்கள். வேறொருவரால் சொல்லவொண்ணாததாகையால் நானே

மன்னு மறையோர் திருநறையூர் மாமலைபோல்
பொன்னியலு மாடக் கவாடம் கடந்துபுக்கு 73
என்னுடைய கண்களிப்ப நோக்கினேன் நோக்குதலும்

மறையோர் மன்னும்-வைதிகர்கள் வாழப்பெற்றதுமான, திருநறையூர்-திருநறையூரில், மா மலைபோல் பொன் இயலும் மாடம் கவாடம் கடந்து புக்கு—பெரிய மலைபோன்றதும் பொன்போன்றதுமான ஸந்நிதியின் திருக்கதவை ஒருவாறு தாண்டிச்சென்று, என்னுடைய கண் களிப்ப நோக்கினேன்-எனது கண்கள் களிக்கும்படி கண்டேன்; நோக்குதலும்-பார்த்தவளவில்,

---

ஹ்ருதயம்ப்ரலாபைரேவ தார்யதே) என்னும்படியாலே தான் பிழைக்கைக்காக.

(இரும்பொழில்) பெண்களுக்கு மடலெடுக்கும்படி பணைமிக்க பொழில். (மன்னுமறையோர்) "மடலெடுக்கை சாஸ்த்ரார்த்தம்" என்று உபபாதிக்குமவர்கள் மன்னும் தேசம். அங்ஙனுண்டோவென்னில்; **"व्यवसायादृते ब्रह्मन्ना -**

சொல்லவேணும் (கேண்மின்) தயவுசெய்து கேளுங்கள்; என் உயிர் தரிக்கவேண்டுமெனில் கேளுங்கள்.

"பூரோத்பீடே தடாகஸ்ய பரீவாஹ: ப்ரதிக்ரியா।
ஶோகக்ஷோபே ச ஹ்ருதயம் ப்ரலாபைரேவ தார்யதே ॥"

[உத்தரராமசரிதம்]

[குளம் நீர் நிரம்பினால் வடிகாலை வெட்டிவிடுவதே கரை உடையாமல் தடுக்கும் வழியாகும்; (அவ்வண்ணமே) துன்பத்தால் கலங்கினபோது, வாய்விட்டு அழுவதாலேயே நெஞ்சு தரித்துநிற்கிறது.] என்கிறபடியே நான் பிழைப்பதற்காகக் கேளுங்கள். (கேண்மின்) செவிபடைத்த பயன்பெறக்கேளுங்கள் என்றுமாம்.

(இரும்பொழில் சூழ்) பரப்பையுடைய சிறந்த சோலைகளாலே சூழப்பட்ட திருநறையூர். என்னைப்போலே பிரிந்துபடுவார்க்கு மடலெடுக்கலாம்படி பனைமரங்கள் மிக்கபொழில். (மறையோர் மன்னும் திருநறையூர்) மடலெடுப்பதே ஸகலவேததாத்பர்யம் என்று நிரூபிப்பவர்கள் நிலைநிற்கும் ஊர். மடலெடுப்பது வேததாத்பர்யமாவது எப்படி? எனில்: **"ப்ரஜ்ஞாம் குர்வீத" "த்யேய:" "ஸோந்வேஷ்டவ்ய:" "த்யாயீத" "உபாஸிதவ்ய:" "நிதித்யாஸிதவ்ய:"** என்று ஸ்வரூபவிருத்தமான ஸ்வப்ரவ்ருத்தியைச்

सादयति तत्परम्'' (வ்யவஸாயாத் ருதே ப்ரஹ்மந்நாஸாத யதி தத்பரம்) என்று உண்டாகையாலே. (மாமலை) ''सुभगश्चित्रकूटोऽसौ'' (ஸுபகச் சித்ரகூடோஸௌ) என்னுமாபோலே. பக்தியின் உயர்த்தியாலே உயர்ந்து தோற்றினபடி. (கடந்து) வழிபறிக்கும் தேசத்தைக் கடந்து. பல ஹாநி அவன் காண்கை. அவ்வாழங்காலைத் தப்பினபடி. பல ஹாநிக்கு முன்னே புகுமித்தனை. என்னுடைய படபா

செய்தாகிலும் பரமபுருஷனைப் பெறவேண்டும் என்று வேதமெங்கும் கோஷிக்கப்பட்டுள்ளதன்றோ. மடலூர்வதும் அதுவேயன்றோ. ''வ்யவஸாயாத்ருதே ப்ரஹ்மந் நாஸாதயதி தத் பரம்'' [அந்தணரே! தன் முயற்சியில்லாமல் பரம்பொருளை அடையமுடியாது] என்று மறைமுடிவுகண்ட முனிவர்களும் உரைத்தனரன்றோ. (மாமலைபோல் மாடம்) பெரிய மலைபோலுயர்ந்துள்ள கோயில்.

''ஸுபகஶ் சித்ரகூடோऽஸௌ கிரிராஜோபமோ கிரி: |
யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த: குபேர இவ நந்தநே ||''

[ரா-அ 98-12]

[திருமாலிருஞ்சோலைமலையையொத்த இந்தச் சித்ரகூடமலை மங்களமானது. குபேரன் நந்தனவனத்திலிருப்பதுபோல் இதில் காகுத்தன் வாழ்கிறான்.] என்றாற்போலே பரமபுருஷன் வாழ்கையாலே, கிரிராஜன் எனப்பட்ட மாலிருஞ்சோலைமலையைப்போலே 'மாமலை' எனப்படுகிறது. திருநறையூர்க் கோயில் சிறிய கல்லின்மேல் அமைந்திருந்தபோதிலும் இவருடைய பக்தியின் உயர்த்தியாலே இவருக்கு உயர்ந்ததாய், மாமலையாய்த் தோற்றுகிறது. (பொன்னியலும் மாடம்) பொன்போலே சிறந்ததாய், அனைவரும் ஆசைப்படும் தன்மையதான கோயில். (கவாடம் கடந்து புக்கு) கதவை ஒருவாறு தாண்டி உள்புகுந்து. கடந்து-சிரமப்பட்டுத் தாண்டி. கதவின் அழகு வழிபறிப்பாரைப்போலே கண்களைக் கொள்ளைகொள்ளுமாகையாலே, அதைக் கடப்பது மிகவும் சிரமமென்று கருத்து. (கடந்து புக்கு நோக்கினேன்) அவனைக் கண்டுவிட்டால் பிறகு, ''காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்'' [பெரியதிருவ 34] என்கிறபடியே பலக்குறைவு ஏற்பட்டுவிடும்; ஆழ்த்திவிடும் சுழல்போன்ற அதற்குத் தப்பினபடியாலே பொன்னியலும் மாடக் கவாடத்தைக் கடந்து புகமுடிந்தது; அவனைக் காண்கையாகிற பலக்குறைவுக்கு முன்னே புகலாமேயொழிய, கண்டபின் கடந்து புகமுடியாது என்று கருத்து. (என்னுடைய கண் களிப்ப நோக்கினேன்) அவனைப்

மன்னன் திருமார்பும் வாயு மடியிணையும் 74
பன்னு கரதலமும் கண்களும் பங்கயத்தின்

மன்னன்—திரு மார்பும்—பிராட்டியுறையும் மார்வும், வாயும்—(புன்முறுவல் நிறைந்த) திருவாயும், அடி இணையும்—இருதிருவடிகளும், பன்னு கரதலமும்-கொண்டாடத்தக்க திருக்கைகளும், கண்களும்-திருக்கண்களும்,

---

முசாக்நி குளிர. (களிப்ப) "கண்களாரளவும் நின்று கண்ண மங்கையுள் கண்டுகொண்டேன்" என்னுமாபோலே நெடுங்காலம் பட்டினிவிட்ட கண்கள் வயிறு நிரம்பும்படி. "நணுகினம்நாமே" **"मन्ये प्राप्ताः स्म तं देशं भरद्वाजो यमब्रवीत्" (மந்யே ப்ராப்தா: ஸ்ம தம் தேசம் பரத்வாஜோ யமப்ரவீத்)**

(நோக்குதலும் மன்னன்) நான்கண்டபோதே எழுதிக் கொண்டான். வாளும்பலகையும் பொகட்டு, கண்டபோதே மடலெடுக்கப்பண்ணினவன். (நோக்குதலும் மன்னன்)

பெருமையாலே உருவி, கடல் நீரையும் வற்றச்செய்துகொண்டு எரியும் படபாமுகாக்னிபோலே என் கண்ணீரையும் வற்றவடித்துக்கொண்டு எரியும் கண்கள் குளிரும்படியாக. (களிப்ப) "**கண்களாரளவும்** நின்று **கண்ண மங்கையுள் கண்டுகொண்டேன்**" [பெரியதிரு 7-10-9] என்று இவரே அருளிச்செய்தபடியே நெடுங்காலம் பட்டினிகிடந்த கண்கள் வயிறுநிரம்பும்படி நோக்கினேன். (நோக்கினேன்) "நணுகினம் நாமே" [திருவாய் 1-1-3] என்கிறபடியே மிகத்தாழ்ந்த நான் மிகச்சிறந்த பொருளை நோக்கினேன்.

"மந்யே ப்ராப்தா: ஸ்ம தம் தேசம் பரத்வாஜோ யமப்ரவீத்" [ரா-அ 69-9]

[பரத்வாஜர் சொல்லிய இடத்தை அடைந்துவிட்டோமென்று நினைக்கிறேன்.] என்றாற்போலே ஆசார்யோபதிஷ்டமான என் லட்சியஸித்தியைப் பெற்றேன். (களிப்ப நோக்கினேன்) "**த்ருஷ்ட ஏவ ஹி ந: சோகமபநேஷ்யதி ராகவ:**" [ரா-அ 8-4] [கண்டவுடன் நம் துன்பங்களைத் தீர்ப்பான் ராகவன்] என்று சொல்லப்பட்டதன்றோ.

(நோக்குதலும் மன்னன்) நான் கண்டவுடன் எனக்கு மன்னனானான்; என்னை அடிமையோலை எழுதிக்கொண்டான். வாளும் பலகையும் கொண்டு பிறரைக் கொள்ளையடிக்கும் திருமங்கைமன்னனாயிருக்கும் நிலைகழிந்து, கண்டவுடன் மடலெடுக்கும் பரகால நாயகியாகப் பண்ணினவன். (நோக்கு

கண்டபோதே தான் என்னலாம்படியிருக்கை. **“राजाधिराजः सर्वेषां”** (ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம்) (திருமார்பும்) தமக்குப் பற்றுசு. விரஹ ஶ்ரமஹரமான மார்வுதன்னைக் கணிசிக்கை. வ்ரீளையாலேமுகம்பாராதே மார்வைப் பார்த்தாளென்றுமாம். திருமார்வென்று, “வாயும்” என்பானென்னென்னில்; பிராட்டி பக்கல் ப்ரேமத்தாலே அவளைப்பார்த்து முறுவல்பண்ணி யிருக்குமவ்வழியாலே முறுவலைக்கண்டபடி. (வாயும்) அகப் படுத்தும்முறுவல். (அடியிணையும்) அம்முறுவலுக்குத்தோற்று விழும் திருவடிகள். (பன்னுகரதலமும்) திருவடிகளிலே விழுந்தாரைத் திருக்கையாலே ஸ்பர்சித்தால், “ஒருகையே!” என்று வாய்புலர்த்தும் கை. (கண்கள்) நோக்கும் கண்கள்.

தலும் மன்னன்) “ராஜாதிராஜ: ஸர்வேஷாம்” [பார-ஆச்வ] [அனைவர்க்கும் அரசர்க்கரசனுமிருப்பவன்] என்கிறபடியே கண்டவுடன் இவனே ஸர்வ லோகசக்ரவர்த்தி என்னும்படியிருக்கை. (மன்னன் திருமார்வும்) புருஷ காரபூதையான பிராட்டியிருக்குமிடமாகையாலே இவருக்கு அவலம்பமாய் (பற்றுமிடமாய்) இருக்கையாலே முதலின் முகங்காணமல் மார்பைக்காண் கிறார். விரஹதாபத்தை அணைத்துத் தணிப்பதாகையாலே மார்வை முதலிற்காண்கிறாராகவுமாம். வெட்கத்தாலே முகத்தைப் பாராமல் மார்வைப் பார்த்தாரென்றுமாம். (மன்னன் திருமார்வும்) “திருவிருந்த பக்கம் திறவிது” “அபாங்கா பூயாம்ஸோ யதுபரி பரம்ப்ரஹ்ம ததபூத்” [பிராட் டியின் திருக்கடைக் கண்ணோக்குகள் அதிகமாக விழுந்தவிடம் பரம் பொருளாயிற்று.] என்கிறபடியே இவன் ஸம்பந்தத்தால் அவன் மன்ன னாகை. (வாயும்) திருமார்பென்றவுடன் வாயைச் சொல்வதேன்? எனில்: மார்பிலுள்ள பிராட்டி பக்கல் அன்பினாலே அவளைப்பார்த்து முறுவல் செய்திருக்குமவ்வழியாலே மார்பிலிருந்து வாயைக் காண்கிறார். “வாய்” என்று இவரை ஈடுபடுத்தும் முறுவலைச் சொல்லுகிறது. அவள் முன் னுகப் பற்றினாரை “மா சுச:” [வருந்தாதே] என்று ஆறுதல் கூறுவ தாகையாலே வாயைச்சொல்லுகிறாராகவுமாம். (அடியிணையும்) மார்வுக்கும் முறுவலுக்கும், வார்த்தைக்கும் தோற்றுவிழும் திருவடிகளைச் சொல்லு கிறார். (பன்னு கரதலமும்) திருவடிகளிலே விழுந்தாரைக் கையாலெடுத்து அணைத்தால் ‘இதுவும் ஒரு கையே!’ என்று வாய்வெருவுகை. பன்னு கரதலம்—அடியரால் வாய்வெருவப்படும் கை. அன்றிக்கே, பன்னுகரதலம் என்று இவரை அணைக்கையாலே ஒன்று பத்து நூறாயிரமாகப் பணைக்கும் திருக்கைகள் என்பதாகவுமாம். “தோள்களாயிரத்தாய்” [திருவாய் 8-1-10]

பொன்னியல் காடோர் மணிவரைமேல் பூத்ததுபோல் 75
மின்னி யொளிபடைப்ப வீழ்நாணும் தோள்வளையும்
மன்னிய குண்டலமு மாரமும் நீண்முடியும் 76
துன்னு வெயில்விரித்த சூளா மணியிமைப்ப
மன்னு மரகதக் குன்றின் மருங்கேயோர் 77

ஓர், மணிவரை மேல் பொன் இயல் பங்கயத்தின் காடு பூத்ததுபோல்-ஒரு நீலரத்ந மலையின்மேல் பொன்மயமான தாமரைக்காடு மலர்ந்தாற்போல் (விளங்க), மின்னி ஒளி படைப்ப-மின்னல்போல் ஒளிவீசுகிற, வீழ் நாணும்-விரும்பத்தக்க திருவரைநாணும், தோள் வளையும்-தோள்வளைகளும், மன்னிய குண்டலமும்-பொருந்தியுள்ள திருக்குண்டலங்களும், ஆரமும்-(திருமார்பில்) ஹாரமும், நீள் முடியும்-பெரிய திருவபிஷேகமும், துன்னு வெயில் விரித்த சூளாமணி இமைப்ப—மிக்க தேஜஸ்ஸை வெளிவிடுகின்ற முடியிற்பதித்த ரத்னமும் ப்ரகாசிக்க, மன்னு மரகதக் குன்றின்மருங்கே—அனைவர்க்கும் புகலிடமான மரகதமலையென்னும்படியான எம்பெருமானுக்கு அருகே,

---

நின்றவிடத்தே நின்று ஸ்பர்சிக்கும் கண். ஒருகால் நோக்கினால் ஆலங்கட்டி விட்டெறிந்தாற் போலேயிருக்கை. (பொன்னியல்) பொற்றாமரைக்காடு, நீலகிரியிலே பரப்பு மாறப்பூத்தாற்போலே திருமேனியிலுண்டான திருக்கண், திருவாய், திருக்கை, திருவடிகளிருக்கும்படியென்று கீழோடே அன்வயம்.

என்கிறபடியே. (கண்களும்) கையினணைப்பிலே ஈடுபட்டவர்களைக் குளிர நோக்கும் திருக்கண்களும். "உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்" [பெரியதிரு 7-1-9] எனப்பட்டதன்றோ. கை நீண்டு வந்து தொடுகின்றதென்றால், கண் இருந்த விடத்திலிருந்தே தொடுகின்றது. ஒருகால் நோக்கினால் ஆலங்கட்டியை விட்டு எறிந்தாற்போலே ஆளை வீழ்த்தும்படியிருக்கை. (பங்கயத்தின் பொன்னியல் காடு ஓர் மணிவரை மேல் பூத்ததுபோல்) பொற்றாமரைக்காடு நீலமலையிலே எங்கும் பூத்தது போலே திருமேனியிலுள்ள திருமார்பு, திருவாய், திருவடி, திருக்கை, திருக்கண்களுள்ளன என்று கீழோடே அன்வயிக்கவேணும். அல்லது, திருமேனியும், மேலே சொல்லப்போகும் ஆபரணசோபையையும் பொருந்தியிருக்குமழகைச் சொல்லுவதாகவுமாம்.

(மின்னியொளிபடைப்ப) பளபளத்த வொளியையுண்டாக்க. (வீணுணும்)விடுநாணும். ஸௌந்தர்யம் திரைத்தாற்போலேயிருக்கை. (தோள்வளை) திருவடிகளுக்கு வீரக்கழல் போலே. (மன்னிய) காதிலே பூத்தாற் போலேயிருக்கை. (ஆரம்) மார்விலே சினைத்தாற்போலேயிருக்கை. (நீண்முடி) திருநறையூருக்குச் சூட்டினமுடி ஸர்வேச்வரனுகச் சூட்டினபடி. (துன்னுவெயில்விரித்த சூளாமணி யிமைப்ப) சூடாமணியினொளி எல்லா வொளியையும் விஞ்ச, துன்னுகை-மிகுகை. அழகு மிக்கால் கண்ணெச்சிலாமென்று மறைப்பாரைப்போலே சூடாமணியில் தேஜஸ்ஸு எல்லாத் தேஜஸ்ஸிலும் மிக்கபோது இளவெயில்போன்றதொரு பிடாம்விழவிட்டாற்போலேயிருக்கும்.

(மன்னு) தன்னைப் பற்றிலோகம் வாழ்வதொரு நீலகிரி. (மருங்கு) ஆழங்கால். உள்ளிழியவொண்ணுமை. இருவரும்

(மின்னியொளிபடைப்ப)"மின் செய்பூண் மார்பன்" [திருவாய் 4-2-10] என்கிறபடியே மின்னினுளி திருவாபரணமாயிற்று என்னும்படி பளபளத்தஒளியையுண்டாக்குகிற.(வீணுணும்)"ஹிரண்யப்ராகாரா" எனப்படும் பிராட்டிக்கு ஹிரண்யப்ரகாரம் [பொன்மதிள்] போலேயிருக்கிற அரைநாணும். வீணுண்-வீழ்நாண். பகவானுடைய அழகுக்கடல் அலையெறிவது போலேயிருக்கை. (தோள்வளையும்) திருவடிக்கு வீரக்கழல்போலே. மூவுலகும் ஒதுங்க நிழல்கொடுக்கும் தோளுக்குத் தோள்வளையிருக்கிறது. தோளழகைக் கண்டு திருஷ்டிபடாதபடி அதை வளைத்து மறைத்துக் கொண்டிருக்கை. (மன்னிய குண்டலமும்) காதிலே இயற்கையாகவே பூத்தாற்போலே பொருந்தியிருக்கும் மின்னுமணிமகர குண்டலங்களும். (ஆரமும்) மார்விலே இயற்கையாக அரும்பினுற்போலேயிருக்கும் ஆரமும். (நீண்முடியும்) திருநறையூருக்குச் சூட்டினமுடி, உபயவிபூதிக்கும் சூட்டின நீண்முடியாயிற்று. "விண்முதல் நாயகன் நீண்முடி" [திருவிருத்தம்-ப்] (துன்னுவெயில் விரித்த சூளாமணியிமைப்ப) சூடாமணியின் ஒளி எல்லா ஒளியையும் விஞ்சியிருக்க. துன்னுகை- விஞ்சுகை. அழகு மிகுந்தால் திருஷ்டிதோஷம் படும் என்று மறைப்பாரைப்போலே, சூடாமணியின் ஒளி மற்றவற்றின் ஒளியிலும் விஞ்சிநின்று இளவெயில் போன்று ஒரு திரைபோட்டாற்போலேயிருக்கை.

இன்னிள வஞ்சிக் கொடியொன்று நின்றதுதான்

ஓர் இன் இள வஞ்சி கொடி ஒன்று நின்றது—விலக்ஷணமாய் போக்யமாய் இளையதாயிருப்பதொரு வஞ்சிக்கொடியென்னும்படியான பிராட்டி நின்றாள்;

நேர்பார்க்கமாட்டாமை; பாராதொழியில் தரிக்க மாட்டாமையாதல். (மருங்கே) பெருவெள்ளங்கண்டு தேங்குவாரைப்போலே.

(ஓர்) விலக்ஷணமாய், போக்யமாய் இளையதாயிருப்பதொரு வஞ்சிக்கொடி. கொடியென்றது-அல்லாத பெண்களை "பும்ஸ்த்வகந்தி" என்னும்படியான ஸ்த்ரீத்வம். **साक्षान्मन्मथमन्मथः"** (**ஸாக்ஷாந்மந்மதமந்மத:**) என்னுமாபோலேயொன்று. இவளைப்போக்கி வேறொருவரில்லாமை ரூபகம் முற்றினபடி. த்ருஷ்டாந்தமே பேசும்படியாயிற்று.

(மன்னு மரகதக் குன்றின்) தன்னைப் பற்றிநின்று உலகமெல்லாம் மன்னும்—நிலைநிற்கும் — நீலமலையான எம்பெருமானுடைய. (மருங்கே) அருகிலே பெரிய மடுவாகையாலே உள்ளே இறங்கமுடியாது. அருகிலிருந்து அநுபவிக்குமித்தனை. காதலியானவள் காதலனை நேருக்குநேர் நோக்கமாட்டாமையாலும், நோக்காவிடில் தரிக்கமாட்டாமையாலும், பிராட்டியானவள் கடைக்கண்ணால் பார்க்கலாம்படி அருகிலே நிற்கிறாளாகவுமாம். (மருங்கே) அருகிலேயே. பெருவெள்ளத்தைக் கண்டால் அதிலிறங்கவும் முடியாது; இனிமைமிக்கிருக்கையாலே அகலவும் முடியாது. ஆகையால் அருகிலேயேயிருக்கவேணும். அதுபோலவே பிராட்டியும் அகலகில்லேனிறையுமென்று அருகிலேயேயிருக்கிறபடி.

(ஓர் இன்னிளவஞ்சிக்கொடியொன்று நின்றதுதான்) ஒப்பற்றதாய் இனியதாய், இளையதாயிருக்கிற ஓர் வஞ்சிக்கொடி நின்றது. கொடியென்று இவளைச் சொல்லுகிறது, மற்ற பெண்களெல்லாம் ஆண்வாடை வீசுமவர்கள் என்னலாம்படி பெண்மையின் எல்லைநிலமாயிருப்பவளென்னும் கருத்துடையது. **"ஸாக்ஷாந் மந்மதமந்மத:"** [பாகவதம் 10-32-2] [பகவான் (அழகில்) மன்மதனுக்கும் மன்மதனாயிருப்பவன்.] என்ற அவனைப்போலே நாரீணாமுத்தமையாயிருக்கை. இப்படிச் சொல்லலாவார் வேறொருவருமில்லாமையாலே உருவகம் முற்றி 'வஞ்சிக்கொடி' என்று கொடியாகவே சொல்லுகிறார். உபமானப் பொருளாகவே இவளைப்பேசும்படியாயிற்று. வடமொழியில் இதை ரூபகாதிசயோக்தி என்பர்.

அன்னமாய் மானு யணிமயிலா யாங்கிடையே 78
மின்னு யிளவே யிரண்டா யிணைச்செப்பாய்
முன்னுய தொண்டையாய்க் கெண்டைக்குலமிரண்டாய் 79

அன்னம் ஆய்—(நடையில்) ஹம்ஸமாயும், மான் ஆய்-(நோக்கில்) மானுயும், அணி மயில் ஆய்—(கூந்தலில்) அழகிய மயிலாயும், இடை மின் ஆய்-இடையழகில் மின்னலாயும், இள இரண்டு வேய் ஆய்—(தோளில்) இளையதான இரண்டு மூங்கில்களாயும், இணை செப்பு ஆய்—(ஸ்தநத்தில்) இரண்டு கலசங்களாயும், முன் ஆய தொண்டை ஆய்—(அழகில்) முன்னே நிற்கும் (அதரத்தில்) கொவ்வைக்கனியாயும், குலம் கெண்டை இரண்டு ஆய்—(கண்ணில்) சிறந்த இரண்டுகெண்டை மீன்களாயும்,

---

(அன்னமாய் மானுய்) அன்னம்-நடை, மான்-நோக்கு. (அணிமயிலாய்) அளகபாரம். (இடையே மின்னுய்) நடுவே மின்னுய். (இளவேயிரண்டாய்) இரண்டிள மூங்கில்போலே பசுமையும் சுற்றுடைமையுமுடைய திருத்தோள்கள். (இணைச்செப்பு) ஒன்றுக்கொன்றொப்பு; ஈஶ்வரனையிட்டு வைக்கும் செப்பு. "மலராள்தனத்துள்ளான்". (முன்னுய தொண்டையாய்) எல்லாவற்றிலும் முற்படுகிறது திருவத

"இன்னிளவஞ்சிக்கொடி" என்று ஸமுதாயசோபையைச் சொல்லி, இனி அவயவசோபையை முற்றுவமையாலே பேசுகிறார்: (அன்னமாய்) நடையழகைச் சொல்லுகிறது. (மானுய்) நோக்கழகு. (அணிமயிலாய்) கேசத்தின் அழகு. (இடையே மின்னுய்) மேகத்தினிடையே மின்னல் போலே, கேசபாரத்தினிடையே இடையழகிருக்கிறபடி. (ஆங்கு) மேலும் கீழுமிருக்கையாலே, அனுமானத்தாலே அறியுமித்தனையொழிய, ப்ரத்யக்ஷமாகக் காணமுடியாத ஸந்தேஹஸ்தானம். (இளவேயிரண்டாய்) இள மூங்கில்களிரண்டாய்; உருண்டு நீண்டு பசுமையாய் நேரானதாயிருக்கும் கைகளினழகைச்சொல்லுகிறது. (இணைச்செப்பாய்)ஒன்றுக்கு மற்றென்றே ஒப்பான பொற்கலசங்களாயிருக்கும் ஸ்தநங்களினழகு. நாயகரத்னத்தைப் பாதுகாத்துவைக்கும் செப்பாயிருக்கை. **"மலராள் தனத்துள்ளான்"** [மூன் திருவ-3] **"சங்குதங்குமுன்கை நங்கை கொங்கை தங்கலுற்றவன்"** [திருச்சந்த-57] **"ஸ்ரீஸ்தநாபரணம்"** [ர-ஸ்த] (முன்னுய தொண்டையாய்) அவயவங்களின் அழகுப்போட்டியிலே முதலில் நிற்கும் செங்கனிவாயழகு.

அன்ன திருவுருவம் நின்ற தறியாதே
என்னுடைய நெஞ்சு மறிவு மினவளையும் 80
பொன்னியலும் மேகலையு மாங்கொழியப் போந்தேற்கு
மன்னு மறிகடலு மார்க்கும் மதியுகுத்த 81
இன்னிலா வின்கதிரு மென்றனக்கே வெய்தாகும்

அன்ன-அப்படிப்பட்ட, திரு உருவம்—ஸ்ரீதேவியின் உருவம், நின்றது அறியாதே-(பக்கத்தில்) நிற்கும்படியை அறியாமல், என்னுடைய நெஞ்சும்-எனது நெஞ்சும், அறிவும்—(அந்த நெஞ்சிலுள்ள) அறிவும், இனம்வளையும்-சிறந்த கைவளையும், பொன் இயலும் மேகலையும்-பொன்மயமான ஒட்டியாணமும், ஒழிய போந்தேற்கு-(எல்லாம்) விட்டு நீங்கப்பெற்ற எனக்கு (இதற்குமேலும் துன்பமாம்படி), மன்னு மறிகடலும் ஆர்க்கும்-அசையாத கடலும் கோஷம் செய்யாநின்றது; மதி உகுத்த இன் நிலாவின் கதிரும்-சந்திரன் வெளியிடுகின்ற இனிய நிலாவின் இனிய ஒளியும், என் தனக்கே—எனக்கு மாத்திரம், வெய்து ஆகும்—வெம்மையுடையதாயிரா நின்றது;

ரத்தினழகு. (கெண்டைக்குலமிரண்டாய்) மௌக்த்யத்தாலும் மதமதப்பாலும் இரண்டு கெண்டைபோலேயாயிற்று திருக்கண்கள். (அன்ன) அப்படிப்பட்டதென்னுமத்தனையன்றி இவ்வழகுக்குத்தக்க வாசகமில்லை. (அறியாதே) அறிவுகெட்டு. அறியாமையானபடி எங்ஙனேயென்னில், பருப்பருத்தன சிலபேசி, முடியப் பேசமாட்டாமையாலே. பிரித்துப் பேசும்போது பேசலாம், இருவரும் கூடி நின்றால்

(கெண்டைக்குலமிரண்டாய்) அழகாலும், மதமதப்பாலும் நீளத்தாலும் உருவத்தாலும் இரண்டு கெண்டை மீன்களாயிருக்கும் திருக்கண்ணழகு. (அன்னதிருவுருவம்) அப்படிப்பட்ட பிராட்டியின் திருமேனி. 'அப்படிப்பட்டது' என்னுமித்தனையொழிய இவ்வழகைச் சொல்லலாவன சொற்களில்லை. சிலவற்றைச் சொன்னதொழிய முழுவதும் பேசிமுடியாது. (திருவுருவம் நின்றதறியாதே) அளவிடவொண்ணாத அத்திருவுருவம் அருகுநின்றதறியாமல். "இன்னிளவஞ்சிக்கொடி" என்று பேசியிருக்கும்போது, 'அறியாதே' என்னலாமோ? என்னில்: பெரியபெரிய உவமைகள் சிலவற்றைப் பேசி, முழுவதும் பேசமுடியாமையாலே சொல்லுகிறார். இருவரையும் பிரித்துத் தனித்தனியாகப் பேசினாலும் ஒருவாறு பேசலாம். கூடி நிற்கும்போது பேசவேமுடியாது. கண்ணுக்கும் மனத்துக்கும் அளக்க

பேசமுடியாது. கண்ணுக்கும் மநஸ்ஸுக்குமளக்கவொண்ணாத விஷயமாகையாலும் கண்டாரைக் குமிழ்நீரூட்டும் விஷயமாகையாலும் அறியாதேயென்றுமாம்.

(நெஞ்சுமறிவும்) நெஞ்சாவது அறிவு இட்டுவைக்குங் கலம். (ஆங்கொழிய்) வெறுந்தரையாகப்போந்தேன். வாழச் சென்று உள்ளதெல்லாங் கொடுப்பாரைப்போலே, ஸர்வத்தையுமிழந்து, கடலில் துரும்புபோலே ஸௌந்தர்யதரங்கங்கள்வீச, "மடலோ" என்று புறப்பட்டபடி. (மன்னும்) சலியாதகடல். ராஜத்ரோஹிகளைக் கண்டாற்போலே கூப்பிடத்துடங்கிற்று. (என்றனக்கே) நாட்டை வாழ்வித்து என்னை நலியாநின்றது.

முடியாத விஷயமாகையாலும், கண்டாரை "காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்" [பெரியதிருவ-34] என்கிறபடியே ஆநந்தகடலில் முழுகச்செய்து அறிவிழக்கச்செய்யும் விஷயமாகையாலும் 'அறியாதே' என்று கூறுவதாகவுமாம். எம்பெருமானைத் தேடி வரும்போது, இப்பிராட்டியும் அருகிலிருப்பாளென்பதை அறியாமல் வந்துவிட்டேன்; தெரிந்திருந்தால் இவ்வழகுக் கடலில் அகப்படாமல் விலகியிருந்து தப்பியிருக்கலாம் என்று கருத்தாகவுமாம்.

(என்னுடைய நெஞ்சும்) ஒன்றுக்குமழியாத என்னுடைய நெஞ்சும் அழிந்தது. (நெஞ்சும் அறிவும்) அறிவையிட்டுவைக்கும் செப்பாயிருப்பது நெஞ்சு. செப்போடே தனத்தைப் பறிகொடுத்தேன். (இனவளையும்) ஆபரணமான வளையும். (பொன்னியலும் மேகலையும்) சிறந்த ஒட்டியாணமும். (ஆங்கொழியப் போந்தேற்கு) வெறுந்தரையானேன். (நெஞ்சும் அறிவும் ஒழிய) கண்ணிழந்தேன். (இனவளையும் மேகலையும் ஒழிய) தனமிழந்தேன். 'வாழலாம்' என்று போனவிடத்திலே, உள்ளதையும் இழப்பாரைப்போலே, அனைத்தையுமிழந்து, கடலில் துரும்புபோலே அழகாகிற அலைகளால் அலைப்புண்டு, மடலெடுக்கப் புறப்பட்டபடி. (மன்னும் மறிகடலும் ஆர்க்கும்) முன்பெல்லாம் அசையாது கிடந்த கடல், இப்போது 'அறையோ!' என்று சப்தமிடாநின்றது. (ஆங்கொழியப் போந்தேற்கு மன்னும் மறிகடலுமார்க்கும்) நொந்தவர்களைக் கண்டால் 'ஐயோ!' என்னவேண்டியிருக்க, அப்படிச் செய்யாமல், ஸர்வேச்வரன் இவ்வுலகிற்குக் காவலாகக் கற்பித்த கடல், ராஜத்ரோஹிகளைக் கண்டாற்போலே அறைகூவி அழையாநின்றது. (மதியுகுத்த இன்னிலா இன்கதிரும்

தன்னுடைய தன்மை தவிரத்தா னென்கொலோ 82
தென்னன் பொதியில் செழுஞ்சந்தின் தாதளைந்து
மன்னிவ் வுலகை மனங்களிப்ப வந்தியங்கும் 83
இன்னிளம் பூந்தென்றலும் வீசுமெரியெனக்கே
முன்னிய பெண்ணைமேல் முள்முளரிக் கூட்டகத்துப் 84
பின்னுமவ் வன்றில் பெடைவாய்ச் சிறுகுரலும்

தன்னுடைய தன்மை தவிர தான் என்கொல் — நிலாவின் தன்மையாகிய குளிர்த்தி தவிர்ந்து இப்படி வெப்பமாம்படி யாரேனும் ஏதாவது செய்துவிட்டார்களோ? தென்னன் பொதியில்-தென்திசைக்குத் தலைவனான பாண்டியராஜனது மலையமலையிலுள்ள, செழு சந்தின் தாது அளைந்து — அழகிய சந்தனமரத்தின் பூந்தாதுகளை அளைந்துகொண்டு, மன் இ உலகை மனம் களிப்ப வந்து இயங்கும் — நித்யமான இந்த லோகத்திலுள்ளவர்கள் மனம் மகிழும்படி வந்து உலவுகின்ற, இன் இள பூ தென்றலும் — இனியதாய், இளையதாய், மணம்மிக்க தென்றற்காற்றும், எனக்கே எரி வீசும் — எனக்கு மாத்திரம் நெருப்பை வீசுகின்றது; முன்னிய பெண்ணை மேல் — முன்னே காணப்படுகிற பனைமரத்தில், முள் முளரி கூடு அகத்து — முள்ளையுடைய தாமரைத் தண்டினால் செய்யப்பட்ட கூட்டிலே, பின்னும் அவ் அன்றில் பெடை வாய் சிறு குரலும் — வாயலகு கோத்துக் கொண்டிருக்கிற அன்றிற் பேடையின் வாயிலுண்டான சிறிய குரலும்,

---

(தன்னுடைய) "शीतो भव हनूमतः" (சீதோ பவ ஹநூமத:) என்ன, நெருப்புக்குளிருமாபோலே, "நிலாச்சுடுக" என்று நினைப்பிட்டதோ? இதுக்குக் காரணமென்? என்கிறாள்.

என்றனக்கே வெய்தாகும்) சந்திரனானவன் வெளிவிட்ட இனிய நிலவின் இனிய ஒளியும் எனக்கே சுடும். (இன்னிலா—இன்கதிர் என்றனக்கே வெய்தாகும்) உலகினரனைவர்க்கும் இனிதாயிருப்பது எனக்கு மாத்திரம் சுடாநின்றது. மதியென்று சந்திரனையும், நிலாவென்று கிரணத்தையும் சொல்லும்போது 'கதிர்' என்று எதைச் சொல்லுகிறது? எனில்: நிலாவாகிற கிரணமும் தேஜோத்ரவ்யமாயிருக்கையாலே, அதனுடைய குணமான ஒளியைச் சொல்லுகிறது. "இந்நிலா" என்று பாடங்கொண்டு "இந்த நிலாவென்று ப்ரத்யக்ஷமாகவுமாம்" என்று விவரித்தார் நாயனார்.

(தன்னுடைய தன்மை தவிரத்தான் என்கொலோ) "சீதோ பவஹநூமத:" [ரா-ஸு 53-29] [அக்னியே! அனுமனுக்குக் குளிர்ந்தவனாய்]

(தென்னன்பொதி) மலயபர்வதம். (மன்னி) லோகத்தை வாழ்விக்கைநித்யமானாற்போலேஎனக்கொருத்திக்குச் சுடுகை நித்யமாயிற்று. (வீசும்) விரஹாக்நி தன்மேல் தட்டாமே.

(முன்னிய) முன்பேநின்ற பனை. (முள்முளரி) முள்ளை யுடைத்தான தாமரைத்தண்டாலே செய்தகூடு. நெஞ்சுக்குப்

என்று பிராட்டி சுடும் அக்னியைக் குளிரும்படி ஸங்கல்பித்தாற்போலே குளிர்ந்த சந்திரனைச் சுடும்படி ஸங்கல்பித்தாருண்டோ? சந்திரனைமாத்திரம் சொல்லுவதாகக்கொள்ளாமல், முன்னேயெடுத்த கடலையும், பின் எடுக்கும் தென்றல் முதலானவற்றையும் சொல்லுவதாகக்கொண்டு, 'அந்தந்தப் பொருள்களின் தன்மைகள் மாறும்படியாக ஸங்கல்பித்தாருண்டோ?' என்பதாகவும் கொள்ளலாம்.

(தென்னன் பொதியில் செழும் சந்தின் தாதளைந்து மன்னிவ்வுலகை மனங்களிப்ப வந்தியங்கும் இன்னிளம் பூந்தென்றலும் வீசுமெரியெனக்கே) பாண்டியனுடையதான பொதிய (மலய) மலையிலே பிராகும் அழகிய சந்தனமரத்தின் தாதுக்களை அளைந்து கொண்டுவந்து, ப்ரவாஹரூபேண நித்யமான இந்த உலகம் மனம் களிக்கும்படி உலாவும் இனிய இளைய மணம்மிக்க தென்றலும் என் ஒருத்திக்கே நெருப்பை வீசாநின்றது. (மன்னிவ்வுலகம்) "ப்ரவாஹரூபேண நித்யமான இந்த லோகமானது" என்று நாயனார். "மன்னியிவ்வுலகம்" என்பது இடைக்குறையாயிருப்ப தாகக் கொண்டு, "லோகத்தை வாழ்விக்கை நித்யமானாற்போலே, எனக் கொருத்திக்குச் சுடுகை நித்யமாயிற்று" என்று விவரித்தருளினார் ஆச்சான்பிள்ளை. "மன்னி இயங்கும்" என்று அந்வயம். (வீசும் எரி) என்னுடைய விரஹாக்னி தன்மேல் படாதபடி தூரநின்று என்மேலே நெருப்பை வீசாநின்றது. (எனக்கே) என் ஒருத்திக்கே இப்படிச் செய்கின்றது.

(முன்னிய பெண்ணைமேல்) முன்னே நிற்கும் பனைமரத்தின்மேல். (முள்முளரிக் கூட்டகத்து) முள்ளையுடைய தாமரைத்தண்டாலே செய்த கூட்டினுள். முள் கூட்டினுள்ளேயிருக்கையாலே, பிறரைத்துன்புறுத்தும் கண்டகஸ்வபாவம் வந்ததுபோலும் என்று கருத்து. (பின்னும்) முன் சொன்னவற்றுக்குமேலே; ஆண்பறவையும் பேடையும் ஒன்றோடொன்று வாயலகுபின்னிக்கொண்டிருப்பதைச் சொல்லவுமாம். அவற்றின் கலவி யின்பம் இவளுடைய விரஹத்துன்பத்தை வளர்க்கிறது. (அவ்வன்றில் பெடைவாய்ச் சிறுகுரலும்) கலவியின்பத்தாலே ஆநந்தம்மிக, வெளிவரும்

என்னுடைய நெஞ்சுக்கோ ரீர்வாளா மென்செய்கேன் 85
கன்னவில்தோள் காமன் கருப்புச் சிலைவளையக்
கொன்னவிலும் பூங்கணைகள் கோத்துப் பொதவணைந்து 86
தன்னுடைய தோள்கழிய வாங்கித் தமியேன்மேல்
என்னுடைய நெஞ்சே யிலக்காக வெய்கின்றாள் 87
பின்னிதனைக் காப்பீர்தா னில்லையே பேதையேன்

என்னுடைய நெஞ்சுக்கு ஓர் ஈர் வாள் ஆம்—எனது நெஞ்சை அறுக்கின்ற ஒப்பற்ற வாளாக இராநின்றது; என் செய்கேன்—(தப்பிப் பிழைக்க) என்ன உபாயஞ் செய்வேன்? கல் நவில் தோள் காமன் — மலைபோல் (திண்ணிய) தோள்களையுடையனான மன்மதன், கருப்புச் சிலை வளைய—(தனது) கரும்பு வில்லை வளைத்து, கொல்நவிலும் பூ கணைகள் கோத்து — (அந்த வில்வில்) கொலைசெய்யவல்ல புஷ்பபாணங்களைத் தொடுத்து, பொத அணைந்து—(அம்பு) ஊடுருவிச்செல்லும்படி அருகில்நின்று, தன்னுடைய தோள் கழிய வாங்கி — தனது தோள்வரையில் இழுத்து, என்னுடைய நெஞ்சே இலக்கு ஆக தமியேன் மேல் எய்கின்றான்—எனது நெஞ்சையே குறியாகக்கொண்டு துணையற்ற என்மீது அந்த அம்புகளைப் பிரயோகிக்கிறான்; பின் இதனை காப்பீர்தான் இல்லையே — இப்போது இந்த ஆபத்தில்நின்றும் என்னைத் தப்புவிக்க வல்லீரில்லையே !

புறம்பு நலிகைதவிர்ந்து நெஞ்சையீராநின்றது. (என்செய்கேன்) பிழைக்கவிரகில்லை.

(கல்நவில்) பெண்களை நலியநலியப் பூண்கட்டுந்தோள். (பொதவணைந்து) இலக்குத்தப்பாமல்நின்று. (நெஞ்சேயிலக்

சிறுகுரலும். ,(என்னுடைய) முன்பே அழிந்து கிடக்கும் என்னுடைய (நெஞ்சுக்கு ஓர் ஈர்வாளாம்) முன் சொன்னவையெல்லாம் என் உடலை வாட்டிவதைத்தன. இது நெஞ்சையே வாள் (ரம்பம்) கொண்டு அறுப்பது போலே அறுக்கின்றது. (என் செய்கேன்)அபலையான நான் என்செய்வேன்? பிழைக்க வழியில்லை.

(கல்நவில் தோள் காமன்) பெண்களைத் துன்புறுத்தத் துன்புறுத்தக் கல்லைப்போல் உறுதியடையும் தோளையுடைய காமன். (கருப்புச் சிலை வளைய) கரும்பாயினித்தாலும் கடுமையிலே குறையில்லை. (கொல் நவிலும் பூங்கணைகள் கோத்து) பூங்கணைகளாயினும் கொலைசெய்வதில் தவறாது.

காக) பெருமாளிலிவனுக்கு விசேஷம் – அமூர்த்தமான நெஞ்சை இலக்காகவெய்கிறான், மாறுகிறிலன். "**शरवर्षं ववर्ष ह**" (**சர்வர்ஷம் வவர்ஷ ஹ**) இம்மூலபலத்தைப் பெற்ற போதே. என்னுடைய நெஞ்சென்கிறது-அவனுடைய நெஞ்சிலும் ஓரம்புபட்டாலோவென்கிறது.

(பின்னிதனை)"**लक्ष्मणस्य च धीमतः**"(**லக்ஷ்மணஸ்ய ச தீமத:**) என்னும்படியே பெருமாள்கையில் வில்லை வாங்கினாற்போலே காமன்கையில் வில்லை வாங்குவானொரு தம்பியில்லையே. கடகிட்டுக் காப்பாரில்லையேயென்று.

(போத அணைந்து) ஒருபுறம் அம்பெய்தால் குறிதவறாமல் துளைத்துக் கொண்டு மறுபுறம் வெளிவரும்படி அருகிலேயே நின்று. (தன்னுடைய தோள் கழிய வாங்கி) அம்பெய்யும்போது மார்வை மிகவும் வளைக்கையால் இவனுடைய தோள் மிகவும் விலகிப்போகிறது. நாணைத் தோள்வரையி விழுப்பதைச் சொல்லுவதாகவுமாம். (தமியேன்மேல்) இவனம்புக்கு இலக்கான மூலபலபலம் இருந்தபடி காணீர்! அபலையை வருத்தும் வீரன் கிடீர்! (என்னுடைய நெஞ்சேயிலக்காக) தனிவீரனான ராமனையும் விஞ்சிவிடுகிறான் கிடீர்! அவன் உருவுள்ளவற்றையே குறிதப்பாமல் அடிப்பான். இவன் உருவற்ற என்நெஞ்சையே குறிதப்புவதில்லை. (எய்கின்றான்) என்னும் நிகழ்காலத்தாலே, எய்துகொண்டேயிருக்கிறான், கைவாங்குவதில்லை யென்கிறது. "**சரவர்ஷம் வவர்ஷ ஹ**" [ரா-யு 94-18] [சரமழை பொழிந்தான்] என்கிறபடியே ராமபிரான் மூலபலத்தைப் பெற்றவுடன் வீரங்காட்டினாற்போலே, இவன் தமியேன் நெஞ்சாகிற மூலபலத்தைப் பெற்றவுடன் வீரம் விளைத்தான். (என்னுடைய நெஞ்சே) தன்னுடைய நெஞ்சிலும் இவ்வம்புகளிலே ஒன்றுபட்டிருந்தால் இவ்வருத்தம் தெரியும் அம்மாபாவிக்கு; அது இல்லாமையாலே இக்கொடுந்தொழில் புரிகிறான்.

(பின்னிதனைக் காப்பீர்தான் இல்லையே) "**ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாம்யஹம்**" [ரா-ஆர 64-75] [மலைகளோடு கூடிய உலகையே அழித்துவிடுவேன்] என்று ராமபிரான் சொன்னபோது, "**லக்ஷ்மணஸ்ய ச தீமத:**" [ ] [புத்திமானான லக்ஷ்மணனுடையவும்] என்கிறபடியே அறிவாளியானலக்ஷ்மணன் நல்வார்த்தைசொல்லிவில்லை வாங்கினாற்போலே, இக்காமன்கையில் வில்லை வாங்குவார் ஒருவருமில்லையோ என்று கதறுகிறாள். புருஷகாரம் (கடகக்ருத்யம்) செய்து காப்பாரில்லையே என்கிறாள்.

கன்னவிலும் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின் 88
நன்னறு வாசமற் றுராரானு மெய்தாமே
மன்னும் வறுநிலத்து வாளாங் குகுத்ததுபோல் 89
என்னுடைய பெண்மையு மென்நலனு மென்முலையும்

கல் நவிலும் காடு அகத்து—கல்மயமான காட்டினுள்ளே, ஓர் வல்லி—ஒரு கொடியில் (பூத்த) கடி மலரின்-மதுமிக்கமலரினுடைய, நல் நறு வாசம்-நல்ல பரிமளம், மற்று ஆரானும் எய்தாமே—யார்க்கும் உபயோகப்படாமல், மன்னும் வறு நிலத்து ஆங்கு வாளா உகுத்ததுபோல்—அந்த வெறுந்தரையிலேயே வீணாகக்கழிவதுபோல், பேதையேன் என்னுடைய பெண்மை—அறிவற்றவளான என்னுடைய ஸ்த்ரீத்வமும், என் நலனும்—எனது குணங்களும், என் முலையும்-எனது முலைகளும்,

---

(பேதையேன்) இவ்வாபத்துக்கிட்டுப் பிறந்தாளொருத்தி. (கல்நவிலும்) (ஓர்வல்லி) விலக்ஷணமான வல்லி. (கடிமலர்) மதுவையுடைய மலர். (நல்நறுவாசம்) நல்ல பரிமளம். (மற்றாரானும்) ஒரொருத்தர்க்கு. (வறுநிலம்) வெறும் தரை.

(பேதையேன்) இவ்வாபத்துக்கென்றே இட்டுப்பிறந்த அபலை. முடிந்து பிழைக்கவும் முடியாமல், "காணலாமோ" என்னும் சாபல்யத்தையுடைய நான். (கல் நவிலும் காட்டகத்து) கற்கள் நெருங்கின காட்டினுள்ளே. ஸ்வாபதேசத்திலே "பெரும் தூறாய்" [திருவாய் 10-10-8] என்று சொல்லப்படும் ஸம்ஸாரமாகிற துன்பம் நிறைந்த காட்டிலே என்று பொருள். (ஓர் வல்லி) அக்காட்டிலே ஒப்பற்றதொரு கொடி. ஸ்வாபதேசத்திலே ஜீவன். (கடிமலரின்)அக்கொடியிலொரு மதுமிக்க மலர்; ஸ்வாபதேசத்திலே ஜீவனுடைய இனிய ஜ்ஞாநம். (நன்னறு வாசம்) அம்மலரிலே மிகச்சிறந்த மணம். ஸ்வாபதேசத்திலே அந்த ஜ்ஞாநத்திலே பிறக்கும் பக்தி முதலானவைகள். (மற்றாரானுமெய்தாமே) தனக்காகவல்லாமல் பிறர்க்காகவே ஏற்பட்ட இந்த மணத்தை அதற்குரியவர்கள் பெறுமல் பக்தி முதலானவற்றுக்கு ஸர்வேச்வரன் விஷயமாகப் பெறுமல் என்று ஸ்வாபதேசம். (வறு நிலத்து வாளாங்குகுத்ததுபோல்) வெறுந்தரையிலே வீணாக விழுந்ததுபோல். பரமபுருஷனுக்குரிய பக்தி முதலானவை க்ஷுத்ரர்களுக்கு உரியதாகி வீணாவதுபோல் என்று ஸ்வாபதேசம். (என்னுடைய பெண்மையும் என் நலனும் என்முலையும்) ஸ்வாபதேசத்திலே **பெண்மை**-ஸ்வரூபமான பாரதந்திரியம், **நலம்**-விசேஷணமான ஆத்மகுணங்கள்; **முலை**-போக்யமான பக்தி.

மன்னு மலர்மங்கை மைந்தன் கணபுரத்துப் 90
பொன்மலைபோல் நின்றவன்றன் பொன்னகலம்
தோயாவேல்

மலர் மங்கை மன்னும் மைந்தன்—பூவிலுள்ள பெரியபிராட்டி நிலையாகச் சேர்ந்த பரமபுருஷனும், கணபுரத்து பொன் மலைபோல் நின்றவன் தன்—திருக்கண்ணபுரத்தில் பொன்மலைபோல் நிற்பவனுமுள்ள எம்பெருமானுடைய, பொன் அகலம் தோயா ஏல் — அழகிய திருமார்பிலே சேரவில்லையே;

(மன்னு) மலர்மங்கை மன்னும் மைந்தன். (பொன் அகலம்) கூடவிருந்தே இவளும் "தண்ணீர் தண்ணீர்" என்னும்மார்வு. (தோயாவேல்) அப்படி ஸ்ப்ருஹணீயமான மார்விலே தோயப்பெறுத இன்னுப்பு. விடாய்த்தார் நினைத்த மடுவில் முழுகப்பெறுதாற்போலே. "மெல்லியல்தோள்

(மன்னு மலர் மங்கை மைந்தன்) மலர்மங்கை மன்னும் மைந்தன் என்று அந்வயம். தாமரைமலரில் எழுந்தருளியிருக்கும் பிராட்டி நித்ய வாஸம் செய்யும் நித்யயுவா. (மைந்தன்) "யுவாகுமார:" [ருக்வேத விஷ்ணுஸூக்தம்] [நித்ய யௌவனத்தையுடையவனுகவும், சிறிது குமாரனுகவுமிருப்பவன்] "யுவா ஸுவாஸா:" [யஜுர்வேதம்] என்கிறபடியே பெரியபிராட்டியார் நித்யவாஸம் பண்ணுகையாலே என்றும் வாலிபனுயிருப்பவன். (கணபுரத்துப் பொன்மலைபோல் நின்றவன்) திருக்கண்ணபுரத்திலே மேருமலைபோலே சிறந்தவடிவோடு நிலையாக நின்றவன். (கணபுரத்து) மேருவைப்போலே ஒருவரும் செல்ல அரிதான மலையல்ல; எல்லார் கண்ணுக்கும் இலக்காகி நிற்கும் மலை. (பொன் அகலம்) நீரின் இனிமையாலே குடிக்கக்குடிக்கத் 'தண்ணீர் தண்ணீர்' என்பாரைப்போலே, மார்பிலே மன்னியிருக்கும் மலர்மங்கையும் இதையே நினைத்திருக்கும் படியான சிறப்பையுடைய மார்வு. (தோயாவேல்) தோயவில்லையே; 'ஏல்' என்பது மார்வில் அணையாமையால் ஏற்பட்ட வருத்தத்தைக் காட்டுகிறது. அன்றிக்கே, 'தோயாவிடில் எனக்கென்ன பயன்?' என்று மேலோடே கூட்டிப்பொருள்கொள்ளவுமாம். (தோயாவேல்) "மரதகமணித்தடம்" "வாசத்தடம்" "சீதமிவ ஹ்ரதம்" என்று சொல்லப்படுமவனுகையாலே விரஹதாபம் தீர, அவன் மார்வாகிற குளிர்மடுவிலே நனையவில்லையே என்கிருள். "மெல்லியல் தோள் தோய்ந்தாய்" [திருநெடு-13] என்கிற

என்னிவைதான் வாளா வெனக்கே பொறையாகி 91
முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர்
மன்னு மருந்தறிவீ ரில்லையே மால்விடையின் 92

வாளா இவை என் — வீணான இந்த வஸ்துக்கள் எதுக்கு? (இவை) — இம்முலைகளானவை, எனக்கே பொறையாகி — எனக்கு ஒருத்திக்கே வீண் பாரமாகி, முன் இருந்து — கண்ணெதிரே இருந்துகொண்டு, மூக்கின்று — மேன்மேலும் மூப்படைகின்றது, மூவாமை காப்பது ஓர் — அப்படி மூப் படையாமல் தடுக்கவல்ல ஒரு, மன்னு மருந்து அறிவீர் இல்லையே—சிறந்த மருந்து கண்டறிவாருமில்லையே. மால் விடையின் — (பசுவின்மேல்) மோஹங்கொண்ட எருதுகளினுடைய,

---

தோய்ந்தாய்'' என்னுமாபோலே அவனும் இத்தலையில்படி. (என்னிவைதான் வாளா) "**पश्य लक्ष्मण पुष्पाणि निष्फलानि**'' (பஶ்ய **லக்ஷ்மண புஷ்பாணி நிஷ்ப்பலாநி**) நிஷ்ப்பலமானவை எனக் கென்செய்ய? (எனக்கே பொறையாகி) இருவர் சுமக்கக்

படியே அவனும் விரஹம் மேலிடும்போது இவளுடைய தோளாகிற தடாகத்திலன்றோ தோய்வது. "பொன்னகலமாகையாலே இவள் விரஹாக்னி பட்டு நீராயுருகும்; அப்போது தோயலாம் என்றிருக்கிறாள். இவளும் * ஹிரண்யவர்ணையிறே'' என்று நாயனார் அருளிச்செய்தார். "**ஹிரண்யவர்ணா**'' [பொன்னிறமுடையவள்] என்று ஸ்ரீஸூக்தம். "**ஸ்த்ரீ நாம்நீ லக்ஷ்மீ:**'' [பெண்களெல்லாம் லக்ஷ்மியின்அம்சம்] என்னும் விஷ்ணு புராணச்லோகத்தையொட்டிப் பரகாலநாயகியைப் பிராட்டியாகவே வைத்துப்பேசியபடி. (என்னிவைதான் வாளா)பிராட்டியைப் பிரிந்தவுடன் ராமபிரான்"**பச்ய லக்ஷ்மண புஷ்பாணி நிஷ்பலாநி பவந்தி மே**"[ரா-கி 1-44] [லக்ஷ்மணா! எனக்குப் பயனற்றுப்போகும் பூக்களைப் பார்] என்று அவள் அனுபவிக்காத பூக்கள் தனக்குப் பயனில்லாதவை என்றதுபோலே அவனனுபவிக்காத என்னுடைய பெண்மையும் என் நலனும் என் முலையும் எனக்கென்ன பயன் என்கிறாள். (எனக்கே பொறையாகி) அவன் சுமந்து இன்புறுகைக்காக நான் சுமக்கவேண்டியது இம்முலைகள். அவன் சுமக்காத போது என் ஒருத்தியால் சுமக்கமுடியுமோ என்கை.

"**கொள்ளும் பயனொன்றில்லாத**
கொங்கைதன்னைக் கிழங்கோடும்

கடவ முலையை ஒருவர் சுமக்கப்போமோவென்கை. (முன்னிருந்து) என் கண்கள்காண மூக்கவேணுமோ? என்னை விட்டுக் கடக்கநின்று மூக்கலாகாதோ? "**वयोऽस्या ह्यतिवर्तते**" (**வயோஸ்யா ஹ்யதிவர்த்ததே**) என்ற பெருமாளைப் போலே. உன்னித்தெழுந்தவென்தடமுலை பட்டபாடு. (மூவாமை) அவனைக் கொடுவந்து தருவாரில்லையே. (மன்னு மருந்து) "**समुद्रं राघवो राजा शरणं गन्तुमर्हति**" (**ஸமுத்ரம் ராகவோ ராஜா ஶரணம் கந்துமர்ஹதி**) என்று கடலைச் சர

அள்ளிப் பறித்திட்டு அவன் மார்வில்
எறிந்து என் அழலை தீர்வேனே" [நாச்-திரு 13-8]

என்றுளன்றே ஆண்டாளும். (முன்னிருந்து மூக்கின்று) என் கண் முன்னே மூப்படைகின்றது. அணையவேண்டிய பருவத்திலே அணையாமல் காலங்கடந்த பின்போ அணைவது? (முன்னிருந்து) கண்காணாத முதுகிலே யிருந்து மூப்படைந்தாலும் பொறுக்கலாம். கண்காண மார்விலேயிருந்து காணக்காணச் செவ்வியழிகின்றது. (மூக்கின்று) வயது செல்கின்றது.

"ந மே து:க்கம் ப்ரியா தூரே ந மே து:க்கம் ஹ்ருதேதி வா।
ஏததேவாநுஶோசாமி வயோ஽ஸ்யா ஹ்யதிவர்த்ததே ॥"

[ரா-யு 5-5]

[என் கருத்துக்கினியவள் தூரத்திலிருக்கிறாளென்றோ, அபஹரிக்கப் பட்டாளென்றோ நான் வருந்தவில்லை. இவள் வயது கடந்துசெல்கின்றதே என்றே நான் வருந்துகிறேன்] என்று ராமபிரான் உரைத்தது போலே உரைக்கிறாள். 'மூக்கின்று' என்றது வளர்கின்றது என்றுமாம். **"உன்னித்தெழுந்த என் தடமுலைகள்"** [நாச்-திரு 1-5] என்ற நாச்சியாரைப்போலே. (முன்னிருந்து மூக்கின்று) என் கண்கள் காணச் செவ்வியழிய வேணுமோ? தள்ளிநின்று செவ்வியழிந்தாலும் பொறுக்கலாமே. (மூவாமை...அறிவீரில்லையே) அவனைக்கொண்டு தருவதன்மூலம் இதை மூப்படையாமல் காப்பவரில்லையோ? (மன்னு மருந்தறிவீரில்லையே) **"பேஷஜம்"** [விஷ்ணுஸஹஸ்ரநாமம்] [மருந்து] என்று பெயர்பெற்ற தப்பாத மருந்தை அறிவீரில்லையோ? "அரசரான ராகவர் கடலரசனை சரணமடையவேண்டும்" [ரா-யு 19-31] என்று 'கடலைச் சரணம் புகவேணும்' என்று உபதேசித்த விபீஷணனைப்போலே "மடலைச் சரணம் புகு" என்பா

துன்னு பிடரெருத்துத் தூக்குண்டு வன்தொடரால்
கன்னியர் கண்மிளிரக் கட்டுண்டு மாலைவாய்த் 93
தன்னுடைய நாவொழியா தாடும் தனிமணியின்
இன்னிசை யோசையும் வந்தென் செவிதனக்கே 94
கொன்னவிலு மெஃகில் கொடிதாய் நெடிதாகும்
என்னிதனைக் காக்குமா சொல்லீர் இதுவிளைத்த 95

துன்னு பிடர் எருத்து—பெருத்த பிடரியிலுள்ள முசுப்பிலே, தூக்குண்டு-தூக்கப்பட்டு, கன்னியர் கண்மிளிர—சிறுபெண்களின் கண் விழிக்கும்படி, வன் தொடரால் கட்டுண்டு-வலிதான கயிற்றாலே கட்டப்பட்டு, மாலை வாய்-ஸாயம் ஸந்தியாகாலத்தில், தன்னுடைய நா ஒழியாது ஆடும் தனிமணியின்-தனது நாக்கு ஓயாமல் ஆடிக்கொண்டிருக்கப்பெற்ற ஒப்பற்ற மணியினுடைய, இன் இசை ஓசையும் வந்து—இனிதான இசைபோன்ற ஒலியும் வந்து, என் செவி தனக்கே — என்னுடைய காதுக்குமாத்திரம், கொல் நவிலும் எஃகில் கொடிது ஆய் நெடிது ஆகும் — கொலைசெய்யவல்ல வேலைக்காட்டிலும் கடூரமாகி நீளாநின்றது; இதனை காக்கும் ஆ என்—இந்த ஆபத்திற்குத் தப்பிப்பிழைக்கும் வழி என்ன? சொல்லீர்—(ஏதாவது உபாயம் உண்டாகில்) சொல்லுங்கள். இது விளைத்த — (தென்றல் முதலானவை பாதகமாம்படி) இப்படிப்பட்ட நிலைமையை உண்டுபண்ணின

ணம்புக என்றாற்போலே. "மடலைச் சரணம்புகு" என்பாரில்லையே. "இங்கு ஓராந்தராளிகர் இல்லையோ? என்று கேட்கிறாள்" என்று பட்டர்.

(மால்விடையின்) நாகின் மேலே பித்தேறின விடையின். (துன்னு) கடியுடைத்தான பிடரியில் கழுத்திலே தூக்

ரில்லையோ என்றுமாம். "ஜகத்திலே ஓராந்தராளிகளைக் கிடையாதோ?" என்று பட்டர் அருளிச்செய்ய நான் கேட்டேன் என்று நம்பிள்ளை அருளிச்செய்ததாக நாயனார் வியாக்கியானத்தில் காணப்படுகிறது. ஆந்தராளிகராவது-நாயகநாயகிகளிடையே ஊடலைத் தீர்த்துவைக்கும் கடகர்கள். "அங்குற்றேனல்லேன் இங்குற்றேனல்லேன்" [திருவாய்5-8-2] என்கிறபடியே பரமபதத்தையுமடையாமல், இவ்வுலகிலும் ஒட்டாமல் இடையிலிருக்கும் முமுக்ஷுக்கள் ஒருவருமில்லையோ?" என்று பொருளாகவுமாம்.

"மன்னு மருந்தறிவீரில்லையே" என்று கதறியபின்பு, மேலும் நோயை வளர்க்கும் ஸம்பவங்கள் நிகழ்ந்ததைக் கூறுகிறாள் மேலே. (மால்விடையின்)

குண்டு. (வன்தொடரால் கட்டுண்டு) தார்மிகர்களுக்கு அவிழ்த்துவிடவொண்ணுதபடி பிணக்கை. (கன்னியர்) ப்ரணயத்தில் புதியதுண்டறியாதாரும் வெருவிவிழிக்கை. (மாலைவாய்) ஊடல் தீரும்காலம். (தனிமணி) வ்யஸநிக்கைக்குத் தானே தனியென்னுமத்தனை. (இன்னிசையோசை) இனிய பாட்டுக்கேட்டால் படுமோபாதி படுத்தவற்றுயிருக்கை. (செவிதனக்கே) ஹ்ருதயத்திலே வருவதற்குமுன்னே செவியிலே சுட்டுக்கொடுவரும். (நெடிதாகும்) ஓரீட்டிலே முடித்துவிடாதே சித்ரவதம்பண்ணும். (என்னிதனைக் காக்

பசுவின்மேல் காதலால் மயங்கிய எருதினுடைய. (துன்னு பிடர் எருத்துத் தூக்குண்டு) நெருங்கிய கழுத்திலேயுள்ள முசுப்பிலே தூக்கப்பெற்றதாய். (வன் தொடரால் கட்டுண்டு) இவ்வொலியைக்கேட்டு நான் படும் பாட்டைக்கண்ட சில தார்மிகர்கள் இச்சங்கிலியை அவிழ்க்க நினைத்தாலும் அவிழ்க்கவொண்ணுதபடி வலிய சங்கிலித் தொடரால் கட்டுண்டு. (கன்னியர் தம் கண்மிளிரக்கட்டுண்டு) காதல் என்பதென்னவென்று அடியோடு அறியாத கன்னிகளும் இவ்வொலியைக்கேட்டு பயந்து தூக்கத்திலிருந்து விழிக்கும்படியாகக் கட்டப்பெற்றதாய். (மாலைவாய்) பசுவுக்கும் எருதுக்கும் ஊடல் தீர்ந்து கூடல் நடைபெறும் காலம். தன்னேடு நாயகன் கூடவில்லையே என்னும் வருத்தத்தை விளைக்கும் காலம். (தன்னுடைய நாவொழியாதாடும்) பசுவானது கூட இசையாமல் ஓடுகின்றது. அதனிடம் ஆசையாலே எருது துடர்ந்து ஓடியவண்ணமிருக்கிறது. அதனுல் எருதின் கழுத்தில் கட்டியிருக்கும் மணி ஓயாமல் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இது நாயகிக்கு நாயகனின் கலவியின்பத்தை நினைவுறுத்தி நலிகின்றது. (நாவொழியாதாடும்) சிறிதுநேரம் ஒலிக்காமலிருந்தாலும் இந்நினைவின்றியிருக்கலாம். இடைவிடாமல் ஒலித்துத் துன்புறுத்துகிறதே. (தனிமணியின்) துன்புறுத்துவதில் தனக்கு இணை தானே என்றிருக்கும் மணியினுடைய. (இன்னிசையோசை) இனிய இசையைக் கேட்பார் உருகுவதுபோலே என்னை உருகவைத்த ஓசை. மற்றுள்ளார்க்கு இனிய இசையையுடைய ஒலி என்றுமாம். (வந்தென் செவிதனக்கே) மற்றுள்ளார்க்கு இன்னிசையோசையாயிருப்பது என் ஒருத்திக்கே கொடியதாயிருந்தது. (செவிதனக்கே) நெஞ்சிற் படுவதற்கு முன் செவியிலேயே சுட்டுக்கொண்டு வருகிறது. (கொன்னவிலும் எஃகில் கொடிதாய்) பார்க்கும்போதே கொலையைக் கோட்சொல்லும் ஈட்டியைக் காட்டிலும் கொடியதாய். (நெடிதாகும்) ஈட்டியாவது ஒரு குத்திலே முடித்துவிடும். அதோடு

மன்னன் நறுந்துழாய் வாழ்மார்பன் மாமதிகோள்
முன்னம் விடுத்த முகில்வண்ணன் காயாவின் 96
சின்ன நறும்பூந் திகழ்வண்ணன் வண்ணம்போல்

மன்னன்—மஹாநுபாவனுய், நறு துழாய் வாழ்மார்பன்—மணமிக்க திருத்துழாய்மாலை விளங்குகின்ற திருமார்பையுடையனுய், முன்னம் மா மதி கோள் விடுத்த முகில் வண்ணன்—முன்னொருகால் சந்திரனுடைய துன்பத்தைப்போக்கின காளமேகவண்ணனுய், காயாவின் சின்ன நறு பூ திகழ் வண்ணன் — 'காயா' என்னும் செடியிலுண்டான சிறிய மணம்மிக்க பூப்போலே விளங்குகின்ற நிறத்தையுடையனுய், வண்ணம்போல் — தன்னுடைய வர்ணம்போன்ற,

---

குமா சொல்லீர்) எவ்வழியாலே ஸ்த்ரீத்வத்தைக் காப்பேன் சொல்லீரென்கிருள்.

(இதுவிளைத்த) தென்றல், அன்றில், குழல், விடை உள்ளிட்டன இருந்ததே குடியாக என்மேலே படையேறும்படி விளைத்த. கையும் மடலுமாக்கினபடியென்றுமாம். இப்படியாகைக்கு அபிநிவேசத்தை விளைப்பிக்கை. (மன்னன்)

தொலைந்தது துன்பம். இது நெடுநேரம் சித்ரவதம் செய்கின்றது. (என்னிதனைக் காக்குமா) எவ்வழியாலே என் பெண்மையை ரக்ஷித்துக்கொள்வேன்? (சொல்லீர்) நீங்களே சொல்லுங்கள். பெண்மையை ரக்ஷிக்கப்பார்த்தால் சித்ரவதம் நடக்கின்றது. அதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டுமாகில் பெண்மையையழித்துக்கொண்டு மடலெடுத்தே தீரவேண்டும். (என்னிதனைக் காக்குமா) அபலையான நான் இதினின்றும் எப்படித் தப்புவேன்? (சொல்லீர்) இவ்வொலியைக் கேட்டும் மாறுபடாமலிருக்கும் நீங்களே சொல்லவேணும்.

மடலெடுத்து அவனைப் பழித்துப் படாதபாடு படுத்தியாவது அவனைப் பெருமலிருக்கமாட்டேன் என்கிருள் இனிமேல்: (இதுவிளைத்த மன்னன்) தென்றல், அன்றில், குழலோசை, விடைமணியோசை, நிலா, சந்தனம் முதலானவை இயற்கையிலேயே அபலையான என் மேலே படையெடுத்து வரும்படியாகச் செய்த தனிவீரன். நான் இப்படிக் கையும் மடலுமாம்படி செய்தவன் என்றுமாம். இப்படி நான் ஆவதற்குக் காரணமான காதலை விளைத்து என்னை எழுதிக்கொண்டவன் என்றுமாம்.

இத்தலை அப்படியாகத் தான் உஜ்வலனனபடி. (நறுந் துழாய்) இப்படி படுத்துகைக்கு ப்ரஹ்மாஸ்த்ரம். (வாழ் மார்பன்) தானும் திருத்துழாயோபாதி வாழ நினைக்கிருள். (மாமதி) எங்கள் பகையைவிளைக்கிருனென்கை. நீ அவன் கோள்விடாவிட்டாலும் அவன்தானே எங்களை பாதிக்க வல்லவன். (முகில்வண்ணன்) ஜலஸ்த்தலவிபாகமில்லாத வன். மதியைரக்ஷித்த உத்தமன். *(சின்னநறும் பூங்கட

(மன்னன்) காண்பவர்களை மடலெடுக்கச் செய்கைக்கு முடிசூடினவன். (மன்னன்) நாயகி நலிய நலியத் தான் விளங்கி நிற்பவன். (நறுந்துழாய்) என்னை இப்பாடுபடுத்துகைக்குத் தான் தரித்த ப்ரஹ்மாஸ்த்ரம். மார் பில் தரித்தவுடன் மணம் மிகுகிறது. ஸர்வகந்தமான மார்பன்ரே. (வாழ் மார்பன்) துளஸிதான் வாழவேணுமோ? நான் வாழலாகாதோ? (வாழ் மார்பன்) மார்பில் பட்டதும் முன்னிலும் தளிர்க்கிறது. தோளும் தோள்மாலையும் கண்டால் எப்படி மடலெடுக்காமலிருப்பது? (நறுந் துழாய் வாழ் மார்பன்) இவளை மடலெடுக்கச் செய்துவிட்ட வெற்றி தோற்ற மாலையணிந்திருப்பவன். இவளுக்குக் கையும் மடலும்போலே அவனுக்கு முடியும் மாலையும். (மாமதி...) "இது விளைத்த" என்ற விடத்தில் எங்களுக்கு விரோதிகளை விளைத்தவன் என்ருரன்ரே. அதற்கு உதாஹரணம் காட்டுகிருர். (மாமதி) அபலைகளை பாதிப்பதில் மிகப் பெரியவன். நீ அவனுக்கு உற்ற இடரை நீக்காவிடிலும் அவன் எங்களை நலியவல்லவன். அப்படிப்பட்டவனைத் துன்பமும் தீர்த்துவிட்டால் சொல்லவேணுமோ? (மாமதிகோள் முன்னம் விடுத்த முகில்வண்ணன்) சந்திரனுக்கு ராஹுவால் இடர்நேருமுன்னம் அதைத் தீர்த்த பரமோ தாரன். (முன்னம்) முன்பொருகாலத்தில் தீர்த்தவன் என்றுமாம். முன் பெல்லாம் ரக்ஷகனுயிருந்தவன் இப்போது பாதகனுனுன்கிடீர். ப்ர யோஜநாந்தரபரரை ரக்ஷித்தவன் அநந்யப்ரயோஜநையைத் துன்புறுத்து கிருன்கிடீர். (முகில்வண்ணன்) மேகஸ்வபாவன். ஜலத்திலே பொழிந்து தரையைக் காயவிடும் மேகம்போலே, ப்ரயோஜநாந்தரபரரை ரக்ஷித்து அநந்யப்ரயோஜநரை நலிபவன். "ஸ்தலத்தில் பொழிந்தால் பயனுண்டு; ஜலத்தில் பெய்வதில் பயனில்லை" என்னும் பகுத்தறிவில்லாமல் மழை பொழியும் மேகம்போன்றவன். முன்னம் சந்திரனைக் கைம்மாறு கரு தாது ரக்ஷித்த மேகஸ்வபாவன்கிடீர் என்னை இன்று நலிவது என்றுமாம். (காயாவின் சின்ன நறும்பூந்திகழ் வண்ணன்) காயாவின் சிறிதாய் மணம் மிக்கதான பூவைப்போல் திகழும் திருநிறத்தையுடையவன். ஊரெல்

* இது சில பிரதிகளிலேயே உள்ளது.

அன்ன கடலை மலையிட் டணைகட்டி 97
மன்ன னிராவணனை மாமண்டு வெஞ்சமத்துப்

அன்ன கடலை — வர்ணத்தையுடைய கடலிலே, மலை இட்டு — மலைகளைக் கொண்டெறிந்து, அணை கட்டி — ஸேதுவைக்கட்டி (இலங்கைக்கெழுந்தருளி) மா மண்டு வெம் சமத்து—சதுரங்கபலம் நிறைந்த கொடிய போர்க்களத்தில், மன்னன் இராவணனை—ராக்ஷஸராஜனான ராவணனுடைய,

---

லென்னுதல், மேகமென்னுதல்;) சிறுத்த காயாம்பூவென்கிறது. அணுகலாயிருக்கை.

(வண்ணம்போலன்ன கடலை) சத்ருக்களன்றிக்கே ஸஜாதியமான கடல் என்ன குற்றஞ்செய்தது? (மாமண்டு) சதுரங்க பலத்துக்குமுபலக்ஷணம். (வெம்சமத்து) அவற்றையுடைய யுத்தம். திறந்துகிடந்த வாசலிலே நாய்புகுருமாபோலே புக்குப்போமத்தனையன்றிக்கே, யுத்தததிலே நேர்நின்று.

லாம் பகையாளுலும் விடவொண்ணாத வடிவையுடையவன். (சின்ன பூ) சிறிய பூ இவனும் பெரியவனாயினும் எவரும் அணுகலாம்படியான ஸௌலப்யத்தையுடைய சிறியவன். சின்னம்-சுண்ணம்; தாது; மகரந்தத்தையுடைய பூவென்றுமாம். (சின்ன நறும் பூ) வடிவில் சிறிதாயினும் மணத்தில் மிக்க பூ. பூவளவல்லவே மணம். அப்படியே இவனளவல்ல வாயிற்று இவன் புகழ்.

(வண்ணம் போல் அன்ன கடலை) எதிரியான ராவணனைத் தான் கொன்றான்; காம்பீர்யத்தாலும், எல்லாப்பொருளுக்கும் இருப்பிடமாயிருக்கையாலும், பெருமையாலும், நிறத்தாலும் தன்னையொத்த கடலைக் கூடவா கலங்கச் செய்யவேண்டும்? (மலையிட்டணை கட்டி) கண்ட கல்லையெல்லாம் இட்டு குரங்குகளும் அதன் மேல் நடந்து செல்லலாம்படி அணைகட்டிக் கடலின் காம்பீர்யத்தை அழித்தவனை. என்னையும் அப்படியே காம்பீர்யத்தையழித்து மடலெடுக்கச் செய்தான் என்று கருத்து. (மன்னனிராவணனை) 'அரக்கர்கோன்' என்னும் அபிமானத்தையுடைய ராவணனை. (மாமண்டு வெஞ்சமத்து) 'மா' என்றது நாலு கால் பிராணிகளான குதிரையையும், யானையையும் குறிக்கும். ரதகஜதுரகபதாதி (தேர், யானை, குதிரை, காலாள்) என்னும் சதுரங்கபலத்தையும் இங்கு குறிக்கிறது சதுரங்க பலமும் நெருங்கியிருந்த கொடிய யுத்தத்திலே, (வெஞ்சமத்து) திறந்து கிடந்த வாசலிலே நாய் புகுவதுபோல் புகுந்து, அறியாமற்கிடந்த ராவணனைக்கொல்லவில்லை; "ராமராவணயோர்யுத்தம் ராமராவண யோரிவ" என்று தனக்குத் தானே ஒப்பான யுத்தத்திலே நேர்நின்று கொன்றான்.

பொன்முடிகள் பத்தும் புரளச் சரந்துரந்து 98
தென்னுல மேற்றுவித்த சேவகனை ஆயிரக்கண்

பொன் முடிகள் பத்தும் புரள—அழகிய பத்துத்தலைகளும் (பூமியில்விழுந்து) புரளும்படியாக, சரம் துரந்து—அம்புகளைப் பொழிந்து, தென் உலகம் ஏற்றுவித்த சேவகனை—(அவ்விராவணனை) யமலோகமடைவித்த மஹாவீரனுப், ஆயிரம் கண் மன்னவன் வானமும்—ஆயிரங்கண்ணனுன இந்திரனுடைய ஸ்வர்க்கலோகத்தையும்,

---

(பொன்முடிகள்) மனிச்சனிவனென்று எதிரியையும் மதியாதே ஒப்பித்துவந்தபடி. (புரள) தலையோடே உயிரையும் துண்டித்தான். அதாகிறது, உயிரும்தப்பவிரகில்லாதபடி அம்புநுழைந்தசடக்கு. (சரம்துரந்து) வரபலத்தாலே அறுத்த தலைமுளைக்க அவற்றுக்குத்தக்கபடிவிட்ட அம்பின் பெருமை. (தென்னுலகம்) யமலோகம் பாழ்படும்படி முன்பு இங்கேவந்து இவனுக்குப் பணிசெய்தபேர், இப்போது அவனுக்குப் பணிசெய்ய, அவ்வூர் பாழ்தீரும்படி குடியேறிற்று.

(பொன்முடிகள்) 'இவன் கேவலம் மனிதன்தானே!' என்று எதிரியான ராமபிரானை மதியாமல் முடிபுனைந்து களம்புகுந்தான். (பத்தும் புரள) பத்துத் தலைகளோடு உயிரையும் உடம்பைவிட்டுப் பிரித்தான். சகாரம் அநுக்தமான உயிரைக் கூட்டுகிறது. உயிரும் தப்ப முடியாதபடி அம்புநுழைந்த விரைவைச் சொல்லுகிறது. பத்துத்தலைகளில் ஒன்றுவிடாமல் மண்கவ்வவைத்தான் என்றுமாம். (சரம் துரந்து) வரபலத்தாலே அறுத்த தலை முளைக்கமுளைக்க அவற்றை அறுக்கும்படியாக மழைபொழிவதுபோலே வாளிமழை பொழிந்ததைச் சொல்லுகிறது. (தென்னுலகம் ஏற்றுவித்த சேவகனை) யமலோகம் பாழாம்படி அங்குள்ளவரெல்லாம் இங்குவந்து இராவணனுக்குப் பணிசெய்த நிலைபோய், இராவணன் அரக்கரோடு அங்குசென்று யமனுக்குப் பணிசெய்யும் நிலையாக்கி யமனுலகத்தை நிறைவித்த வீரத்தையுடையவனை. பாழாய்க்கிடந்த தென்னுலகும் இவனாலேயேதென்னுலகமாக (அழகிய உலகமாக)ஆயிற்று. (சேவகனை) அப்படிப்பட்ட வீரமெல்லாம் என் கையில் படப்போகிற பாட்டைக் காணப்போகிறீர்கள் என்று கருத்து.

மன்னவன் வானமும் வானவர்தம் பொன்னுலகும் 99
தன்னுடைய தோள்வலியால் கைக்கொண்ட தானவனைப்
பின்னோ ரரியுருவ மாகி யெரிவிழித்துக் 100
கொன்னவிலும் வெம்சமத்துக் கொல்லாதே வல்லாளன்
மன்னு மணிக்குஞ்சி பற்றி வரவீர்த்துத் 101

வானவர் தம் பொன்னுலகும் — (மற்றுமுள்ள) தேவதைகளின் திவ்ய லோகங்களையும், தன்னுடைய தோள்வலியால் கைக்கொண்ட தானவனை — தனது புஜபலத்தாலே தன் வசமாக்கிக்கொண்ட ஹிரண்யாஸுரனை, பின்—சிறிதுகாலம் பொறுத்து, ஓர் அரி உருவம் ஆகி—ஒப்பற்ற நரசிங்க மூர்த்தியாயவதரித்து, எரி விழித்து—நெருப்புப்பொறி பறக்கப் பார்த்து, கொல் நவிலும் வெம் சமத்து கொல்லாதே—கொலை நடக்கும் போர்க்களத்திலே சடக்கெனக் கொன்றுவிடாதே, வல்லாளன்—மஹாபலசாலியான அவ்வசுரனுடைய, மன்னு மணி குஞ்சிபற்றி வர ஈர்த்து—நிலையான மணி மயமான கிரீடம் பொருந்திய தலைமயிரைப்பிடித்துக்கிட்ட இழுத்து,

---

(ஆயிரக்கண்) தன் விபூதி ரக்ஷிக்கவேண்டுங்கண். (தோள்வலியால்) வரபலத்தால் அன்று. "என்னது" என்று வரையிட்டுப் போமத்தனை. (பின்) சிலகாலஞ் சென்ற

(ஆயிரக்கண்...வீரனை) இரணியனைக்கொன்று படைத்த புகழை அழிக்கிறேன் என்கிறாள். (ஆயிரக்கண்) நீள் சுவர்க்கமாகையாலே அதை ரக்ஷிக்க ஆயிரங்கண் படைத்திருக்கை. (ஆயிரக்கண் மன்னவன் வானமும்) ஆயிரம் கண்களையுடைய இந்திரன் அவ்வாயிரம் கண்களாலும் உணர்ந்து நோக்குகிற உலகங்கள் மூன்றும், வானம்-சுவர்க்கம், சகாரம் அநுக்த ஸமுச்சயமாய் பூமி, அந்தரிக்ஷம் என்ற மற்ற இரண்டு உலகங்களையும் கூட்டுகிறது. (வானவர்தம் பொன்னுலகும்) மற்றுள்ள யமன், சூரியன் முதலான தேவர்களுடைய அழகிய உலகங்களையும் (தன்னுடைய தோள் வலியால்) ஒருவன் தானமாகக் கொடுத்தோ, ஒரு தேவதை வரமாகக் கொடுத்தோ, தபஸ்ஸால் ஜயித்தோ பெற்றது அன்று. புஜபலத்தாலே பெற்றதாகும். "என்னுடைய பூமி' என்று இவன் வரம்பிட்டால், அந்தந்த தேவதைகள் தாம்தாமே விட்டுப்போந்தபடி. (கைக்கொண்ட தானவனை) பிறர்பொருளை அபஹரிப்பதே தொழிலான ஆஸுரஸ்வபாவனை. (பின்) சிலகாலம் சென்றபின்பு. கருணைக்கடலாகையாலே இவன் திருந்துவனோ என்னும் நோயாசையாலே சிலநாள் பொறுத்திருந்தான். (ஓரரியுருவ

பின்பு. (ஓரரி) தன்னாலும் இவ்வடிவு கொள்ளவொண்ணாது. (ஆகி) வரபலத்தாலே மிகைத்த ஹிரண்யனை அழிக்கைக்காகச் சேராத நரத்வஸிம்ஹத்வங்களைச் சேர்த்தபடி. (எரிவிழித்து) குளிர்த்தியையுடைத்தான கண்கள் "ஆஶ்ரிதவிரோதி" என்றவாறே நெருப்பையுமிழவற்றாயின. (வெம்சமத்துக் கொல்லாதே) ஓரம்பையிட்டுத் தலையையுருட்டிற்றாகில் முடிசூட்டினதோடொக்கும். (வல்லாளன்) நரஸிம்ஹமும் பிற்காலிக்கவேண்டும்படியிருக்கை. (மன்னுமணிக்குஞ்சி) "ஹிரண்யாய நம:" என்று சொல்லும்படி செலுத்தினகாலம். (மன்னுமணிக்குஞ்சிபற்றி வரவீர்த்து) முடியைப் பற்றினபோதே ப்ராணன்போயிற்று; பின்னை பிணத்தையிழுக்குமோபாதி தன்னுடைய பிராட்டி சாயக் கடவமடியிலே, என்னைப்போலன்றிக்கே, முருட்டுப்

மாகி) பாகவதாபசாரத்தின் எல்லைக்குச் சென்றவுடன் ஒப்பற்றதொரு ஸிம்ஹமானான். உலகில் காணவொண்ணாதபடி அரியுருவும் ஆளுருவுமான நரசிங்கமானான். (ஓரரி) ஒப்பற்ற ஸிம்ஹம். ஸத்யஸங்கல்பனான தான் நினைத்தாலும் மறுபடியும் இப்படிப்பட்டதொரு உருவம் கொள்ளவொண்ணாது. (ஆகி) "மனிதனாலும் சாவில்லை; மிருகத்தாலும் சாவில்லை" என்பது முதலான வரங்களின் பலத்தாலே கர்வம்கொண்டு விளங்கும் இரணியனை அழிப்பதற்காகச் சேராத நரத்வ ஸிம்ஹத்வங்களைச் சேர்த்தபடி. (எரிவிழித்து) இயற்கையில் உயிர்க்கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்தாமரைக்கண்கள், பாகவதாபசாரத்தைக் கண்டவுடன் கோபவசப்பட்டு எரிவிழித்தபடி. (கொல்நவிலும் வெம்சமத்துக் கொல்லாதே) இவனைச் சடக்கெனக் கொலைசெய்யும்படி யுத்தத்திலே ஓரம்பையிட்டுத் தலையையுருட்டினால், அது இம்மாபாவிக்கு முடிசூட்டினதுபோலாகும். அப்படிச் செய்யாமல் சித்ரவதம் செய்தபடி. (வல்லாளன்) வயிற்றிற் பிறந்தவனுடைய பெருமையையும் பொறாத நெஞ்சுவலிமையும், நரசிங்கமும் சிறிது பின்வாங்கவேண்டும்படியான தேஹபலமும் உடையவன். (மன்னுமணிக்குஞ்சிபற்றி) அனைவரும் "ஹிரண்யாய நம:" என்று சொல்லும்படி ஏகசக்ராதிபத்யம் செலுத்திய மணிமுடியைப் பற்றினான் முதலில். (மணிக்குஞ்சிபற்றி வரவீர்த்து) இதுவரையில் எவரிடமும் அவமானப்பட்டவனல்லனாகையாலே, முடியைப் பற்றினபோதே, அவ்வவமானத்தாலே உயிர்போயிற்று. பின்னர் பிணத்தையிழுப்பதுபோலே இழுத்த

தன்னுடைய தாள்மேல் கிடாத்தி அவனுடைய
பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து புகழ்படைத்த 102
மின்னிலங்கு மாழிப் படைத்தடக்கை வீரனை
மன்னிவ் வகலிடத்தை மாமுதுநீர் தான்விழுங்கப் 103
பின்னுமோ ரேனமாய்ப் புக்கு வளைமருப்பின்

தன்னுடைய தாள் மேல் கிடாத்தி—(அவனைத்) தனது மடியின்மீது படுக்க வைத்துக்கொண்டு, அவனுடைய — அவனது, பொன் அகலம்—அழகிய மார்பை, வள்உகிரால் போழ்ந்து—கூர்மையான நகங்களாலே பிளந்து, புகழ் படைத்த-(அடியானான ப்ரஹ்லாதனை ரக்ஷித்தானென்கிற) கீர்த்தியைப் பெற்றவனாய், மின் இலங்கும் ஆழி படை தட கை வீரனை—மின்போல் விளங்குகின்ற சக்கராயுதத்தைப் பெரியதிருக்கையிலே உடைய மஹாவீரனாய், மன்னு இ அகல் இடத்தை — எல்லாரும் பொருந்தியிருக்கின்ற விசாலமான இப்பூமியை, மாமுது நீர்தான்விழுங்க-மஹா ப்ரளயஜலம்தானே விழுங்கிவிட, பின்னும்—அதற்குப் பிறகு, ஓர் ஏனம் ஆய் புக்கு—ஒரு திவ்யவராஹமாய் (கடலினுள்ளே) பிரவேசித்து, வளை மருப்பின்—வளைந்த தந்தத்தினுடைய,

---

பையலையோ மடியிலேற்றுவதென்கிறாள். (பொன்னகலம்) திருவுகிருக்கிரைபோர வளர்ந்தமார்வு. (வள்ளுகிரால் போழ்ந்து புகழ்படைத்த) தமப்பன் பகையாகச் சிறுக்க

வித்தனை. (தன்னுடைய தாள்மேல் கிடாத்தி) பெரியபிராட்டியார் சாய்ந் திருக்கக்கடவ மடியிலே என்னைச் சாயவிடாமல் முரட்டுப் பையலையோ சாயவிடுவது என்கிறாள். '''என்போல்வாரையிறே மடியிலே எடுத்துக் கொள்ள அடுப்பது; ஆஶ்ரிதருக்குப் பரமப்ராப்யமான திருவடிகளிலே ஆஸுரப்ரக்ருதியானவனை ஏறிட்டுக்கொள்ளுவதே! என்கிறாள்' என்று பட்டர் அருளிச்செய்ய நான் கேட்டேன்'' என்று நம்பிள்ளை அருளிச் செய்ததாக நாயனூர் வியாக்கியானம். (அவனுடைய பொன்னகலம்) ஹிரண்யன் (பொன்னன்) என்று பெயர்படைத்தவனன்றோ; பொன் பெயரோனான அவனுடைய மார்வத்தை. அன்றிக்கே, பலியிடக் கிடாவை வளர்ப்பதுபோலே திருநகத்துக்கு இரைபோரும்படி வளர்க்கப்பட்ட அழ கிய மார்வு என்றுமாம். (வள்ளுகிரால் போழ்ந்து) பொன்னகலமாகை யாலே எரிவிழியைக் கண்டவுடன் உருகிற்று. பின்னர் அழகிய நகத் தாலே வாழைநாரைப்போலே கிழித்தபடி. (புகழ் படைத்த) தகப்பனும்

னுக்கு உதவினனென்னும் புகழ்படைத்த. (மின்னிலங்கு மாழி) திருவுகிருக்கிரை போந்ததித்தனை. திருவாழி, தனக் கிரை போராமையாலே சீறி நாக்குநீட்டுகிறபடி. (வீரனை) திருமந்த்ரத்தின்படியே அநுஸந்திக்கிறது.

(மன்னிவ்வகலிடம்) எல்லாரும் பொருந்தும் பூமி. (தான் விழுங்க) "அத்ப்ய: ப்ருதிவீ" (அத்ப்ய: ப்ருதிவீ) என்று உண்டாக்கின தானே விழுங்க. (பின்னும்) ரக்ஷணத்திலே. (ஓரேனம்) அழிவுக்கிட்ட உடம்புக்கு ஆலத்திவழிக்கவேண்டும்படியிருக்கை. (கூர்நுதி) கூரியதான அக்ரம்.

பகையானபோது உதவின கிருபாதிகபிதாவென்றும், அடியார்க்காகத் தன்னை அழியமாற்றிக்கொண்டு உதவும் உதாரனென்றம் புகழ்படைக்கை. (மின்னிலங்குமாழி) இரணியனுடைய கொழுத்த உடல் திருநகத்திற்குத் தான் இரை போந்தது. திருவாழி தனக்கு இரைகிடையாமையாலே மின்னிமுழங்கி நாக்கு நீட்டுகிறபடி.

"கிளரொளியால் குறைவில்லா அரியுருவாய்க் கிளர்ந்தெழுந்து
கிளரொளிய இரணியனதகல்மார்வம் கிழித்துகந்த
வளரொளிய கனலாழி வலம்புரியன்" [திருவாய் 4-8-7]

என்றுரன்றோ நம்மாழ்வாரும். (வீரனை) "உக்ரம் வீரம்" என்ற ந்ருஸிம்ஹ தாபநீயோபநிஷத் ப்ரஸித்தமான ந்ருஸிம்ஹ அநுஷ்டுப் மந்திரத்தின் படியே அநுஸந்திக்கிறுர்.

(மன்னிவ்வகலிடத்தை...கூத்தனை) அறிவும், உறுதிமுயுள்ள ப்ரஸ் லாதனை ரக்ஷித்ததற்கும் மேலே, துன்பப்பட்டோம் என்னும் நினைவுமில் லாதவர்களை, உறவையே பார்த்து ப்ரளயாபத்திலே ரக்ஷித்த புகழும் அழியப்போகிறது என்கிருள். (மன்னிவ் வகலிடத்தை) நெடுநாளாக அவ னுடையதாக அடிபட்டுகிடக்கும் இவ்வாமனன் மண்ணை. மன்னு—நிலை நிற்கும். எல்லோரும் பொருந்தியிருக்கும் பூமி என்றுமாம். (மாமுது நீர் தான் விழுங்க) "அத்ப்ய: ப்ருதிவீ" [தை-ஆந] [நீரிலிருந்து பூமியுண் டாயிற்று] என்கிறபடியே உண்டாக்கிய நீர்தானே பூமியை விழுங்க. காவலுக்கு வைக்கப்பட்டவர்களே களவுகாண்பதுபோலே, பூமிக்கு ரக்ஷக மான கடலே பூமியை விழுங்கப்புக. (பின்னும்) ரக்ஷணத்திற்கு ஒரு முடிவில்லை; 'பின்னும்' 'பின்னும்' என்னுமித்தனை. (ஓரேனம்) ஒப்பற்ற வராஹம். தன் மேன்மையின் அழிவுக்கிட்ட உடம்பின் அழகைப் பார்த் தால் கண்ணெச்சிற்படாமல் ஆலத்திவழிக்கவேண்டும்படியிருக்கை. (ஏனம்)

கொன்னவிலும் கூர்நுதிமேல் வைத்தெடுத்த
கூத்தனை 104
மன்னும் வடமலையை மத்தாக மாசுணத்தால்
மின்னு மிருசுடரும் விண்ணும் பிறங்கொளியும் 105
தன்னி னுடனே சுழல மலைத்திரித்தாங்கு
இன்னமுதம் வானவரை யூட்டி அவருடைய 106
மன்னும் துயர்கடிந்த வள்ளலை மற்றன்றியும்

கொல் நவிலும் கூர்நுதி மேல்—(பகைவரைக்) கொல்லவல்ல கூர்மையான நுனியின்மீது, வைத்து எடுத்த கூத்தனை—(அந்தப் பூமியை) வைத்துக் கொணர்ந்த அழகிய செயலையுடையனாய், மன்னும் வடமலையை—அழுத்தமாக நாட்டப்பட்ட மந்தரமலையை, மத்து ஆக—மத்தாகக்கொண்டு, மாசுணத்தால்—(வாஸுகியென்னும்) பாம்பினால் (சுற்றி), மின்னும் இரு சுடரும் விண்ணும் பிறங்கு ஒளியும் தன்னினுடனே சுழல மலைதிரித்து—விளங்குகின்ற சந்திர ஸூர்யர்களும், ஆகாசமும், ப்ரகாசிக்கின்ற (மற்றும் பல) தேஜ:பதார்த்தங்களும் தன்னோடு சுழலும்படி அந்த மந்தரமலையைச் சுழற்றி [கடலைக்கடைந்து], வானவரை இன் அமுதம் ஊட்டி—தேவர்களுக்கு இனிய அமிருதத்தை அளித்து, அவருடைய—அவர்களுடைய, மன்னும் துயர்கடிந்த—நெடுநாளைய (மரண) துக்கத்தைப்போக்கடித்த, வள்ளலை—பரமஉதாரனாய்,

---

(மன்னும் வடமலையை) நற்றறிக்கவைத்தபடி. கடையப்பிதிராத மலை. மின்னுமிருசுடரும் விண்ணும் மற்

நீரிலும், சேற்றிலுமளையத்தக்க மானமிலாப் பன்றியுரு. (கொன்னவிலும் கூர்நுதிமேல்) 'இவன் ரக்ஷகன்' என்று அநுகூலனாயிருந்தால் பிழைக்கலாமேயொழிய, எதிரிட்டால் கொலைசெய்யவல்ல கூர்மையுடைய தந்தத்தின் நுனி. (கூத்தனை) இக்கூத்துக் காணலாமென்றால், என்றுமே ப்ரளயம் நேர்ந்தாலும் பாதகமில்லையென்கை.

(மன்னும் வடமலையை...வள்ளலை) விலக்காமையாகிற பெருஞ்செல்வத்தையுடைய பூமியிலுள்ளாரை ப்ரளயாபத்திலிருந்து ரக்ஷித்ததுக்கும் மேலே, "ஈச்வரோஹம்" என்னும் அஹங்காரத்தையுடைய துரபிமானிகளான தேவர்களுக்காக உடம்புநோவக் காரியம் செய்த பெருமையையும் அழிக்கிறேன் என்கிறாள். (மனனும் வடமலையை) பூமிக்கு ஆணியடித்தாற்போலே நிலைநிற்கும் மந்தரமலையை. நன்றாக தரித்திருக்கும்படி

றுள்ள தேஜ:பதார்த்தங்களும். (மன்னும் துயர்) யாவ தாத்மபாவியான தாரித்ர்யம். ப்ரயோஜநாந்தரபரர்க்கு மகப்பட.

நாட்டியபடியைச் சொல்லுவதாகவுமாம். கடையச் சிதறுத மலையென்று மாம். (மத்தாக மாசுணத்தால்) மலையை மத்தாகக்கொண்டு, வாஸுகியைக் கயிறுகக்கொண்டு. (மின்னுமிருசுடரும் விண்ணும்) பிரகாசிக்கின்ற சந்திரசூரியர்களாகிற இரண்டு சுடர்களும், அவர்களுக்கு இருப்பிடமான ஆகாசமும். (பிறங்கொளியும்) மற்றும் பிரகாசிக்கிற நக்ஷத்திரம் முதலான சுடர்களும். (தன்னினுடனே சுழல) கடைகிறபோது வேகத்தாலே தன்னோடு கூடவே சுழன்றுவரும்படியாகக் கடைந்து. (மலைதிரித்தாங்கு இன்னமுதம் வானவரையூட்டி அவருடைய மன்னும் துயர் கடிந்த வள்ளலை) நெடும்போது கடைந்து தேவர்கள் களைத்தவுடன், தானே ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்து அவர்களுக்கு சத்துருக்களான அஸுரர்களை அழியச்செய்து, தேவர்களுக்கு அருமருந்தான அமுதளித்து அவர்களுடைய நெடுந்துன்பத்தைத் தவிர்த்த பரமோதாரனை. (மன்னும் துயர்கடிந்த) இந்த ஸம்ஸாரமண்டலத்திலிருக்கும் வரையில் உள்ளதான மரணமாகிற வறுமை தீரும்படியாக அமுதளித்தான் என்று கருத்து. துர்வாஸமுனிவரின் சாபத்தாலே நிலையாக ஏற்பட்டிருந்த வறுமையைப் போக்கினுன் என்றுமாம். (வள்ளலை) கற்பகவிருக்ஷத்திடம்போய்க் கௌபீந பிக்ஷை கேட்பாரைப்போலே, தன்னையே தரும் கற்பகமான இவனிடம் மற்ற பயன்களை விரும்புமவர்களுக்கும் அவற்றை உதவும் உதாரன். உதவினபின்பும் (தனக்கு ரக்ஷகத்வத்தை) உதவினவர்கள் அவர்களாகவும் தன்னை உதவிபெற்றவனுகவுமெண்ணி, அவர்களை "உதாரா:" [கீதை] என்னும் உதாரன்.

"உள்ள நோய்கள் தீர்மருந்து
வானவர்க்களித்த எம் வள்ளலார்" [திருச்சந்த-88]

என்றுர் திருமழிசைப்பிரானும்.

(மற்றன்றியும்...தாளானை) அமிருத மதனகாலத்திலே துரபிமானிகளான தேவர்களுக்கு உதவும் போதும், தன்மேன்மை குறையாமலன்றோ உதவினது. அப்படியல்லாமல், அவர்களுக்காகத் தன் பெருமையையும் விட்டுத் தாழநின்று வாமனனுய்யாசித்த ஸௌசீல்யமென்னும் மஹாகுணத்தையும் அழிக்கிறேன் என்கிறுள்.

தன்னுருவ மாரு மறியாமல் தானங்கோர் 107
மன்னும் குறளுருவின் மாணியாய் மாவலிதன்
பொன்னியலும் வேள்விக்கண் புக்கிருந்து போர்
வேந்தர் 108

மற்று அன்றியும்-தவிரவும், தன் உருவம் ஆரும் அறியாமல்-தனது ஸ்வ ரூபத்தை யாரும் தெரிந்துகொள்ள வொண்ணுதபடி தான் ஓர் மன்னும் குறள் உருவின் மாணி ஆய்-பரமபுருஷனை தான் ஒரு திவ்யமான வாமந வேஷங்கொண்ட பிரமசாரியாகி, மா வலி தன்-மஹாபலியினுடைபதான, பொன் இயலும் வேள்விக்கண் புக்கிருந்து—ஸ்வர்ணதானஞ் செய்யும் யாக பூமியிலே எழுந்தருளி,

---

(மற்றன்றியும்) ப்ரதாபத்துக்கு எதிர்த்தட்டான தாழ்வுகள் பேசுகிறது. (தன்னுருவ மாருமறியாமல்) பெரியபிராட்டியாரும் நித்யஸூரிகளும். (மன்னுங்குறளுரு) வைத்தகண் வாங்கவொண்ணுதவழகு. (பொன்னியலும் வேள்விக்கண்) மஹாபலியைப்போலே நானும் யாகம் பண்ணினேனுகில் தானே வருமிறே என்றுகருத்து.

(மற்றன்றியும்) அதுக்கும் மேலே. முன்சொன்ன பரத்வத்துக்கு எதிர்த்தட்டான நீர்மையைச் சொல்லுகிறது. (தன்னுருவம் ஆரும் அறியாமல்) கண்டவர்கள் இவன் என்றுமே இப்படி யாசகனுயிருந்தவன் என்று நினைக்கை. நாலு புருஷார்த்தங்களையும் அளிக்கும் நாலு அலம் புரிந்த நெடுந்தடக்கைகளை உடையவனென்று எவரும் அறியாதபடி. (ஆரும் அறியாமல்) பெரியபிராட்டியாரும், நித்யஸூரிகளுங்கூட அறிய முடியாதபடி. (தானங்குபுக்கு) எல்லாராலும் வந்தடையத்தக்க தான் மாவலியின் யஜ்ஞசாலையில் புகுந்து. (ஓர் மன்னுங் குறளுவில்) கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுதபடியாக விளங்கும் ஒப்பற்ற அழகுள்ள வாமனவேஷத்தையுடைய. (மாணியாய்) 'உண்டு' என்று அளித்த போதோடு, 'இல்லை என்று கதவடைத்தபோதோடு வாசியில்லாமல் முக மலர்ந்திருக்கும்படி யாசகத்திலே தகணேறின வடிவையுடைய ப்ரஹ்ம சாரியாய். (மாவலிதன் பொன் இயலும் வேள்விக்கண்) மாவலியின் அழ கிய வேள்வியிலே. மடலெடுத்துப் பெறவிருக்கும் என் முயற்சியைப் போலல்லாமல் யஜ்ஞபலமான அவனையே வரவழைக்கும் பெருமையை யுடைய யாகம். இப்படி மடலெடுக்காமல் நானும் அவனைப்போல் யாகம் செய்தால் தானே வருவான் என்று கருத்து. அன்றிக்கே பொன் வழங் கும் வேள்வியென்றுமாம். கேட்டவர் கேட்டதையெல்லாம் வழங்கிய வேள்வியென்கை.

மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி
என்னுடைய பாதத்தால் யானளப்ப மூவடிமண் 109

போர்வேந்தர் மன்னை—போர் செய்யவல்ல பலத்தையுடைய அரசர்களின் தலைவனான அந்த மாவலியை, மனம் கொள்ள வஞ்சித்து—(இப்பிரமசாரி யாசிப்பதற்காகவே வந்தானென்று) நம்பும்படியாக மயக்கி, நெஞ்சு உருக்கி—(நடையழகு சொல்லழகு முதலியவற்றால்) அவனது நெஞ்சை உருக்கி, மன்னா—'மஹாராஜனே!, என்னுடைய பாதத்தால் யான் அளப்ப—என் காலடியால் நானே அளந்து கொள்ளும்படி, மூ அடி மண் தருக என்று—மூவடி நிலம் கொடு' என்று,

---

(போர்வேந்தர்மன்னை) மஹாராஜனை. (மனங்கொள்ள வஞ்சித்து) சுக்ரபகவானுள்ளிட்டார். (என்னுடைய பாதத் தால் யானளப்ப என்றுதுடங்கி)"ராஜாவே!" என்ன, திரியப் பார்க்க, "மூவடி" என்ன, "என்னன்புது?" என்ன "மண்" என்ன, "ஆர்காலாலே?" என்ன, "என்காலாலே" என்ன,

---

(புக்கு) இட்ட அடிகள்தோறும் பூமி நெளியும்படியாகப் போய்ப் புகுந்து. (இருந்து) "கொள்வன் நான் மாவலி மூவடி தா" [திருவாய் 3-8-9] என்கிறபடியே, 'கொடேன்' என்றாலும், 'கொள்வன்' என்று கொண்டல்லது போகேன் என்று ஸ்தாவரப்ரதிஷ்டையாக இருந்து. (போர் வேந்தர் மன்னை) யுத்தவீரர்களான அரசர்க்கெல்லாம் முக்கியனான மஹாராஜனை. (மனங்கொள்ள வஞ்சித்து) சுக்ரபகவான் முதலானோர், "இவன் ஸாமான்ய ப்ரஹ்மசாரியன்று; மாயாவியான விஷ்ணுவே" என்று மாவலியின் மனத்தைத் திருப்பியபோதிலும், தன் அழகாலே அவனை வஞ்சித்து. "இவன் யாசிக்கவந்தானேயொழிய வஞ்சிக்கவரவில்லை" என்று அவனும் மனப்பூர்வமாக நம்பும்படி வஞ்சித்து என்றுமாம். (நெஞ்சுருக்கி) "புலன்கொள் மாணாய்" [திருவாய் 1-8-6] என்கிறபடியே அவனுக்குத் தந்தல்லது நிற்கவொண்ணாதபடி சுக்கிரனால் கலக்கப்பட்ட அவனுடைய நெஞ்சைக்கரைத்து. வார்த்தையாலே நெஞ்சுருக்கியபடியை விவரிக்கிறார், (என்னுடைய பாதத்தால் யானளப்ப...) (மன்னா) அரசனே! என்றான் வாமனன். இவனை ஏறிட்டுப் பார்த்தான் மாவலி. (மூவடி) மூன்றடி தரவேண்டும் என்றது வாமனக்குழந்தை. 'என்ன தரவேண்டும்?' என்றான் மாவலி. (மண்) 'மூவடிமண் தரவேணும்' என்றது வாமநசிசு. 'ஆர் காலாலே' என்றான் மாவலி. (என்னுடைய பாதத்தால்) 'என்னு

மன்னு தருகென்று வாய்திறப்ப மற்றவனும்
என்னுல் தரப்பட்ட தென்றலுமே அத்துணைக்கண் 110
மின்னுர் மணிமுடிபோய் விண்தடவ மேலெடுத்த
பொன்னுர் கனைகழற்கா லேழுலகும் போய்க்கடந்தங்கு 111
ஒன்னு வசுரர் துளங்கச் செலநீட்டி
மன்னிவ் வகலிடத்தை மாவலியை வஞ்சித்துத் 112

வாய் திறப்ப—வாய்திறந்து கேட்க, அவனும்—(அதுகேட்ட) அந்த மாவலியும், 'என்னுல் தரப்பட்டது என்றலும்—என்னுல் மூவடி நிலம் கொடுக்கப்பட்டது' என்று சொல்ல, அத்துணைக்கண்—அந்த க்ஷணத்திலேயே, மின் ஆர் மணிமுடி போய் விண் தடவ—விளங்குகின்ற மணிமகுடம் ஆகாசத்தே போய் அளாவ, மேல் எடுத்த—உயரத்தூக்கின, பொன் ஆர்கனை கழல்கால்—ஆசைப்படத்தக்க சப்திக்கின்ற வீரத்தண்டையணிந்த திருவடி, எழ் உலகும்போய் கடந்து-மேலுலகங்களெல்லாவற்றையும்தாண்டி, அங்கு ஒன்னு அசுரர் துளங்க—அந்த எழுலகிலுமுள்ள (நமுசி முதலிய பகையசுரர்கள் துன்பப்படும்படி செலநீட்டி—(மேலே) செல்லும்படி நீட்டி, மன்னு இ அகல் இடத்தை—நித்யமாய் விசாலமான இப்பூமண்டலத்தை, மாவலியை வஞ்சித்து — (இவ்வகையாலே) மஹாபலியை வஞ்சித்து,

---

"பெரியதொருகாலாலே கொண்டாலோ?" என்ன, "என்னபேக்ஷையன்றோ நீ செய்யக்கடவது" என்ன, பேசாதிருந்தான், இவன் பேச்சுக் கேட்கைக்காக; இவனும் "ஈண்டென தாராய்" என்று வாய்விட, அவ்வாய்விட்டத்தைக் கண்டு மஹாபலியும் இட்டுமாறினுற்போலே வேறொருவனுனை

டைய காலாலே' என்றது குழந்தை. 'என்னுடையது போன்ற பெரியதொரு காலாலே கொள்ளக்கூடாதோ' என்ருன் மாவலி. (யானளப்ப) 'என் விருப்பப்படி செய்வதன்ரோ உன்கடமை' என்று அறிவுறுத்திஞன் வாமனன். 'இவன் பேச்சை இன்னும் சிறிதுநேரம் கேட்கவேணும்' என்னும் ஆசையாலே மாவலி பேசாமலிருந்தான். (தருக) 'இப்போதே தருவாய்' என்று அமுதொழுகப் பேசிற்று குழந்தை. (தருக என்று வாய் திறப்ப) இவன் தன் சோதிவாய் திறந்த அழகிலே எவர்தான் உருகமாட்டார். (மற்றவனும்) சோதிவாய் திறந்த அழகிலும் பேச்சின் இனிமையிலும் ஈடுபட்ட மாவலி உலையிலே இட்டு மாற்றியபொன் போலே மற்றொரு மனிதனுகவே மாறினுன் என்கிறது. (என்னுல்

படியாலே "மற்றவனும்" என்கிறது. (என்னுல் தரப்பட்ட தென்றலுமே) **"दत्तमस्याभयं मया"** (**தத்தமஸ்யாபயம் மயா**) என்ற பெருமாளைப்போலே. (அத்துணைக்கண்) அந்த க்ஷணத்திலே. (பொன்னுர்கனைகழல்) ஸ்ப்ருஹாவிஷயமாய் ஆஶ்ரித ரக்ஷணத்துக்குப் பின்னை ஒன்றுவேண்டாதபடி சப்தியா நின்றுள்ள வீரக்கழலையுடைய திருவடிகள். (ஒன்னுவசுரர்) உகவாத நமுசிப்ரப்ருதிகள். (மன்னிவ்வகலிடம்) அவனுக்கடி

தரப்பட்டது என்றலும்) **"தத்த மஸ்யாபயம் மயா"** [ரா-யு 18-34] [என்னுல் இவ்விபீஷணனுக்கு அபயமளிக்கப்பட்டது] **"அபயம் ஸர்வ பூதேப்யோ ததாமி"** [ரா-யு 18-33] [எல்லா பூதங்களிடத்தினின்றும் அபய மளிக்கிறேன்] என்ற ராமபிரானைப்போலே 'முன்பே தந்தேன்' என்ருன். கேட்பார்க்குக் கேட்பதையெல்லாம் தருவதாக முன்னமே ஸங்கல்பித்து விட்டதால், 'ஏற்கனவே தரப்பட்டது' என்ருன். (அத்துணைக்கண்) அஸ்வரமுகையால் மனம் மாறிவிடக்கூடும் என்று அந்த க்ஷணத்திலே வளர்ந்து கொண்டே அளக்க ஆரம்பித்தான். (மின்னுர் மணிமுடிபோய் விண்தடவ) வாமன ப்ரஹ்மசாரியின் உருவம் முடிதரித்த திரிவிக்கிர மனுடையதாய்க் கணத்திலேமாறி, மின்னிவிளங்கும் அம்மணி முடி மேலுலகங்களையெல்லாம் வியாபித்தது. (விண்தடவ) ரக்ஷகனின் பாரிப்பு ரக்ஷ்யத்தினளவல்லவாகையாலே, பரமபதத்தையும் வியாபித்ததென்று மாம். **"பூமிம் விச்வதோ வ்ருத்வா அத்யதிஷ்டத் தசாங்குலம்"** [பு-ஸூ] [பூமிமுழுவதையும் வியாபித்து மேலும் அநந்தயோஜனை அளந்தான்] என்றதன்றே. (மேலெடுத்த...ஏழுலகும்போய்) "முடிபாதமெழ" [திருவாய் 7-4-1] என்கிறபடியே மேலே தூக்கிய திருவடி முடியோடு போட்டியிட்டுக்கொண்டு வளர்ந்தது. (பொன்னுர்கனைகழற் கால்) பொன் போலே அனைவரும் ஆசைப்படுவதாய், 'அடியாரை ரக்ஷிப்பதில் எனக்கு எதிரில்லை' என்றுற்போலே முழங்கும் வீரக்கழலையுடைய திருவடிகள். (ஏழுலகும் போய்க்கடந்து) திருவடியும் அண்டபித்தியைக் கடந்து சென்றது. (அங்கு ஒன்னு அசுரர் துளங்கச் செலநீட்டி) ஏழுலகிலுமுள்ள நமுசி முதலான அசுரர்கள் **"என்னிது மாயம்"** [பெரியாழ்திரு 1-8-8] என்றுற்போலே எதிரிட்டுவர, அவர்களை, **"மன்னு நமுசியை வானிற் சுழற்றிய"** [பெரியாழ்திரு 1-8-8] **"த்ரவந்தி தைத்யா:"** [விஷ்ணுதர்மம் 43-28] [அசுரர்கள் ஓடுகிருர்கள்] என்கிறபடியே பயந்தோட்டுவிக்கும்படி திருவடியை நீட்டி. (மன்னிவ்வகலிடத்தை) நெடுங்காலம் மாவலியுடைய தாக அடிபட்டுப்போந்த இவ்வுலகை. (மாவலியை வஞ்சித்து) சிறுகாலைக் காட்டி யாசித்துப் பெரியகாலையிட்டு அளப்பதாகிற வஞ்சனையைச்செய்து.

தன்னுலக மாக்குவித்த தாளானை தாமரைமேல்
மின்னிடையாள் நாயகனை விண்ணகருள்
பொன்மலையைப் 113
பொன்னி மணிகொழிக்கும் பூங்குடந்தைப்
போர்விடையைத்
தென்னன் குறுங்குடியுள் செம்பவளக் குன்றினை 114

தன் உலகம் ஆக்குவித்த தாளானை — தன்னுடைய லோகமாகவே ஆக்கிக் கொடுத்த திருவடிகளையுடையனாய், தாமரைமேல் மின் இடையாள் நாயகனை— தாமரைப்பூவில் பிறந்தவளும் மின்போன்ற இடையுடையவளுமான பிராட்டிக்கு நாயகனாய், விண்ணகருள் பொன் மலையை — திருவிண்ணகரிலே பொன் மலைபோல் விளங்குமவனாய், பொன்னி மணி கொழிக்கும் பூ குடந்தை போர் விடையை — காவேரிநதியானது ரத்னங்களைக்கொண்டு தள்ளுமிடமான அழகிய திருக்குடந்தையிலே யுத்தம் செய்து களைத்த காளைபோலச் சாய்ந்திருப்பவனாய், தென் நன் குறுங்குடியுள் செம்பவளம் குன்றினை — தென் திசையிலுள்ள விலக்ஷணமான திருக்குறுங்குடியிலே சிவந்த பவழமலைபோல் விளங்குமவனாய்,

---

பட்டிருக்கை. (தன்னுலகமாக்குவித்த) ஆச்ரிதரோடு தன்னோடு வாசியில்லாமையாலே, இந்த்ரனுக்கென்னாதொழிகிறது. (தாளானை) தாளென்று திருவடிகள்.

தான் குணவானாக பாவித்து நின்றவிடங்களிலே, ''இவன் குணவான்' என்று அறியாதே கொள்ளுங்கோள்''

(தன்னுலகமாக்குவித்த) அடியாருக்கும் தனக்கும் வேற்றுமைகாணாதவனாகையாலே 'இந்திரனுலகமாக்குவித்த' என்னாமல் 'தன்னுலகம்' என்கிறது. உண்மையில் இது மாவலி மண்ணோ, இந்திரன் மண்ணோ அல்லவே; 'வாமனன்மண்' அன்றோ. அதனாலும் 'தன்னுலகம்' என்கிறார். (தாளானை) இதெல்லாம் கால்வண்ணம். இக்கால் வண்ணத்தையும் அழிக்கிறேன் என்கை.

விபவாவதாரசேஷ்டிதங்களை அழிக்கிறேன் என்றாள் இதுவரையில். 'ஸௌலப்ய ஸௌசீல்யாதிகுணங்களின் எல்லையிலே நிற்பவன்' என்று புகழ்பெற்று நிற்கும் அர்ச்சாவதாரஸ்தலங்களிலே சென்று, ''இவன் அக்

என்று சாற்றுகிறேன். (தாமரைமேலித்யாதி) இதுக்கெல்லாமடியான பிராட்டியோடே திருவிண்ணகரிலே அவளோட்டை ஸம்ஶ்லேஷம் திருமேனியிலே நிழலிட நிற்கிறவனை. (பொன்னி) அவதாரங்களைப்பண்ணி ப்ரதிபக்ஷநிரஸநம்பண்ணி இளைப்பாறச் சாய்ந்தவனை. (தென்னன்) வைத்தகண் வாங்கவொண்ணுதவழகு. (மன்னிய) ப்ரதிகூலர்நடுவே, ஆச்ரிதர்க்குத் தன்னைக் கொடுத்துக்கொண்டு இருக்கிற ஔதார்யம்.

குணங்களையுடையவனாக பாவித்து நிற்பதெல்லாம் ஏமாற்று; உண்மையில் இவனிடம் அவையில்லை" என்று சாற்றுகிறேன் என்கிருள் இனி. (தாமரைமேல் மின்னிடையாள் நாயகனை விண்ணகருள் பொன்மலையை) (தாமரை...நாயகனை) இப்படி அவதாரங்களெடுப்பதற்குக் காரணம் அவள் ஸம்பந்தம். அவள் ஸம்பந்தமும் பயனற்றுற்றுப் போயிற்றென்கிறேன் என்றுமாம். அவளிடம் ஈடுபட்டுப் பெருமைகொண்டாடியிருப்பவனை என்றுமாம். (விண்ணகரில் பொன்மலையை) திருவிண்ணகரிலே அவளோடு கூடியிருக்கையாலே ஹிரண்யவர்ணையான அவள் நிறம் தன்மேல் நிழலிட்டு நீலமலையான தான் பொன்மலையாய் விளங்குகிறபடி. **"நீலதோயத மத்யஸ்தா வித்யுல்லேகா"** [தை-நா] என்றதன்றோ வேதமும். (பொன்னிமணி கொழிக்கும் பூங்குடந்தைப் போர்விடையை) **"திசைவில் வீசும் செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை"** [திருவாய்5-8-9] என்கிறபடியே காவிரியானது ரத்தினங்களைக் கொணர்ந்து சேர்க்கும் அழகிய குடந்தையிலே, அவதாரங்களைப்பண்ணி எதிரிகளோடு போர்புரிந்த சிரமம் தீரும்படியாகச் சாய்ந்திருப்பவனை. (போர்விடையை) ப்ரதிபக்ஷநிரஸனம் பண்ணின மதிப்புத்தோற்றச் சாய்ந்திருப்பவனின் மதிப்பையழிக்கிறேன். (தென் நன் குறுங்குடி) தெற்குத்திக்கிலேயுள்ளதாய், வைத்தகண் வாங்கவொண்ணுத வடிவழகையுடைய குறுங்குடி என்னுதல், 'தென்னன்' என்று ஒருபதமாய், பாண்டியனுடையதான குறுங்குடி என்னுதல். (செம்பவளக் குன்றினை) மடலெடுத்தும் பெறவேண்டிய வடிவழகையுடையவனை. (தண் சேறை மன்னிய வள்ளலை) மேகவண்ணனின் ஸந்நிதானத்தாலே குளிர்ந்திருக்கும் திருச்சேறையிலே, ப்ரதிகூலரான ஸம்ஸாரிகள் நடுவே அடியார்க்குத் தன்னை கொடுத்துக்கொண்டிருப்பதன்மூலம் ஸத்தைபெற்றிருக்கும் வண்மைமிக்கவனை. தன்னையே தமர்க்கு நல்கித் தன் உயிர்தரிக்கும் பரமோதாரனை. அவ்வௌதார்யம் நிலைநிற்கும்படியைப் பார்ப்போம் என்கை.

மன்னிய தண்சேறை வள்ளலை மாமலர்மேல்
அன்னம் துயிலு மணிநீர் வயலாலி 115
என்னுடைய வின்னமுதை யெவ்வுள் பெருமலையைக்
கன்னி மதில்சூழ் கணமங்கைக் கற்பகத்தை 116
மின்னை யிருசுடரை வெள்ளறையுள் கல்லறைமேல்
பொன்னை மரதகத்தைப் புட்குழியெம் போரேற்றை 117

தண்சேறை மன்னிய வள்ளலை—குளிர்ந்த திருச்சேறையிலே பொருந்தி யெழுந்தருளி யிருக்கிற பரம உதாரனைப், மாமலர் மேல் அன்னம் துயிலும் அணி நீர் வயல் ஆலி என்னுடைய இன் அமுதை—சிறந்த தாமரைப் பூக்களின்மேலே அன்னப்பறவைகள் உறங்கப்பெற்ற அழகிய நீர் நிறைந்த வயல்களையுடைத்தான திருவாலியிலே எனக்குப் பரம போக்யனாக ஸேவை ஸாதிப்பவனைப், எவ்வுள் பெருமலையை—திருவெவ்வுளூரில் பெரியதொரு மலை சாய்ந்தாற்போலே சாய்ந்தருள்வனைப், கன்னி மதில் சூழ் கணமங்கை கற்பகத்தை-புதியதான மதில்களாலே சூழப்பட்ட திருக்கண்ண மங்கையில் கல்பவ்ருக்ஷம்போல் எழுந்தருளியிருப்பவனைப், மின்னை—மின்போல் விளங்குகின்ற பெரிய பிராட்டியாரையுடையனைப், இரு சுடரை—ஸூர்ய சந்திரர்களோ என்னும்படியான திருவாழி திருச்சங்குகளையுடையனைப், வெள்ளறையுள்—திருவெள்ளறையிலே, கல் அறை மேல்—கல்லாலான ஸந்நிதியினுள்ளே, பொன்னை—பொன்போல் விளங்குமவனைப், மரதகத்தை–மரதகப்பச்சைபோன்ற வடிவையுடையனைப், புட்குழி எம் போர் ஏற்றை-திருப்புட்குழியிலே எழுந்தருளியிருக்கிற அஸ்மத் ஸ்வாமியான ஸமரபுங்கவனைப்,

---

(மாமலர்மேல்) ஊடல் துடக்கமானவை கிட்டாமல். (அன்னம் துயிலும்) போகத்துக்கேற்றவற்றையிட்டு உறங்கும் படுக்கையிறே. (என்னுடைய) இரண்டு தலைவாரமும்

(மாமலர் மேல் அன்னம் துயிலும்) ராஜஹம்ஸமும், பேடையும் ஒன்றோடொன்று ஊடி, மஹாபாரதம்போலே ப்ரணயகலஹம் நடத்த வேணுமென்று பாரித்துக்கொண்டு தாமரைமலரிலே இழிகின்றன; மலரும் ஊடல் முதலானவற்றுக்கு இடமளிக்கவல்ல மாமலராயிருக்கிறது. ஆனால், மலரில் இறங்கியவுடன், மென்மலர்ப்பள்ளி வாய்த்தமையாலே ஊடல் முதலானவை கிட்டாமல் உறங்கிவிடுகின்றன அன்னங்கள். மென்மை, குளிர்த்தி, வாஸனை முத்லான ராஜபோகங்கள் நிரம்பியிருக்கும் படுக்கை

தம்மது. (எவ்வுள்) அநுபவித்து முடிக்கவொண்ணுமை. (கன்னிமதிள்சூழ்-கற்பகம்) என்று காவலிட்டு நின்ருர். (மின்னேயிருசுடரை) இவற்றின் தன்மையையுடையவனே.

(வெள்ளறை) சீரிய வஸ்துவென்று சேர்க்கிருர். (புட்குழி) ப்ரதிபக்ஷத்துக்குக் கணிசிக்கவொண்ணுமை. (மன்னு

யாகையாலே ராஜஹம்ஸங்கள் ராஜாக்கள் மென்மலர்ப்பள்ளியிலே உறங்குவதுபோலே உறங்குகிறபடி. (அணிநீர் வயலாலி) அழகிய ஜல ஸம்ருத்தியையுடைய திருவாலியிலே. (என்னுடைய இன்னமுதை) இவள் பிறந்தவிடமாய், திருப்பதியாகையாலே புக்கவிடமுமாயிருக்கையாலே மேல்வாரமும் குடிவாரமுமாகிற இருதலைவாரமும் தம்முடையதாயிருக்கிறபடி. (எவ்வுள் பெருமலையை) திரு எவ்வுள் ஊரிலே, தன்இனிமையை எவரும் அனுபவித்து முடிக்கமுடியாத பெருமலைபோலே சாய்ந்திருப்பவனை. (கன்னி மதிள் சூழ்க் கணமங்கைக் கற்பகத்தை) என்றும் புதியதான மதிளாலே சூழப்பட்டிருக்கும் கண்ணமங்கையிலே எனக்கே தன்னைத்தந்த கற்பகத்தை. **''கண்களாரளவும் நின்று கண்ணமங்கையுள் கண்டுகொண்டேன்''** [பெரியதிரு 7-10-9] என்ருரன்றே. (மதிள்சூழ்) மடலெடுக்கும்போதும் காவலுண்டென்று ஆச்வாஸமடைகிருர், மங்களாசாஸநபரராகையாலே. அங்கு நிற்பது எப்படியெனில்: (மின்னை இருசுடரை) மின்னல் போலவும், சந்திரசூரியர்கள் போலவும் தன்மைகளுடையனுய் நிற்கிறபடி. பிராட்டியோடும், சங்கசக்ரங்களோடும் நிற்கிறதைக்கண்டு சொல்லிற்ருகவுமாம். **''கருமுகில் தாமரைக்காடு பூத்து நீடு இருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ் திருவொடும் பொலிய''** என்ருர் கம்பரும்.

(வெள்ளறையுள் கல்லறை மேல் பொன்னை) திருவெள்ளறையினுள்ளே கல்லாலான அறை மேலே பொன்போலே ஆசைப்படத்தக்கவனுயிருப்பவனை. (கல்லறை) ''மாணிக்க அறை'' என்று நாயனுர். இவர்களுடைய பாரிப்பு இருக்கிறபடி. (பொன்னை) மிகச்சிறந்த பொன்னையும் மணிகளையுங்கொண்டு ரத்நஹாரம் தொடுப்பாரைப்போலே அர்ச்சாவதாரஸ்தலங்களைச் சேர்க்கிருர். (மரதகத்தை) காண்பார் கண்குளிரும் பச்சைமாமணிபோன்ற மேனியை உடையவனை - மத்யமணிந்யாயத்தாலே முன்னும் பின்னும் அந்வயிப்பது. (புட்குழி எம்போரேற்றை) திருப்புட்குழியிலே எதிரிகள் பார்க்கவும் மாட்டாதபடியாய், போர் செய்ய முன்னிற்கும் ரிஷபம்போலே நிற்பவனை. (எம்போரேற்றை) என்னைத் தோற்பித்துக் கொண்டவனை என்றுமாம்.

மன்னு மரங்கத்தெம் மாமணியை வல்லவாழ்
பின்னே மணளனைப் பேரில் பிறப்பிலியைத் 118

அரங்கத்து மன்னும்—திருவரங்கத்தில் நித்யவாஸம் பண்ணுகிறவனும், எம் மா மணியை-நாம் கையாளக்கூடிய நீலமணிபோன்றவனும், வல்ல வாழ்-திருவல்லவாழிலே எழுந்தருளியிருக்கிற, பின்னை மணாளனை—நப்பின்னை நாயகனும், பேரில் பிறப்பு இலியை—திருப்பேர் நகரிலெழுந்தருளியிருக்கிற நித்யவித்தனும்,

---

மரங்கம்) "அற்றபற்றர்" என்றும் "நல்லார்கள் வாழும்" என்றும். (மன்னுமரங்கம்) கண்டார் விடாத தேசம்.

(மன்னு மரங்கத்து) தொண்டரடிப்பொடியாழ்வார் போன்ற அடியார்கள் மற்ற திவ்யதேசங்களைக் கைவிட்டு இங்கேவந்து நிலைநிற்கும் திருவரங்கம். **"அற்றபற்றர் சுற்றி வாழும் அந்தணீர் அரங்கம்"** [திருச்சந்த-52] என்றும் **"நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணையான்"** [நாச்-திரு 11-5] என்றும் சொல்லப்படுகிறதன்றோ. "திருநாள் ஸேவிக்கவென்று வந்து பின்பழகும், பிறகுவாளியுமழகும், கொக்குவாயும், கடைப்பணிக் கூட்டமும் இருக்கிறபடியைக் கண்டு க்ஷேத்ரஸந்யாஸம் பண்ணி வர்த்திக்கும்படிக்கு ஈடாகவாயிற்று கோயிலிலே கண்வளர்ந்தருளும்படி" என்று நாயனூர் வியக்கியானம்; அன்றிக்கே, (மன்னுமரங்கத்து) ஸ்ரீவைகுண்டம், திருப்பாற்கடல், மற்றுமுண்டான திவ்யதேசங்கள் ஆகியவற்றில் இருப்புக்கொள்ளாமல், இங்கேயே வந்து ஸ்தாவர ப்ரதிஷ்டையாகக் கண்வளரும் தேசம் என்றுமாம். (எம்மாமணியை) பெருவிலையராயிருக்கையாலும், முந்தானையிலே முடிந்தாளலாம்படி ஸௌலப்யமுடையராயிருக்கையாலும், நிறத்தாலும், ஒளியாலும் ஒரு நீலமாமணிபோலிருப்பவரை. (அரங்கத்தெம்மாமணியை) அகில ஜகத் ஸ்வாமியாயிருப்பது ஒரு தட்டென்றால் அஸ்மத் ஸ்வாமியாயிருப்பது ஒரு தட்டாயிருக்கிறபடி. (மா மணியை) பெரியமணியை; கருமணியை என்றுமாம். **"கோயில் மணியனூர்"** [திருமாலை-21] என்றார் தொண்டரடிப்பொடிகளும். **"தெண்ணீர்ப் பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளிகொள்ளும் கருமணி"** [பெருமாள் திரு 1-1] என்றார் குலசேகரப் பெருமாள். **"அணியார் பொழில் சூழ் அரங்கநகரப்பா-மணியே மணி மாணிக்கமே"** [பெரியதிரு 11-8-8] என்று மணிகளுக்குள் சிறந்த மாணிக்கமென்றார் இவரும் திருமொழியிலே.

தொன்னீர்க் கடல்கிடந்த தோளா மணிச்சுடரை
என்மனத்து மாலே யிடவெந்தை யீசனே 119

தொல் நீர் கடல் கிடந்த—ப்ரளய காலத்தில் நீராலான கடலிலே பள்ளி கொள்பவனுய், தோளா மணிசுடரை—துளேவிடாத ரத்னத்தின் ஒளியா யிருப்பவனே, என் மனத்து மாலே—என்மேல் காதலுடையனுகி எனது நெஞ்சை விட்டுப்பிரியாதவனுய், இடவெந்தை ஈசனே—திருவிடவெந்தை யிலெழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனுய்,

---

(வல்லவாழ் பின்னே) நப்பின்னேப் பிராட்டியைத் திரு மணம்புணர்ந்த செவ்விதோற்ற நிற்கை. (பேரில்) இதுக்கு முன்பு பிறவாதே, பின்பு பிறக்கவிருக்கிறவனே. (தொல் நீர்) அவதாரத்துக்கு நாற்றங்கால். (தோளாமணிச் சுடரை) துளேப்படாத மணியினெளிதானுனவனே. (என் மனத்துமாலே) என் பக்கலிலே வ்யாமோஹத்தைப்பண்ணி என் ஹ்ருதயத்தில் நிற்கிறவனே. (இடவெந்தையீசனே)

(வல்லவாழ் பின்னே மணுளனே) நப்பின்னேப் பிராட்டியை மணம் செய்துகொண்ட அழகு தோற்றும்படியாகத் திருவல்லவாழிலே நிற்கிற வனே. (பேரில் பிறப்பிலியை) இதுக்குமுன்பு அடியார்க்காக எத்தனேயோ அவதாரங்களேச் செய்தபோதிலும் அவற்றை அஸத்கல்பமாக எண்ணி, இனி ஆயிரங்கோடி அவதாரம் செய்யவேணும் என்று பாரித்துக்கொண்டு திருப்பேர் நகரிலே சாய்ந்திருப்பவனே. (பிறப்பிலி) பரமபுருஷனுடைய திருவுள்ளத்தாலே முன்பு பிறந்ததெல்லாம் ஒன்றும் செய்யாததாகத் தோற்றியிருப்பதைக் காட்டுகிறது. (தொல் நீர்க்கடற்கிடந்த தோளா மணிச்சுடரை) பரமபதத்திலிருந்தவன், நித்யஸூரிகளெல்லாம் இருக்கச் செய்தேயும் **"ஸ ஏகாகீ ந ரமேத"** [அவன் தனியனுய் உகக்கவில்லே] என்கிறபடியே தனியனுய் வருந்தி, சேதனரை ஸ்ருஷ்டித்து, அவர்களே உய்விப்பதற்காகத் திருப்பாற்கடலிலே முதலவதாரம் எடுத்தவுடன் துளே படாத மணியின்சுடர்போலே ஒளிவிஞ்சி நின்ருன் என்கை. (தொல் நீர்) விபவார்ச்சாவதாரங்களாகிற பயிர்களுக்கு நாற்றங்காலிருக்கிறபடி. (தோளா மணிச்சுடரை என் மனத்து மாலே) என்னிடத்திலே காதல் கொண்டு என் நெஞ்சிலே எழுந்தருளியவுடன் மிகவிளங்கிநின்றவனே என்றுமாம். திருப்பாற்கடல் முதலானவை ஸர்வேச்வரனுக்கு ஸாதநாநுஷ் டாநஸ்தலமாய் பாலாலயமாய் (இளங்கோயிலாய்), நெஞ்சமே ப்ராப்ய

மன்னும் கடன்மல்லை மாயவனை வானவர்தம்
சென்னி மணிச்சுடரைத் தண்கால் திறல்வலியைத் 120
தன்னைப் பிறரறியாத் தத்துவத்தை முத்தினை
அன்னத்தை மீனையரியை யருமறையை 121
முன்னிவ் வுலகுண்ட மூர்த்தியைக் கோவலூர்

கடல்மல்லை மன்னும் மாயவனை — திருக்கடல்மல்லையிலே நித்யவாஸம் செய்யும் ஆச்சரியனும், வானவர் தம் சென்னி மணி சுடரை — நித்யஸூரிகளுடைய தலையலங்காரமாக விளங்குமவனும், தண்கால் திறல் வலியை — திருத்தண்காலில் எழுந்தருளியிருக்கிற மஹாபலசாலியாய், தன்னை பிறர் அறியா தத்துவத்தை—(தனது திருவருளுக்கு விஷயமாகாத) பிறர் அறிந்து கொள்ளமுடியாத ஸ்வரூபத்தையுடையனும், முத்தினை — முத்துப்போன்றவனும், அன்னத்தை-ஹம்ஸாவதாரஞ் செய்தவனும், மீனை-மத்ஸ்யாவதாரஞ் செய்தவனும், அரியை — ஹயக்ரீவாவதாரஞ் செய்தவனும், அருமறையை — ஸகலவேத ஸ்வரூபியாய், முன் இ உலகு உண்ட மூர்த்தியை — முன்னொரு கால் இவ்வுலகங்களையெல்லாம் திருவயிற்றிலே வைத்து நோக்கின ஸ்வாமியாய், கோவலூர்-திருக்கோவலூர்,

---

ஸர்வேஶ்வரத்வம் நிழலிடநிற்கிறவனை. (மன்னும் கடல் மல்லை) ஆஶ்ரிதர்க்காகத் தரையிலே கண்வளர்ந்தருளுகிறவனை.

(வானவர் தம் சென்னிமணிச்சுடரை) * அயர்வறுமமரர்கள் சிரோபூஷணம். (தண்கால் திறல்வலியை) எல்

ஸ்தலமாய்ப் பெருங்கோயிலாயன்றோ இருப்பது. "விச்வஸ்யாயதநம் மஹத்" [தை-நா] [ஸர்வேச்வரனுக்கு நெஞ்சமே பெருங்கோயில்] என்றது உபநிஷத்து. "நெஞ்சமே நீள்நகராக இருந்த என்தஞ்சனே" [திருவாய் 3-8-2] என்றார் ஆழ்வார். "இளங்கோயில் கைவிடேல்" [இர-திருவ-54] என்று பிரார்த்தித்தவர்களும் உண்டு. இதுக்கு உதாஹரணமுரைக்கிறார்,-(இடவெந்தை ஈசனை) திருவிடவெந்தையிலே பூமிப்பிராட்டியிடம் கொண்ட காதலாலே மிகவிளங்கிநிற்பவனை. பூமி பதியாயிருக்கையாலே ஸர்வேச்வரனென்பது தோற்ற இருப்பவனை என்றுமாம். (மன்னும் கடல் மல்லை மாயவனை) திருக்கடல்மல்லையிலே, பிரியில் தரியாத திருவநந்தாழ்வானையும்விட்டு, 'அடியான் உகந்தவிடம்' என்று தரையிலே கண்வளர்ந்தருளி அத்தாலே விளங்கிநிற்கிற ஆச்சர்யபூதனை.

லாரையும் ஜயிக்கும் மிடுக்கையுடையவனை. (தன்னைப் பிற ரறியாத் தத்துவத்தை) ஸௌலப்யத்தாலே தாழநிற்க, சிசுபாலாதிகள் அறியாதே வையும்படியாயிருக்கை. (முத்தினை) ஶ்ரமஹரனுயிருக்கிறவனை. (அன்னத்தை மீனை யரியை) ஸர்வ வித்யைகளுக்கும் உபதேஷ்டாவாயிருக்கிற வனை. (அருமறையை) அந்த வித்யைகள் தானுயிருக்கை. (முன்னிவ்வுலகுண்ட மூர்த்தியை) முற்கோலி, இருந்ததே குடியாகத் தன் வயிற்றிலே வைத்து நோக்குமவனை.

இப்படி அநாதனைப்போலே தரையிலே கிடப்பவன் யாரெனில்: (வானவர்தம் சென்னி மணிச்சுடரை) அயர்வறுமமரர்களான நித்யஸூரிகளுடைய தலையிலே சுடர்விடும் சிரோமணியாயிருப்பவன் என்கிறது. "அமரர் சென்னிப்பூ' என்றும் சொல்லப்படுகிறதன்றோ. (தண்கால் திறல் வலியை) திருத்தண்காலிலே, 'வீர்யமும், பலமும் ஓர் உருவுகொண்டதோ" என்னலாம்படி அனைவரையும் ஜயிக்கும் வீர்யபலங்களையுடையவனுய் விளங்குகிறவனை. (தன்னைப் பிறரறியாத் தத்துவத்தை) தான் காட்டினுலல்லது தன்னைப் பிறர் அறியமுடியாமலிருக்கும் பரம்பொருளை. "**யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:**" [எவனை இப்பரமபுருஷன் வரிக்கிருனே அவனுலேயே அடையத்தக்கவன்] என்றது பழமறை. "**யாவர் காண வல்லர்**" [திருச்சந்த-8] என்ருர் மழிசைப்பிரான். தான் ஸௌலப்ய ஸௌசீல்யாதிகளாலே தாழநின்று பிறர்க்குக் காட்டினுலும், "**பரம் பாவம ஜாநந்த: அவஜாநந்தி மாம் மூடா:**" [கீதை 9-11] [என் பெருமையை அறியாமல் மூடர்கள் அவமதிக்கின்றனர்] என்கிறபடியே இவன் பெருமையை அறியாமல் சிசுபாலாதிகள் கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும்படியிருப்பவனை என்றுமாம். (முத்தினை) அடியார் அணியலாம்படி குளிர்ந்து அழகிய திருமேனியை உடையவனை. (அன்னத்தை மீனை அரியை) பிரமன் வேதங்களை மதுகைடபரிடத்திலே பறிகொடுக்க, ஹயக்ரீவாவதாரமெடுத்து அவர்களைக்கொன்று, மீனுயிருந்து வேதங்களைக் கவர்ந்து, அன்னமாயிருந்து அவற்றை உபதேசித்தவனை. அரி-குதிரை; இங்கு பரிமுகப்பெருமானுன ஹயக்ரீவன். இப்படி வேதத்துக்காகப் பாடுபடுவதற்குக் காரணமென்னவெனில்: (அருமறையை) அந்த வேதம் தானேயாயிருப்பவனை. "**வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:**" [கீதை 15-15] [எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுமவன்] என்கிற படியே வேதவேத்யனுயிருக்கையாலேயே மறையை ரக்ஷிக்க இப்பாடு பட்டான் என்கிறது. (முன்னிவ்வுலகுண்ட மூர்த்தியை) ப்ரளயகாலத்

மன்னு மிடைகழியெம் மாயவனைப் பேயலறப் 122
பின்னும் முலையுண்ட பிள்ளையை அள்ளல்வாய்
அன்ன மிரைதே ரழுந்தூ ரெழுஞ்சுடரைத் 123
தென்தில்லைச் சித்திர கூடத்தென் செல்வனை
மின்னி மழைதவழும் வேங்கடத்தெம் வித்தகனை. 124

இடைகழி மன்னும் எம் மாயவனை — இடைகழியில் நித்யவாஸம்பண்ணுகிற எங்கள் திருமாலாய், பேய் அலற முலை உண்ட பிள்ளையை — பூதனையானவள் கதறும்படியாக அவளது முலையை உண்ட பிள்ளையாய், அன்னம் — ஹம்ஸங்களானவை, அள்ளல் வாய் — சேற்றுநிலங்களில், இரைதேர் அழுந்தூர் — இரைதேடும்படியான திருவழுந்தூரில், எழும் சுடரை — விளங்கும் சோதியாய், தென் தில்லை சித்திரகூடத்து என் செல்வனை — தென்திசையிலுள்ள தில்லைச் திருச்சித்திரகூடத்தில் (எழுந்தருளியிருக்கிற) எனது செல்வனாய், மழை — மேகங்களானவை, மின்னி — பளபளவென்று மின்னிக்கொண்டு தவழும் — தவழ்ந்து வருகிற, வேங்கடத்து — திருவேங்கடமலையில் (எழுந்தருளியிருக்கிற) எம் வித்தகனை — நமக்கு ஆச்சர்யகரமான குணசேஷ்டிதங்களையுடையனாய்,

---

(கோவலூர் மன்னுமிடைகழி யெம்மாயவனை) ஆஸ்ரித ரடிச்சுவடும்விடாதே நிற்கிறவனை. (பேயலறப் பின்னும் முலையுண்ட பிள்ளையை) யசோதைப் பிராட்டியுடைய

திலே, இவ்வுலகினர் மேன்மேலும் தங்களுக்கு ஆபத்தை விளைத்துக் கொள்ளாதபடி இவர்களை ஸம்ஹரித்துத் தன் திருவயிற்றிலே அடக்கி ரக்ஷித்து அதனாலே விளங்கிய திருமேனியை உடையவனை. (முன்) இவனுடைய ரக்ஷகத்வம் அநாதிஸித்தமென்கை. (முன்) ப்ரளயஜலத்திலே இது நோவுபடுவதற்கு முன்னே ரக்ஷித்தான் என்றுமாம். (உலகு) காணப்படும் ஸத்தைபெற்ற பதார்த்தங்களெல்லாவற்றையும் ரக்ஷித்தான்.

(கோவலூர் மன்னும் இடைகழி எம் மாயவனை) "இடைகழி மன்னும்" என்று கூட்டிப் பொருள்கொள்வது. முதலாழ்வார்களோடு நெருக்குண்கையையே பேரின்பமாகக்கொண்டு நின்றவிடமாகையாலே, அவர்களுடைய அடிச்சுவட்டை முகர்ந்துகொண்டு அங்கேயே நித்யவாஸம் செய்யும் ஆச்சர்யபூதனை. (பேயலறப் பின்னும் முலையுண்ட பிள்ளையை) யசோதைப்பிராட்டி கண்ணனைத் துதித்துப்பாடி முலைகொடுப்பள்.

ஸ்துதிபோலே பேயினுடைய கத்துகையையும் ஸ்துதியாகக்கொண்டு முலையுண்ட மௌக்த்யத்தையுடையவனை. (அள்ளல்வாய் அன்னமிரைதேர்) கலங்கின நீரிலிழியாத அன்னமுங்கூட இழியும்படிக்கீடான நல்ல சேறு. (அழுந்தூர் எழுஞ்சுடரை) ஆஶ்ரிதர்கைதொடனுன என்னையுங் கண்டுகந்து நிற்கிறவனை. (தென்தில்லை) அங்குத்தையழகனை.

(மின்னி மழைதவழும் வேங்கடத்தெம் வித்தகனை) மேகமானது மின்னுகிற கைவிளக்கைக்கொண்டு குச்சி வழியேபுக்குத் திருவாராதநம் பண்ணவிருக்கிற ஆஶ்சர்ய பூதனை. (மன்னனை இத்யாதி) நாட்டுக்கு ராஜா, தமக்கு

கம்ஸனால் ஏவப்பட்ட பூதனையென்னும் பேய், விஷந்தடவிய முலை கொடுக்கப்புக்கு, இவன் பற்றின பற்றையே தாளாமல் அலறப்புக, அவ்வலறலையே துதிப்பாட்டாகக்கொண்டு அவளுடைய முலையுண்ட பிள்ளைத்தனத்தையுடையவனை. (அள்ளல் வாய் அன்னம் இரை தேர் அழுந்தூர்) கலங்கின நீரிலும் இறங்க வெறுக்கும் அன்னங்களும் விரும்பி இறங்கி இரைதேடும் இனிய சேற்றுறையுடைய திருவழுந்தூர். (அழுந்தூர் எழுஞ் சுடரை) அழுந்தூரிலே உதிக்கும் சூரியனை என்றுமாம். (தென் தில்லை சித்திரகூடத்தென் செல்வனை) அழகிய தில்லைத் திருச்சித்திரகூடத்திலே பெருஞ்செல்வத்தையுடையவனாகச் சாய்ந்திருப்பவனை. அழகுச் செல்வத்தையுடையவனை என்றுமாம்.

(மின்னி மழைதவழும் வேங்கடத்தெம் வித்தகனை) அசேதனமான மேகமும் திருமலையிலே திருக்காப்பிட்டபின்பும், தன் வடிவில் இருட்சிக்குக் கைவிளக்காக மின்னலாகிற ஒளிவிளக்கைக்கொண்டு திறவுகோல் துவாரத்தின் வழியே தவழ்ந்துசென்று திருவாராதனம் செய்யும்படியிருக்கும் ஆச்சர்யபூதனை. அன்றிக்கே, **வேங்கடத்துத் தன்னாகத் திருமங்கை தங்கியசீர் மார்வற்கு**" [நாச்-திரு 8-4] **"மின்னொத்த நுண் மருங்குல் மெல்லியலைத் திருமார்வில் மன்னத்தான் வைத்துகந்தான்"** [பெரியதிரு 6-9-6] **"அலர்மேல்மங்கையுறைமார்வா-திருவேங்கடத்தானே"** [திருவாய் 6-10-10] என்கிறபடியே ஹிரண்யவர்ணையான பிராட்டியோடு கூடிய கரிய திருமேனியையே **"மின்னி மழைதவழும்"** என்கிறாராகவுமாம். நீலதோயதமத்யஸ்தையான வித்யுல்லேகையென்று பண்டைமறையும், நீலமுண்ட மின்னன்னமேனி என்று தமிழ்மறையும் குறித்தனவன்றோ

மன்னனை மாலிருஞ் சோலை மணாளனைக்
கொன்னவிலு மாழிப் படையானைக் கோட்டியூர் 125
அன்ன வுருவி னரியைத் திருமெய்யத்து
இன்னமுத வெள்ளத்தை யிந்தளூ ரந்தணனை 126
மன்னு மதிட்கச்சி வேளுக்கையாளரியை
மன்னிய பாடகத்தெம் மைந்தனை வெஃகாவில் 127

மன்னனை—ஸர்வேச்வரனாய், மாலிருஞ்சோலை மணாளனை-திருமாலிருஞ் சோலையில் எழுந்தருளியிருக்கிற மணவாளப் பிள்ளையாய், கொல் நவிலும் ஆழி படையானை—பகைவரைக் கொல்லவல்ல திருவாழியை ஆயுதமாகவுடையனாய், கோட்டியூர் — திருக்கோட்டியூரில், அன்ன உருவின் அரியை—அப்படிப்பட்ட [விலக்ஷணமான] திருமேனியையுடைய நரஸிம்ஹ மூர்த்தியாய், திரு மெய்யத்து-திருமெய்யமலையில், இன் அமுதம் வெள்ளத்தை-இனிதான அம்ருதக்கடல்போல் பரமபோக்யனாய், இந்தளூர்-திருவிந்தளூரில், அந்தணனை-பரமகாருணிகனாய், மன்னு மதிள்-பொருந்திய மதிள்களையுடைய, கச்சி-காஞ்சீ நகரத்தில்,வேளுக்கை ஆளரியை-வேளுக்கையென்கிற தலத்திலுள்ள நரசிங்கராய்,பாடகத்து மன்னிய எம் மைந்தனை-திருப்பாடகத்தில் நித்யவாஸம்பண்ணுகிற எமது யுவாவாய், வெஃகாவில்-திருவெஃகாவில்,

---

மணாளன். (கொன்னவிலும் ஆழிப்படையானை) நமுசி ப்ரப்ருதிகளை "வாய் வாய்" என்னப்பண்ணும் திருவாழியையுடையவனை. (கோட்டியூர் அன்னவுருவிலரியை) *முரியும்

இத்திருமேனியை. (மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை) மாலிருஞ் சோலையிலே என்னைக் கைப்பிடித்தவன் நாட்டுக்கெல்லாம் அரசன் கிடீர்! அரசரென்ற மதிப்பாலேயே என்னை அநாதரிப்பது என்று கருத்து. (கொன்னவிலும் ஆழிப்படையானை) 'நமுசி' முதலானவர்களைக் கொலை செய்யத்துடிக்கையாலே அஞ்சவைக்கும் சக்கரப்படையை உடையவனை. (கோட்டியூர் அன்னவுருவில் அரியை) திருக்கோட்டியூரிலே 'அப்படிப் பட்டது' என்றே சொல்லலாம்படியாய் வாசாமகோசரமான வடிவழகையுடைய நரசிங்கரூபியாய் எழுந்தருளியிருப்பவனை. (கோட்டியூர் அரியை) இரணியனைக்கொல்ல உபாயம்தேடி கோஷ்டி கூடிய இடமாகையாலே கோட்டியூராயிற்று. "திருக்கோட்டியூர் நாதனை நரசிங்கனை" [பெரியாழ் திரு 4-4-6] என்றார் பெரியாழ்வாரும் (அரியை) "தெற்காழ்வார்'

வெண்டிரைபாடினவர்க்கு நிலமன்றியேயிருக்கிறவனை. (திருமெய்யத்து இன்னமுத வெள்ளத்தை) நினைக்கவிடாய் கெடும்படியிருக்கிறவனை. (இந்தளூர் அந்தணனை) அந்தணனை-ஆந்ருசம்ஸ்யமுடையவனை. (மன்னும் மதிள்) வீரம் தோற்றாதே அழகே தோற்றி பயப்பட்டு மதிளிடவேண்டும்படி நிற்கிறவனை. (மன்னிய பாடகத் தெம்மைந்தனை) அர்ஜுநனுக்கு ஸாரத்யம்பண்ணினபடி தோற்றவிருக்கிறவனை.

(வெஃகாவில் உன்னிய யோகத்துறக்கத்தை) ஆஶ்ரிதரிட்ட வழக்காயிருக்கிறவனை. அதாவது-திருமழிசைப்பிரான்

"கோளரியாழ்வார்" என்னும் திருநாமங்களுடன் எழுந்தருளியிருக்கும் அத்புத நரகேஸரி ரூபங்களைக் குறிக்கிறது. (அன்னவுருவில் அரியை) இராமபிரானைக் கவிபாடப்புக்கு, "முரியும் வெண்திரை முதுகயம் தீப்பட முழங்கழல் எரியம்பின் வரிகொள் வெஞ்சிலை வளைவித்த மைந்தனும்" [பெரியதிருமொழி 8-5-6] என்னும் அத்புத கவியைப்பாடிய இவருக்கும் கவிபாட இயலாமல் 'அப்படிப்பட்ட உரு' என்னும்படியிருக்கிறவனை. (திருமெய்யத்து இன்னமுத வெள்ளத்தை) திருக்கோட்டியூர்க்குப் போகிற வழியிலே விடாய்த்தவர்களுக்கு விடாய்தீரும்படியான இனிய அமுதக் கடலாயிருப்பவனை. (இன்னமுதம்) அவ்வமுதம் குடித்தால் விடாய்தீரும். இவ்வமுதம் நினைத்தாலும் நெஞ்செல்லாம் இனித்து விடாய்தீர்க்கும். (இந்தளூர் அந்தணனை) இந்தளூரிலே எழுந்தருளியிருக்கும் இரக்கமுடையவனை. அந்தணன்-அழகிய தண்மையை (இரக்கத்தை) உடையவன். "அந்தணர் என்பர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலால்" என்ற குறள்காண்க. பரிசுத்தனை என்றுமாம். (மன்னும் மதிட்கட்சி வேளுக்கை ஆளரியை) வேளிருக்கை வேளுக்கையாயிற்று. வேள்-மந்மதமந்மதனென்னத்தக்க அழகையுடையவன். ஆளரி-ஆள் ஆரி, நரசிங்கம். "உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும்" என்னத்தக்க வீர பலங்களை உடையவனாயிருந்தும், வீரம் தோற்றாமல் அழகேதோற்றி பயப்பட்டு அடியார் மதிளிட்டிருக்கும் திவ்யதேசத்திலே நிற்கும் நரசிங்கனை. (மன்னும் மதிள்) "ப்ரளயத்திலும் அழியாத மதிள்" என்று நாயனார். (மன்னிய பாடகத்தெம் மைந்தனை) திருப்பாடகத்திலே பாண்டவ தூதனாய் அர்ஜுனனுக்கு தூத்யஸாரத்யங்களைச் செய்தமைதோற்ற நித்யவாஸம் செய்பவனை. (மன்னிய மைந்தனை) நித்யயுவாவாயிருப்பவனை என்றுமாம்.

உன்னிய யோகத் துறக்கத்தை ஊரகத்துள்
அன்னவனை யட்ட புயகரத்தெம் மானேற்றை 128
என்னை மனங்கவர்ந்த வீசனை வானவர்தம்
முன்னவனை மூழிக் களத்து விளக்கினை 129

உன்னிய யோகத்து உறக்கத்தை—விழிப்புடனே யோகநித்திரை செய்பவனாய், ஊரகத்துள் அன்னவனை—திருவூரகத்திலுள்ள மிகச்சிறந்தவனாய், அட்ட புயகரத்து எம்மான் ஏற்றை—அட்டபுயகரத்திலுள்ள எந்தையர் தலைவனாய், என்னை மனம் கவர்ந்த ஈசனை—எனது நெஞ்சைக் கொள்ளைகொண்ட பூர்ணனாய், வானவர் தம் முன்னவனை—தேவர்க்கு முதியவனாய், மூழிக் களத்து விளக்கினை—திருமூழிக்களத்தில் விளங்குபவனாய்,

---

"கிட" என்னக் கிடந்துநிற்கிறபடி. (ஊரகத்துள் அன்னவனை) தமக்குங்கூட மேல்நோக்கி முடியப் பார்க்கவொண்ணாதபடியிருக்கிறவனை. (அட்டபுயகரத்தெம்மானேற்றை) ஆஶ்ரிதர்க்காகத் தன்னையழியமாறுமவனை. (என்னை மனங் கவர்ந்த வீசனை) ஸர்வஸ்வாபஹாரம்பண்ணிப் பூர்ணனாயிருக்கிறவனை.

(வெஃகாவில் உன்னிய யோகத்துறக்கத்தை) திருவெஃகாவிலே விழிப்பும் உறக்கமுமாயிருப்பவனை. அதாவது,- திருமழிசைப்பிரான் "பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" என்றால் விழித்தெழுந்தும், "பைந் நாகப்பாய் விரித்துக்கொள்" என்றால் படுத்துறங்கியும் போருகிறவனை. ஆச்ரிதரிட்ட வழக்காயிருப்பவனை என்று கருத்து. (உன்னிய யோகத் துறக்கத்தை) ஆச்ரிதரக்ஷண சிந்தையோடு விழிதுயிலமர்ந்திருப்பவனை என்றுமாம். (ஊரகத்துள் அன்னவனை) திருவூரகத்திலே திருவுலகளந் தருளின வடிவைக்கொண்டு, தீர்க்கதரிசியான தமக்கும் மேலே நோக்கி முழுதும் பார்க்கமுடியாத பெரிய திருமேனியோடே எழுந்தருளியிருப்பவனை. 'அன்னவன்' என்பதொழிய முடியக்காணலாவதில்லை. (அட்ட புயகரத்தெம்மானேற்றை) திருவட்ட புயகரத்திலே, அடியானான கஜேந்திரனுக்காகத் தன்னையழியமாற்றி அரைகுலையத் தலைகுலைய ஓடி வந்து அருள்செய்த வடிவைக் காட்டிக்கொண்டு மதிப்புத்தோற்ற நிற்கிறவனை. (என்னை மனம் கவர்ந்த ஈசனை) என் உள்ளமுள்ளிட்ட அனைத்தையும் கொள்ளைகொண்டு அத்தாலே தன்னை நிறைவுபெற்றவனாக நினைத்திருப்பவனை.

அன்னவனை யாதனூ ராண்டளக்கு மையனை
நென்னலை யின்றினை நாளையை நீர்மலைமேல் 130

அன்னவனை—இப்படிப்பட்டவனென்று சொல்லமுடியாதவனாய், ஆதனூர்-திருவாதனூரில், ஆண்டு அளக்கும் ஐயனை—ஸகல காலங்களையும் அளவு படுத்தும் ஸ்வாமியாய், நென்னலை இன்றினை நாளையை—நேற்று இன்று நாளை என்னும் முக்காலத்துக்கும் நிர்வாஹகனாய், நீர்மலை மேல் மன்னும்—திருநீர் மலையிலெழுந்தருளியிருக்கிற,

---

(வானவர்தம் முன்னவனை) நித்யஸூரிகளுக்குங்கூட அநுபவித்து முடியவொண்ணாதபடி இருக்கிறவனை. (மூழிக் களத்து விளக்கினை) உஜ்வலனாயிருக்கிறவனை. (அன்னவனை யாதனூராண்டளக்கு மையனை) காலத்ரயத்தையும் பரிச்

(வானவர்தம் முன்னவனை) எக்காலத்திலும் ஜ்ஞானக்குறைவு இல்லாத நித்யஸூரிகளுக்கும்கூட அநுபவித்து முடிக்கவொண்ணாதபடி இருக்கின்றவனை. வேதமும் ஆநந்தவல்லியில் படிப்படியாகச் செல்லும் ஒவ்வொரு பர்யாயத்திலும் "ச்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய" என்று நித்ய முக்தரின் ஆனந்தத்தைச்சொல்லி மேன்மேலே ப்ரஹ்மத்தின் ஆனந்தத்தை ஏற்றிக்கொண்டுபோய் "யதோ வாசோ நிவர்த்தந்தே" [எந்த ப்ரஹ்மத்திடமிருந்து வாக்குகள் திரும்புகின்றனவோ] என்று உத்கோஷித்ததன்றோ. "பூர்வோ யோ தே₃வேப்₄ய:" [பு-ஸூ] [எவன் நித்யஸூரிகளுக்கும் முன்னவனோ] என்றது புருஷஸூக்தமும். (மூழிக்களத்து விளக்கினை) திருமூழிக்களத்திலே அவதரித்தவுடன் முன்னிலும் விளங்கிநிற்பவனை. "ச்ரேயாந் ப₄வதி ஜாயமாந:" [பிறந்த பின்பே பெருமை பெறுகிறான்] என்றது பழமறை. "பலபிறப்பாய் ஒளிவரும் முழுநலம்" [திருவாய் 1-3-2] என்றது தமிழ்மறை. 'வளத்தினை' என்று பாடமானபோது, மூழிக்களத்தின் செல்வமாயிருப்பவனை என்று பொருள். (அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை) வாய்க்கு நிலமல்லாத அழகையுடையவனாயும், வருஷத்தால் உபலக்ஷிக்கப்பட்ட காலத்தை அளவுபடுத்தும் ஸ்வாமியாயும் இருப்பவனை. (ஆண்டு அளக்கும்) ப்ராக்ருதமான பொருள்களைக் காலம் அளவுபடுத்தும்; இவன் காலத்தை அளவுபடுத்துவான். "காலம் ஸ பசதே" [வி-பு 5-20-54] [காலத்தை அவன் சமைக்கிறான்.] என்றது விஷ்ணுபுராணம். எப்படி அளவுபடுத்துகிறான் என்பதைப் பேசுகிறார்

மன்னு மறைநான்கு மாஞனைப் புல்லாணித்
தென்னன் தமிழை வடமொழியை நாங்கூரில் 131
மன்னு மணிமாடக் கோயில் மணுளனை
நன்னீர் தலைச்சங்க நாண்மதியை நான்வணங்கும் 132
கண்ணனைக் கண்ண புரத்தானைத் தென்னறையூர்
மன்னு மணிமாடக் கோயில் மணுளனைக் 133

மறை நான்கும் ஆனை—சதுர்வேத ஸ்வரூபியாய், புல்லாணி—திருப்புல்லாணியிலெழுந்தருளியிருக்கிற, தென்னன் தமிழை வடமொழியை—தென் மொழிவடமொழிகளால் சொல்லப்படுமவனாய், நாங்கூரில்—திருநாங்கூரில், மணிமடாக்கோயில் மன்னு மணாளனை—மணிமாடக் கோயிலில் நிலை நிற்கும் மணவாளப் பிள்ளையாய், நல் நீர் தலைச்சங்கம் நாண்மதியை—நல்ல நீர் சூழ்ந்த தலைச்சங்காட்டிலுள்ள நாண்மதியப் பெருமாளாய், நான் வணங்கும் கண்ணனை—நான் வணங்கத்தக்க கண்ணனாய், கண்ணபுரத்தானை—திருக் கண்ணபுரத்துறைவானாய், தென் நறையூர் மணிமாடக் கோயில் மன்னு மணாளனை—திருநறையூர் மணிமாடமென்று ப்ரஸித்தமான ஸந்நிதியில் எழுந்தருளியிருக்கிற மணவாளனாய்,

---

சேதிக்குமவனை. (நென்னலையித்யாதி) பரிச்சேதித்த படியைப் பேசுகிறார்.

(நீர்மலை மேல் மன்னுமறை நான்குமானை) வேதத்தாலே அறியப்படுமவனை. (புல்லாணித் தென்னன் தமிழை)

மேலே,-(நென்னலை இன்றினை நாளையை) நேற்று, இன்று, நாளை எனப் படும் சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்னும் மூன்றுபிரிவாக்கிக் காலத்தை நிர்வஹிப்பவனை என்றபடி. **"வருங்காலம் நிகழ்காலம் கழி காலமாய் உலகை ஒருங்காக அளிப்பாய்"** [*திருவாய் 3-1-5*] **"சென்று செல்லாதன முன்னிலாம் காலமே"** [*திருவாய் 3-8-9*] என்றார் நம்மாழ்வாரும்.

(நீர்மலைமேல் மன்னும் மறைநான்கும் ஆனானை) நீர்மலைமேல் எழுந்தருளியிருப்பவனாய், நித்யமாய் குற்றமற்று விளங்கும் நாலுவேதங்களாலும் சொல்லப்படுமவனை. **"வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:"** [**கீதை 15-15**] [வேதங்களனைத்தினாலும் அறியப்படுமவன் யானே] என்றான் கீதையில் கண்ணன். (புல்லாணித் தென்னன் தமிழை) பாண்டிய

"காவார் மடல்பெண்ணை" "தன்னை நைவிக்கிலென்" என்கிற திருமொழிகள் தானேயாயிருக்கிறவனை. (வடமொழியை) ஸ்ரீ ராமாயணாதிகள். (நாங்கூரில் மன்னுமணிமாடக் கோயில் மணாளனை) என்னை மறுமுட்டுப்பெருதபடி பண்ணினவனை. (நன்னீர்) தர்ஶநீயனாயிருக்கிறவனை.

(நான்வணங்குங் கண்ணனைக் கண்ணபுரத்தானை) "கண்ணபுரமொன்றுடையானுக் கடியேனொருவர்க் குரியேனோ?" என்னும்படியாயிருக்கிறவனை. (தென்னறையூர்) மடலெடுக்கப்பண்ணினவனை. ஆணை செல்லாத தேசம்.

னுடையதான திருப்புல்லாணியிலே தமிழ்மறையான "காவார் மடல் பெண்ணை" [பெரியதிரு 9-4] "தன்னை நைவிக்கிலென்" [பெரியதிரு 9-3] என்னும் திருப்புல்லாணித் திருமொழிகளாலே பாடப்படுமவனை. (தென்னன் தமிழை) அகத்தியரின் தமிழால் பாடப்படுமவனை என்றுமாம். (வடமொழியை) ஸ்ரீராமாயணாதிகளான வடமொழி சாஸ்திரங்களாலே சொல்லப்படுமவனை. தர்ப்பசயன ராமனன்றோ (திருப்புல்லாணியில்) இருப்பவன். (நாங்கூரில் மன்னு மணிமாடக் கோயில் மணாளனை) திருநாங்கூரில் மணிமாடக்கோயிலிலே நிலைநின்று எனக்கு வேறொரு ஊன்று கோலில்லாதபடி என்னை எழுதிக்கொண்ட மணவாளப்பிள்ளையை. (நன்னீர்த் தலைச்சங்க நாண்மதியை) நல்ல நீர்ப்பெருக்கையுடைய தலைச்சங்காட்டிலே கடலிலே பௌர்ணமிதினத்தன்று உதித்த சந்திரன்போன்று அழகாக விளங்குமவனை.

(நான் வணங்கும் கண்ணனைக் கண்ணபுரத்தானை) "கண்ணபுரமொன்றுடையானுக்கு அடியேன் ஒருவர்க்குரியேனோ" [பெரியதிரு 8-9-3] என்று என்னை அநந்யார்ஹையாக்கிக் கொண்டு கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கும் சௌரிராஜனாகிற கண்ணனை. (தென்னறையூர் மன்னு மணிமாடக் கோயில் மணாளனை) அழகியதான திருநறையூரிலே விளங்கும் மணிமாடக்கோயிலில் என்னை மடலெடுக்கப்பண்ணின மணவாளப் பிள்ளையை. (மணாளனை) நாச்சியார் கோயிலாகையாலே பிராட்டியின் ஆணையேயாய்த் தன் ஆணை செல்லாத மணவாளப்பிள்ளையை என்றுமாம்.

கன்னவில்தோள் காளையைக் கண்டாங்குக் கைதொழுது
என்னிலைமை யெல்லா மறிவித்தா லெம்பெருமான் 134

கல் நவில் தோள் காளையை—மலையென்று சொல்லத்தக்க தோள்களை யுடைய யுவாவாயுள்ளவனை, ஆங்கு கண்டு கைதொழுது—அத்திருநறை யூரிலேகண்டு ஸேவித்து, என் நிலைமை எல்லாம் அறிவித்தால்—எனது அவஸ்தைகளையெல்லாம் விண்ணப்பஞ் செய்துகொண்டால், (அதுகேட்டு) எம் பெருமான்—அப்பெருமான்,

---

(கன்னவில்தோள்) பூண்கட்டின. கண்டன்றிவிடேன். (தொழுது) அவனைக்கெடுத்தபடி. ராஜமஹிஷி உஞ்ச வ்ருத்திபண்ணுமோபாதி இவனுக்கஞ்ஜலியும், "ஓதிநாமம் குளித்துச்சி தன்னுலொளிமாமலர்ப்பாத நாளும் பணி

இனி, மடலெடுக்கச்செய்த திவ்யதேசத்தைச் சொன்னபின்பு, வேறொரு திவ்யதேசத்தைத் தொடாமல் தன் உறுதியைத் தெரிவிக்கிறார் மேலே. (கன்னவில்தோள் காளையை) ஓர் அபலையை வென்றோம் என்று கல்லொத்துப் பூண்கட்டின தோள்வலியைக் கொண்டாடியிருப்பவனை. (காளையை) மடலெடுக்கப்பண்ணின தன் பருவத்தை மதித்திருப்பவனை. (கண்டு) "என்னுடைய கண்களிப்ப நோக்கினேன்" என்று தொடங்கிய படியே முடியக்கண்டலல்லது விடேன். (ஆங்குக் கைதொழுது) அவன் திருமுன்பே அவனைப் பெறுவதற்காக அவனைத் தொழுது அவன் ஸ்வ ரூபத்தைக் கெடுத்து. மடலெடுப்பதற்கு முதற்படி இது. ராஜபத்னி பிச்சையெடுப்பதுபோன்றது இவனுக்கு ஸாதனபுத்தியினாலே செய்யப் படும் அஞ்ஜலி. "ஓதி நாமம் குளித்து உச்சிதன்னால் ஒளிமாமலர்ப்பாதம் நாளும் பணிவோம்" [பெரியதிரு 9-3-9] என்ற இவ்வாழ்வார் அடுத்த படியாக அது அவனுடைய நெஞ்சுக்குத் தண்ணீர்த் துரும்புபோன்றது என்பதை "நமக்கே நலமாதலில்" [பெரியதிரு 9-3-9] என்ற பகுதியில் ஏகாரத்தாலே உணர்த்தினார். "தொழுது மாமலர் நீர்சுடர் தூபங்கொண்டு எழுதும் என்னுமிது மிகையாதலின்" [திருவாய் 9-3-9] என்றார் நம் மாழ்வார். (கண்டு ஆங்கு கைதொழுது) மடலெடுக்கத் துணிந்த நம்மாழ் வாரும். "நம் கண்களால் கண்டு தலையில் வணங்கவும் ஆங்கொலோ தையலார் முன்பே" [திருவாய் 5-3-7] என்று பலர் முன்பே அவன் ஸ்வ ரூபத்தை அழிக்க ஆசைப்பட்டார். பெருமாள் மேலே சிறிய பிராட்டியும் "தம் மமார்த்தே ஸுகம் ப்ருச்ச சிரஸா சாபிவாதய" [ரா-ஸு 39-55] [அவரை எனக்காக க்ஷேமம் விசாரிப்பாய்; (எனக்காகத்) தலையால்

வோம்'' (என்னிலைமை) மடலிலே துணிந்தபடி. (தன்னருள்) தர்மத்துக்குத் தண்ணீர்வார்க்கை. (ஆகம்) நெஞ்சோடு கலந்த வன்று தேஹ தாரகமாமத்தனே.

வணங்குவாய்] என்றாள். (என் நிலைமை எல்லாம் அறிவித்தால்) மடலெடுக்கும்படியான வரையிலுள்ள என்னுடைய எல்லா நிலைகளையும் அறிவித்தால். அவைதான் எவையென்னில்: "தாயேதந்தை" [பெரிய திரு 1-9] என்னும் பதிகத்தில் "உன்னைக் காண்பதோராசையினால் வந்தடைந்தேன்" [1-9-1] என்று ஆசைப்பட்டபடியையும், "ஆகிலும் ஆசை விடாளால்" [2-7-1] என்று தாயார் சொல்லும்படி அவ்வாசையே தொடர்ந்து வந்ததையும், "என் சிந்தனைக்கினியாய்" [3-5-1] "புகுந்தாயைப் போகலொட்டேன்" [3-5-6] என்று கால்கட்டிய நிலையையும், அடுத்த பதிகத்தில் திருவாலியிலே தூதுவிட்டபடியையும், "ஆயர் மாதர் கொங்கை புல்கு செண்டன்" [4-8-3] என்றும், "கொல்லையானாள் பரிசழிந்தாள்" [4-8-4] என்றும் பார்த்தன்பள்ளியிலே பரிசழிந்தபடியையும் "உம்மைக் காணும் ஆசையென்னும் கடலில் வீழ்ந்து" [4-9-3] என்கிற படியே அயலாருமேசத் திருவிந்தளூரிலே ஆசைக்கடலில் வீழ்ந்தபடியையும் "வெருவாதாள்" [5-5] என்னும் திருமொழியிலே "வாய் வெருவி வேங்கடமே வேங்கடமே" என்றும், "அடியேனை வேண்டுதியோ வேண்டாயோ" என்றும், "தாதாடு வனமாலை தாராரோ" என்றும் கதறிய படியையும் "சினவில் செங்கண்" [7-3] என்னும் திருமொழியிலே கனாக் கண்டபடியையும், "தந்தைகாலில்" [7-5] திருமொழியிலே, "என்னைம் புலனும் எழிலும்கொண்டு பொன்னங்கலைகள் மெலிவெய்த" என்னும் நிலையை அடைந்ததையும், "தெள்ளியார் தேவர்" [8-2] திருமொழியிலே கண்ணபுரமென்றுபேசி உருகி உள்மெலிந்தபடியையும், "கரையெடுத்து" [8-3] திருமொழியில் வளையிழந்து "தந்தைகாலில்" [8-5] திருமொழியிலே நெஞ்சம் தாரினாசையால் போகப்பெற்று நாழிகை ஊழியில் பெரிதானபடியையும், "காவார் மடல்" [9-4] திருமொழியிலே புல்லாணியெம் பெருமான் பொய்கேட்டிருந்து சிந்தைநோய்கொண்டு, அந்துகிலும் நில்லாமல், எழில்நிறமும் சங்குமிழந்து உறங்காதிருந்தபடியையும், "தவள இளம்பிறை" [9-5] என்னும் திருமொழியிலே தரைக்கிடை கிடந்தபடியையும், "பூவரில் முன்முதல்வன்" [9-9] திருமொழியிலே திருமாலிருஞ்சோலையில் கூட ஆசைப்பட்டுக் கிடையாமல், "திருத்தாய் செம்போத்து" [10-10] திருமொழியில் சகுனம் பார்த்தபடியையும், இப்போது மடலெடுக்கவிருக்கிற நிலையையும் ஆக இந்த நிலைகள் எல்லாவற்றையும் சொல்லுகிறது.

தன்னருளு மாகமும் தாரானேல் தன்னைநான்
மின்னிடையார் சேரியிலும் வேதியர்கள்
வாழ்விடத்தும் 135
தன்னடியார் முன்பும் தரணி முழுதாளும்
கொன்னவிலும் வேல்வேந்தர் கூட்டத்தும்
நாட்டகத்தும் 136

தன் அருளும் ஆகமும் தாரான் ஏல்—தனது திருவடிகளையும் திருமார்பையும் எனக்குத் தந்தருளானாகில், தன்னை—அவ்வெம்பெருமானை, நான்—(அவனது செயல்களையெல்லாமறிந்த) நான், மின் இடையார் சேரியிலும்—ஸ்த்ரீகள் இருக்கும் திரள்களிலும், வேதியர்கள் வாழ்வு இடத்தும்—வைதிகர்கள் வாழுமிடங்களிலும், தன் அடியார் முன்பும்-அவனது பக்தர்கள் முன்னிலையிலும், தரணிமுழுது ஆளும் கொல்நவிலும் வேல் வேந்தர் கூட்டத்தும்—பூ மண்டலம்முழுவதையும் ஆள்கின்றவராயும் கொடிய படைகளையுடையவராயுமிருக்கிற அரசர்களுடைய ஸபைகளிலும், நாடு அகத்தும்-மற்றும் தேசமெங்கும்,

---

மெய்போலே பாவித்துப் பொரிபுறந்தடவியிருக்கிற தன்னை. (நான்) அவையெல்லாம் வெளியிடப்புகுகிற நான்.

(எம்பெருமான்) என் ஸ்வருபத்தை அழித்துக்கொண்டும் பெறவேண்டும் படியன்றோ எனக்கும் அவனுக்குமுள்ள உறவிருப்பது. அவன்வரும்வரை பார்த்திருக்கமுடியுமோ? என்கிறார். (தன் அருளும் ஆகமும் தாரானேல்) தர்மத்துக்குத் தண்ணீர்ப்பந்தல் வைப்பாரைப்போலே தண் கருணைத் தண்ணீரை வார்த்து, என் மார்வோடு தன்நெஞ்சை அணைத்து என்னை உயிர்பெறச் செய்யவில்லையாகில். இது செய்யாவிடில் உடலில் உயிர் இல்லையாகிவிடும் என்று கருத்து.

(தன்னை) புறத்தில் (மேலே) வெல்லம் தடவியிருக்கையாலே இனிப்பதாய், உண்மையில் இனிப்பற்றதாகிய பொரியைப்போலே. அன்புள்ளவன்போலே நடிப்பவனாய், உண்மையில் அன்பு சிறிதும் இல்லாதவனான தன்னை. மடலெடுத்தாகிலும் பெறவேண்டிய பெருமையுடைய தன்னை என்றுமாம். (நான்) மெய்யன்போலே நடிக்கும் அப் பொய்யனுடைய பொய்களையெல்லாம் வெளியிடப்போகிற நான். இருவர் ஸ்வருபத்தையும் அழித்தாகிலும் அவனைப் பெற்றல்லது விடேன் என்றி

(மின்னிடை) தான் ப்ரணயத்துக்குச் சமைந்து "உங்களிடையல்லதறியேன்" என்றிருக்கிறவிடம்; ரஸிகத்வம் விலைசெல்லுகிறவிடமென்றுமாம். (வேதியர்கள்) ப்ரமாண கோடிகளாலே தன்னையறிந்து ஸமாராதநமான யாகாதிகள் பண்ணுமிடத்திலும்; ஆந்ருசம்ஸ்யம் விலைசெல்லுமிடம். (தன்னடியார் முன்பும்) தன்னைப் பற்றுசாக நினைத்திருக்கிற ஆஶ்ரிதர் முன்பும்; குணம் விலைசெல்லுமிடமென்றுமாம். (தரணியித்யாதி) தன் வீரப்பாடுபேசும் ராஜாக்கள் முன்பும்; ஆபிஜாத்யமும் ஜகத்ரக்ஷணமும் விலைபெறுமிடமென்று

ருக்கும் நான் என்றுமாம். (மின்னிடையார் சேரியிலும்) முதலில் என்னைப்போலே அவனிடத்திலே மனத்தைப் பறிகொடுத்த பெண்களிடத்தில் சென்று, "என்னிடம் 'உன்னையல்லது அறியேன்' என்றுகூறி மறந்து நிற்கிறான்; உங்களிடம் காதல் கொண்டவன்போல் பாவித்து 'உங்களுடைய மின்னிடையல்லது வேறொன்று மறியேன்' என்று சொல்லியிருக்கும் வார்த்தையும் எத்தகையது என்று அறிந்து கொள்ளுங்கோள்" என்கிறேன். (மின்னிடையார்) ஆண்டாள், குரவைகோத்த ஆய்ச்சியர் முதலானார். இவர்கள் கோஷ்டியிலே 'அழகை ரஸிக்கும் பரமரஸிகன்' என்றல்லவோ பெயர் வாங்கியிருப்பது; 'என் அழகை ரஸித்தபடி காணீர்' என்று கூறி அப்பெயரை அழிக்கிறேன் என்றுமாம். (வேதியர்கள் வாழ்விடத்தும்) சுருதி முதலான ப்ரமாணங்களாலே 'இவனே பரதேவதை' என்று அறிந்து, உபாஸனம், யாகம், சரணவரணம் மங்களாசாஸனம் முதலானவை செய்யும் வியாஸர், பராசரர், பெரியாழ்வார் போல்வார் வாழுமிடத்திலும். 'பரமதயாளு இவன்' என்று பறை சாற்றிக்கொண்டிருக்கும் இவர்கள் கூட்டத்திலே சென்று இவனுடைய 'இரக்கமிருந்தபடியைப் பாரீர்' என்று என் உடம்பைக் காட்டுகிறேன். (தன்னடியார் முன்பும்) குணத்துக்குத் தோற்றுத் தம்மை எழுதிக் கொடுத்திருக்கும் இளையபெருமாள் நம்மாழ்வார் போல்வாருடைய கூட்டங்களிலே சென்று 'இவனுடைய குணமிருந்தபடியைக் காணுங்கோள்' என்கிறேன். (தரணி முழுதாளும் கொன்னவிலும் வேல்வேந்தர் கூட்டத்தும்) ஒவ்வொரு நாட்டையாள்கையாலே அரசர்களென்று பெயர் படைத்து பூமியிலிருக்கும் நற்குடிப்பிறப்புள்ள சுத்த வீரர்களான குலசேகரர், தொண்டைமான் சக்ரவர்த்தி போல்வாரான அரசர்களைவரும் அரசர்க்கரசனான இவனுடைய வீரத்தையும், ரக்ஷகத்வத்தையும் கொண்டாடியிருப்பார்களன்றோ; அவர்கள் குழுவிலே சென்று"இக்ஷ்வாகுகுலத்தில்

தன்னிலைமை யெல்லா மறிவிப்பன் தான்முனநாள்
மின்னிடை யாய்ச்சியர்தம் சேரிக் களவின்கண் 137
துன்னு படல்திறந்து புக்குத் தயிர்வெண்ணெய்
தன்வயிரார விழுங்கக் கொழுங்கயல்கண் 138

தன் நிலைமை எல்லாம் அறிவிப்பன்—அவன் தன்மைகளையெல்லாம் வெளிப் படுத்தி விடுவேன், முனம்நாள்—முற்காலத்தில் [கிருஷ்ணாவதாரத்தில்], மின்னிடை ஆய்ச்சியர் தம்சேரி—மின்போல் நுண்ணிய இடையையுடைய இடைச்சிகளின் சேரியிலே, களவின்கண் — திருட்டுத்தனமாக, துன்னு படல் திறந்து-நெருக்கமாகக் கட்டிவைத்த படலைத்திறந்து, புக்கு-புகுந்து, தயிர் வெண்ணெய்-தயிரையும் வெண்ணெயையும், தன் வயிறு ஆர தான் விழுங்க-தனது வயிறு நிறையும்படி வாரியமுது செய்தவளவில், கொழு கயல் கண்-நல்ல கயல்மீன்போன்ற கண்களையுடைய,

---

மாம். (நாட்டகத்தும்) நாலந்திடத்திலே சொல்லிவிடா நின்றேனே? ஸர்வேஶ்வரனாக பாவிக்கிற இடமெங்கும்; தன் வீரப்பாடு பேசுமிடமெங்கும். (தன் நிலைமை) என் னுடம்பைக் காட்டுகிறேன்.

பிறந்த சுத்தவீரனான இவன் அபலையான என்னிடம் காட்டிய வீரத்தைக் காணுங்கோள்; ஸர்வரக்ஷகனான இவன் என்னை ரக்ஷித்தபடியைப் பாருங் கோள்'' என்றுகூறி வீரத்தையும் ரக்ஷகத்வத்தையும் அழிக்கிறேன். (நாட்டகத்தும்) இப்படி நாலந்திடத்திலே சொல்லி விட்டுவிடப் போகிறேனோ? ஸர்வேச்வரனாகக் கொடிநாட்டியிருக்கும் இடமெல்லாம் சென்று சொல்லுகிறேன். தன் வீரத்தைப் பேசுவார் உள்ளவிடமெல் லாம் சென்று பறைசாற்றுகிறேன். (தன் நிலைமை எல்லாம் அறிவிப்பன்) தன் வடிவைக்காட்டிப்பிரிந்து ஆற்றாமையை விளைத்து, மடலெடுக்கச் செய்து, அப்படியும் தன்னை காட்டாதே என்னை வருத்தியதையெல்லாம் அறிவிப்பேன். அவன் என்னொருத்தியே ஆகாதென்றிருக்கையாலே, நான் அவனொருத்தனை உலகனைத்துக்கும் ஆகாதவனாக்குகிறேன். அவ னுடைய துர்க்குணங்களையெல்லாம் பறைசாற்றுகிறேன்.

இனி, தம்மையுள்ளிட்ட ஆழ்வார்களனைவரும் 'எத்திறம்' என்று மயங்கும் திவ்யசேஷ்டிதங்களை இழிதொழில்களாக நிரூபித்துப் பேசப் போகிறேன் என்னும் தம் துணிவை வெளியிடுகிறார் ப்ரபந்தசேஷத்தாலே.

(தான் முனநாள்) அன்றுதானிடைச்சேரியிலே வெண்ணெய் திருடி உரலோடே கட்டுண்டு விட்டுப்புறப்பட்டதும். (மின்னிடை) நீ களவுகாண்கிறது பெண்களிடை காணக்கிடாய். (ஆய்ச்சியர்தஞ்சேரி) என்ன பட்டணத்தே புக்கான்? இடைச்சேரியன்றோ? என்ன மகுடபங்கம் பண்ணிற்றன்? துன்னுபடலன்றோ? என்ன ப்ரதிமையெடுத்தான்? வெண்ணெயன்றோ? என்ன திருப்பணி செய்தான்? தன் வயிறு வளர்த்தானத்தனையன்றோ? (சேரி) ஒழுகு ஒன்பதும். (துன்னு) மேலேபடலிருக்கக் கீழே நுழைந்ததும் களவுகைவந்ததுமத்தனையன்றி, அவள்கோலிட்டுத் திருகி

(தான் முனநாள்...பெற்றிமையும்) முன்னொரு நாள் இடைச்சேரியிலே வெண்ணெய் திருடி உரலோடே கட்டுண்டு இருந்து விடுபட்ட பெருமையை ஊரறியச் செய்கிறேன். (தான்) இச்செயலைச் செய்துவிட்டு 'தான்' என்ற மதிப்போடிருப்பதே! (முனநாள்) சிறுவயதிலேயேயன்றோ இத்தொழிலில் புகுந்தது! (மின்னிடை) களவுசெய்த தன்னைப் பிடிக்க ஓடிவரும்போது ஆய்ச்சியருடைய மின்னிடை நுடங்குவதைக் காணவன்றோ களவுசெய்தது! (மின்னிடை ஆய்ச்சியர்தம்) களவுசெய்தது தான் செய்தான்; என்னைப்போலே வீரபுருஷர்களிடமும், புருஷோத்தமனிடமும் களவுசெய்தானோ? அபலைகளான பெண்களிடமன்றோ களவு செய்தான்! (ஆய்ச்சியர்தம் சேரிக் களவின்கண்) என்னைப்போலே ஒன்பது நீண்ட தெருக்களும் கட்டுக்காவல் மிகுந்த வாசல்களுமுடைய நாகப் பட்டணத்திலேயோ களவிட்டான்? இடையர்களும், இடைச்சிகளும் வாழும் காவலில்லாத குடிசைகளுடைய இடைச்சேரியிலன்றோ களவிட்டது! (துன்னு படல் திறந்து புக்கு) என்னைப்போலே புத்தவிஹாரத்தின் விமானமகுடத்தை இடம்புரி வலம்புரிதிருப்பி மகுடபங்கம்செய்து புகுந்தோ களவிட்டது? ஆயர்கள் நெருங்கின படலையிட்டு அதை அடைப்பதற்காக அதன்மேலே ஒரு மரத்தையிட்டுத் திருகிவைத்திருப்பார்கள்; இந்த மகுடத்தையன்றோ பங்கம்செய்து புகுந்து களவுசெய்தான்! (படல் திறந்து புக்கு) சாதாரணமாக ஆய்ச்சியர் படல்மேலே கோலிட்டுத் திருகிவைக்கும் யந்திரத்தைத் திறக்கக்கூட இவன் அறியான். படலின் கீழே புகுந்து களவுபுரியத்தான் தெரியும். ஆனால், இங்கு தன் வீடாகையாலே பலகால் களவு செய்யப்புகுந்த பழக்கத்தால் படல் திறக்கையாகிற இவ்வரிய காரியத்தை ஸாதித்தான்! (துன்னு படல் திறந்து புக்கு)

மன்னு மடவோர்கள் பற்றியோர் வான்கயிற்ருல்
பின்னு முரலோடு கட்டுண்ட பெற்றிமையும் 139
அன்னதோர் பூதமாயாயர் விழவின்கண்
துன்னு சகடத்தால் புக்கபெருஞ்சோற்றை 140
முன்னிருந்து முற்றத்தான் துற்றிய தெற்றெனவும்.

மன்னு மடவோர்கள்—ஆயர்மாதர், பற்றி-பிடித்துக்கொண்டு, ஓர் வான் கயிற்ருல்—ஒரு அழகிய கயிற்ருல், உரலோடு—உரலோடே (கட்டிவட) கட்டுண்ட பெற்றிமையும்—கட்டுண்டு கிடந்த பெருமையென்ன; ஆயர் விழவின் கண்—இடையர்கள் (இந்திரனுக்குச்செய்த) ஆராதனையில், துன்னு சகடத்தால் புக்க பெரு சோற்றை—பலபல வண்டிகளால் கொண்டு சேர்த்த பெருஞ்சோற்றை, அன்னது ஓர் பூதம் ஆய்—வாய்கொண்டு பேசத்தகாத ஒருபெரும் பூதவடிவு கொண்டு, முன் இருந்து — கண் முன்னேயிருந்துகொண்டு, முற்ற—முழுவதும், தான்—தானொருவனுகவே, துற்றிய—உட்கொண்ட, தெற்றெனவும்—வெட்கக்கேடென்ன;

வைக்கும் யந்த்ரமறியான்; பல்கால்புக்க வழக்கத்தாலே யறியுமென்கை. (தன்வயிருர) திருமங்கையாழ்வாரைப் போலே பரார்த்தமாகக் களவுகாண்கிறதன்று.

(கொழுங்கயல்) எட்டாதே திரிந்தவன் பிடியுண்ட ப்ரீதி. (வான்கயிறு) எட்டிற்ருெறுகயிறு. பெற்றிமை-

---

நெருக்கமாக அடைத்து வைத்திருக்கையாலே திறந்து புகுந்தான்; திறந்து வைத்திருந்தால் அடைத்துப்புகுவான். (தயிர் வெண்ணெய்) என்னைப் போலே ஸுவர்ணமயமான புத்தப்ரதிமையையோ எடுத்தான்? எளிய தயிர்வெண்ணெயன்ருே திருடியது! (தன் வயிருர விழுங்க) என்னைப் போலே பரார்த்தமாகக் (1. பிறர் பொருட்டு; 2. பரன் பொருட்டு) களவு செய்தானல்லனே;ஸ்வார்த்தமாக(தன் பொருட்டு)அன்ருே களவுபுரிந்தது.

(கொழுங்கயற் கண்) இப்படிக் களவுகண்டு அகப்படாமல் திரிந்தவன் அகப்பட்டதனுலுண்டான ஆநந்தம் ஆய்ச்சியரின் கண்ணிலே தோற்றியிருக்கை. (மன்னு மடவோர்கள் பற்றி) இவன் அகப்பட்டவுடன், இவனுடைய ஒருகையை ஆயிரம் பெண்கள் சூழ்ந்து பற்றிக்கொள்வர்கள். (ஓர் வான் கயிற்ருல்) கைக்கு எட்டாத அவனைப்போலேயல்லாமல், நினைத்தவுடன் கைக்கெட்டியதொரு அழகிய கயிறு. "கண்ணி

பெருமை. அப்போதே உரலோடேயிருக்கச் செய்தே கண்டேனுகிலோ? என்று கருத்து.

(அன்னது) அம்மே! ''அப்பூச்சி'' என்று முகத்தைத் திரியவைக்கிருள். (முன்னிருந்து) ஒரு திரைவளைத்துக் கொண்டாலென் செய்யும்? (முற்றத்தான்) வயிறுதாரித்தனம். (தெற்றெனவும்) நிர்லஜ்ஜதையும்.

நுண் சிறுத்தாம்பு''[கண்ணி-1]''**கண்ணிக் குறுங்கயிறு''**[பெரியதிரு11-5-4] என்கையாலே வான் கயிறென்றது பெரிய கயிறன்று; தீம்பனைக் கட்டவல்ல நல்ல கயிறு. (பின்னும் உரலோடே கட்டுண்ட பெற்றிமையும்) பெண்கள் இவனைப் பற்றியது மாத்திரமல்ல; அதற்கும்மேலே அசேதனமான உரலோடே இவனைக் கட்டிவைத்தார்கள். அந்தப்பெருமையையும் ஊரறியச் சொல்லுகிறேன்! (கட்டுண்ட பெற்றிமையும்) எவர்க்கும் கிடைக்காத இப்பெருமையைப் பாவியேன் அப்போதேயிருந்து காணப் பெற்றிலேனே! என்று கருத்து. பெற்றிமை-பெருமை; இங்கு விபரீத லக்ஷணையாலே சிறுமையைக் குறிக்கிறது.

இதுக்கு மேலும் ஒரு செயலையும் கூறுகிறேன்,- (அன்னதோர்) வாய்கொண்டு பேசத்தகாததொரு வெறுக்கத்தக்க வேஷத்தையன்றோ போட்டுக்கொண்டான். (அன்னது) 'அம்மே' 'அப்பூச்சி' 'ஐயய்ய' என்று இக்கோரவடிவைக்காண வெறுத்து முகத்தைத் திருப்பிக்கொள்கிருன். (பூதமாய்) மிகத்தாழ்ந்த பூதவேஷத்தையும் எடுப்பாருண்டோ? (ஆயர் விழவின் கண்) பெரும்பசியுடன பூதமாகையாலே சோறு கண்ட விடமெல்லாம் திரியுமாயிற்று. தன்னைப்பற்றி நிற்கும் இடையர் சோற்றையும் விழுங்க முற்பட்டது. (துன்னு சகடத்தால் புக்க பெருஞ்சோற்றை) நால்வரிருவர் சுமந்து சென்ற சோற்றையோ விழுங்கிற்று? வண்டி வண்டியாக வந்து குவிந்த மலைபோன்ற சோறு முழுவதையுமன்றோ விழுங்கிற்று. ''அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும் தயிர் வாவியும் நெய்யளறும்'' [பெரியாழ்திரு 3-ப்-1] என்று சோற்று மலையையும், தயிர்க்குளத்தையும், நெய்க்குட்டையையும் ஒன்று சேர்த்தன்றோ விழுங்கிற்று. (முன்னிருந்து) என்ன வெட்கங்கெட்ட செயல்! சுணையுள்ளதாகில் ஒரு திரையிட்டுக் கொண்டாவது விழுங்கியிருக்கக்கூடாதோ? அதுவுமில்லையாகையால் அனைவரும் காண முன்னிருந்து விழுங்கிற்று. (முற்றத்தான் துற்றிய) ஒரு கவளம் ஒருவருக்குக் கொடுக்கவில்லையே. என்ன வயிறு தாரித்தனம்! (தான் துற்றிய) உறவினர்களையும் கூட்டிக்கொள்ளாமல் தானேயன்றோ ஏப்பம் விட்டது! (தெற்றெனவும்) இப்படிச் செய்ததில் ஒரு லஜ்ஜையுமில்லையே! தெற்றெனவு-தெளிவு; (இங்கு) வெட்கமின்மை.

மன்னர் பெருஞ்சவையுள் வாழ்வேந்தர் தூதனாய் 141
தன்னை யிகழ்ந்துரைப்பத் தான்முனநாள் சென்றதுவும்
மன்னு பறைகறங்க மங்கையர்தம் கண்களிப்பக் 142
கொன்னவிலும் கூத்தனாய்ப் போர்த்தும் குடமாடி
என்னிவ னென்னப் படுகின்ற வீடறவும் 143
தென்னிலங்கை யாட்டி யரக்கர் குலப்பாவை
மன்ன னிராவணன்றன் நல்தங்கை வாளெயிற்றுத் 144

முனம்நாள்-முன்னொரு காலத்தில், வாழ் வேந்தர் தூதன் ஆய்—பாண்டவர்களுக்குத் தூதனாய், தன்னை இகழ்ந்து உரைப்ப—(கண்டாரடங்கலும்) இழிவாகச் சொல்லும்படியாக, மன்னர் பெரு சவையுள் சென்றதும்—(துரியோதநாதி) அரசர்களுடைய பெரிய ஸபையிலே சென்றதென்ன; மங்கையர் தம் கண் களிப்ப— (இடைப்) பெண்களின் கண்களிக்கும்படி, மன்னு பறை கறங்க— (அரையிலே) கட்டிக்கொண்ட பறை ஒலிக்க, கொல் நவிலும் கூத்தன் ஆய்—(பெண்களைக்) கொலை செய்கின்ற கூத்தையாடுபவனாய், போர்த்தும்—மேலும், குடம் ஆடி-குடங்களை யெடுத்து ஆடி, என் இவன் என்னப்படுகின்ற ஈடறவும்- ''இப்படியும் கூத்தாடுவானொருவனுண்டோ!'' என்னும்படி பெற்ற சீர்கேடென்ன, தென் இலங்கையாட்டி-தென்னிலங்கை அரசியும், அரக்கர் குலம் பாவை-ராக்ஷஸ குலத்தில் தோன்றிய பதுமை போன்றவளும், மன்னன் இராவணன் தன் நல் தங்கை-அரசனாகிய இராவணனுடையஅன்புக்குரிய தங்கையானவளும்,

---

(வாழ்வேந்தர்) நாழியரிசியேற ஜீவித்தார்க்குத் தூது போம் வேண்டப்பாடு. (இகழ்ந்துரைப்ப) ஸ்ரீவிதுரரகத்தே உண்டது.

இதற்கு மேலும் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள்: (மன்னர் பெருஞ் சவையுள்) ஒருவருமறியாத இடத்திலேயோ இவ்வெளிமைபட்டது? மன்னர்களனைவரும் திரண்டிருந்த பெரிய சபையிலேயன்றோ இது நடந்தது. (வாழ்வேந்தர் தூதனாய்) தூது சென்றதுதான் சென்றான். உலகாளும் சக்ரவர்த்திகளுக்குத் தூது சென்றானோ? வாழ்க்கையோடு போராடிக்கொண்டிருந்த பாண்டவர்க்கன்றோ தூது நடந்தது! இப்பெருமை யாருக்குக்கிட்டும்? (தன்னை இகழ்ந்துரைப்ப) ''பீஷ்மத்ரோணர்களையும், என்னையும் விட்டு ஏன் சூத்திரன் (விதுரன்) உணவை உண்டாய்?'' என்று துரியோதனன் இகழ்ந்துரைக்கும்படியாக. (தான்)

(மன்னுபறை) பறைகொட்டுகைக்கு ஓராளில்லாமே அரையிலேகட்டிக்கொண்டது. (மங்கையர்) இது கொண்டாட வல்லவர்களன்றே? (கொன்னவிலும்) கண்டார் பிழையாதபடியிருக்கிறவழகு. (என்னிவனென்ன) என்செய்ய? இவனிப்போது போகானோ? என்னும்படி படுகிறபாடு.

(தென்னிலங்கை) அவ்வைஶ்வர்யத்துக்கு இட்டுப்பிறந்தவள். (அரக்கர்) அவள் பிறந்தாற்போலே பிறந்தாரில்லை. (நற்றங்கை) ராவணனுக்கு நேரே உடன் பிறந்தவள்.

இது செய்தவனுக்குத் 'தான்' என்ற மதிப்பு ஏதுக்கு? (முனநாள் சென்றதுவும்) இதுசெய்த நாள்கடந்து விட்டது என்று ஆறியிருக்கிறோமோ? எனக்கு நேற்றுச் செய்ததுபோலேயன்றோ காட்சியளிக்கிறது.

இதற்கும் மேலே இந்தக் கூத்தைக்கூறுகிறேன் கேளுங்கள்,-(மன்னு பறை கறங்க) இவ்வெட்கங்கெட்ட செயலுக்குத் துணைக்கு ஒருவரும் வாராமையாலே, பறையைத் தன் இடையிலேயே கட்டிக்கொண்டபடி. (நங்கையர் தம் கண் களிப்ப) பெண்கள் கொண்டாடும் கூத்தாடிச் செயலன்றோ செய்தான்! மானமுள்ள பெரியவர்கள் நினைக்கவும் மாட்டாத செயலையன்றோ செய்தான்! (கொன்னவிலும் கூத்தனாய்) கூத்தாடும்போது கண்ட கன்னியர்களைக் கொலைசெய்யவல்ல அழகையுடையவனாய். (பேர்த்தும் குடமாடி) அதுக்கும் மேலே குடத்தையெடுத்தேறவிட்டுக் கூத்தாடி. (என்னிவன் என்னப்படுகின்ற ஈடறவும்) என்செய்வது? இப்படிக் கூத்தாடி நம்மைக் கொலைசெய்யாமல் இவன் இப்போது இவ்விடத்தைவிட்டுப் போகமாட்டானோ என்று மங்கையர் கருதும்படியிருக்கும் எளிமையும்.

கீழே சொன்னதெல்லாம் கிடக்கட்டும்; இந்தக் கொடுமையைக் கேளுங்கள்,-(தென்னிலங்கையாட்டி) இவளைப்போலே பிறந்தாருண்டோ? "ராவணன் இலங்கைக்கரசன்' என்று பெயரேயாய், உண்மையில் இலங்கையை நடத்திவந்தவள் இவளன்றோ. இலங்கைச் செல்வத்துக்கு இட்டுப்பிறந்தவளன்றோ. (அரக்கர் குலப்பாவை) அரக்கர்குலத்துக்கே ஒரு கண்மணியாகவன்றோ பிறந்திருந்தாள். (மன்னனிராவணன்) அடாடா! மன்னர்மன்னனான அவனைப்போலும் வாழ்ந்தாருண்டோ? (தன் நல் தங்கை) அவனுக்குயிருக்குயிராய் நேரே உடன்பிறந்தவளன்றோ. (வாளெயிற்று) அவளுடைய பல்லின் ஒளிதான் இருந்தபடியென்? பெண்

துன்னு சுடுசினத்துச் சூர்ப்பணகாச் சோர்வெய்திப்
பொன்னிறங் கொண்டு புலர்ந்தெழுந்த காமத்தால் 145
தன்னை நயந்தாளைத் தான்முனிந்து மூக்கரிந்து
மன்னிய திண்ணெனவும் வாய்த்த மலைபோலும் 146
தன்னிகரொன் றில்லாத தாடகையை மாமுனிக்காத்
தென்னுலக மேற்றுவித்த திண்டிறலும் மற்றிவைதான் 147
உன்னி யுலவா வுலகறிய வூர்வன்நான்

வாள் எயிறு-வாள்போன்ற (ஒளியுள்ள) பற்களையுடையவளும், துன்னுசுடு சினத்து—சுடக்கடவதான கோபத்தையுடையவளுமான, சூர்ப்பணகா-சூர்ப்பணகையென்பவள், புலர்ந்து-மேனிதுவண்டு, எழுந்த காமத்தால்—கிளர்ந்த காமநோயினால், பொன் நிறம்கொண்டு—நிறம் வெளுத்து, சோர்வு எய்தி பரவசப்பட்டு [தளர்ந்து] தன்னை நயந்தாளை—தன்னை ஆசைப்பட்ட அந்த அரக்கியை, தான்முனிந்து-தான் சீறி, மூக்கு அரிந்து-மூக்கையறுத்து, மன்னிய திண்ணெனவும்-நிலையான திண்மை கொண்டிருப்பதென்ன; வாய்த்த மலைபோலும்-பெரியமலைபோன்ற உருவமுடையவளும், தன் நிகர்ஒன்று இல்லாத-ஒப்பற்றவளுமான, தாடகையை-தாடகையென்பவளை, மாமுனிக்கா-விச்வாமித்திர முனிவர்க்காக, தென் உலகம் ஏற்றுவித்த-யமலோகமடைவித்த, திண் திறலும்-மஹாபலமென்ன, மற்று இவை தான்-இப்படியாகவுள்ள மற்றும் பல செய்கைகளும், உன்னி உலவா-நினைத்து முடியமாட்டா;

(சுடுசினத்துச் சூர்ப்பணகா) அவளை யொப்பாரில்லை, ஸௌந்தர்யத்தால் குறைவற்றவள். (சோர்வெய்தி) அவசையாய். (பொன்னிறங்கொண்டு) உடம்பு வெளுத்து. (புலர்ந்து)

ணென்றால் இப்படியன்றோ பல்லழகிருக்கவேண்டும். (துன்னு சுடுசினத்து) வெளியழகு கிடக்கட்டும்; உள்ளழகு இருந்தபடியென்! காதலின் தன்மையறியாத இவனிடம் அவள்கொண்ட கோபம் அவளுடைய உள்ளத்தின் அழகையன்றோ காட்டுகிறது. (சோர்வெய்தி) என்னைப்போலே காதலால் உடல் சோர்வுற்றவளன்றோ. (பொன்நிறம் கொண்டு) காதல் ஈடேறாமையாலே என்னைப்போலே உடம்பு வெளுத்தாளன்றோ. (புலர்ந்து) என்னைப்போலே மேனி துவண்டாளன்றோ. (எழுந்த காமத்தால்) கடலின் மிகப்பெரிதாகக் கிளர்ந்த காதலாலே. இவனிடம் கடுங்காதல் கொண்டதற்கு நல்ல பரிசு! (தன்னை நயந்தாளை) இவனை ஆசைப்பட்டதுதான்கிடீர் இவள் செய்த குற்றம். (தான் முனிந்து) ஆசைப்பட்டவர்களைத் தானும் ஆசைப்படவேண்டியிருக்க, அது செய்யாவிடிலும்

துவண்டு. (எழுந்தகாமம்) மிக்க ஸ்நேஹத்தாலே தன்னை யாசைப்பட்டவளை. (தான்) வேண்டாவென்பதுமன்றிக்கே, மூக்கையறுப்பதே! என்ன வீரமோ!

(மாமுனிக்கா) ஒரு பார்ப்பான் சொன்னனிறே. (தென்னுலகம்) அவளிங்கிருக்கவும் பெற்றாளோ?

(உலவா) ஆபத்துக்கு நான் தேடிவைத்ததுக்கு ஒரு முடிவில்லை. உலவு-முடிவு; உலவா-முடியாவென்றபடி.

கோபப்படுவதோ தக்கது? (மூக்கரிந்து) கோபித்தாலும் தொலைகிறது; மூக்கையல்லவோ அறுத்துவிட்டான். (மன்னிய திண்ணெனவும்) இக்கொடிய செயலுக்கு அனுதாபமாவது பட்டானா? இல்லையே; பெரிய வீரச்செயல் செய்தவன்போலே நிலைநின்ற திண்மையோடன்றோ இருந்தான்! இதுவா வீரம்? திண்ணெனவு–திண்மை.

கடைசியாகக் கொடுமையின் சிகரமொன்றைக் கூறுகிறேன் கேளுங்கள்,–(வாய்த்த மலைபோலும்) என்ன உடம்பு படைத்திருந்தாள்? (தன்னிகர் ஒன்றில்லாத தாடகையை) அவளுக்கு ஒப்பு ஒருவருண்டோ அவள் போனாலும் ஆறியிருப்பதற்கு? (மாமுனிக்கா) ''நீ ஸ்த்ரீவதம் பண்ணினாய்'' என்று மடிபிடித்துக் கேட்டால், "ஒரு பார்ப்பான் (சாஸ்திரஞானமுடையவன்) சொல்லிச் செய்தேன்'' என்று அவன்மேல் பழியேறும்படியன்றோ தந்திரமாகத் தான் இக்கொடுமை செய்தது! ''இவ்வர்த்தத்தை பட்டர் அருளிச்செய்யக் கேட்டேன்'' என்று நம்பிள்ளை அருளிச்செய்வர் என்று நாயனார். (மாமுனிக்கா) இவனைப் பிராட்டியோடு கூட்ட நினைத்த மஹாதபஸ்வியான விச்வாமித்ரர்க்கன்றோ இவ்விழுக்கைத் தேடிவைத்தான். (தென்னுலகம் ஏற்றுவித்த) சூர்ப்பணகையையாவது இவ்வுலகில் விட்டு வைத்தான்; இவளை யமனுலகுக்கே ஏற்றிவைத்துவிட்டான். என்ன கொடுமை! (திண்திறலும்) அபலைகளிடத்திலே தொழிற்பட்ட இவனுடைய பலத்தை என்னென்று புகழ்வது?

(மற்றிவைதான் உன்னி உலவா) ஆபத்தனம்போலே மற்றும் நான் தேடிவைத்திருக்கும் இவனைப்பற்றிய தாழ்வுரைகள் நினைத்து முடியமாட்டா. ஆநந்தத்தை நினைக்க முற்பட்டு "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்று வேதம் பட்டது படுமித்தனை. இவற்றைச் சொல்லத் தொடங்கிய மாத்திரத்தில் அவன் அலறிக்கொண்டு என் காலிலே விழுவானாகையாலே எனக்கு இவை ஆபத்தனம் போன்றவை. (உலகறிய ஊர்வன் நான்) சேதநர் என்று பெயர்படைத்தவர் அனைவரும் இவற்றை அறியும்படியாக

முன்னி முளைத்தெழுந் தோங்கி யொளிபரந்த 148
மன்னியபூம் பெண்ணை மடல்.

பெரியதிருமடல் மூற்றிற்று.
திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

உலகு அறிய-அப்படிப்பட்ட சேஷ்டிதங்களையெல்லாம் உலகத்தாரறியும்படி வெளிப்படுத்திக்கொண்டு, நான்-பரகாலநாயகியாகிய நான், முன்னி-முன்னின்று, முளைத்து எழுந்து ஓங்கி ஒளி பரந்த மன்னிய பூ பெண்ணை மடல் ஊர்வன்-முளைத்து எழுந்து வளர்ந்து ஒளிவீசும் நிலைநின்ற அழகிய பனைமடலைக்கொண்டு மடலூரக்கடவேன்.

பதவுரை முற்றிற்று.

(முன்னி) "மடலெடுக்கக் கடவேன்" என்று முற்கோலி. (முளைத்தெழுந்து ஓங்கி) உயர்ந்து ஒளிமிக்கு அழகியதாய் நிலைநின்றவை மடலாயிருக்கிறபடி. பிராட்டிக்கு விஶ்வாமித்ரபகவானைப்போலே இவளுக்கும் இம்மடல். பெண்ணையாகிறது-பனை.

பெரியதிருமடல் வ்யாக்யாநம் முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

நான் மடலூரக்கடவேன். (முன்னி) "மடலெடுக்கப்போகிறேன்" என்று முன்னின்று. இனி அவன் வரப்பார்த்திருக்கமுடியாது என்கை. எப்படிப்பட்ட மடல்? எனில்: (முளைத்து எழுந்து ஓங்கி ஒளிபரந்த மன்னிய பூம் பெண்ணை மடல்) மண்ணிலே முளைத்து உயர எழுந்து மிகஉயர்ந்து விளங்கி ஒளிவீசும் நிலைநின்ற அழகிய பனைமடலை ஊரக்கடவேன். (ஊர்வன் நான்...மடல்) என் கையிலே சிறந்த ப்ரஹ்மாஸ்திரமிருக்கிறது. இனி எனக்கு என்ன குறை? என் காரியம் ஈடேறத்தட்டில்லை என்கை. பெருமாளை சீதாபிராட்டியோடு கூட்டிவைத்த விச்வாமித்ரபகவானைப் போலே தன்னையும் அவனோடு இம்மடல் கூட்டிவைக்குமாகையாலே இதைக் கொண்டாடுகிறாள். பெண்ணை–பனை.

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி தாஸன் இயற்றிய திவ்யப்ரபந்தஸாரத்தில்
பெரியதிருமடல் வ்யாக்யானம் முற்றிற்று.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமடல் முடிவில் அநுஸந்திக்கும் தனிப்பாடல்

கம்பர் பாடியது

என்னிலைமை யெல்லா மறிவித்தா லெம்பெருமான்
தன்னருளு மாகமும் தாரானேல்—பின்னைப்போய்
ஒண்டுறைநீர் வேலையுலகறிய வூர்வன்நான்
வண்டறை பூம் பெண்ணைமடல்.

பதவுரை:—**என் நிலைமை எல்லாம்**—*என் அவஸ்தைகள் முழுவதும்,* **அறிவித்தால்**-*தெரிவித்தபின்பும்,* **எம்பெருமான்**-*என் ஸ்வாமியான ஸர்வேச்வரன்,* **தன் அருளும்**—*தன் கிருபையையும்,* **ஆகமும்**-*தன் திருமார்வையும்,* **தாரான் ஏல்**-*தரவில்லையாகில்,* **பின்னை போய்**-*அதன்பின் சென்று,* **ஒண் துறை நீர் வேலை உலகு அறிய**—*ஒளிபொருந்திய துறைகளையுடைய நீர்நிரம்பிய கடல்சூழ்ந்த உலகினர் அறியும்படியாக,* **நான்**-*நான்,* **வண்டு அறை பூம் பெண்ணை மடல் ஊர்வன்**-*வண்டுகள் ஒலிக்கும் அழகிய பனைமடலை ஊரக்கடவேன்.*

அவ:—*சிறியதிருமடலின் கடைசியிலுள்ளதைப்போல், இத்திருமடலிலும், பரகாலநாயகியின் பாசுரமாகவே கம்பர் பாடிய இப்பாடல் கடைசியில் அநுஸந்திக்கப்படுகிறது. கம்பருக்குத் திருமங்கையாழ்வாரிடமுள்ள பக்தியைக் காட்டுகின்றன திருமடல்களிலுள்ள இப்பாடல்கள்.*

வ்யா:—*(என்னிலைமை... தாரானேல்) இவ்விரண்டடிகளும் பெரியதிருமடலில் (134, 135) இரண்டடிகளாக அமைந்துள்ளன. அங்கு வியாக்கியானம் காண்க. கம்பராமாயணத்திலும் பல பாடல்கள் திருமங்கைமன்னனின் பாடல்களைச் சொல்லிலும் பொருளிலும் ஒத்திருப்பது காணலாம். (பின்னைப்போய்) அவன் செய்யவேண்டியதைச் செய்யாவிடில், நான் செய்யத்தகாததைச் செய்கிறேன். நானிருக்குமிடம் அவன் வரவேண்டியிருக்க, அவனிருக்குமிடம் நான் செல்கிறேன். (ஒண்டுறை நீர் வேலை உலகறிய) ஒளிபொருந்திய துறைகளையுடையதும், நீர் நிரம்பியதுமான கடல் சூழ்ந்த உலகினர் அறியும்படியாக. (ஒண்டுறை) முத்தும் பவழமும் சிதறிக்கிடக்கையாலே ஒளிபெற்றிருக்கை. (உலகு) உலகினர். உயர்ந்தோர் என்றுமாம். (ஊர்வன் நான்... மடல்) வண்டு ஒலிக்கும் அழகிய பனைமடலை ஊரக்கடவேன்.*

மற்றொரு பாடல்

(இதை அனுஸந்திக்கும் ஸம்ப்ரதாயமில்லை என்பர்.)

மண்ணில் பொடிப்பூசி வண்டிரைக்கும் பூச்சூடி
பெண்ணைமடல் பிடித்துப் பின்னே—அண்ணல்
திருநறையூர் நின்றபிரான் தேர்போகும்வீதி
பொருமறையாய்ச் செல்வம் பொலிந்து.

பதவுரை:—மண்ணில் பொடி பூசி—பூமியிலுள்ள துகள்களைப் பூசிக்கொண்டு, **வண்டு இரைக்கும் பூ சூடி**—வண்டுகள் ஒலிக்கும் பூக்களைச்சூடி, **பெண்ணை மடல் பிடித்து**-பனைமடலைக் கைக்கொண்டு, **பின்னே**-அதற்குமேல், **அண்ணல்**-ஸ்வாமியாய், **திருநறையூர் நின்ற பிரான்**—திருநறையூரில் நின்ற உபகாரகனுடைய, **தேர் போகும் வீதி**-தேர் ஓடுகிற தெருவிலே, **செல்வம் பொலிந்து**—செல்வம் நிறைந்து, **பொரும்**—நிறையும்படி, **அறையாய்**—கூப்பிடாய்.

அவ:—இப்பாசுரத்தில் மடலூரும்போது தன் வேஷமிருக்கும்படியையும், மடலெடுத்தால் வரும் பலனையும் காட்டுகிறார்.

வ்யா:—(மண்ணில் பொடிப்பூசி) அவன் ஆதரிக்காத இவ்வுடம்பின் அநாதரவுதோற்ற மண்பொடியைப் பூசிக்கொண்டு, (வண்டிரைக்கும் பூச்சூடி) "மலரிட்டு நாம் முடியோம்" என்னும் நிலைபோய் பூச்சூடி வருகிறாள் தன் முயற்சியில் கைவைக்கையாலே. (பெண்ணை மடல் பிடித்து) பனைமடலைக் கைக்கொண்டு. (பின்னே) அதுக்கும் மேலே. (அறையாய்) அவனுடைய சேஷ்டிதங்களை எல்லோருமறியும்படி கோஷிப்பாயாக. எங்கே கோஷிப்பது? எனில்: (அண்ணல்...வீதி) ஸ்வாமியாய், திருநறையூரில் நின்ற உபகாரகனுடைய தேர்போகும் ராஜவீதியிலே கோஷிப்பாய். (பொரும் அறையாய்) வீதிநிறையும்படி கோஷிப்பாய். இதனால் பலன் என்ன? எனில்: (செல்வம் பொலிந்து) நீ கோஷித்த மறுகணமே கைங்கர்யச் செல்வம் நிறைந்து விளங்கப்பெறுவாய். உன் கூக்குரல் செவிப்பட்டவுடன் அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து கைங்கர்யச்செல்வத்தைக் கொடுப்பான். (தேர்போகும் வீதி அறையாய்) இன்றும் திருத்தேரன்று திருமடல் ஸேவிப்பது இப்பாசுரத்தை அடியொற்றியிருப்பதாகத் தோன்றுகிறது.

ஸ்ரீவைஷ்ணவர்களின் சிறந்த மாதப்பத்திரிகை! வருஷ சந்தா ரூ 3.

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

ஆசிரியர்: நெ. 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.